# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30/= பக்கங்கள்: 56 | சுடர் 31 | கதிர் 262 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 30, ஞாயிற்றுக்கிழமை 14.08.2016


முச்சந்தி முரளி



அவையள நல்லதா சொல்லத் தான் இவர் இங்க வந்தாரோ...

# 8, 500 ஏக்கர் நிலம்

## விரைவில் வன்னியில் விடுவிக்கப்படும் சாத்தியம்

நேரில் ஆராய்ந்த பாதுகாப்புச் செயலர் அரச அதிகாரிகளிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 14

வன்னிப் பிராந்தியத்தில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள 8 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப் பரப்பு வரையில் விடுவிப்பது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி நேற்று நேரில் ஆராய்ந்தார்.

'இந்தக் காணிகளை விடுவிப்பதற்கு சாத்தியப்பாடுகள் இருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார் என்று கூட்டத்தில் கலந்து கொண்ட மாவட்ட அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இராணுவத் தளபதி கிரிசாந்த டி சில்வா ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் வன்னிப் பிராந்தியத்தின் நான்கு மாவட்டங்களுக்கும் நேற்றுப் பயணம் மேற்கொண்டனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலுள்ள பாதுகாப்புப் படைக் கட்டளைத் தலைமையகத்தில் சந்திப்புக்களில் ஈடுபட்டனர். ஒவ்வொரு மாவட்டத்திலும், பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

>> 51ஆம் பக்கம்

## தமிழரசுக் கட்சியின் செயற்குழு வவுனியாவில் இன்று கூடுகிறது

யாழ்ப்பாணம், ஓக. 14

வவுனியாவில் இன்று இடம்பெறும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நடுவண் செயற்குழுக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது. கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர், தான் பங்கேற்கும் இறுதி நடுவண் செயற்குழுக் கூட்டமாக இந்தக் கூட்டம் இருக்கும் என்று தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நடுவண் செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் இன்று காலை நடைபெறவுள்ளது. கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் அரசியல் குழு உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் கலந்து கொள்கிறார். கட்சியினால்

>> 51ஆம் பக்கம்

## யாழ். வரும் அமெரிக்கத் தூதுவர் கூட்டமைப்புடன் முக்கிய பேச்சு

யாழ்ப்பாணம், ஓக. 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்கத் தூதுவருக்கும் இடையிலான சிறப்புச் சந்திப்பு நாளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற இருக்கின்றது. வடக்கு மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளைத் தனியாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தனியாகவும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். சமகால அரசியல் நிலமைகள் தொடர்பிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக, கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேசாப் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு

>> 51ஆம் பக்கம்



காணிகளை விடுவிக்க வலியுறுத்தி

## பரவிப்பாஞ்சான் மக்கள் போராட்டத்தில் குதிப்பு

கிளிநொச்சி, ஓக. 14

பரவிப்பாஞ்சானில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் நேற்றைய தினம் தொடர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த வாரம் மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததுடன் தமது காணிகள் விடுவிப்புத் தொடர்பாக உடனடியாக அறிவிக்க வேண்டும் எனவும் இல்லையேல் சனி (நேற்று) தொடக்கம் தொடர் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக அந்தப் பகுதி இராணுவத்தினரிடம்

>> 51ஆம் பக்கம்

## கடல் கொந்தளிப்பால் திரும்பினர் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஓக. 14

கச்சதீவுக்குக் கடற்படையினரின் படகில் சென்ற அரச அதிகாரிகள், கடும் கடல் கொந்தளிப்புக் காரணமாக இடைநடுவில் தமது பயணத்தைக் கைவிட்டுத் திரும்பினர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இதனை மேற்பார்வை செய்வதற்காகக் கிறிஸ்தவ விவகார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவினர், யாழ். மாவட்டச் செயலாளர் தலைமையிலான குழுவினருடன் நேற்றுக் காலை கச்சதீவை நோக்கிப் புறப்பட்டனர்.

குறிகாட்டுவான் துறை முகத்திலிருந்து காலை 6 மணிக்கு, கடற்படையினரின் இரண்டு வோட்டர் ஜெட் படகுகளில் அரச அதிகாரிகள் கச்சதீவை நோக்கிப் புறப்பட்டனர். கடும் கடல் கொந்தளிப்புக் காரணமாக குதிரைமலைப் பகுதியில் வைத்து படகைத் திருப்புமாறு கடற்படையினரிடம் அரச அதிகாரிகள் கேட்டுக் கொண்ட

>> 51ஆம் பக்கம்

## குடும்பத் தலைவரின் உயிரை பறித்தது ஹைஏஸ் வான்

வவுனியா, ஓக. 14

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை மோதித்தள்ளிய வாக

>> 51ஆம் பக்கம்

செஞ்சோலை மாணவிகள் படுகொலை பத்தாம் ஆண்டு

## நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 14

செஞ்சோலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவிகளின் பத்தாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் நடைபெறவுள்ளன.

2006ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளி புனத்தில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகத்தின் மீது இலங்கை இராணுவத்தின் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய

>> 51ஆம் பக்கம்

## காணி ஆக்கிரமிப்புக்கு ஆளுநரின் புது விளக்கம்

*இந்திய இராணுவம், புலிகள் எல்லோரும் வைத்திருந்தனராம்*

யாழ்ப்பாணம், ஓக. 14

தமிழ் மக்களின் காணிகளை இந்திய இராணுவம், தமிழீழ விடுதலைப் புலிகள், ஏனைய இயக்கங்கள் கைப்பற்றி வைத்திருந்தன. இப்போது தான் இராணுவத்தினர் கைப்பற்றி வைத்திருக்கின்றனர். தனியார் காணிகள் உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்கப்படவேண்டும் என்பது தான் எனது நோக்கம்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே.

தெல்லிப்பழையில் அலுமினியத் தொழிற்சாலை திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் தெரிவித்ததாவது:

உலகில்

>> 51ஆம் பக்கம்




உங்கள் கனவுகள் எங்களின் கைவண்ணத்தில்....

- அதி நவீன இல்லங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் கட்டட நிர்மாணங்கள்
- அனைத்திற்குமான வரைபடங்கள்
- முப்பரிமான வரைபடங்கள்
- உள்ளக அலங்கரிப்பு
- தளபாட வடிவமைப்பு
- நீச்சல் தடாக நிர்மாணம்
- பொறியியலாளர்களின் நேரடி வழிநடத்தல்
- தொழில்நுட்ப உதவியாளர்களின் பூரண மேற்பார்வை
- இலகு கொடுப்பனவு
- குறைந்த நிர்மாண கால எல்லை
- அதி நவீன உள்ளக வடிவமைப்பு
- பூரண மேலைத்தேய வடிவினாலான கட்டட நிர்மாணம்

கட்டடங்களுக்கான வரைபடங்கள் முற்றுமுழுதாக இலவசம்

நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுக்கான காப்புறுதி முற்றுமுழுதாக இலவசம்

Palali Road, Urumpirai South, Urumpirai.

Aayushman Civil Engineers & Construction

☎ 0765 747 666/ 0765 761 800

சணச அபிவிருத்தி வங்கியின் 19வது ஆண்டு விழாவை முன்னிட்டு

ஆறு மாத நிலையான வைப்புக்களுக்கு விஷேட வட்டி

12%

(வ.தே.வ. 12.36%)

ஏனைய வைப்பக்களுக்கும் கவர்ச்சிகரமான வட்டி

011 5 411 411

SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

தேசத்தின் முன்னோடி

* நிபந்தனைகளுக்குட்பட்டது.

சணச அபிவிருத்தி வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

# தெல்லிப்பழை அலுமினிய ஆலையை மீள ஆரம்பித்தார் தமிழக முதலீட்டாளர்



யாழ்ப்பாணம், ஓக. 14
தமிழகத்தைச் சேர்ந்த முதலீட்டாளரினால், தெல்லிப்பழை அம்பனைச் சந்திப் பகுதியில் அலுமினியத் தொழிற்சாலை நேற்று மீள ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலையின் ஊடாக உடனடியாக 75 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அம்பனைப் பகுதியைச் சேர்ந்த தனிநபர் ஒருவரினால் 1967 ஆம் ஆண்டு அலுமினியத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. இடப்பெயர்வுக்கு முன்னர் 1989ஆம் ஆண்டு வரையில் மேற்படி தொழிற்சாலை அங்கு இயங்கி வந்தது. இடப்பெயர்வின் பின்னர் 1992ஆம் ஆண்டு வத்தளையில் தொழிற்சாலை இயக்கப்பட்டது.

மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் 2010ஆம் ஆண்டு அம்பனையில் மீளவும் தொழிற்சாலை செயற்படத் தொடங்கியது. 2012ஆம் ஆண்டு தொழிற்சாலை முடங்கும் நிலை ஏற்பட்டது. இதன் பின்னர் தற்போது இந்தத் தொழிற்சாலையை, மதுரையைச் சேர்ந்த முதலீட்டாளர் ஒருவர் முதலீடு செய்து நேற்று மீள ஆரம்பித்தார்.

இது தொடர்பில் தமிழக முதலீட்டாளர் தில்லைராஜ் தெரிவித்ததாவது:

நான் வடபகுதிக்கு பல தடவைகள் வந்து சென்றிருக்கின்றேன். இங்கு வரும்போது நான் தமிழில் பேசினால், கடைகளில் பல மணிநேரம் என்னுடன் பேசுவார்கள். எனக்கு வேறு நாட்டில் இருப்பது போன்ற உணர்வு இல்லை. இங்கு இருக்கும்போது தமிழ் நாட்டில் இருப்பதைப் போன்றுதான் உணர்வு இருக்கின்றது.

எனக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்குகின்றது. இன்னமும் 2 வருடங்களில் 2 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கக்கூடிய வகையில் முதலீடு மேற்கொள்ளப்படும். சிமெந்து தொழிற்சாலை, தீப்பெட்டி தொழிற்சாலை என்பனவும் இங்கு ஆரம்பிக்க முயற்சி மேற்கொள்ளப்படும் – என்றார்.

இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நடராஜன் தெரிவித்ததாவது:

நாம் கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் என்று சொல்வது போல இங்கே போருக்கு முன், போருக்குப் பின் என்றுதான் விடயங்களைச் சொல்ல வேண்டும். பொருளாதார அபிவிருத்திதான் எமது முக்கிய நோக்கம். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வேண்டும். படித்த சமுதாயம் வேலையில்லாமல் திண்டாடுகின்றது. தொழிற்சாலைகள் நிறுவப்படுவதன் ஊடாகவே வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும்.

பொருளாதார நோக்கிலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். அப்போதுதான் ஓரளவாவது பொருளாதாரத்தை நிலை நிறுத்திக் கொள்ள முடியும். எமது இரத்த உறவுகள் வாழ முடியும்.

மதுரையிலிருந்து மல்லிகையை வவுனியாவில் முதலீடு செய்தோம். பின்னர் அது யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டது. இப்போது நல்லூர் கோயில் திருவிழாவில் மதுரை மல்லிகை மணம் வீசுகின்றது என்றார்.

“இந்த அலுமினியத் தொழிற்சாலை நிறுவப்படுவதன் ஊடாக இந்தியா – இலங்கை இடையே உறவுப் பாலம் அமையும்” என்று இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

“பலாலி விமான நிலையம் பன்னாட்டு விமான நிலையமாக விரைவில் தரம் உயர்த்தப்பட வேண்டும். இதற்காக மக்களின் மேலதிக காணிகள் எடுக்கத் தேவையில்லை. தரம் உயர்த்தல் செய்யப்பட வேண்டும். அடுத்து காங்கேசன்துறை துறைமுகம் பன்னாட்டுத் தரத்துக்கு தரம் உயர்த்தப்பட வேண்டும். இதனை இந்திய அரசு உடனடியாகச் செய்ய வேண்டும்' என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். (வ-5)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஓக.14
கைதடி மத்தி வளர்மதி சன சமூக நிலையத்தின் 57வது ஆண்டு நிறைவுவிழா இன்று இரவு 7 மணிக்கு வளர்மதி கலை அரங்கில் நிலையத் தலைவர் சி.கந்தசாமி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீசன் கலந்து சிறப்பிக்கிறார். காலை நிகழ்வாக நிலைய அங்கத்தவர்களின் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் என்பன இடம்பெறவுள்ளன. இரவு நிகழ்வில் சிறப்புரைகள், பரிசளிப்பு விழா மற்றும் இசைநிகழ்வும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (வ-288)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 14
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கல்லூரி நிர்வாக சபையை மாற்றக் கோரியும், கல்லூரி தொடர்பான சில கோரிக்கைகளை முன்வைத்தும் கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பில் கலந்துரையாடவும், ஆலோசனை வழங்கவும் டீஎஸம் பட்டதாரிகளை மேற்படி கலந்துரையாடலுக்கு வருமாறு ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர் ஒன்றியத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டது. (வ-5)



## பஸ்ஸில் பயணித்தவர் நடத்திய கல்வீச்சுத் தாக்குதலில் சாரதி காயம்

*தட்டாதெருச் சந்தியில் நேற்றுச் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஓக. 14
இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் சாரதி மீது, அதே பஸ்ஸில் பயணித்த ஒருவர் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தினார். இதனால் சாரதி காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணம் தட்டாதருச் சந்தியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து மருதனார்மடம் ஊடாக காங்கேசன்துறை செல்லும் பஸ் நேற்றுப் பிற்பகல் யாழ். நகரிலிருந்து புறப்பட்டது. பஸ் பயணம் செய்த பயணி ஒருவர் ஏனைய பயணிகள் மீது தகாத செயல்களில் ஈடுபட்டார். இதனால் குறித்த பயணியை பஸ்ஸில் இருந்து இறக்கிவிட நடத்துநர் முயற்சித்தார். எனினும் அவர் முரண்டுபிடித்ததால் சாரதியும் நடத்துநரும் இணைந்து அவரைத் தட்டாதெருச் சந்தியில் வைத்து கீழிறக்கிவிட்டனர். அதன் பின்னரும் அந்தப் பயணி பஸ்ஸில் மீள ஏற முற்பட்டார். இதன் போதே குறித்த பயணி கல் ஒன்றை எடுத்து சாரதி மீது எறிந்தார். சாரதி தலையில் காயமடைந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பயணி மதுபோதையில் காணப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப் பட்டது. அந்தப் பயணியைப் பிடித்த சக பயணிகள் அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## தருமபுரத்தில் சிக்கியது கசிப்பு



கிளிநொச்சி, ஓக.14
கிளிநொச்சி, தருமபுரம் 8ஆம் யுனிற் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது 31 போத்தல் கசிப்பும் 1,520 போத்தல் கோடாவும் கைப்பற்றப்பட்டதாகத் தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலை அடுத்து, நேற்றுக் காலை பொறுப்பதிகாரி சதுரங்க தலைமையில் சென்ற குழுவினர் 8 பரல்களைக் கைப்பற்றினர். அதில் 31 போத்தல் கசிப்பும் 1,520 போத்தல் கோடாவும் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பொருள்களும் கைப்பற்றப்பட்டன. இந்தக் கசிப்பு உற்பத்தியுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-ரி3)

## விகாரை அமைப்பதை எதிர்த்து செப்ரெம்பர் 7 மக்கள் போராட்டம்

கிளிநொச்சி, ஓக. 14
கிளிநொச்சி கனகாம்பிகை ஆலய காணிக்குள் பௌத்த விகாரை அமைப்பதற்கு எதிராக அடுத்த மாதம் 7ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் நடத்துவதற்குக் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது.

கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் காணியில் பௌத்த ஆலயம் அமைக்கும் நோக்குடன் சுற்றுமதில் அமைக்கும் வேலைகள் இடம்பெறுகின்றன. இதற்கு எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுப்பது குறித்து நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

அடுத்த மாதம் 7ஆம் திகதி கிளிநொச்சி கனகாம்பிகை ஆலய முன்றிலிருந்து பேரணியாகப் புறப்பட்டு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தை சென்றடைவது என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (வ-5-ரி3-101)

## மின் விளக்குகளின்றி இருளில் மூழ்கியுள்ளது வல்லைச் சந்தி


அச்சுவேலி வடக்கு வல்லைச் சந்தியில் வீதி விளக்குகள் இணைப்புச் செய்யாமல் இருட்டில் மூழ்கிக் காணப்படுகின்றது. குடியிருப்புக்கள் இல்லாத இந்தப் பகுதியில் வீதி விளக்குகள் இன்றி இருளில் மூழ்கி இருப்பதால், இரவு வேளையில் வீதியில் பயணம் செய்யும் பாதசாரிகள் மற்றும் பயணிகள் அச்சத்துடன் பயணத்தைத் தொடரவேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். அச்சுவேலி வடக்கு வல்லைச் சந்தியில் இருந்து வடமராட்சிப் பகுதி நோக்கியும், யாழ்ப்பாணம் நோக்கியும், அச்சுவேலிப் பகுதி நோக்கியும் பிரதான வீதிகள் செல்கின்றன. இந்த வீதிகள் இரவு முழுவதும் பொதுமக்கள் பயன்படுத்தும் வீதிகளாக உள்ளன. அத்துடன் இந்தப் பகுதியில் குடியிருப்புக்கள் இல்லாத காரணத்தினால் இரவு வேளைகளில் திருட்டு, வழிப்பறி உள்ளிட்ட சமூக விரோதச் செயல்கள் நடைபெறக்கூடியதாகவும், சமூகவிரோதச் செயல்கள் செய்வதற்கு வசதியான பகுதியாகவும் காணப்படுகின்றது.

இந்தப் பகுதி வலி. கிழக்குப் பிரதேசசபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதியாகும். பொதுமக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு வல்லைச் சந்திப் பகுதியில் வீதி விளக்குகளைப் பிரதேச சபை முன்னுரிமை அடிப்படையில் இணைப்புச் செய்ய வேண்டும் என பொதுமக்கள் கேட்கின்றனர்.

இது பற்றி வலி. கிழக்குப் பிரதேச சபைச் செயலர் தெரிவிக்கையில், இது தொடர்பாக எமக்கும் முறைப்பாடுகள் வந்துள்ளன. இந்தப் பகுதிக்கு மின் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை மின்சார சபையுடன் கதைத்துள்ளோம். அவர்களின் ஒத்துழைப்புடன் இன்னும் இரண்டு கிழமைக்குள் மின் இணைப்பு மேற்கொண்டு மின்விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (வ-ரி, 11)

# கல்லுண்டாயில் தீ

## யாழ். மாநகர சபையினால் கழிவுகள் கொட்டப்படும் இடத்தில்



யாழ்ப்பாணம், ஓக. 14

கல்லுண்டாய் பகுதியில் யாழ். மாநகரசபையினால் கொட்டப்படும் கழிவுகள் நேற்றுத் திடீரென தீப்பற்றியது. இதனை 6 மணி நேரப் போராட்டத்தின் பின்னர் யாழ். மாநகர சபைத் தீயணைப்புப் பிரிவினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். யாழ். மாநகரசபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுகள் கல்லுண்டாய் பகுதியில் கொட்டப்படும். இந்தக் கழிவுகள் யாழ். மாநகர சபையினால் மீள் சுழற்சி செய்யப்படுகின்றன. மீள் சுழற்சிக்காக சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த கழிவுகளிலேயே திடீரென தீ பற்றியது. யாழ். மாநகரசபை தீயணைப்புப் பிரிவினரால் நீண்ட போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. “கல்லுண்டாய் பகுதியில் கொட்டப்படும் கழிவுகளுக்கு கடந்த ஓர் ஆண்டாக நாம் தீ வைப்பது கிடையாது. ஆதனை மீள் சுழற்சிக்குப் பயன்படுத்தி வருகின்றோம். கழிவுகள் கொட்டப்படும் பகுதியில் காவலாளிகள் நியமிக்கப்பட்டனர். இரும்பைச் சேகரிப்பதற்குச் சிலர் இரகசியமான முறையில் இங்கு வந்து செல்வது அடையாளப்படுத்தப்பட்டது. இவ்வாறு வந்தவர்கள் சிலவேளைகளில் குப்பைகளுக்குத் தீ வைத்திருக்கக் கூடும். தீப் பற்றி எரியத் தொடங்கியதும், உடனடியாக எமக்குத் தகவல் வழங்கப்பட்டது. துரிதமாகச் செயற்பட்டமையினால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்தது’ என்று யாழ். மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (வ-5-101)

# நல்லிணக்கச் செயலகத்தின் தலைவிக்கு கிளிநொச்சி ராணுவ முகாமில் விருந்து

கிளிநொச்சி, ஓக. 14

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இராணுவ முகாமில் மதியபோசன விருந்துபசாரம் வழங்கப்பட்டது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கச் செயலகத்தின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா தலைமையில் பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் காலை நிகழ்வு இடம்பெற்றது. மழைநீர் சேகரிப்பு நீர்த்தாங்கி வழங்கும் நிகழ்வே அங்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வு முடிவடைந்த பின்னர், பூநகரியிலுள்ள 66ஆவது படைப் பிரிவுக்கு முன்னாள் ஜனாதிபதி அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்கு மதிய போசன விருந்துபசாரம் வழங்கப்பட்டது. அதனை முடித்துக் கொண்டு, பூநகரி ஞானி மடத்தில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியின் பெயர்ப் பலகையை திறந்து வைத்தார். (வ-5-ரி3)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2791 திகதி: 2016-08-13
19 27 56 58 P 20
ரூ. 12,278,025/-
Web: www.dlb.lk
2016.08.17 ஆம் திகதி புதன்கிழமை
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி

Olialankan Studio British College Of Beauty Studies
இணைந்து நடத்தும் பெண்களுக்கு பொருத்தமான துறைசார் பாடநெறிகள்.

* தையல் கலை * அழகுக்கலை * கேக்ஐசிங்
* பெறுமதி வாய்ந்த சான்றிதழை வழங்கி வருவதில் பெருமை அடைகிறோம்.
* 3. 6 மாத கால முழுநேர மற்றும் பகுதிநேர பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
* வெளிநாடுகளிலும் சொந்தத்தொழில் செய்ய விரும்பும் பெண்களுக்காகவே Special ஆக வடிவமைக்கப்பட்ட குறுகியகால பயிற்சி வகுப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.
* எங்களிடம் இணையும் மாணவர்களுக்கு படிக்கும் போதே பகுதி நேர வேலைவாய்ப்பையும், பணத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.
* எங்கள் கல்லூரியின் அனுபவம் வாய்ந்தவர்களின் மூலமாக தரமான Beauty parlour சேவைகள் உ.ங்களுக்காகவே ஆரம்பம்.
* பேசியல் 1000ரூபா தொடக்கம் 6000 ரூபா வரை.

திருமணப் பெண்களுக்காகவே 25 இற்கும் மேற்பட்ட முக மேக்கப்கள் அடங்கிய பெக்கெச்கள்.

பலாலி றோட், திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம்
076 7011645
கஸ்தூரியார் றோட் யாழ்ப்பாணம்.

யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

கல்விப்பணியில் 140 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி
பழைய மாணவர் சங்கம் நடத்தும்

அமரர் டேவிட் அல்வின் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி 2016

போட்டியானது 7 பேர்
6 பந்து பரிமாற்றம் கொண்டது

முதலாம் பரிசு ரூபாய் 15, 000.00
2ஆம் பரிசு ரூபாய் 10, 000.00

போட்டிக்கான விண்ணப்ப முடிவுதிகதி
28.08.2016

ஊடக அனுசரணை
உதயன்

விண்ணப்ப படிவங்கள் போட்டி விதிமுறைகள் பற்றிய தகவல் மற்றும்
மேலதிக தகவல்களுக்கு திரு. M.சண்மர்சல் - 077 8736912, திரு. S.சிறிசுதாகரன் - 077 2298923
Alan Oil Mart இல. 300, பிரதான வீதி, யாழ்ப்பாணம். பழைய மாணவர் சங்கம் யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்

## மரண அறிவித்தல்

திருமதி **மீராவதி(மீரா) சிவஅருள்நாதன்**



பிறப்பு 21.08.1949 இறப்பு 11.08.2016

யாழ். கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீராவதி சிவஅருள்நாதன் 11.08.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவசம்பு - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் இராசதுரை - அம்புச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவஅருள்நாதன் அவர்களின் அன்பு மனைவியும் சஞ்சயன் அவர்களின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் சோமசுந்தரம், பாலசுந்தரம் காலஞ்சென்ற இராஜசுந்தரம் மற்றும் ஞானசுந்தரம், கனகசுந்தரம் , ஜெயசுந்தரம், சிவசுந்தரம், அன்னபூரணம் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சரஸ்வதி மற்றும் பிரேமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2016) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொற்பதிவீதி,**
**கொக்குவில்.**

தகவல்:
**சி.பாலசுந்தரம்**
**(சகோதரன்)**


# இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது பரணகம ஆணைக்குழு

கொழும்பு, ஓக. 14

மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான காணாமல்போனோர் குறித்து விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்றுமுன்தினம் கையளித்தது.

2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நியமிக்கப்பட்ட காணாமல்போனோர் குறித்து விசாரிக்கும் இந்த காணாமல்போனோர் ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரை இடையிடையே நீடிக்கப்பட்டது. அதனை அதற்குப் பின்னரும் நீடிக்குமாறு ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரியிருந்தது. அதற்கான அனுமதி வழங்கப் படாததால் கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதியுடன் ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிவுக்கு வந்தது.

தமது விசாரணைகள் தொடர்பான அறிக்கையை ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான குழுவினர் ஜனாதிபதியிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தெரிவித்ததாவது-

முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டுவர எமக்கு கால அவகாசம் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் நாம் கடந்த ஜூலை 15 ஆம் திகதி வரை என்ன செய்தோம் என்பதை விளக்கி அறிக்கையாக ஜனாதிபதியிடம் கையளிக்க ஏற்பாடு செய்தோம். இது முழுமையான அறிக்கை என்று கூறமுடியாது. எமக்கு இன்னும் 12 மாதகாலம் வழங்கியிருந்தால் நாங்கள் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு முடி வைக் கொண்டு வந்திருப்போம். புதிதாக நிறுவப்படவுள்ள காணாமல் போனோர் அலுவலகத்துக்குஎமது அறிக்கைவழங்கப்படுமா எனத் தெரியவில்லை.-என்றார். (ந-4)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் **திருமதி தாரணி றமணிதாசன்**
அவர்களின் பாசமிகு கணவர்
**இரத்தினசிங்கம் றமணிதாசன்**
அவர்களின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**நலன்புரி சங்கம்,**
**வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவச அழைப்பும்

திருமதி
**இராஜேஸ்வரி சத்தியமூர்த்தி**



திதி:
வளர்பிறை திரயோதசி
(2016.08.16)

**தோற்றம்**
**26.07.1943**

**மறைவு**
**28.07.2015**

ஆண்டொன்று சென்றதுவே கண்மூடித் திறக்கையிலே....
ஆனாலும் உங்கள் நினைவு நெஞ்சை வாட்டுகின்றதே...
கோடானுகோடி ஞாபகங்கள் மனதில் வந்து போகின்றதே..
கோடியிலே ஒருத்தி நீங்கள் என்று கண்ணீர் சொரிகின்றோம்.

அன்னாரின் ஆண்டுத்திவசம் நாளை மறுதினம் (16.08.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் (குண்டுவர்காடு ஒழுங்கை, மதவடி, வல்வெட்டித்துறை) நடைபெறவுள்ளது. உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திக்காக நடைபெறும் பூசையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(ஹ/3705)
(11.18)

**குண்டுவர்காடு ஒழுங்கை,**
**மதவடி, வல்வெட்டித்துறை.**

**குடும்பத்தினர்.**


# வைத்தியசாலைகள் பெயர்களில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 14

வடமாகாணத்தில் இயங்கி வரும் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கீழான வைத்தியசாலைகளின் பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற வடமாகாண அமைச்சர் வாரிய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் வடமாகாணத்தில் இயங்கும் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கீழான 5 வைத்தியசாலைகளின் பெயர்கள் மாற்றப்பட்டன என்று வடமாகாண சுதேச வைத்தியத்துறை ஆணையாளர் மருத்துவர் திருமதி சியாமா துரைரட்ணம் அறிவித்தார்.

ஆயுள்வேத ஆதார வைத்தியசாலை - ஆதார சித்த மருத்துவமனை ஆகவும், மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை - மாவட்ட சித்த மருத்துவமனை ஆகவும், கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை - கிராமிய சித்தமருத்துவமனை ஆகவும், ஆயுள்வேத மத்திய மருந்தகம் - சித்த மத்திய மருந்தகம் ஆகவும், இலவச சித்த ஆயுள்வேத மருந்தகம் - இலவச சித்த மருந்தகம் ஆகவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ந-50)


## மரண அறிவித்தல்

திருமதி **மகேஸ்வரி வெள்ளைச்சாமி**



வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இலுப்பையடி சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி வெள்ளைச்சாமி 12.08.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அருளம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வெள்ளைச்சாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன், சூரியகலா மற்றும் வரதராஜன், வசந்தகலா, காந்தரூபன், சிவரூபன் ஆகியோரின் தாயாரும் ராஜேஸ்வரி, அற்புதராஜா, பிரகாஷினி, கவிதா ஆகியோரின் மாமியாரும் கஜனி - ரங்கன், ஜதீந்திரதாஸ் - தமிழரசி, நித்தியகலா, ரத்தியா, கவிப்பிரியா, சினேகா, சஞ்செய், ஜஷாத், திபிஷனா ஆகியோரின் பேர்த்தியும் திபுஷன், திலக்ஷன், ரனுக்ஷன், ஜிபிஷன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.08.2016) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 11.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பலாலி வீதி,**
**இலுப்பையடிச்சந்தி.**

தகவல்:
**K.பத்மநாதன் மற்றும் பிள்ளைகள்**

**077 617 6924**


# லேகியம் கையளிக்க முயன்ற இளைஞருக்கு விளக்க மறியல்

போதைப் பொருள் கலந்த - தடை செய்யப்பட்ட லேகியத்தை வர்த்தக நிலையத்துக்கு வழங்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைதான இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு 47 வில்லைகள் கொண்ட 276 கிராம் லேகியத்தை வர்த்தக நிலையத்தில் கையளிக்க முற்பட்டவேளையில் அங்கு சிவில் உடையில் இருந்த சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் இளைஞரைக் கைது செய்தனர். பொதி செய்யப்பட்டிருந்த லேகியத்தையும் கைப்பற்றினர். விசாரணைகளை மேற்கொண்ட மதுவரி நிலையத்தினர் இரவு 8 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தி வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் இளைஞரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-9)


## நூற்றாண்டு நினைவு



கல்வியியலாளரும், கூட்டுறவாளரும், எழுத்தாளரும், பிரபல சமூக சேவையாளரும், கோப்பாய் பிரதேசத்தின் மூத்த பிரஜையுமான

அமரர் **க.இ.குமாரசாமி** அவர்களின்

நூற்றாண்டு நினைவை முன்னிட்டு
கோப்பாய் வடக்கு சமூகசேவா சங்கம்

அன்னாரது சேவையை நினைவுகூர்ந்து சமூகத்தில் வாழ்ந்து மறைந்த அறிஞரின் அருஞ் சேவையினையும், வாழ்வியலையும், சாதனைகளையும், சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்ளவும், விரும்பியவிடத்து அவ்வழி சென்று பணியாற்றிடவும் உதவும் வகையில் ஒழுங்கு செய்தமை வரவேற்கத்தக்கது.

"கருமத்திருதி", "கோவைக் குரிசில்" அகில இலங்கை சமாதான நீதிவான்
**லயன் Dr.வை.தியாகராஜா, MJF,MAF**
சர்வதேச லயன்ஸ் கழக ஆளுநர் - மாவட்டம் 306 B1.

(ஹ.3702) (11.18)


# தெய்வீக நிகழ்வுகள்

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் நடைபெறுகின்றன. இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஏழாம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் சைவ வாழ்வியல் எனும் தலைப்பில் தொழில்நுட்ப வழிகாட்டல் அதிகாரி க.ஈஸ்வரனின் தெய்வீக சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும். நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் துர்க்காதேவி இல்லத்தின் அனுசரணையில் வயலின் கச்சேரி மாலை 6.45மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெறும்.

நல்லை ஆதீன மண்டபத்தில் மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனத்தின் தெய்வீக இசை அரங்கம் இரவு 7 மணிமுதல் 8 மணிவரை நடைபெறும். (ந-ரி)

செலிங்கோ லைஃப் பிரணாம வீரர்கள்

# செலிங்கோ லை.ஃ.ப் உடன் வெற்றி பெறுவதற்கான வரத்தை உங்கள் பிள்ளைக்கும் பெற்றுக்கொடுங்கள்

**இம் முறை 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு உங்கள் பிள்ளை தோற்றுவதாயின், எங்களுடன் பதிவு செய்து விஷேட வரப்பிரசாதங்களை பெற்றுக்கொடுங்கள்.**

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் அனைத்து பிள்ளைகளுக்கும் செலிங்கோ லை.ஃ.ப் இடமிருந்து பெறுமதிமிக்க சான்றிதழ்.

செலிங்கோ லை.ஃ.ப் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொள்பவர்களின் பிள்ளைகளுக்கு விஷேட பரிசுகள்.

அகில இலங்கையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் 10* மாணவர்களுள் ஒருவராக உங்கள் பிள்ளையும் இருப்பின் அவருக்கு கல்வியை தொடர்வதற்காக ரூ. 50,000 வரை புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

**பதிவு செய்வதற்கு உங்கள் கையடக்க தொலைபேசியிலிருந்து 0723 461 461 என்ற இலக்கத்துக்கு Missed Call கொடுங்கள்.**

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

செலிங்கோ லை.ஃ.ப் காப்புறுதி நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. (PB5183)

வாழ்க்கை,
பாசம்,
பாதுகாப்பு.



தொடர்ச்சியாக 10 வருடங்களாக மக்கள் அபிமானம் பெற்ற காப்புறுதி நிறுவனம்

## செலிங்கோ லை.ஃ.ப்

செலிங்கோ லை.ஃ.ப் காப்புறுதி நிறுவனம், செலிங்கோ லை.ஃ.ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இல. PB5183 தொ.இல.: (011) 2 461 461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com




---

**வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்**

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

## இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 600 | நீர்க்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

TOEIC | UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations | ICDL | bcs | abe | SQA

## இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

**காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.**

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

**02, September, 2016** முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## வார இறுதி வகுப்புகள் — 04 Months

**காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்**

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

**04, September, 2016** முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

**British Way® English Academy**

**Contact (Jaffna Branch) : 033 33 40 600**

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

**No.15, Kannathiddy, Jaffna.** (In front of the Shivan Kovil)

### அனுரவிடம் நட்டஈடு கோருகிறார் ஆனந்த

முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்கவிடம் 500 மில்லியன் ரூபா நட்ட ஈடு கோரியுள்ளார் கொழும்பு முன்னாள் பிரதான நீதிமன்ற வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர.
அனுர சேனநாயக்க, பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய அறிவிப்பால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டது என்று நட்டு ஈடு கோரிய மனுவில் ஆனந்த சமரசேகர குறிப்பிட்டுள்ளார். (ற-4)

**விற்பனைப் பிரதிநிதி தேவை**

கிளிநொச்சியில் கொக்ககோலா விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.
தங்குமிட வசதி வழங்கப்படும்.

வயது :- 21 - 30
சம்பளம்:- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 021 228 0221
எமர்சன்றோட், கரடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

**வேலைவாய்ப்பு**

இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பு அதாவது உணவு, தங்குமிடம் போன்ற பாதுகாப்பான வசதியுடன் தொழில் வாய்ப்புகள் உண்டு. நாள் சம்பளம் ரூபா 900/= - 1500/= வரை வழங்கப்படும். துறைமுகம், விமானநிலையம், ஹோட்டேல், யோக்கட், ஐஸ்கிறீம், பால்மா போன்ற உற்பத்தி செய்யப்படும் நிறுவனங்களுக்கும் தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

Sakya 103/1 , Station Road, Vavuniya.
077 683 8226/ 077 799 9159

**மணமகள் தேவை**

யாழ்.இந்து, நாச்சிமார் கோயிலடி, கொக்குவிலைச் சேர்ந்தவரும் நல்லூர், சண்டிலிப்பாயில் வசித்தவரும், Electronic Engineer U.K(PR) ஆயிலியம், 1975, உயரம் 5'4" எவ்வித தீய பழக்கமற்ற நற்குணமுள்ள மணமகனுக்கு நன்கு ஆங்கில அறிவுடைய மணமகள் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ தேவை. Computing/ Teaching / Nurshing / Accounting தகைமையுடையவர்களும், விவாகரத்துப் பெற்றவர்களும் விரும்பத்தக்கது.

0044 74382 65672- U.K
Email: vijey40@hotmail.com 021 492 5047 (தந்தை)

**கொழும்பில் வேலைவாய்ப்பு**

கொழும்பு புறக்கோட்டையில் (Pettah Colombo) இயங்கும் வியாபார ஸ்தாபனத்தில் வேலைசெய்ய தகைமையான தொழிலாளர்கள் தேவை. (பில் போடுவது, பொதிசெய்வது) பலசரக்கு வியாபாரம் வருவாய் 30,000இற்கு மேல். தங்குமிடம் வழங்கப்படும். விவரங்களுக்கு
077 478 0421, 011 232 4305
(நேர்முகப் பரீட்சைக்கு தேர்வுசெய்யப்பட்டால் கொழும்பு வர பிரயாண செலவு வழங்கப்படும்)
(சி. 24683) (13.16.17)

**Job Vacancies**



*Admin Secretory
*Educational Counselors
Send your CV to below address on or before 19-08-2016

iCS Study Overseas
77,Clock Tower Road, Jaffna
sutha@icssrilanka.com
021 - 4926222, 021 - 7306000

**புரொஸ்ரேட் சுரப்பியை பாதுகாப்போம்**

புரொஸ்ரேட் பிரச்சினைகள்
PROSTATE TROUBLE
வயதான ஆண்களில் வயதுடன் புரொஸ்ரேட் சுரப்பியானது பெரிதாகி அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை, குறிப்பாக இரவில் கூடுதலாக காணப்படும்.

சிறுநீர்ப்பையில் மீதமாகும் சிறுநீர் சேகரிப்பால் அழற்சி, அடிக்கடி ஏற்படும் சிறுநீர் தொற்று, புரொஸ்ரேட் புற்று நோய் ஆகியவை மேலும் ஏற்படும் பிரச்சினைகளாகும்.

எமது உன்னத நிரூபிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்து குணம்குறிகளை மாற்றி தொழிற்பாட்டை சீராக்கி சிக்கலான சிகிச்சையையும் தவிர்த்துக்கொள்ள வைக்கிறது

Hotline: 0777555600
0777708310
0777708330



FAIR PHARMA (PVT) LTD
செலிங்கோ ஹவுஸ், 10வது மாடி கிழக்கு, இல:69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.
Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

# சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் நாடாளுமன்றம் தோற்றுவிட்டது

## சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல வருத்தம்

கொழும்பு, ஓக. 14
காணாமற்போனோர் விவகாரங்களைக் கையாள்வதற்கான அலுவலகம் அமைப்பது தொடர்பான சட்ட வரைவு நிறைவேறியது. ஆனால் நாடாளுமன்றம் தோல்வி கண்டுவிட்டது. இதற்கான பொறுப்பை பொது எதிர்க் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும்.
இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலகம் (ஸ்தாபித்தலும், நிர்வகித்தலும் பணிகளை நிறைவேற்றுவதலும்) தொடர்பான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நிறைவேற்றப் பட்டது. அப்போது ஏற்பட்ட எதிர்க் கட்சியின் கூச்சல் குழப்பம் எதிர்ப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
இது நாட்டுக்கு முக்கியமானதொரு சட்ட வரைவாகும். 1987-1989 ஆம் ஆண்டுகளில் மற்றும் 2009 ஆண்டு இறுதிக் கட்டப் போரில் காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்பதை கண்ணீருடன் வாழும் காணாமற்போனவர்களின் தாய்மார், கணவர்மார் மனைவிமார் மற்றும் உறவினர்கள் தெரிந்து கொள்வதற்கு இந்தச் சட்டம் முக்கியமானது.
இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதத்தை நடத்தி அந்தச் சட்டத்தின் மேலாக்கம் தொடர்பில் மக்களுக்குத் தெளிவை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் அவ்வாறானதொரு நிலையை பொது எதிர்க்கட்சிகள் தமது அரசியலுக்காகக் குழப்பியடித்தன – என்றார். (ற-4)

# போலிக் கடவுச் சீட்டுடன் வந்த குடும்பம் நாடு கடத்தப்பட்டது

டுபாயில் இருந்து போலிக் கடவுச் சீட்டுக்களுடன் இலங்கை வந்த குடும்பம் ஒன்று மீண்டும் டுபாய் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது என்று குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர்.
போலிக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி கணவன், மனைவி மற்றும் சிறிய பிள்ளையும் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தனர்.
அவர்களைச் சோதனை செய்தபோது மனைவி மற்றும் பிள்ளையிடம் டுபாய் நாட்டின் போலிக் கடவுச் சீட்டுக்கள் இருந்துள்ளன. கணவரிடம் ஜேர்மன் நாட்டு கடவுச்சீட்டு இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.
குறித்த குடும்பத்தினரின் பயணப் பையைச் சோதனை செய்தபோது குறித்த பையில் இருந்து இரண்டு அகதிகள் கடவுச்சீட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.
குறித்த குடும்பத்தினர் இலங்கையில் இருந்து எதிர்வரும் 14 ஆம் திகதி ஜேர்மன் செல்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் மற்றும் அதன் ஆதரவாளர்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக பாதுகாப்பு ஆலோசனை பெறப்பட்டிருப்பதால், குறித்த குடும்பத்தினரை நாடுகடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-4)

## ஏ.எல். பரீட்சை மோசடி 48 முறைப்பாடுகள்

ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை மோசடிகள் தொடர்பில் 48 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.
மற்றுமொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளை திருட்டுத்தனமாகப் பார்த்து எழுதுவதற்கு முயற்சித்தமை தொடர்பிலேயே அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்தார்.
பரீட்சை மோசடிகள் தொடர்பில் கிடைக்கின்ற முறைப்பாடுகள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் நாடு முழுவதும் கண்காணிப்புக் குழுக்களை நியமித்துள்ளதாக அவர் கூறினார். (வ-4)

# காணாமற்போனோர் அலுவலகம் இராணுவத்தினரைக் காப்பாற்றும்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 14
இலங்கையில் அமைக்கப்படவுள்ள காணமற்போனோர் விவகாரங்களைக் கையாளும் அலுவலகம், ராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினருக்கு எதிரானது அல்ல. அது பாதுகாப்புத் தரப்பினரைப் பாதுகாக்கும் ஒரு செயல்.
இவ்வாறு தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.
கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகம் அமைக்கப்படுவது ராணுவத்தைக் காட்டிக் கொடுக்கும் செயல் என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சி கூறுகின்றது. போரை முன்னின்று நடத்திய ராணுவத்தினரின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காகவே இது அமைக்கப்படுகிறது.
இந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கும்போது, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்று தங்களை அழைத்துக்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் அதிருப்தியளிக்கின்றது – என்றார்.
காணாமற்போனோர் தொடர்பில் அலுவலகம் அமைப்பதற்கான பிரேரணை கடந்த வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெள்ளிக்கிழமையும் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். (ற-4)

# நல்லூர் ஆலய வீதியில் காலணிகளைத் தவிருங்கள்

## சின்மயா மிசன் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 14
நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் புனிதத்தையும் சுகாதாரத்தையும் கருத்திற்கொண்டு பக்தர்கள் காலணிகளுடன் ஆலய வளாகத்தில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
இவ்வாறு சின்மயா மிசன் வட மாகாண வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் வேண்டுகோள் விடுத்தார்.
நல்லைக் கந்தனின் வருடாந்தப் பெருந்திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்ற நிலையில் ஆலய வெளிப்புற வீதியில் அங்கப் பிரதட்சணை செய்யும் அடியார்களின் நன்மை கருதி இங்கு மணல் பரப்பப்பட்டுள்ளது. அடியவர்கள் மாலை வேளைகளில் அந்த மணலில் அமர்ந்திருந்து செல்கின்றனர். சிறுவர்கள் அதில் விளையாடுகின்றனர். பல்வேறு உருவங்களைச் செய்து மகிழ்கின்றனர்.
அவ்வாறான இடத்தில் செருப்புக்களுடன் நடந்து செல்வதால் மணலில் கிருமித்தொற்று ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது என்று அவர் தெரிவித்தார். (ற-4)

## அவன்கார்ட் விசாரணைகள் நிறைவு

மகிந்த ஆட்சிக் காலத்தின்போது அவன்கார்ட் நிறுவனம் மேற்கொண்டது என்று தெரிவிக்கப்படும் மோசடிகள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
பல மாத இழுபறியின் பின்னர் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது. (ற-4)

# கவனிப்பாரற்றுக் காடுகளாக மாறும் அரச ஊழியர் வீட்டுத் திட்டக் காணிகள்

## வீடுகளற்ற மக்களுக்கு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை

ஓமந்தை, ஒக.14

ஓமந்தையில் 711 குடும்பங்களை சேர்ந்த அரச ஊழியர்களின் வீட்டுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளில் கடந்த 6 வருடங்களாக அவர்கள் வீடுகளை அமைத்துக் குடியமரவில்லை. அந்த காணிகள் தற்போது பற்றைக் காணிகளாக உள்ளன. அவற்றை சொந்தக் காணிகள் இல்லாது அல்லற்படுவோருக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அரசு வவுனியாவில் உள்ள நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் அரச ஊழியர்களுக்கான வீட்டுத் திட்டங்களை அமைக்க நடவடிக்கை எடுத்தது. அதற்கான காணிகள் தெரிவு செய்யப்பட்டன. வவுனியா பிரதேச செயலாளர் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பொருத்தமான காணிகள் அடையாளம் காணப்படவில்லை. மாணிக்கவளவு பிள்ளையார் காணியும் வீட்டுத் திட்டத்துக்காக அடையாளப்படுத்தப்பட்டது. அதை இராணுவத்தினர் கையகப்படுத்தி இருந்ததால் ஓமந்தையில் வீட்டுத் திட்டத்தை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஓமந்தையில் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 300 ஏக்கர் காணி வீட்டுத் திட்டத்துக்கு வழங்கப்படுகின்றது என்று அரசு அறிவித்தது. அவற்றில் குடியேறுவதற்கு சுமார் 711 அரச ஊழியர்கள் விண்ணப்பித்தனர். வன வளத் திணைக்களத்திடம் இருந்து காணியை விடுவித்த அரசு குடியேற விண்ணப்பித்தவர்களிடம் தலா 10 ஆயிரம் ரூபாவைப் பெற்று துப்புரவாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டது. பின்னர் காணி பிரிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் 40 பேர்ச் காணி வழங்கப்பட்டது.

வீட்டுத் திட்டத்துக்கு 711 பேர் விண்ணப்பித்திருந்தபோதும் தற்போது 70 குடும்பங்களே வீடுகளை அமைத்து அங்கு வசிக்கின்றன. தற்போது சுமார் 150 குடும்பங்கள் வீடுகளை அமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. ஏனையோர் காணிகளில் வீடுகள் அமைத்து குடியமர்வதற்கான எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.



காணிகளுக்கு விண்ணப்பித்து குடியமராது இருப்பவர்களுக்கு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி பிரதேச செயலகத்தால் இறுதி எச்சரிக்கை வழங்கப்பட்டது. காணிகளில் குடியமரவில்லை எனில் காணிகள் மீளப் பெறப்படும் என்று அறிவுறுத்திக் கடிதங்களும் அனுப்பப்பட்டன.

குடியமர்வதற்கு எந்த வித முன்னேற்பாடுகளும் செய்யப்படாது பற்றைக் காடாகியுள்ள காணிகளை காணிகள் இல்லாது அல்லல்படும் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஓமந்தையைச் சேர்ந்த மக்கள் சிலர் தற்போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவில் மட்டுமல்ல பல இடங்களிலும் சொந்தக் காணிகள் இல்லாது பலர் உள்ளனர். இடப்பெயர்வுகளைச் சந்தித்து தமது சொந்தக் காணிகளில் குடியமர முடியாத நிலையிலும் பலர் உள்ளனர். ஓமந்தையில் அரச ஊழியர்கள் வீட்டுத் திட்டத்துக்கு என ஒதுக்கப்பட்ட காணிகள் கடந்த 6 ஆண்டுகளாக கவனிப்பாரற்று உள்ளன. காணிகளுக்கு விண்ணப்பித்தோர் அவற்றில் குடியமர்வதற்கு எந்த அக்கறையும் காட்டவில்லை. காணிகள் துப்புரவாக்கப்படாது பற்றைக்காடுகளாகின்றன.

பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் அவர்கள் குடியமரவில்லை என்றால் அந்த வீடுகளை எப்படியாவது பறித்து விடுகின்றனர். ஓமந்தை அரச ஊழியர்கள் வீட்டுத் திட்டத்தில் பிரதேச செயலகமோ, அதிகாரிகளோ, அரசோ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

அரச ஊழியர்கள் என்பதாலும் அவர்கள் பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் என்பவற்றில் கடமையாற்றுபவர்கள் என்பதாலும் பிரச்சினை பெரிதுபடுத்தப்படவில்லை. அரச ஊழியர்கள் பலர் வவுனியா நகரப் பகுதியில் அரச விடுதிகளில் வசிக்கின்றனர். அதனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் அக்கறையற்று இருக்கின்றனர் - என்று ஓமந்தையைச் சேர்ந்த மக்கள் சிலர் தெரிவித்தனர்.

வெறுமனே காணிகளை ஒதுக்கிய அரசு அடுத்த கட்டமாக அங்கு எதுவும் செய்யவில்லை. குடிதண்ணீர் வசதியோ, வீதி வசதியோ அங்கு செய்யவில்லை. அதனால் அங்கு குடியமர அரச ஊழியர்கள் பின்னடிக்கின்றனர். நாம் வேறு வழி இல்லாது இங்கு குடியமர்ந்து அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழ்கின்றோம். இங்கு குடியமர்ந்துள்ள மக்களுக்காவது அதிகாரிகள் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த வீட்டுத் திட்டம் உள்ள பகுதியில் அண்மையில் காட்டுத் தீ ஏற்பட்டுப் பரவியது. காணிகளைப் பெற்ற அரச ஊழியர்கள் அவற்றைத் துப்புரவு செய்து குடியமர்ந்தால் இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெற்றிராது. அவர்கள் தமது நலனை மட்டும் பாராது ஏனையோரைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் - என்று அந்தக் கிராமத்தின் அபிவிருத்திச் சங்கத் தலைவர் கூறினார்.

அரச ஊழியர்களுக்கான வீட்டுத் திட்டங்களை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணிகள் தற்போது வீடமைப்பு அதிகார சபையிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து பதிலளிப்பதாக இருந்தாலும், நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் அவர்களே செய்யவேண்டும். இது பிரதேச செயலகத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருந்தாலும், வீடமைப்பு அதிகார சபை பொறுப்பேற்றுள்ளது - என்று வவுனியா பிரதேச செயலாளர் உதயராசா தெரிவித்தார்.

இந்தக் காணிகள் எம்மிடம் முழுமையாக ஒப்படைக்கப்படவில்லை. அதற்கான வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நில அளவைத் திணைக்களம் ஊடாகத் தற்போது பணிகளை ஆரம்பித்துள்ளோம். காணிகளை அளவீடு செய்த பின்னரே வரைபடம் தயாரிக்கப்படும். பணிகள் இன்னமும் முடிவுறவில்லை. காணிகளைப் பெற்றுக் கொண்ட அரச ஊழியர்களை அங்கு குடியமருமாறு கூறியுள்ளோம். இதுவரை அவர்கள் குடியமரவில்லை. மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் அங்கு குடியமராவிட்டால் இறுதி முடிவு எடுக்கப்படும். அது அரச ஊழியர்களுக்கு பாதிப்பளிக்கும் விதத்திலும் அமையக் கூடும் - என்று வவுனியா மாவட்ட வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்தார். (ந-21)

**"வடக்கின் பல பகுதிகளிலும் போராலும், போரின் பின்னரான இராணுவத்தின் செயற்பாடுகளாலும் சொந்தக் காணிகள் இல்லாது மக்கள் பெரும் அல்லற்பட்டு வருகின்றனர். சொந்தக் காணிகள் இல்லாததால் அவர்கள் பல்வேறு உதவித் திட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். அரச ஊழியர் வீட்டுத்திட்டத்துக்கு வழங்கப்பட்ட காணிகள் கவனிப்பாரற்று பற்றைக்காடுகளாகக் காணப்படுகின்றமை வேதனையளிக்கின்றது என்கின்றனர் ஓமந்தையைச் சேர்ந்த மக்கள்."**

- **அரச ஊழியருக்கான வீட்டுத் திட்டம் 2009ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.**
- **வீட்டுத் திட்டத்துக்காக 711 அரச ஊழியர்கள் விண்ணப்பித்தனர்.**
- **70 குடும்பங்களே தற்போது வசிக்கின்றன. 150 குடும்பங்கள் வீடுகளை அமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.**



# மதுப் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி



யாழ்ப்பாணம் நகரில் நேற்று மது அற்ற இளைமைப் பருவத்துக்கு நாம் மரியாதை செலுத்துவோம். மது இல்லாமல் நாம் வெற்றியடைந்தோம் என்ற தொனிப்பொருளில் போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி நடத்தப்பட்டது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட நடைபவனியில் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

புதிய இளைமைப் பருவத்தின் விருப்பு மது பாவனையற்ற எதிர்காலமே, சிறுவர் தேவைகளில் அதிக அக்கறை கொள்ளுங்கள், வன்முறை மிக்க சூழலில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்போம், துஷ்பிரயோகங்கள் அற்ற சிறுவர் சமூகத்தை உருவாக்குவோம் போன்ற வாசகங்களுடன் கூடிய விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன. (ந-4,101)



ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்துக்குள் நேற்றுமுன்தினம் யானை ஒன்று புகுந்து அங்கு வசிப்போரை அச்சுறுத்தியது. அங்குள்ளவர்கள் ஒன்று கூடி ஒருவாறு யானையை விரட்டினர். அங்குள்ள பல காணிகள் பற்றைக் காடுகளாக மாறியுள்ளமையே யானைகள் குடிமனைகளுக்கு அருகில் வரக் காரணம் என்று கூறப்படுகின்றது. (ந-402)

# கஞ்சா கடத்தலில் பருத்தித்துறையில் நடந்தது என்ன? வெளிவரும் தகவல்கள்

## நடந்தது திட்டமிட்ட நாடகம் என சந்தேகநபர் நீதிமன்றில் தெரிவிப்பு

கஞ்சா கடத்தும் முக்கிய நபருடன் பொலிஸார் சேர்ந்து இயங்குகின்றனரா என்று சந்தேகம் கிளம்பியுள்ள வழக்கில் மேலும் பல விவரங்கள் வெளிவந்துள்ளன.

கைது நடவடிக்கை திட்டமிட்ட நாடகம் எனக் கூறப்படும் வகையில் சம்பவங்களை விவரித்துள்ளார் சந்தேகநபர்களில் ஒருவர். இந்த நாடகத்தின் தலைமைச் சூத்திரதாரி என நம்பப்படும் நபர் கைது செய்யப்பட்டார் என்று நேற்று செய்தி வெளியான போதும் அவர் இன்னமும் கைது செய்யப்படவில்லை என்று தெரிகிறது. ச.கெங்காதரன் என்ற அந்த நபர் தமக்குத் தகவல் தருபவர் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ள நிலையில், இது குறித்து விரிவான விசாரணை நடத்தி நீதிமன்றில் அறிக்கையிடுமாறு நீதிவான் பெ.சிவகுமார் வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டார்.

**கசிந்த தகவல்கள்**

வல்வெட்டித்துறையில் 4 கிலோ கஞ்சா பிடிக்கப்பட்ட வழக்கில் பருத்தித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரியால் நீதிமன்றில் 3 சந்தேகநபர்கள் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் ஒருவரான இராசலிங்கம் விக்கினேஸ்வரன் நீதிமன்றின் கவனத்திற்குச் சில விடயங்களைக் கொண்டு வந்தார்.

அலைபேசி மூலம் என்னை அழைத்த சந்திரலிங்கம் கெங்காதரன் மோட்டார் சைக்கிளில் என்னை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திற்கு ஏற்றிச் சென்றார். அங்கு பொலிஸார் என்னைக் கூப்பிட்டுக் கை விலங்கிட்டார்கள். அங்கு ஒரு பிக்கப் வாகனமும் நின்றது. இந்த வழக்கில் என்னுடன் இருக்கின்ற மற்ற இருவயையும் அழைத்துக்கொண்டு ஒரு பார்சலையும் கையில் கொடுத்துக் கொண்டு போகும்படி பொலிஸார் கூறினார். அந்த இடத்தில் மதன் குமார் என்ற பொலிஸ் நபரும் வேறு பொலிஸாரும் நின்றனர்.

எனக்கு மதன் குமாரை வல்வெட்டித்துறையில் இருக்கும்போது ஏற்கனவே தெரியும். சுந்தரலிங்கம் கெங்காதரன் இன்னும் இரண்டு பேருடன் எங்களிடம் வந்தார். இருவரையும் கூட்டிக் கொண்டு போ என்று சொல்லி 30 இலட்சம் ரூபா கேட்டு காசு கொடுத்தார். பொலிஸார் காசை வாங்கிக் கொண்டனர்.

என்னைப் பார்த்து நீ ஒன்றுக்கும் பயப்படாதை, நான் ஆறு மாசமோ ஒரு வருடசமோ உன்னை வெளியில் எடுப்பன், என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே, வேறு யாரையும் காட்டிக்கொடு என்று கூறினார். என்னையும் டீல் பேசச் சொல்லிக் கேட்டவர். என்னிடம் அப்படி ஒன்றும் இல்லை என்று சொன்னேன்.

அவர்கள் சிங்களத்தில் கதைத்தது எனக்கு விளங்கியது. அவருடைய வீட்டில் கஞ்சா இன்னும் இருக்கின்றது. என்னை வெளியில் எடுப்பதற்கு ஒருவரும் இல்லை. நான் அவரைக் காட்டித் தருவேன். எனக்கும் இந்தச் சம்பவத்துக்கும் தொடர்பில்லை என்றும் தெரிவிக்கின்றேன். நான் இந்த வாக்குமூலத்தை எனது சுய புத்தியுடனும், தெளிவான மனநிலையுடனும் மன்றுக்குத் தெரிவிக்கிறேன்- என்று கூறினார்.

"இது பற்றி மேலும் விசாரணை செய்து சந்தேகநபர்களை மன்றில் முற்படுத்துவதற்காக போதைத் தடுப்புப்பிரிவுக்கும் மற்றும் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும் தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எந்தவிதமான தகவலும் எமக்கு இதுவரை கிடைக்கப்பெறவில்லை. அலைபேசி அழைப்புக்கள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த அறிக்கை இன்னும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. சந்தேகநபர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்" - என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

பொலிஸ் பரிசோதகர் தர்சன மன்றில் பொலிஸ் தரப்புத் தகவல்களை வெளிப்படுத்தினார்.

"சுற்றிவளைப்பில் இருக்கையில் எமக்கு இரகசியத் தகவல் தருபவராக கெங்காதரன் காணப்பட்டார். இது சம்பந்தமாக அவர் வழங்கிய தகவல்களை தகவல் பெற்ற உத்தியோகத்தரான மதன் தனது குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார். பருத்தித்துறைப் பொலிஸார் அது சம்பந்தமான விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றார்கள்"- என்றார் தர்சன.

"பொலிஸார் தூங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பிக் கொண்டு வந்தார்கள். ஆனால் தொடர் அறிக்கையில் 2ஆம், 3ஆம் சந்தேகநபர்கள் பற்றி எந்தவிதமான தகவல்களையும் குறிப்பிடவில்லை. 2ஆம், 3 ஆம் சந்தேகநபர்களுக்கும் 1 ஆம் சந்தேகநபருக்கும் முன்னருள்ள கோபத்தை வைத்துக் கொண்டு அவரையும் அதில் சம்பந்தப்படுத்தி இருக்கின்றார்கள். 2ஆம் 3ஆம் சந்தேகநபர்களிடமிருந்து எந்தவிதமான சான்றுப் பொருள்களும் கைப்பற்றப்படவில்லை. எனவே இருவருக்கும் பிணை வழங்கவேண்டும்" – என்று தெரிவித்தார் 2ஆம், 3ஆம் சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிவான் பெ.சிவகுமார் கட்டளையில் தெரிவித்ததாவது:

4 கிலோ 100 கிராம் கஞ்சா முத்துமாரி அம்மன் கோயில், வல்வெட்டித்துறைப் பகுதியில் கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு 3 சந்தேகநபர்களை மன்றில் முற்படுத்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்க அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவு ஒன்றைப் பெற்றிருந்தார்.

இந்த வழக்கில் முதலாம் சந்தேகநபரான இராசலிங்கம் விக்னேஸ்வரனின் வாக்கு மூலத்தின் அடிப்படையில், பருத் தித்துறை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இருந்து குறித்த வழக்கில் இன்னும் முக்கியமான இரண்டு சந்தேகநபர்களாக சுந்தரலிங்கம் கெங்காதரன், பிரபா ஆகியோர் இருக்கிறார்கள் என்றும் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்றும் மன்றுக்குத் தெரிவித்துள்ளார்கள். அது இவ்வாறு இருக்க பொலிஸாரின் தகவலின் பிரகாரம் கடந்த 5ஆம் திகதி சந்தேகநபர்கள் சார்பில் ஜேசுதாசன் ஜெயசுதன் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸ் பரிசோதகர் தர்சன, பருத்தித்துறைப் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் கெங்காதரன் என்பவர் தமக்குத் தகவல் தருபவர் என்று மன்றில் தெரிவிக்கின்றார். இந்தச் செயற்பாடானது சுற்றிவளைப்பை மேற்கொண்டு விசாரணை செய்த பொலிஸாரின் நடவடிக்கையில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்து கின்றது.

போதைப்பொருள் தொடர்பான வழக்குகளில் முக்கிய தலைமைச் சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்படுவதில்லை. கஞ்சாவை வைத்திருந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்படுவதே வழக்க மாகி வருகிறது.

இந்த வழக்கில் காங் கேசன்துறைப் பகுதிக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்கவின் விண்ணப்பத்துக்கு அமைய 3 சந்தேகநபர்களையும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்தபோது முதலாம் சந்தேகநபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸாரால் தகவல் தருபவர் என்று கூறப் படுபவரே பிரதான - முக்கிய சந்தேகநபர் என்று விசாரணைகள் மூலம் தெரியவருகின்றது. இது தொடர்பாக விசேட குழு ஒன்றை நியமித்து விசாரணை ஒன்றை மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கையிடுமாறும் முக்கிய சந்தேகநபர்களான கெங்காதரன், பிரபா என்பவர்களைக் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறும் வடமாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு மன்று உத்தரவு பிறப்பிக்கிறது இந்தக் கட்டளையின் பிரதியை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புமாறு மன்று பணிக்கின்றது.

பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு விளக்கமறியல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நீடிக்கப்படுகிறது - என்றார். (ந-4,109)



கோப்பாய் சந்தியில் ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் 2 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். (ந-422)

## மாதர் சங்கத்தில் திருட்டு

கிளிநொச்சி, ஓக.14

வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சால் முழங்காவில் மாதர் சங்கத்துக்கு வழங்கப்பட்ட சமையல் பாத்திர தொகுதிகள் களவாடப்பட்டுள்ளன என்று மாதர் சங்கத்தினர் தெரிவித்தனர். இச் சம்பவம் நேற்று நடந்தது.

வடக்கில் இயங்காதிருந்த மாதர் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் போன்றவற்றை இயங்கவைக்கும் நோக்கோடு அவற்றுக்குத் தேவையான உப கரணங்கள், உதவித் திட்டங் களை வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சு வழங்கு கின்றத.

கடந்த மாதம் 28ஆம் திகதி முழங்காவில் பிரதேசத்தை சேர்ந்த மாதர் சங்கதது்க்கு முழங்காவில் பிரதேச செயலகத்தில் வைத்து சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான சமையல் பாத்திர தொகுதிகள் வழங்கப்பட்டன. அவை தற்போது கள வாடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக முழங்காவில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து குறித்த இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ந-21)

## அனுமதியின்றி-பாலைமர தீராந்தி கொண்டு சென்ற சாரதிக்குத் தண்டம்

தென்மராட்சி, ஓக.14

அனுமதிப் பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட பாலைமரத் தீராந்திகளை பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அதனை ஏற்றி வந்த டிப்பர் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

கடந்த மே மாதம் 21 ஆம் திகதி கொடிகாமம் இராமாவில் பகுதியில் வந்த டிப்பர் வாகனத்தை கொடிகாமம் பொலிஸார் சோதனை செய்தபோது அதனுள் பெருமளவு பாலைமரத் தீராந்திகள் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த சாரதிக்கு எதிராகப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இலங்கை மரக் கூட்டுத்தாபனத்தினர் டிப்பரில் கொண்டு வரப்பட்ட பாலை மரத் தீராந்திகளின் பெறுமதி 3 லட்சத்து 10 ஆயிரம் ரூபா என மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்திருந்தனர். டிப்பர் சாரதிக்கு தண்டம் விதிக்கப்பட்டது. (ந-9)

## குடி தண்ணீர் தட்டுப்பாடுள்ள இடங்களில் 340 நீர் தொட்டிகள்

### யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்.குடாநாட்டின் அதிக நீர்த் தட்டுப்பாடு காணப்படும் பகுதிகளில் தற்போது 340 மழை நீர்த் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தேசிய ஒருமுகப்பாடு நல்லிணக்கச் செயலணியின் வேண்டுகோளின்படி வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் லைக்கா மொபைல் நிறுவனத்தால் மழைநீர் தொட்டி அமைக்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை அதைப் பயனாளிகளிடம் வழங்கும் நிகழ்வு வேலணைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே மாவட்டச் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்.குடாநாட்டின் அதிக நீர்த் தட்டுப்பாடு காணப்படும்பகுதிகளி 340 மழைநீர்த் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவிலும் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிலும் அவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தொட்டிகள் ஒவ்வொன்றும் 8 ஆயிரம் லீற்றர் கொள்ளளவைக் கொண்டவையாக இருக்கும். இவற்றை அமைக்க தலா 75 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டது. இதன்மூலம் மக்களின் நீர்த் தேவையில் ஓர் கணிசமான அளவு பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கின்றோம். பல கிராமங்களில் மழை நீர்த் தொட்டிகள் விரைவில் அமைக்கப்படும்.

இதற்கான நிதிப் பங்களிப்பை வழங்கிய நிறுவனம் 8 கோடி ரூபா வழங்க முன் வந்தது. தற்போது 2 கோடி ரூபாவுக்கான திட்டங்களே நிறைவு பெற்றுள்ளன என்று கூறப்படுகின்றது. இந்தத் திட்டத்தின் சிறப்பால் இந்தியத் துணைத் தூதரகமும் 3 ஆயிரம் தொட்டி அமைக்க முன் வந்துள்ளது. வடக்கு, கிழக்கில் மேலும் பல தொட்டிகள் எதிர்காலத்தில் அமைக்கப்படலாம். - என்றார். (ந-101)

# வடக்கு நிராகரித்த பொருத்து வீடு மலையகத்துக்குப் பொருந்தலாம்

## பரிசீலிக்குமாறு பிரதமர் ரணிலிடம் அமைச்சர் மனோ கணேசன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.14

வடக்கு மாகாணத்தில் நிராகரிக்கப்பட்ட பொருத்து வீட்டுத் திட்டம் மலையகத்துக்குப் பொருந்தக்கூடும். அந்த வீட்டுத் திட்டத்தை மலையகத்துக்கு வழங்குவது குறித்துப் பரிசீலிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கில் நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டு பின்னர் நிராகரிக்கப்பட்டுள்ள 60 ஆயிரம் பொருத்து வீடுகள் குளிர் காலநிலை கொண்ட மலைநாட்டுக்குப் பொருத்தமானதா என ஆராய்வது முறையானது என்று நான் நம்புகின்றேன். அது குறித்துப் பரிசீலனை செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பரிந்துரைத்துள்ளேன். தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமைக் குழுவிலும் இந்த விவகாரம் விரைவில் பரிசீலிக்கப்படும்.

குளிர் மற்றும் மத்திய சீதோஷண வலய நாடுகளில் வெற்றிகரமாக நடைமுறையாக்கப்படும் இந்த வீட்டுத் திட்டம், மலையக சீதோஷண நிலைமைகளுக்கு பொருந்துமா என்பது விஞ்ஞானபூர்வமாக பரிசீலிக்கப்படவேண்டும். இந்த வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுமாக இருந்தால் அடுத்த ஐந்து வருடத்தில் ஐம்பதாயிரம் தனி வீடுகள் என்ற எங்கள் திட்டம் மலையகத்தில் வெற்றி பெற பெரும் வாய்ப்பு உள்ளது.

தனி வீடுகள் கட்டப்படுவதற்கான மூலப்பொருள்களை மலைநாட்டில் திரட்டுவதுதான் நாம் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினை. அதனால் தாமதம் ஏற்படுகிறது. மாற்று மூலப்பொருள்களைப் பயன்படுத்தி உதிரிப் பாகங்களை தொழிற்சாலைகளில் செய்து அவற்றை கொண்டு வந்து பொருத்தி, வீடுகளை சடுதியாக கட்டும் திட்டத்தை நாம் ஆராய வேண்டும். உலகின் பல குளிர் வலய பகுதிகளில், சடுதியாக வீடுகள் கட்டப்பட வெற்றிகரமாக வழி ஏற்படுத்தியுள்ள இந்தப் பொருத்து வீட்டு திட்டம், மலைநாட்டில் நடைமுறையாக்கப்பட வாய்ப்பு உள்ளதா என்பதை நாம் ஆலோசிக்க வேண்டும்.

> வடக்கில் 60 ஆயிரம் தனி பொருத்து வீடுகளை கட்ட முடிவு எடுக்கப்பட்டு இருந்தாலும் கூட, பிரதேச மக்கள் வட மாகாண சபை முதலமைச்சர் தலைமையில் வெளியிட்ட எதிர்ப்புகள் காரணமாக கைவிடப்பட்டுள்ளது. அவை வடக்கின் சீதோஷண நிலைமைகளுக்கு பொருந்தி வராது என்பது ஏற்றுகொள்ளப்பட்டுள்ளது.

வடக்கில் 60 ஆயிரம் தனி பொருத்து வீடுகளை கட்ட முடிவு எடுக்கப்பட்டு இருந்தாலும்கூட, பிரதேச மக்கள் வடமாகாண சபை முதலமைச்சர் தலைமையில் வெளியிட்ட எதிர்ப்புகள் காரணமாக கைவிடப்பட்டுள்ளது. பொருத்து வீடுகளுக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள், வடக்கின் சீதோஷண நிலைமைகளுக்கு பொருந்தி வராது என்ற காரணம் இன்று ஏற்றுகொள்ளப்பட்டுள்ளது. இதை குளிர் சீதோஷண நிலைமைகளைக் கொண்ட மலைநாட்டில் நிர்மாணிக்க முடியுமா என நாம் பார்க்க வேண்டியுள்ளது.

மலைநாட்டின் நூறு வருடங்களுக்கு மேல் உள்ள வீடில்லாப் பிரச்சினைகளைத் தீர்த்து தனி வீடுகள் கட்டும் திட்டத்தை நல்லாட்சியின் முதல் ஐந்து வருட ஆட்சிகாலத்துக்குள் முடித்துவிட எமது கூட்டணிவிரும்புகிறது. எமது அரசுக்கு உள்ளே நாம் நிதானமாக காய் நகர்த்திசெயற்பட்டுவரும் இந்தக்காலத்துக்குள், இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால் பின்னர் என்றுமே இதை தீர்க்க முடியாது - என்றார்.(ற-4,101)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் தொடர்புடையோர் தண்டிக்கப்படுவர்

## கிளிநொச்சியில் தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கிளிநொச்சி, ஓக 14

இராணுவத்திடமும், பொலிஸாரிடமும் ஒப்படைத்துக் காணாமல்ஆக்கப்பட்டவர்களை அவர்களது உறவினர்கள் இப்போதும் தேடி வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டமைக்கு காரணமாக இருந்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமராதுங்க.




மழை நீரைச் சேமித்து குடி தண்ணீருக்காகப் பயன்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி, பூநகரி விக்னேஸ்வரா பாடசாலையில் நடைபெற்றது. அதில் முன்னாள் ஜனாதிபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போது ஆட்சியிலுள்ள அரசு மூலம் இரு பிரதான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மக்களுக்கான அபிவிருத்தி மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிதல் என்பவையே அவை. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் குற்றம் இழைத்தவர்கள் கண்டறியப்படுவார்கள். அவர்களுக்குத் தண்டனை வழங்க அரசு தயராக இருக்கின்றது. நல்லிணக்கம் பிரதான பணியாக முன்னெடுக்கப்படுகின்றது. அதற்கு உதாராணமாக இந்த நிகழ்வையும் குறிப்பிடலாம்.

பாடசாலை மாணவர்கள் இடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பப் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படுத்த அரசு பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது. எதிர்காலத்திலும் நடைமுறைப்படுத்தவுள்ளது. நல்லிணக்கத்துக்கான அமைச்சுகள் நிறுவப்பட்டுள்ளன. மொழிப் பிரச்சினையும் காணப்படுகின்றது. அதற்கெனவும் அமைச்சு நிறுவப்பட்டுள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. ஞானிமடம் பகுதியில் நீர் சேமிக்கும் தாங்கி முன்னாள் ஜனாதிபதியால் திறக்கப்பட்டது. செயற்திட்டத்தின் செயலாளர், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், இந்திய துணைத் தூதுவர் நடராஜன், மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்ட செயலாளர், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதம பொலிஸ் அதிகாரி எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-21,ரி3)



ஆறாம் நாள் உள்வீதியுலா

# ஏழாம் திருவிழா

## வருக வருக

பல்லவி

வருக முருக பரம குருவே
வரதா குகனே
(வருக)

அனுபல்லவி

அரி மருகா தருணமிதே
தாரும் உமது சரணபாதம்
(வருக)

சரணம்

பரவுவார்க் கருளுவாய் நீ
பரமசுகந் தரு பானு
சசியோகவதி தரு புதல்விதனை
மணந்த குமாரசுவாமி
மனமுவந்து மயிலேறிவா
சிவ யோகசுவாமி நீடு வாழ்க! வையம் வாழ்க
(வருக)

-சிவத்திரு யோகசுவாமிகள்

## நல்லாட்சி ஈகுவையே!

நல்லை நகரமர்ந்து நாளும் நலமீயும்
வல்ல தமிழ்க்குரவா! வடிவேலா உன்னருளால்
தொல்லைதமைக் களைந்து தூய்மை துளிர்த்திடவே
எல்லையிலா உன்னருளை என்றென்றும் ஈகுவையே!

காலைக்கதிரவனாய் களமாடி எமையாளும்
வேலவனேயுன் நாமம் வெவ்வினையை வேரறுக்க
கோலத்தமிழ்க் குரவா கொடுமைதனை நீறாக்கி
ஞாலம் செழித்தோங்க நல்லாட்சி நல்குவையே!

ஆணவச் செருக்கால் நாளும் ஆடிடும் ஆட்டமெல்லாம்
காணவே கனவாய்மூழும் கருத்தெலாம் கருகிச் சாயும்
பூணவே புனித மீயும் புன்மையைப் புதைத்து நீயும்
மாண்புடனிருந்து நாளும் மகிழ்வினை ஈகுவாயே!

– சுவத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்.

நல்லைக்கந்தனுக்கு
இன்று (14.08.2016) ஞாயிற்றுக்கிழமை
ஏழாம் திருவிழா

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
திருமணம் மற்றும் சகல
வைபவங்களுக்கும்
மிகப்பொருத்தமான
மண்டபம்
Nk Function Hall
பலாலி வீதி ஊரெழு
T.P.021 224 2422 / 077 036 6300
Email - nkfunctionhall@gmail .com
Web - www. nkfunctionhall.com

# மிருசுவில் கொலை செய்த ராணுவ அதிகாரிக்கு மன்னிப்பு வழங்குக

## தேசிய சுதந்திர முன்னணி ஜனாதிபதியிடம் கோருகிறது

கொழும்பு, ஒக. 14

மிருசுவிலில் சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் 8 பேரைக் படுகொலை செய்த குற்றத்துக்காக சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளித்து விடுவிக்க வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணி கோரியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த சமரவீர தெரிவித்ததாவது:

சாவுத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ள இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியைச் சேர்ந்த சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு அளித்து விடுவிக்கவேண்டும்.

187 சிறைக்கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை பெற்றுள்ளனர். இவர்களில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள், வன்புணர்வுக் குற்றவாளிகள், பெரும் நிதி மோசடிகளில் ஈடுபட்டவர்கள், பெருமளவு அப்பாவி மக்களின் உயிரிழப்புக்குக் காரணமான விடுதலைப் புலிகள் போன்றவர்களும் அடங்குகின்றனர்.

குறித்த இராணுவ அதிகாரிக்கும் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.- என்றார்.

2000 ஆம் ஆண்டு டிசெம்பர், 20ஆம் திகதி மிருசுவிலில் உள்ள தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற 8 பொதுமக்கள், படையினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டு மலசலகூடக் குழிகளில் போடப்பட்டு மூடப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் தப்பிச் சென்ற ஒருவர் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியதையடுத்து. சடலங்கள் மீட்கப்பட்டு நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவில், சார்ஜன்ட் சுனில் இரத்நாயக்கவுக்கு கடந்த ஆண்டு ஜூன் மாதம் சாவுத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. (ற-4)

# நிதியமைச்சின் விசேட பிரிவால் ரூ.9 ஆயிரம் கோடி வருமானம்

கொழும்பு, ஓக. 14

நிதியமைச்சின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவின் நடவடிக்கையால் கடந்த 45 நாள்களுக்குள் 9 ஆயிரம் கோடி ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சுத் தெரிவித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம் விசேடமுற்றுகைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ஒத்துழைப்பும் பெறப்பட்டது என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

விசேட சுற்றிவளைப்புப் பிரிவின் நடவடிக்கையால் கொகேன் போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது 7 ஆயிரம் கோடியும், சட்ட விரோத வாகன மற்றும் தொலைப்பேசி கொள்வனவின் போது 2 ஆயிரம் கோடியும் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என்று அமைச்சுத் தெரிவித்தது. (ற-4)

# காணாமல்போனோர் பணியகத்தில் முறையிடுவதற்கு ஜே.வி.பி. தீர்மானம்

கொழும்பு, ஓக. 14

காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் நிரந்த அலுவலகத்தில் மக்கள் விடுதலை முன்னணி முறைப்பாடு செய்யவுள்ளது.

காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் அலுவலகம் அமைப்பதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் நடத்திய கட்சியின் கூட்டத்தில் முறைப்பாடு செய்வது பற்றிய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

கட்சியின் முன்னாள் தலைவர் ரோஹன விஜயவீர, முன்னாள் செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்க, கட்சியின் முன்னாள் கொள்கை வகுப்பு குழுவின் உறுப்பினர்களான சாந்த பண்டார, ஏச்.டி.ஹேரத் மற்றும் ஏனையோர் தொடர்பில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது என்று அந்தக் கட்சி தெரிவித்தது.

1987–1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறித்த அனைவரும் அரசால் கைதுசெய்யப்பட்டனர் என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டுகிறது.

குறித்த முன்னாள் உறுப்பினர்கள் உயிரிழந்திருப்பினும் உறவினரோ கட்சியோ பொறுப்பேற்கவில்லை என்பதால் அவர்களைக் காணாமல்போனவர்கள் எனக் கருதி முறைப்பாடு செய்யப்படவுள்ளது என்று ஜே.வி.பி. தரப்பு தகவல்கள் தெரிவித்தன. (ற-4)

# காணாமல்போனோர் பணியகத்தால் உண்மைகளைக் கண்டறிய முடியும்

## அமைச்சர் டிலான் நம்பிக்கை

அரசால் அமைக்கபடவுள்ள காணாமல்போனோர் விவகாரங்களைக் கையாளும் அலுவலகம் ஊடாக நாட்டில் காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரெரா தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

விமல் வீரவன்சவும், உதய கம்மன்பிலவும் கூச்சலிடுகின்றார்கள் என்பதற்காக காணாமல்போனோருக்கு என்ன நடந்தது என்ற உண்மையை அறிந்து கொள்வதற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருக்கின்ற உரிமையை யாரும் மறுக்க முடியாது.

மக்களுக்கு தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்ற விடயம் கூறப்பட வேண்டும். இவ்வாறு ஒரு சட்டமூலம் எமது நாட்டில் நிறை வேற்றப் பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும். காணாமல் போனோருக்கு என்ன நடந்தது என்ற உண்மை கண்டறியப் படுவதில் தாமதிக்கக்கூடாது. இனவாதிகள் கத்துகின்றனர் என்பதற்காக இவற்றைச் செய்யாமல் இருக்க முடியாது. இனி இந்த நாட்டில் இனவாதிகளுக்கு இடமில்லை – என்றார். (ற-4)



# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### கார் விற்பனைக்கு

HB இலக்கமுடைய FN -15 NISSAN PULSAR விற்பனைக்கு உண்டு.

077 707 8292 /077 620 3504

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நாச்சிமார்கோயிலுக்கு அண்மையில் 1 ¼ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.

077 720 4167, 071 862 8519

### வீடு விற்பனைக்கு

பாண்டியன் தாழ்வு, புங்கன்குளம் வீதியில் 2¼ பரப்புக்காணியுடன் 5 அறைகள், 2 குளியலறையுடன் முற்றிலும் Tile பதிக்கப்பட்ட வீடு விற்பனைக்குண்டு.

070 321 2019, 021 205 1166

### விற்பனைக்கு

நல்லின தென்னங்கன்று, செவிழி தென்னை கட்டை இனம் (பெரிய இளநீர்),ஒட்டு மாங்கன்று, தேசி, தோடை, ஒட்டுப்பலா, ஈரப்பலா, கஜீ, மாதுளை, 1kg கொய்யா, பசன்புறூட், நெல்லி, யம்பு, முருங்கை, றெட்லேடிப்பாசி, வெற்றிலை, அம்பர்லா, கொடித்தேசி, கமுகு மற்றும் மலை வேம்பு, தேக்கு, சமண்டலை, சவுக்கு, சுந்தரவேம்பு, வேம்பு (ஊர்) மேலும் பல இன பூங்கன்றுகளும் பூச்சாடிகளும் விற்பனைக்குண்டு. இவைகள் அனைத்தும் எமது பண்ணையில் உற்பத்தியானவை.

நியூலங்கா பாம்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.

நியூலங்கா பாம்
பலாலிவீதி, ஊரெழு
பிள்ளையார்
கோயிலுக்கு அருகில்.

077 612 9343

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் ஆலடிச்சந்திக்கு மிக அருகில் Western Supermarket இற்கு எதிரில் நிலாவீடியோ வீட்டிற்குப் பின்னால் உள்ள 2½பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 461 1205

### வீடு விற்பனைக்கு

உடுவில், முதலாம் கட்டை ஒழுங்கையிலுள்ள 02 பரப்பு 14.5 குளி காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு. மானிப்பாய் சந்தியிலிருந்து 1.7 km

தொடர்பு: 075 800 5805

### TVகள் மலிவு விற்பனை

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட Sony wega Tvகள் மலிவு விலையில் 21" - 12000/= முதல் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 044 0570
சோனி ரேற் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, K.K.S. வீதி, சுன்னாகம்
Open - 8.00 Am - 3.00Pm Only

### விற்பனைக்கு

வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட பாவித்த Plywood, Aluminium Doors / Fridge / Fryer / Microwave / Speakers / DVD/ Printer / Copier / Car Parts / Electrical / Building Materials & House Hold Items For Clearance
(பாவித்த ஓடுகளும் விற்பனைக்குண்டு)

077 618 1381, 077 220 8414

### காணி விற்பனைக்கு

யாழ் நகர் சிவலிங்கப் புளியடியில் ஓட்டுமடம் வீதியில் 3 பரப்புக் காணி 3 பக்க மதிலுடன் விற்பனைக்குண்டு.

077 461 3884



## தேவை



### தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் 3பேர் கொண்ட குடும்பம் வசிக்கத்தக்க வீடு முற்றாகவோ, பகுதியாகவோ வாடகைக்குத் தேவை.

077 360 4023

### வேலையாள்கள் தேவை

சிறிய விடுதி ஒன்றுக்கு அறை பராமரிப்பாளர் (பெண்கள்)தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 236 7848

### தேவை

- வரவேற்பாளர் (ஆண்/ பெண்)
- ரூம் போய் (Room Boy) (ஆண்)
- தோட்டப் பராமரிப்பாளர் (ஆண்)

077 221 5167, 021 222 2829

### வேலையாள்கள் தேவை

புதிதாக ஆரம்பமாக இருக்கின்ற சைவ உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.

- நன்றாக சமையல் செய்யத் தெரிந்தோர் தேவை. (ஆண் Or பெண்)
- பரிமாறுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை.

தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 480 3413

### ஆலயப் பணிக்கு ஆட்கள் தேவை

கொழும்பில் உள்ள பிரபலமான கோயில் ஒன்றிற்கு, சுத்தம் செய்யும் பணிக்கு (Cleaning) கோயில் வேலை அனுபவம் உள்ளவர்கள் தேவைப்படுகின்றார்கள். வயது 20-35 க்குள், தகுந்த ஆதாரங்களுடன் தொடர்பு கொள்ளவும் :

Tel : 077 30 22 105

### சிகிச்சை நிலைய உதவியாளர் தேவை

பற்சிகிச்சை நிலையத்துக்கு உதவியாளராக வேலை பழகுவதற்கு A/L வரை படித்த 30 வயதுக்கு உட்பட்ட பெண்பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

198, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### தேவை

'சியராவின் கொழும்பில் உள்ள கட்டடம் கட்டும் வேலைத் தளங்களுக்கு மேசன்மார், போம் வேர்க் தச்சர்கள், கம்பி வளைத்துக் கட்டும் தொழிலாளிகள், பொதுத் தொழிலாளிகள், ஆபீஸ் பையன்கள், பாதுகாப்பு ஊழியர்கள்.

071 164 4534/ 077 245 0564
071 164 2884/ 071 489 3222
076 556 0857

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 ஆம் ஆண்டு பிறந்த 22 பாவக்கிரகமுடைய. லக்கினத்தில் செவ்வாயும், அனுச நட்சத்திரமுமுடைய சொந்தத் தொழிலினுள்ள மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.

077 822 2446

### தளபாடம் தேவை

உணவகம் ஒன்றுக்குப் பாவித்த நல்ல நிலையில் உள்ள கதிரை, மேசைகள், hot cuberd அலுமாரிகள் தேவை.

021 222 1889, 077 085 6058

### வாகனம் வாடகைக்குத் தேவை

யாழ் நகரில் இயங்கும் விநியோக நிறுவனம் ஒன்றிற்கு அலுமினிய பொடியுடன் கூடிய லொறி வாடகைக்குத் தேவை.

077 748 4820

### ஆசிரியர் தேவை

வீட்டில் வந்து தரம் 09 இற்கு ஆங்கிலம், சிங்களம் கற்பிக்கக் கூடிய வடமராட்சியை சேர்ந்த ஆசிரியர்கள் தேவை.

தொடர்பு:
021 226 2871 / 077 597 4581

### உதவியாளர் தேவை

கெழும்பிலுள்ள பிரபல புத்தகக் களஞ்சியத்துக்கு உதவியாளர்கள் (Store Helper) தேவை.
35 வயதிற்குட்பட்ட ஆண்கள்
தொடர்பு கொள்ளவும்.
தங்குமிடம் ,உணவு வழங்கப்படும்.

தொடர்பு.0776125145

### வேலையாள்கள் தேவை

*கனரக சாரதி
*கணக்கு வேலை தெரிந்தவர். (கணினி அறிவுடையவர்கள்)
*அலுவலக உதவியாளர்

போன்ற வேலைகளுக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை.

தொடர்பு
கொழும்பு பெயின்ட் சென்ரர்.
பருத்தித்துறை வீதி, நீர்வேலி, வில்லு மதவடி.

### விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

கையடக்கத் தொலைபேசி விற்பனையில் அனுபவமும் திறமையும் உள்ள விற்பனையாளர்கள் தேவை. Samsung, Huawei, Oppo, Lava ஆகிய கையடக்கத் தொலைபேசிகளை விற்பனை செய்யும் விற்பனைப் பிரதிநிதிகள் (Pro motor) சம்பளம் ரூபா 25,000/= தொடக்கம் 50,000/= வரை பெற்றுக் கொள்ள வாய்ப்பு உண்டு.

தொடர்பு-
யாழ்.போன்சொப்
இல.09, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3817, 077 361 1282

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1981 இல் பிறந்த சிம்மராசியும் மகநட்சத்திரத்தினையும் உடைய 12 இல் செவ்வாயும் 35½ கிரகபாவமு முடைய Diploma படித்து Ngo வில் Supervisor ஆக பணிபுரியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணமகனுக்கு கனடா, சுவிஸ், அமெரிக்காவில் PR உள்ள மணமகள் தேவை.
(கனடா விரும்பத்தக்கது)

உடனடியாக தொடர்பு கொள்ளவும்
077 353 0959(இலங்கை)

## ஏனையவை

### பெயர்மாற்றம்

கைதடி கிழக்கு,கைதடி எனும் முகவரியைக் கொண்ட நான் எனது பெயராகிய கட்டையன் விவனா என்பதை இன்றிலிருந்து கட்டையன் விஜயகுமாரி என்று மாற்றிக் கொள்கிறேன். இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் மேற்படி பெயரைப் பயன்படுத்துவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

விஜயகுமாரி

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### Chemistry English / Tamil Medium Personal Class

Physical & Organic Theory & கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் {B.Sc(Cey), M.Sc(Cey) (Chemistry)} கற்பிக்கப்படும்.

077 603 8913

### S.K.Broking Institute பதிவு இல.1442

எம்மிடம் வீடு, காணி விற்பனைக்குண்டு. திருநெல்வேலி, நல்லூர், கோண்டாவில், இராஜ வீதியில் தொகையாக காணிகள் விற்பனைக்குண்டு. கல்வியங்காடு மற்றும் விற்க, விரும்புபவர்களும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

077 461 3884, 077 193 3490

### அறை வாடகைக்கு

K.K.S. வீதி, பூநாறி மரத்தடியில் (செல்வமஹால் திருமண மண்டப முன்றிலில்) உள்ள வீட்டில் அறை வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவிகள், பெண் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

077 776 9284, 077 469 8172

### தவறிவிட்டது

அ.கோகுலன் ஆகிய எனது வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதி வரிப்பத்திரம் ஆகியவை அடங்கிய பேர்ஸ் யாழ்.போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

076 936 9141

### Study & Work in Singapore



Hotel Management
Learn & Earn up to Rs. 70,000/- Month

STUDY IN AUSTRALIA, CANADA, UK, EUROPE, USA, MALAYSIA.

ONLINE VISA FORM FILLINGS
USA, Canada, UK, Australia, Swiss, France, Italy, German, New Zealand
போன்ற நாடுகளுக்கு Business / Family & Friends Visit / Tourist விசா Form சிறந்த முறையில் செய்து தரப்படும்.

flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk

## வாடகைக்கு

### வாடகைக்கு

யாழ்ப்பாணம், சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதியில் சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

077 730 4545

### வாடகைக்கு

யாழ்.நகர் மத்தியில் பஸ் நிலையம், வைத்தியசாலைக்கு அருகில் ஆஸ்பத்திரிவீதிப் பக்கமாக ஏறத்தாள 3000 சதுர அடி முதலாம் மாடி வாடகைக்குண்டு. மேலும் இரு அறைகள் கீழ்த் தளத்தில் உண்டு. அலுவலகத்துக்கோ, கல்வி நிலையத்துக்கோ உகந்தது.

077 747 4111

# நீங்காத நினைவுடன்

பிறப்பு
04 . 02 . 1943

இறப்பு
04 . 07 . 2016



## அமரர் செல்லையா யோகராசா

மனைக்கு யோகமாய் அமைந்த ராசாவே!
மனதில் நிறைந்து பின் மறைந்ததேனோ?
நினைவிலும், கனவிலும் நீங்களே வருகின்றீர்கள்.
நித்தமும் தேவி, ஆதி என்றழைக்கின்றீர்கள்
உமையன்றி உலகில் வேறு யார் எமக்கு
இமை மூடாமல் இருக்கின்றோம் வாசலில் என்றும் கண்ணீருடன்

அன்னாரின் மறைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த கவலையில் இருந்த நேரம் எமக்கு ஆறுதல் கொடுத்த உள்ளங்களுக்கும் எம் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டும் இரங்கலுரை ஆற்றிய, கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட மற்றும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் வழங்கிய அத்தனை உள்ளங்களுக்கும், சகல உதவிகளும் புரிந்த சகல நேயங்களுக்கும் நன்றி கூறுவதுடன் இன்று (14.08.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (J/8730) (11.18)

**குடும்பத்தினர்.**

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
06 . 07 . 1942

விண்ணில்
17 . 08 . 2013



## அமரர் தம்பிமுத்து சுந்தரேஸ்வரன் (இராசா)

திதி: 14.08.2016 (ஏகாதசி)

தந்தை என்ற சொல்லுக்கு அர்த்தம் புகட்டித் திகழ்ந்து,
ஊருடன் ஒன்றியென்றும் உண்மையுடன் வாழ்ந்து,
கனிவான வார்த்தைபேசி அனைவரையும் கவர்ந்திட்ட நீவீர்,
இம்மண்ணை நீத்துச் சென்று கழிந்தனவே ஆண்டுகள் மூன்று
நாமிழக்க நேர்ந்ததுவோ உங்களது தூல சரீரத்தையே,
எம் வாழ்வின் சுவடுகளில் என்றுமே உறுதுணையாய் நீர் உள்ளீர்,
மூன்றென்ன எங்கள் மூச்சு உள்ளவரை
எம் மனதில் உம் நினைவு ஒருகணமும் அகலாது.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா இறைவன் திருவடிகளில் சாந்திபெற அருளுமாறு வேண்டி சிவபூதநாதேஸ்வரர் பாதம் பணிகின்றோம்.

**குடும்பத்தினர்.**
**கரந்தன் வீதி, நீர்வேலி.**

# மரண அறிவித்தல்

## இரத்தினசிங்கம் இரமணதாசன்



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோயிலடி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் இரமணதாசன் 12.08.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (பொலிஸ் அதிகாரி) மற்றும் மகாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் தேவராசா(ஓய்வு பெற்ற ஆசிரியர் - மானிப்பாய் இந்துக்கல்லூரி) - சந்திரமலர் தம்பதிகளின் அருமை மருமகனும் தாரணி(அபிவிருத்தி உத்தியோகத்தர் - கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும் தர்ஷாந்தின் பாசமிகு தகப்பனாரும் முருகதாஸ்(ஆஸ்திரேலியா), சொரூபி(கொழும்பு) ஆகியோரின் அருமை சகோதரரும் கிருஷாந்தின்(ஆஸ்திரேலியா) அன்பு சிறிய தகப்பனாரும் சோபனா(ஆஸ்திரேலியா), தேவராசா பிரகாஷ், தேவராசா கவிதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சௌமியாவின் சகோதரரும் ஆதனாவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.08.2016) திங்கட்கிழமை மு.ப 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று அவரது பூதவுடல் தகனக்கிரியைக் காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஐயனார் கோயிலடி,**
**மல்லாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 224 2148/ 077 869 4140**

# மரண அறிவித்தல்

## திருமதி பூமணி சோமசுந்தரம்



தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி சோமசுந்தரம் 09.08.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சபாபதி - மனோன்மணி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வர்களான நடராசா, அன்னலட்சுமி, குமாரசாமி ஆகியோரின் சகோதரியும் சண்முகநாதன் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பாலஜோதி, சிவலோகநாதன் (கனடா), பவானி (சுவிஸ்), ராயு (சுவிஸ்), பாலகுமார், பத்மநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் காந்தி, ஜெயராஜலிங்கம், ராஜலக்சுமி (கனடா), பிறேமஜெகன் (சுவிஸ்), குமுதினி (சுவிஸ்), அனுபாமா, இந்திராணி (கனடா), காலஞ்சென்ற செல்வக்குமாரசாமி ஆகியோரின் மாமியும் சஞ்சீவ், சோபிந், தர்சிகா, டினோதா, நவகரன், வினோ, கஜேந்திரன், அனோஜன், அஜிலன், ஆகாஸ், நிசாலினி, பிருந்தாபன், பிரதீபா, சோனு, விஸ்வன், கவீன், விதுனா ஆகியோரின் பேர்த்தியும் சாயினி நிசானி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2016)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
தாவடி கிழக்கு,கொக்குவில்.

**தகவல்:குடும்பத்தினர்.**
**075 4020847**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் நெல்லியடியிலிருந்து மாலி சந்திக்குச் செல்லும் பிரதான வீதியில் ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமத்துக்கு அருகில் 5பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**071 838 0493, 076 630 7279**



அசத்தலான , ஆடிமாத ஆடைத்தள்ளுபடி

## த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தின்

உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள்..... இன்னும் 2 நாள்கள் மட்டுமே உள்ளன.

* சாறி (பட்டு கல்லுவைத்தது) 2500/=
* நெற்சாறிகள் 1000/=
* சாறிகள் 1500/=
* ஸ்கேட் வகைகள் 500/=
* பிளவுஸ் வகைகள் 250/=
* T. சேட் வகைகள் 250/=
* பஞ்சாபி வகைகள் 500/=
* ஜீன்ஸ்வகைகள் 500/=
* சேட் வகைகள் 500/=
* கொட்டன் சாறிவகைகள் 500/=
* 01 M சலஞ்சர்துணி 44" 100/=



மற்றும் அனைத்து ஆடை தினுசுகளுக்கும் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.

ஆடி மாதம் முடியும் வரை

என்றும் எங்கும் இல்லாதவாறு புதுப்புது டிசைன்களில்

**44, 42, பெரியகடை , யாழ்ப்பாணம்.**



Unilever pureit

## நல்லூர் உற்சவகால சிறப்பு விலைக்கழிவில் யுனிலிவர் பியூரிட் நீர் சுத்திகரிப்பு சாதனங்கள்

## UNILEVER PUREIT ULTIMA RO

**உங்கள் குடும்பத்தின் பாதுகாப்புக்காக நீர் தூய்மையாக்கல் பற்றிய நிகழ்ச்சித்திட்டம் சுத்தமான குடிநீர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி!**



நீரிலுள்ள பற்றீரியா, வைரஸ், கல்சியம் மற்றும் ஆசனிக் நைத்திரட், நுண்ணுயிர்களை

அகற்றுவது RO தொழில்நுட்பத்தால் மட்டுமே. உவர் நீரையும் தூய்மையாக்கும் திறன் இதற்கு உண்டு. விசத்தன்மையுள்ள நீரையும் தூய்மையாக்கிப் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுத்தரும்.

* விசேட விலைக்கழிவில் 14.08.2016 தொடக்கம் 15.09.2016 வரை மட்டும்.
* அரச ஊழியர்களுக்கு விற்பனை விலையில் தவணைக் கட்டணங்களுக்கு வழங்கப்படும்.

**மேலதிக விவரங்களுக்கு**

**077 013 0618, 077 010 9562, 077 013 3514**
**077 639 3444, 077 010 9568**

**வடமாகாண விநியோகஸ்தர்கள்**

Narayana Hard Ware Trader , Stanly Road, Jaffna. 021 222 5390

House of Ceramic K.K.S Road , Jaffna. 021 222 9599



BLOOMING BUDS The Wisdom of Children

# BLOOMING BUDS International E CAMPUS

PV 94034

ENGLISH MEDIUM TEACHER TRAINING DIPLOMA PROGRAMME
பயிற்சியின் மூலம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல்

## 6 Months

### தகைமைகள்

* க.பொ.த. (சா/த) 4 பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் வேண்டும்.
* ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாட்களுக்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
* பயிற்சி கிழமையில் 3 நாட்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களுக்குக் கொடுக்கப்படும்.
* பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.
* போயா தினம் உட்பட அரசாங்க விடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 7.30-2.30 வரை வேலைநாட்களாகும்.

### மேலதிகமாக

சிங்களக்கல்வி மற்றும் கணினி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா, சிங்கள டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில இலக்கிய டிப்ளோமா, சுயதிறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்.

ஐந்து வருடங்களாக சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுநர் ஆசிரியர்களை பயிற்றுவித்து எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்.

**Course Fees Monthly 4800/= Only**

கற்கை நெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிகடன் ஏற்பாடு செய்து தரப்படும்
(நிபந்தனைக்கு உட்பட்டது )

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சி பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்பு பிரதி எடுத்து அத்துடன் (9x4) அளவுள்ள தபாலுறையில் 45.00 ரூபா முத்திரை ஒட்டி இடது பக்க மேல் மூலையில் 01-11 ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத் தபாலில் அனுப்பவும்.

பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி officer. Blooming Buds International *E Campus* Teacher Training School .178, Thavadi Rd, Suthumalai south Manipay

378/3, Nelson Building Kandy Road, Dhulukama, Kalaniya. 011 305 4641

No.390/2/1, Baseline Road Dematagoda Colombo- 9 . T.P :1 011 267 7641 071-5669641,077-1529731

www. blooming budse campus.com (சி.24932) (13.18)

021 225 6641, 071 566 9641

## தேவை

பிரபலமான தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு தொழில்நுட்பவியலாளர் ஒருவர் தேவை. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். மற்றும் Computer, Printer தொழில்நுட்பம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**077 775 4811/ 077 691 7919**

## ஜீவகவாத நிவாரணி

தலைவலி, காதுவலி, பல்வலி, தடிமல், இடுப்பு வலி, முதுகு வலி, தசை வலி, கெண்டை பிறள்வு, முழங்கால் வலி மற்றும் வீக்கம், முடக்கு வாதம், விரல்கள் கைகால் விறைப்பு, உளுக்கு, வீக்கம், கழுத்துச் சுழுக்கு, குத்துவலி, கொழுக்கல், நரம்புசார் வலிகள், பக்கவாதம், கீழ் பாதம் அரிப்பு மற்றும் வீக்கம், வாதம், விறைப்பு வாதம் என்பவற்றின் போது வெளிப்பூச்சுக்குப் பொருத்தமான உடன் நிவாரணம் தரும் கை கண்ட ஔடதமாகும்.

கண்களிலோ, புண்களிலோ பூசுவதைத் தவிர்க்கவும்

Manufactured by:
**Jeewaka Herbal Products (pvt)Ltd, Yakkala.**

சந்தைப்படுத்துவோர் - சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகில்)
**021 222 2567**

## இலவச நீரிழிவு மற்றும் செவிப்புலன் (காது) பரிசோதனை

**இலவச நீரிழிவுப் பரிசோதனை**

நீரிழிவு நோய் நிலை (FBS, RBS ) எப்படி? என்பதை அறிந்து கொள்ளலாம்.

**இலவச செவிப்புலன் (காது) பரிசோதனை**

செவிப்புலன் ஆற்றல்(காதுகேட்கும் தன்மை) எப்படி? என்பதை அறிந்து கொள்ளலாம்.

**காலம் : 17.08.2016 புதன்கிழமை**
**காலை 07 மணி தொடக்கம் 11 மணி வரை**

**இடம் : மெட்கோன் செவிப்புலன் (காது) சுகநல நிலையம்**
(Micro PC System's மேல்மாடி)
**இல.218, 1/1, ஆஸ்பத்திரி வீதி,**
**(சத்திரச்சந்திக்கு அருகில்)**
**யாழ்ப்பாணம்.**

**T.P: 077 012 4415, 021 492 3587**

( முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யலாம் )
எம்மிடம் நீரிழிவைச் சோதிக்கும் கருவிகள், செவிப்புலன் ஆற்றலைக் கூட்டும் கருவிகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## Russian Government Medical Colleges Admission 2016




- Recognized by - WHO / SLMC / BMC
- 100% English medium education
- Exclusive officials in Sri Lanka

Semminar and Enrollement with Univercity officials on 28th August at 9.30 a.m at Med Ed Consultancy

Further details :- Dr Silvester Persy 07777 48 405

No .250,Temple Road, Colombo 10
E mail :- mededconsult@gmail.com
Web :- mededcosult.com
Med Ed Consultancy
Tel / Fax :- 011 267 90 97
Mobile :- 077 699 66 62

## பஜாஜ் மோட்டார் சைக்கிள் பெறுவோருக்கான ஓர் நற்செய்தி

**கிளிநொச்சி கரடிப் போக்கு சந்தியில் அமைந்துள்ள 'தரணீஸ்' மோட்டார் (பஜாஜ்) சைக்கிள்**



**விற்பனை நிலையத்தில் காசு அல்லது குத்தகை அடிப்படையில் பஜாஜ் மோட்டார் சைக்கிள் பெறுவோருக்கு 15.08.2016 ஆம் திகதி தொடக்கம் 10 வீதற் பெற்றோல் இலவசமாக வழங்கப்படும்.**

**தகவல்: உரிமையாளர்**
**தரணீஸ் மோட்டார் சைக்கிள் நிலையம்**
**தொடர்பு: 021 2280053**

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் உள்ள Samsung காட்சியறைக்கு

- Admin Assistant - Female
- Sale Assistant - Male

வயது எல்லை 20 - 26 வரை (J 3734) (14,17,18)

**தொடர்பு: 077 706 4368**

## பணியாளர்கள் தேவை

சாவகச்சேரியிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கி வரும் மொத்த, சில்லறை வியாபார நிலையத்துக்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.

- சிட்டை எழுதுனர்
- காசாளர்

முன் அனுபவம் அவசியம்
O/L சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (J 3735) (14,17,18)

**தொடர்பு: 077 312 8881**
**இல.344, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## உடற்பருமன் கொண்டோருக்கு ஓர் அற்புதமான செய்தி (2 வாரங்களில்)

ஆண்,பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் திகழ

**ஆயுர்வேத கெர்வல் ஔடதம்**
**(பால்மா, குளிசை, டொனிக், கிறீம்)**
**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல் எடை கூட்டுதல், குறைத்தல், ஊளைச்சதை, மார்பு கூட்டுதல், குறைத்தல், வயிற்றுக் கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுர்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு

எங்களிடம்
மேலும், முகப்பரு, கண்கருவளையம், முகச்சுருக்கம், உதடு கறுப்பு, முதுகு, கழுத்து, கை, கால், கறுப்பு நீக்கும் கிறீம், முகம் தாடைகளில் தேவையற்ற ரோமங்கள் மற்றும் காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
**விலை 2500/= 5500/=**

**தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.**

**077 210 6155,**
221, நாவலர் றோட் (பிறவுன் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## உடனடி வேலைவாய்ப்பு

1. **மோட்டார் சைக்கிள் பழுதுபார்த்தல், திருத்துதல் பயிற்சிநெறி**
2. **கட்டுமான துறை (மேசன் தொழில்)**

விஷேட பிரிவுகள். கற்பித்தல் உட்பட செயல்முறைப் பயிற்சிகளை வழங்கக்கூடிய NVQ - தரம் 4 உடையவர்கள் அல்லது NVQ - தரம் 3 உம் அத்துடன் துறைசார்ந்த 3வருட அனுபவமும் தகைமையுமுடையோர் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 16.08.2016**

**வை-குறோ நிறுவனம்**
**வைத்தியசாலை வீதி ,சின்னக்கடை, மன்னார்.**
**தொடர்புகளுக்கு: 077 3508936, 023 2251128**
**e-mail:- ygromsc@gmail.com**

CEYLON THEATRES
Since 1928



## பணியாளர் அங்கத்தவர்கள் தேவை

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான துடிதாட்டமான மற்றும் ஆற்றல் வாய்ந்த நபர்களை நாம் தேடுகிறோம்:

வயது 18 – 35 வருடங்கள்
சா.தரத்தில் ஆகக்குறைந்தது 2 சித்திகள்

**வாடிக்கையாளர் சேவை உதவியாளர்**

வயது 18 – 30 வருடங்கள்
உயர் தரத்தில் சித்திபெற்றிருப்பதுடன், அங்கீகாரம் பெற்ற கல்வியகமொன்றிலிருந்து IT ஹார்ட்வெயார் டிப்ளோமாவை கொண்டிருப்பதுடன், 2 வருடங்கள் பணியாற்றிய முன்அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**டிஜிட்டல் ஒப்பரேற்றர்கள்**

வயது 20 – 40 வருடங்கள்
உயர் தரத்தில் சித்திபெற்றிருத்தல் அல்லது பட்டதாரி என்பதுடன் IT அறிவை கொண்டிருப்பதுடன், மேற்பார்வை அல்லது விருந்தோம்பல் துறையில் 3 – 4 வருடங்கள் பணியாற்றிய அனுபவம்.

**சினிமா முகாமையாளர் / உதவி முகாமையாளர்**

உங்கள் சுயவிவரக் கோவையை தபால் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:
சிலோன் தியேட்டர்ஸ் பிரைவட் லிமிட்டெட், இல. 08,
சேர் சித்தம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு 02
இடதுபுற மேல் மூலையில்: தொழில் விண்ணப்பம் என குறிப்பிடவும்
மின்னஞ்சல்: thushara.p@ceylontheatres.com

## வீடு விற்பனை

யாழ் சுழிபுரத்தில் வீட்டுடன் கூடிய 5 1/2 நிலப்பரப்பு விற்பனைக்கு உண்டு
தொடர்புக்கு
**0777 119495**

## தேவை

வட்டுக்கோட்டை, மாவடி சந்தியில் புதிதாக அமைக்க இருக்கும் Net cafe, Stationary கடைக்கு Computer அனுபவம் உள்ளவர்களும் Phone Repairing அனுபவம் உள்ளவர்களும் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 679 2275**

## தேவை

நல்லூர் உற்சவ காலத்தில் எங்கள் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு ஆண்/ பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.

**072 158 2222**

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரி பேருந்து நிலையத்தின் அருகில் கட்டட நிர்மாண வேலைக்கு மேசன், கூலி ஆள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 824 5454**

## வாடகைக்கு

அரச தனியார் NGO'ஸ்க்கு அலுவலகமாக சுமார் 5000 சதுர அடி விசாலமான வீடு ஆனைப்பந்தி சந்திக்கும் வைமன் வீதிக்கும் இடையில் நாவலர் வீதியில் வாடகைக்கு.

**077 251 9056**

## விருந்தினர் விடுதிக்கான கட்டடத்தேவை

கீழ்காணும் இடங்களில் விருந்தினர் விடுதிக்காக 10 அறைகளுடன் கூடிய தோட்டமும் சேர்ந்த பெரிய வீடுதேவை.

Casuarina Beach Area.
Point Pedro, Araly, Jaffna Town.
தொடர்பு: Email: Jaffnahostel@gmail.com
T.P. 076 830 1168

## மணமகள் தேவை

80 ஆம் ஆண்டு பூசம் 4இல் செவ்வாய் கனடா சிற்றிசன் வந்துள்ள மணமகனிற்கு மணமகள் தேவை.

**துர்க்கா - 077 818 5978/075 011 1122**

## காணி விற்பனைக்கு

A9 வீதியில் நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதி, ஆரம்பத்தில் காணி விற்பனைக்குண்டு. பிரித்து கொடுக்கப்படும்.

**தொடர்பு:- 077 8730129**

## MAJESTIC CINEPLEX

A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் ப்ளாட்டினம 10.00 / 1.00 / 7.00
Fri/Sat/Sun 9.30 p.m

PETE'S DRAGON 4.00 p.m




| சில்வர் | ப்ரொன்ஸ் |
|---|---|
| 10.15 / 1.15 / 4.15 / 7.15 | 10.30 / 1.30 / 4.30 / 7.30 |

Fri/Sat/Sun 9.30 p.m

விசாரணை ☎ 021- 2227712

facebook CeylonTheatres
www.ceylontheatres.lk


Surf excel
Unilever
சூரதீர சிறுவர்கள்
நாம் ஆக்கத்திறன் கொண்ட இலங்கையை உருவாக்குவோம்.
இது பெட்டியில்லை மாளிகை
ஒதுக்கப்படும் பொருட்கள் மற்றும் சேர்.்ப் எக்சல் பக்கற்றுகளைக் கொண்டு டோய் ஒன்றை செய்து அதன் போட்டோவை 0766 555 666 க்கு whatsapp அல்லது viber செய்யுங்கள்.
10,000
சிங்கப்பூர்
1323
*நிபந்தனைகளுக்குட்பட்டது | *5-11 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மட்டுமே

# இனவாதம் தலைதூக்க இடமளியோம் - ரணில்

இலங்கையில் இனவாதம் தலைத்தூக்குவதற்கு இனியொருபோதும் இடமளிக்கப் போவதில்லை. என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உலக முஸ்லிம் லீக் மாநாடு இம்முறை இலங்கையில் நடைபெறுகின்றது. கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்த மாநாட்டின் நிகழ்வொன்று அலரி மாளிகையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் முஸ்லிம்கள் ஓர் இணைப்புப் பாலமாகவும் அந்நியோன்னியமாகவும், சமாதானமாகவும் வாழ்ந்து வருகின்றனர். என்னைத் தலைவராகக்கொண்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சியில் சகல சமூகங்களையும் பிரநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் உள்ளனர்.

மஹிந்தவின் ஆட்சியில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி இந்த அரசு சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

நாட்டில் பௌத்த பெரும்பான்மை மக்களோடு கிறிஸ்தவம், இந்து, இஸ்லாமிய மக்கள் மிகவும் ஐக்கியமாகவும், சமாதானமாகவும் வாழ்கின்றனர். நாட்டில் மீண்டும் ஒருபோதும் இனவாதம் தலைதூக்கஅனுமதிக்கப் போவதில்லை. அதற்கு இடமும் கொடுக்கப்போவதில்லை.-என்றார். (ற-4)





வீடு கட்டுவதற்கான கூரைத்தகடுகளை தெரிவுசெய்யும்போது முத்திரையிடப்பட்ட உயர்ந்த தரத்திலான மற்றும் பெறுமதிமிக்கவற்றையே தெரிவுசெய்யுங்கள் - கலர்அப்

கட்டிட கலைஞர்கள் மற்றும் கட்டிட தொழில் வல்லுனர்கள் ஆகியோரால் சிபார்சு செய்யப்படுவது கலர்அப் கூரைத்தகடுகளே. ஏனெனில் அவை ஒவ்வொரு இல்லத்தின் அழகையும் அதிகரிக்கச் செய்கின்றது.

**உங்களுக்கு கிடைக்கும் நன்மைகள்**

- உண்மையிலே உங்கள் கூரைக்கு ஒரு வசீகர தோற்றத்தை அளிக்கிறது
- கூரை ஓடுகளை விட மிகவும் சிக்கனமானது
- மரப்பலகை பாவனையை குறைக்கின்றது
- எளிதாக பராமரிக்கலாம்
- பொருத்துவதற்கு செலவிடும் நேரம் குறைவானது



ரூ.1900/- க்கு மேல்

Online ஒன்லைன் மூலமான கொள்வனவு:
http://www.rhinocolorup.com/

உடன் தொடர்புகளுக்கு : 0115 748 728 / 0115 748 738
றைனோ ரூபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டட்
752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9, இலங்கை.
வெப்: www.rhinocolorup.com
/ RhinoRoofingIk

Colorup
MARKETED BY RHINO
ரூபிங் மற்றும் சீலிங் தகடுகள்

HOLMES POLLARD & STOTT

*கூரைத்தகடுகளின் நிறங்கள் விளம்பரத்திலுள்ள நிறங்களிலிருந்து வேறுபடலாம்.
நீங்கள் விரும்பிய நிறங்களை நாடெங்கிலுமுள்ள எமது காட்சியறைகளிலிருந்தும் விநியோகஸ்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.




டாட்டா, லேலண்ட், ஹினோ மற்றும் கமின்ஸ் வாகன உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க என்ஜின் பழுதுபார்ப்பிற்காக வழங்கப்பட்ட

**எமது சலுகைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது!**

**எமது அதிகபட்ச வேலைக் கூலி**

| | |
|---|---|
| TATA | 44,000/- |
| LEYLAND | 47,000/- |
| Hino | 46,000/- |
| C | 52,000/- |

**நாட்டிலேயே அதிகுறைந்த வேலைக் கூலி**

மேற்குறிப்பிட்ட பழுதுபார்ப்பு மீண்டும் தேவைப்பட்டால் அல்லது ஓட்டத்தின்போது தேய்வு காரணமாக என்ஜினை கழற்ற நேர்ந்தால் 2 ஆண்டு காலத்தினுள் வேலைக் கூலி மீண்டும் அறவிடப்படமாட்டாது.

ebl SINCE 1947
ஏதிரிசிங்க பிறதர்ஸ் லிமிட்டட்
077 66 33 370
www.autocourt.net



ashok STEEL
நீடித்த வலிமை

அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.100,000 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397/ 076 6084369, மேல் மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3825832, வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

SLS 375
Grant McCann


யாழ் பிராந்திய காகில்ஸ் புட்சிட்டிகளுக்கு விசேட சலுகை
Cargills food city
யாழில் அதிஷ்டம்
Signal
ஏதேனும் 3 பிராண்ட்களை வாங்கி
1 ஸ்கூட்டி பெப்
10 சைக்கிள்கள்
வெல்லுங்கள்
வாராந்த விலை விசேஷம்
2016 ஆகஸ்ட் 12 முதல் 18 வரை மட்டுமே
ரூ. 125/-
சுப்பிரி கீரி சம்பா 1kg
ரூ. 420.00
ரூ. 378.00
நெஸ்கபே கிளாஸிக் போத்தல் 50g
மெலிபன் லெமன் பஃப் 200g
ரூ. 100.00
ரூ. 89.00
LEMON PUFF
ரூ. 195.00
ரூ. 175.00
லாவோஜி தேயிலை 200g
ரூ. 50.00
ரூ. 42.50
CHICKEN
ப்ரிமா நூடில்ஸ் சிக்கன் 74g
ரூ. 335.00
ரூ. 268.00
KIST
கிஸ்ட் மிக்ஸ்ட் ப்ருட் ஜாம் 510g
Signal Expert
சிக்னல் டூத் பிரஷ் எக்ஸ்பர்ட் 1
ரூ. 45.00
ரூ. 39.00
ரூ. 175.00
ரூ. 149.00
கொத்மலே மிளகாய் தூள் 250g
Vim
குட்நைட் ரீஃபில் 60 நைட்ஸ் ஒன்று
ரூ. 635.00
ரூ. 476.00
மெஜிக் ப்ரெஷ் மெங்கோ 2Ltr
ரூ. 215.00
ரூ. 169.00
ரூ. 120.00
ரூ. 96.00
ஃபெம்ஸ் அக்டிவ் ட்ராடெக்ஸ் விங்ஸ் 10
ராஜபுர பஞ்ச பல அமிர்த பானம் 375ml
ரூ. 160.00
ரூ. 139.00
விம் லிக்விட் டிஷ்வொஷ் 500ml
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
ரூ. 360.00
ரூ. 306.00
Surf excel matic
சர்ஃப் எக்செல் மெடிக் டொப்லோட் 1kg
ரூ. 210.00
ரூ. 189.00
RIN refresh
ரின் ரிஃப்ரெஷிங் லைம் அன்ட் ரோஸ் 1kg
ரூ. 460.00
ரூ. 368.00
அத்தியாவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலையிலும் குறைந்த விலை காகில்ஸ் புட்சிட்டி இடமிருந்து மட்டுமே
169/-
ரூ. 167/-
மைசூர் பருப்பு 1kg
220/-
ரூ. 218/-
பயறு 1kg
MACKEREL
140/-
ரூ. 138/-
மைசொய்ஸ் மெக்கரல் 425g
1560/-
ரூ. 1390/-
SUSTAGEN
சஸ்டேஜன் சொக்லட் / வெனிலா 400g
Cargills food city
வீடு செல்லும் போது

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மதப் பேராண்மை நாட்டை பாழ்படுத்தும் போக்கு தேவை தானா...?

ஒரு மதத்தின் மீது, பிறசமயம் ஆதிக்கம் செலுத்துவது, ஒழிக்கப்படும் என்று ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் தெட்டத் தெளிவாக விளம்பியது. ஆனால் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் அது செல்லாக் காசாக்கப்பட்டு விட்டதா? என்ற பென்னம் பெரிதான வினாவே நீண்டு நெடிதுயர்ந்து நிற்கிறது!

இந்த அதர்மச் செயலைத் தடுத்து நிறுத்துவதற்கு, நல்லாட்சி அரசு எந்த வகையிலும் செயற்பட மாட்டாது என்பது செயல் வடிவில் காண்பிக்கப்படுகிறது.

நீங்கள் எவரெனினும் சரி, எந்தவித வேண்டுகையை அழுத்திக்கூறினும், எமது மதவெறிக் கொள்கையை மாற்றமாட்டோம் என்று, நல்லாட்சி அரசு என்ற பெயரைச் சொல்லியவாறு பேரிகை அடித்து முழங்கோ, முழங்கென்று முரசு அறையப்படுகிறது!

கிளிநொச்சி மாவட்ட இந்து மக்களுக்கு இடரினும் தளரினும் உற்ற துணையாக நின்று உயிரூட்டம் கொடுப்பவள், கனகாம்பிகை அம்மன். அந்த மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் குடியேறி, ஆண்டாண்டு காலமாக வளமும் வனப்பும் பொலிந்து வாழும் மக்களின் இஷ்ட தெய்வம் அவளே. அந்த அம்மையவளின் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் பௌத்த விகாரை அமைக்க ஏற்பாடாகி உள்ளது.

அதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று, அகில இலங்கை இந்துமாமன்றம் இந்து மக்களின் குரலாக அழுத்திக் குரல் கொடுத்துள்ளது.

அந்தோ, நாட்டின் ஒரு சமயத்தை மற்றொரு சமயம் விழுங்க முயல்வதும், மேலோங்குவதும் இந்துக்களை வகை தொகையின்றி மதமாற்றம் செய்வதற்கான மூலவித்தா என்ற வினா மேலெழுவதைத் தவிர்க்க இயலாதே.

ஒரு சமயத்தின் மீதான, பிறசமயம் ஒன்றின் ஆதிக்கம் ஒழிக்கப்படும் என்ற ஜனாதிபதி ஸ்மைத்திரிபால சிறிசேனவின் கொள்கைப் பிரகடனம்--

உனக்கும் பேப்பே, அதனூடு உன் அப்பனுக்கும் பேப்பே என்று சண்டித்தனம் செய்வோர் கூட்டத்தின் முன்னால் வலுவற்றுப் போய் விடுமே. இவர்கள் யாவரும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் சாரார்களே--

இத்தகைய ஒவ்வாத வகையினரே -

இலங்கை என்ற வளமுள்ள நாட்டை, இன, மத, பண்பாடு அற்ற வனாந்தரமாக மாற்றுவதற்கு, அவ்வப்போது பசளை இட்டு வருகின்றனர்!

ஆட்சியாளர்களது அதிகாரக்குரல் இத்தகைய மேலாண்மைப் போக்காளர்களது அலங்கார, ஆவேச, வார்த்தைகளின் முன்னால் வலுவிழந்து போவது ஆச்சரியமான ஒன்றல்லவே.



# சுதந்திரக்கட்சியின் எதிர்காலம் கேள்விக்கு உரியதொன்றே!

சிங்கள மூலம் சுந்துன் ஜீவந்த (மவ்பிம)
தமிழில் வீ.எஸ்.ரீ

காலில் கொப்புளங்கள் வரும் வரை நடந்தாலும் கூட, நல்லாட்சி அரசை எவராலும் வீழ்த்தி விட இயலாது என இந்த நாள்களில் மைத்திரிபால-ரணில் அரசின் ஆதரவாளர்கள் கேலியும் கிண்டலும் செய்து வருகின்றனர். ஆனால், அவ்விதம் காலில் கொப்புளங்கள் வரும் வரை பாத யாத்திரை செய்பவர்கள் குறித்து நல்லாட்சி அரசு இவ்வளவு தூரம் கலவரமடைந்ததேன் என எண்ண வேண்டியுள்ளது.

சாதாரணமாக கிராமப்புறங்களில் இரவில் வீதியில் ஒருவர் தனியாகப் பயணிக்கும்போது, மயானப் பகுதியொன்றைக் கடந்து போகவேண்டி ஏற்பட்டால், உரத்த குரலில் பாடிக் கொண்டோ அல்லது எவரையாவது திட்டிக் கொண்டோ செல்வது வழக்கம். காரணம் அதன் மூலம் மனப்பயத்தைப் போக்கிக் கொள்வதாகும். இன்று நல்லாட்சி அரசு மகிந்தவின் பாத யாத்திரையைத் திட்டித் தீர்ப்பதும் இதனை ஒத்ததொன்றே. பாத யாத்திரையைக் கண்டு அஞ்சாவிட்டால், தத்தமது பாட்டைப் பார்த்துக் கொண்டு போக வேண்டியதுதானே?

### பாதயாத்திரையைத் தடுக்க நல்லாட்சி அரசு முயற்சி

உண்மையில் மகிந்தவின் பாத யாத்திரையைக் கண்டு நல்லாட்சி அரசு எந்த அளவுக்கு அஞ்சியது எனக் கூறுவதானால், அந்தப் பாத யாத்திரையை மகிந்த தரப்பினர் மேற்கொள்ளாது தடுத்து நிறுத்துவதற்கு நல்லாட்சி அரசு ஏழு நீதிமன்றங்களது உதவியை நாடியதைக் குறிப்பிட இயலும். இதில் வேடிக்கை என்னவென்றால், இத்தனை தூரம் பெருமுயற்சி மேற்கொண்டும் அரசால் மகிந்தவினது அந்தப் பாதயாத்திரையைத் தடுத்து நிறுத்த இயலாது போனமையாகும்.

முதலில் கண்டியில் வைத்துப் பாத யாத்திரையை ஆரம்பிக்க விடாது தடுக்க அரசு மேற்கொண்ட முயற்சியை சாமர்த்தியமாகச் செயற்பட்டு, மகிந்த தரப்பினர் அதனை வேறொரு இடத்தில் இருந்து ஆரம்பித்ததன் மூலம் நல்லாட்சி அரசுக்குக் கொக்குக் காண்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து பாதயாத்திரை செல்லும் வழியில் மாவனல்லவில் வைத்துத் தடுத்து நிறுத்த நீதிமன்ற உத்தரவை அரசு பெற்றுக்கொண்ட போதிலும், மகிந்த தரப்பினர் சமயோசிதமாக, திட்டமிட்ட பாதையை மாற்றி மாற்று வழியில் பயணித்ததன் மூலம் ஏற்படவிருந்த சிக்கலைத் தவிர்த்துக் கொண்டனர். அதனையடுத்து குறித்த பாதயாத்திரையை வறக்காபொல நகரத்தில் வைத்துத் தடுத்து நிறுத்த அரச தரப்பினர் முயன்ற போதிலும், நீதிமன்றம் அவர்களது கோரிக்கையை ஏற்க மறுத்ததால் அவர்களது முயற்சி தோல்வியில் முடிந்தது.

இது போன்றே அத்தனகல, கம்பஹா மற்றும் கிரிபத்கொட ஆகிய இடங்களில் வைத்து தடுத்து நிறுத்த நல்லாட்சி அரசு மேற்கொண்ட முயற்சிகள், நீதிமன்றங்கள் குறித்த மனுக்களை நிராகரித்ததன் மூலம் பயனற்றுப் போய்விட்டன.

கடைசியில் மகிந்தவின் பாதயாத்திரையில் கலந்து கொண்டோர் கொழும்புக்குள் பிரவேசிப்பதைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் அரசு கொழும்பு நீதிமன்றத்தில் மனுவொன்றைச் சமர்ப்பித்தபோதிலும், அதுவும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதால் கூட்டு எதிர்க்கட்சியின் பாதயாத்திரை ஜன சமுத்திரம் களனிப் பாலத்தின் ஊடாக கொழும்புக்குள் பிரவேசித்தது.

பாதயாத்திரையில் கலந்து கொள்வோர் கொழும்பை வந்தடைந்ததும், ஹைட்பார்க் திடலில் கூட்டமொன்றை நடத்த ஏற்கனவே ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் குறித்த பாத யாத்திரை கொழும்பை வந்தடையும் தினத்தன்று, கொழும்பு மாநகரசபை அவசர அவசரமாக குறித்த ஹைட்பார்த் திடலில் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்திருந்தது. பத்து வரையிலான பக்கோ இயந்திரங்களைப் பயன்படுத்தி குறித்த திடலைக்கிளறிமண்மேடாக்கிவைத்தனர். ஏற்கனவே உரிய கட்டணம் செலுத்தி, கூட்டு எதிர்க்கட்சி ஒழுங்கு செய்திருந்த ஹைட் பார்க் திடலை நல்லாட்சி அரசு மேற்குறிப்பிட்ட விதத்தில் கிண்டிக்கிளறி பயன்படுத்த இயலாத விதத்தில் ஆக்கியிருந்தது. ஆயினும் நல்லாட்சி அரசால் கூட்டு எதிர்க்கட்சியின் அந்தக் கடைசி நிகழ்ச்சியைத் தடுத்து நிறுத்திவிட இயலவில்லை. லட்சக் கணக்கில் திரண்ட பொதுமக்கள் லிப்டன் சுற்று வட்டத்தில் கூடித் தமது பாதயாத்திரையில் கடைசி நிகழ்வை நிறைவு செய்திருந்தனர்.

பாதயாத்திரையில் கலந்துகொண்ட சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள், சுதந்திரக்கட்சியின் தலைமை அலுவலகத்தைக் கடந்துசென்ற வேளை அதனை அப்பக்கடை என விமர் சித்துக் கேலி செய்து கூச்சலிட்டிருந்தனர்.

### கட்சியையே வெறுக்கும் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள்

அந்தவகையில் சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளர்களுக்கு சுதந்திரக் கட்சியே வேண்டா வெறுப்பானதொன்றாக ஆகிவிட்டதென்பது இதிலிருந்து புலனாகின்றது. நல்லாட்சி அரசில் அமைச்சர் பதவிகளைப் பெற்றுள்ள சுதந்திரக்கட்சியின் மூத்த அரசியல்வாதிகள் இன்றைய நாள்களில் தத்தமது பிரதேசங்களுக்குச் செல்லுபோது பெரும் பாலும் பொது மக்களது கேலிக்கும் கிண்டலுக்கும் முகம் கொடுக்க நேர்ந்து வருகிறது.

அப்படியானால் உள்ள மாற்று வழி ஒன்றே ஒன்றுதான். சுதந்திரக் கட்சிக்குப்பதிலாக புதிய அரசியல் கட்சியொன்றை உருவாக்குவது தான் அந்த மாற்று வழி. அந்தக் கட்சியின் பின்னால் இன்றைய சுதந்திரக்கட்சியின் விசுவாசிகள் ஒன்று திரள்வதை எவராலும் தடுத்து நிறுத்திட இயலாது. அதே வேளை சுதந்திரக்கட்சியோ ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்புக் கட்சியாகி எதிர்வரும் தேர்தல்களில் யானைச் சின்னத்தில் போட்டியிட வேண்டி ஏற்படக்கூடும்.



நரசிம்மன்

# விச ஊசி சர்ச்சையின் மர்ம முடிச்சை
## தரமான விசாரணையாலேயே அவிழ்க்க இயலும்

இன்றைய நாளில், இலங்கைத் தமிழர்களிடையே, குறிப்பாக வடக்கு–கிழக்கு பகுதிகளில் பரவலாகப் பேசப்படுகின்ற ஒரு விடயம், இந்த விச ஊசி விவகாரம். உண்மையில் நடந்தது என்ன? மௌனம் கலையும் முன்னாள் போராளிகள் பற்றிய இந்தக் குற்றச்சாட்டில் இருக்கின்ற உண்மைத் தன்மை ஒருபுறமிருக்க, இதனால் இப்போதிருக்கின்ற கள நிலமைகளை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

மிகவும் பாரதூரமான ஒரு விடயமாகப் பூதாகரப்பட்டுப் போய் இருக்கிறது இந்த விச ஊசி விவகாரம். ஏற்கனவே வாழ்வாதாரத்துக்கான சவால்களுக்கு முகங்கொடுத்து, சமூகத்தில் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்கு இப்பொழுது புதியதொரு தலையிடியைத் தந்திருக்கிறது இது. புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளில் அண்ணளவாக 108 பேர் சடுதியாக உயிரிழந்தமை தொடர்பாக எழுந்த ஐயம், சர்ச்சையாக மாறி, பூதாகரமான விடயமாக உருவெடுத்திருக்கிறது.

இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அல்லது இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்து பின்னர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட போராளிகளுக்கு, புனர்வாழ்வு முகாம்களில் வைத்து ஒரு விதமான ஊசி ஏற்றப்பட்டதன் விளைவாகவே முன்னாள் போராளிகளின் திடீர் மர்ம மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

வாழ்வாதாரத்துக்கு வழியேதும் இன்றி, சமூகத்தில் அவர்கள் ஒதுக்கப்பட்ட போதெல்லாம் ஏன் என்று கேட்காத இந்தச் சமூகத்தில், இப்போது இந்த விச ஊசி விவகாரம் பேசு பொருளாகி இருக்கின்றது.

இந்த விச ஊசி விவகாரம் பற்றி விமர்சிக்கின்ற எந்தவொரு அரசியல்வாதியாயினும், இதனைச் சர்வதேச மட்டத்துக்கு முறைப்பாடாக எடுத்துச் சென்று போர்க்குற்ற விசாரணைகளுக்கான ஆதாரங்களில் ஒன்றாகச் சமர்ப்பிக்க முன்வரவில்லையே? அது ஏன்?

அவர்கள் அனைவரும், சர்வதேச மருத்துவப் பரிசோதனை தேவை என்று பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் அறிக்கை விட்டு – ஒப்புக்குக் கண்ணீர் விட்டு, ஆடு நனையுதென அழும் ஓநாய்களே தவிர, சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்று தங்கள் பெயரால் முறைப்பாட்டைப் பதிவு செய்து இலங்கையின் நல்லாட்சியைப் பகைத்துக் கொள்ளும் திராணியற்றவர்கள்.

முன்னாள் புலிகள் என்ற காரணத்துக்காக முன்னுக்கும், பின்னுக்கும் தொடர்கின்ற புலனாய்வு அழுத்தங்களும், வேலை தேடிப்போகும் இடமெங்கும் புலி முத்திரை குத்தி, திறமை மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் வந்தபோதெல்லாம், அவர்களோடு கூடவே இருந்த மன ஓர்மம் சுயதொழில் செய்து அவர்களைச் சொந்தக்காலில் நிற்கச்செய்தது. குடும்பத் தலைவனைப் பறிகொடுத்த பல இளம் பெண்கள் கூட, எதையும் தாங்கும் இதயத்துடன் மீள உயிர்ப்புப் பெற்று மறு வாழ்வு வாழத் தலைப்பட்டனர்; வாழ்ந்தும் காட்டினர்.

ஆனால் இப்போது எழுந்துள்ள இந்த விச ஊசி விவகாரம் மீண்டும் அவர்களைத் துன்பத்துக்குள் தள்ளி இருக்கின்றது. தடுப்பில் இருந்த போது தங்களுக்கு ஏதோ ஓர் ஊசி, நோயெதிர்ப்புத் தடுப்பூசி என்ற போர்வையில் ஏற்றப்பட்டதை நினைவு கூரும் முன்னாள் போராளிகள் பலருக்கு, அவ்வாறு தமக்கு ஏற்றப்பட்டது மெல்லக் கொல்லும் விச ஊசியாக இருக்கலாமோ என்ற அச்சம் இப்போது தோன்றியிருக்கிறது. அதனால் ஏற்பட்டிருக்கும் மன அழுத்தம், அவர்களை மேன்மேலும் குழப்பமுற வைத்துள்ளது.

உண்மையில் பெரும் எண்ணிக்கையானவர்கள் ஒன்றாகக் கூடிப் பராமரிக்கப்படுகின்ற பகுதிகளில் – ஆயிரக் கணக்கானவர்கள் ஒன்றாக வாழ்கின்ற ஓரிடத்தில் தொற்றுநோய் அபாயங்களைத் தவிர்ப்பதற்காக பொதுவானதொரு மருத்துவப் பொறிமுறை கையாளப்பட்டிருந்தாலும், இப்போது எழுந்துள்ள அந்தச் சர்ச்சையினால் சமூகத்தில் முன்னாள் போராளிகள் என்ற ரீதியில் – புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்பதனால், அவர்கள் ஒருவித பச்சாதாபத்துடனே பார்க்கப்படுகிறார்கள். இவர்களில் இருந்து திருமணத்துக்குப் பெண் கொடுக்கவோ, மாப்பிள்ளை எடுக்கவோ தயங்குகின்ற நிலை கூடத் தோன்றியிருக்கின்றது. இதனால் முன்னாள் போராளிகள் என்ற சமூக அடையாளம் மேலும் சிக்கலை ஏற்படுத்தி இருக்கின்றது.

> இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அல்லது இலங்கை இராணுவத்தினரிடம்சரணடைந்தபின்னர்புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட போராளிகளுக்கு, புனர்வாழ்வு முகாம்களில் வைத்து ஒரு விதமான ஊசி ஏற்றப்பட்டதன் விளைவாகவே முன்னாள் போராளிகளின் திடீர் மர்ம மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

புனர்வாழ்வு முகாம்களில் – புனர்வாழ்வு பெற்ற அனைவருக்கும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது இந்த ஊசி ஏற்றப்பட்டிருக்கின்றது. ஒரு சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கூட இந்த ஊசி மருந்து ஏற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பிடிபட்ட அல்லது சரணடைந்தவுடன் தடுத்து வைக்கப்பட்ட புனர்வாழ்வு முகாமில் ஏற்கனவே ஊசி ஏற்றப்பட்ட ஒரு சிலர் மேலதிக விசாரணைகளுக்காக வெவ்வேறு முகாம்களுக்கும், சிறைகளுக்கும் மாற்றப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் அந்தந்த இடங்களில் ஊசி மருந்து தவறாமல் ஏற்றப்பட்டிருக்கிறது.

இது திட்டமிட்டு, ஒருவர் கூட மருந்தேற்றப்படாமல் விடுபட்டு விடக் கூடாது என்பதற்காக ஏற்றப்பட்டிருப்பதனால், ஒரு நோக்கத்துக்காக ஏற்றப்பட்டது என்ற கோணத்தில் நோக்கப்படவேண்டும். அது தவிர கிளர்ச்சியாளர்கள் மற்றும் குழப்படிகாரச் சிறைக் கைதிகளின் வீரியத்தைக் குறைப்பதற்காக, சர்வதேச நாடுகள் சிலவற்றில் மிக இரகசியமாக ஓரிரண்டு பேருக்கு இத்தகைய மருந்தேற்றல்கள் செய்யப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

எனவே முன்னாள் போராட்டக்காரர்கள் எவரும் மீண்டும் ஒருமுறை ஆயுதம் ஏந்திப் போராடத் தலைப்படாவண்ணம், அவர்களின் வீரியத்தைக் காலப்போக்கில் கரைக்கச் செய்யும் நோக்கோடு இலங்கைப் புனர்வாழ்வு முகாம்களிலும் இவை பயன்படுத்தப்பட்டு இருக்கலாம். ஆனால் சர்வதேச நாடுகளில் ஓரிருவருக்குச் செய்கின்ற இந்தப் பொறிமுறையை இங்கு பல்லாயிரக் கணக்கானவர்களுக்குச் செய்யப்போய் விடயம் பூதாகரமானதாகப் போயும் இருக்கலாம்.

வீரியம் குறைப்பதற்காக ஏற்றப்பட்டதாயினும், அவரவர் உடல் வாகுக்கேற்ப அதன் செயற்றிறன் மாறுபட்டதனால், பதினோராயிரம் பேரில் திடீரென மறைந்த 108 முன்னாள் போராளிகளுக்கும் அது மரணத்தைத் தந்திருக்கலாம். அல்லது மெல்ல மெல்ல அத்தனை பேரையும் அழிப்பதற்காகக் கூட ஏற்றப்பட்டிருக்கலாம்.

எது எப்படியிருப்பினும் – இதன் உண்மை நிலை பக்கச் சார்பற்ற, சர்வதேச நிபுணத்துவப் பரிசோதனை ஒன்றின் மூலமே உறுதிப்படுத்தப்பட முடியும்.

அனைத்து முன்னாள் போராளிகளின் மருத்துவச் செலவுகளையும் ஏற்று அவர்களுக்கு இலவசமாக மருத்துவ பரிசோதனைகளை காலம் தாழ்த்தாது மேற்கொள்ளுதல் வேண்டும். அது தவிர இந்தச் சர்சையினால் மனஉளைச்சலுக்கு உள்ளாகிப் போயிருக்கின்ற முன்னாள் போராளிகளுக்கு உளவளத் துணை ஆலோசனை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அவர்களுக்குத் தொடர்ச்சியான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவேண்டும். தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய போராளிகளின் கனவுகளை மதித்து, மீதமுள்ள முன்னாள் போராளிகளை மனிதர்களாக மதித்து அவர்களுக்கு உரிய மருத்துவ பரிசோதனை வழங்கி, அவர்களும் சமூகத்தில் அந்தஸ்து உள்ளவர்களாக வாழ்வதற்கு அவர்களுக்கு தேவையான வாழ்வாதார உதவிகளை ஏற்படுத்திக் கொடுக்க புலம் பெயர் சமூகத்தில் உள்ளவர்களும், தமிழ் அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது விடயத்தில் இருக்கின்ற உண்மைதரமான மருத்துவப் பரிசோதனை ஒன்றின் மூலமே உறுதிப்படுத் தப்பட முடியும். அது தவிர தமிழ் அரசியல்வாதிகளின் ஒழுங்குபடுத்துதலில் உள்ளூரில் மேற் கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகளின் முடிவு பயனற்றுப் போய்விடும் அபாயமும் உண்டு.

## மூளாய் சித்தன்கேணி டச்சுவீதியின் சீத்துவம்

காரைநகர் யாழ்ப்பாணம் வழித்தட இலக்கம் 785/1 இன்கீழ் காரைநகர் சாலைக்குச் சொந்தமான இ.போ.ச பஸ்சேவை சீராக நடைபெற்று வருகிறது. மூளாயிலிருந்து சித்தன்கேணி வரையான டச்சுவீதியில்வதியும் மக்களுக்கு இது ஒருபெரும் வரப்பிரசாதமாகும். மூளாய், பத்தானை, மடத்துப்பிள்ளையார் கோயிலடி, கேணியடி, கலைநகர் ஆகிய பகுதி மக்கள் இந்தசேவை மூலமாக கூடுதலான பயனைப் பெற்று வருகின்றனர்.

இந்தச் சேவையை ஏற்பாடு செய்யக் காரணமாயிருந்த நல்லுள்ளங்கள் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டிய இந்தவேளையில், குறித்த டச்சுவீதியூடாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் பஸ் ஊழியர் களும், சாலை அதிகாரிகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவர்களே. ஏனெனில் டச்சுவீதியின் சீத்துவம் அப்படி இருக்கிறது.

வட்டுக்கோட்டை கிராமசபையின் ஆளுகைக்குட்பட்ட காலத்தில் அதன் 6ஆம் வட்டாரப் பிரதிநிதியாக இருந்தவரான அரச சித்தமருத்துவர் ஆறுமுகம் புண்ணியமூர்த்தியின் திட்டமிடலுக்கமைய அகலிக்கப்பட்ட இந்த வீதி, உரிய காலகட்டங்களில் புனரமைக்கப்பட்டு வந்தாலும், பின்னர் புனரமைப்புக்கு ஏதுவான நிலையைக் கொண்டிருக்கவில்லை. கூடுதலாக, பாரவூர்திகள், வர்த்தக நிறுவனங்களின் வாகனங்கள் மற்றும் கனரகவாகனங்களும் இந்த வீதியைத் தமது போக்குவரத்துத் தேவைகளுக்கு உபயோகித்து வரும் நிலையில் வீதி பாதிப்புக்குள்ளாகி வருகிறது. மழை காலம் ஆரம்பித்தால் இது மேலும் பாதிப்புக்குள்ளாவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இவ்வாறானதொரு நிலை ஏற்படுமாயின், இ.போ.சவின் சேவையும் கேள்விக்குரியதாகிவிடலாம். இதனால் பாதிகப்படப்போவது பெரும்பாலும் சாதாரண பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரே. தற்போது வலிமேற்குப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிக்குள் வரும் இந்த வீதியின் புனரமைப்புடன் சம்பந்தப்பட்ட பகுதியினர் அதி முன்னுரிமை அடிப்படையில் இதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி மேற்கொள்வதற்கு அவர்களைத் தூண்டும் விதமாக இந்தப் பகுதி சமூக மற்றும் பொதுஅமைப்புக்கள் அழுத்தம் தர முன்வரவேண்டும். இந்த வழித்தடத்தில் பயணிப்போர் தொகை அதிகரிப்பின், தனியார் சிற்றூர்திகளின் சேவைகளும் இதே வழியூடாக நடைபெறக்கூடும். விழிப்புணர்வு இல்லாத ஒரு சமூகம் சிறப்புற வாழ்ந்ததாக வரலாறு இல்லை. நன்றே செய்மின், அதனை இன்றே செய்மின்.

கி.வே. கிருஷ்ணானந்தன்.

## சீரற்ற வீதி புனரமைப்புச் செய்யப்படுமா?

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதி, பல இடங்களில் குண்டும் குழியுமாகக் காட்சி அளிக்கின்றது. இந்த வீதி, குறிப்பாக பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள், கனரக வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் தினசரி பயணிக்கும் வீதியாகும். இத்தகைய முக்கிய வீதியாக இருக்கும் இந்த வீதியின் சீரற்றதன்மையை எவரும் கண்டு கொள்ளவில்லையா? மானிப்பாய் ஆலடிச்சந்தியில் ஆரம்பிக்கும் இந்த வீதி, மூத்த விநாயகர் கோயிலடி மற்றும் ஏனைய கிளை வீதிகளுக்கும் பிரதான வீதியாக அமைந்து இருக்கின்றது.

எனவே பெருந் தெருக்கள் திணைக்களமோ, வீதி அபிவிருத்தி அதிகார சபையோ விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா?

வலிகாமத்தான்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.


SINGER SISIL HITACHI SAMSUNG PHILIPS DELL TCL Whirlpool KRUPS beko MITSUBISHI
KENWOOD Rowenta SHARP FARMMASTER Moulinex KARCHER GRUNDIG PFAFF
Fujiair Lumala Tefal Skyworth SINGER FINANCE SONY Safari Carrier Symphony HUAWEI YAMAHA
SINGER
யாழ் FIESTA
ஓர் அற்புதமான அனுபவம்
50% வரை
கழிவு
கண்காட்சியும் வர்த்தக சந்தையும்
ஆகஸ்ட்
20 21 22 23
காலை 09.30 - இரவு 09.00 வரை
யாழ்ப்பாணம்
வீரசிங்கம் மண்டபம்
நுழைவு
இலவசம்

# சூரியகாந்தி

உதயன்





28

திரையில் மலர்ந்தவை


**நீதி கிடைக்காத இருண்ட யுகம்**

27

புதினப் பூக்கைள்

35



# செஞ்சோலைக்கு ஒரு பயணம்


டிலீப்

படங்கள்: கணேசதாசன்


பரந்தன் – முல்லைத்தீவு ஏ–35 வீதியில் அலுங்காமல் குலுங்காமல் மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருந்தது. கறுப்புத் தங்கமாய் நீண்டு விரிந்து கிடந்த வீதியிலிருந்து, வள்ளிபுனத்தில் தாரையே கண்டிராத ஒழுங்கைக்குள் மோட்டார் சைக்கிளைத் திருப்பினோம். தேடிவந்த இடத்துக்குச் செல்லும் பாதை இதுதானா என்பதை பிரதான வீதியில் இருந்த கடைக்காரரிடம் உறுதிப்படுத்திக் கொண்டோம். அவர் எங்களை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து விட்டு "இதுதான்" என்று சொன்னார். காப்பெற் வீதியில் சீறிச் சென்ற மோட்டார் சைக்கிள் அந்த ஒழுங்கைக்குள் ஊர்ந்து கொண்டு சென்றது. ஆரம்பத்தில் அகலமாக இருந்த ஒழுங்கை போகப் போக ஒடுங்கத் தொடங்கியது. பற்றைக் காடுகள் சூழத் தொடங்கின. நாம் தேடிவந்த இடத்தை எம்மால் அடையாளம் காண முடியவில்லை. அந்த ஒழுங்கையில் நேரே சென்றோம். ஒழுங்கை முடிவிடத்தில் இராணுவத்தினர் முகாம். நெஞ்சு பக்கென்று அடித்தது. "மாட்டிக் கொண்டோமோ" என்று எண்ணுவதற்குள், 45 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் முகாமுக்கு முன்னுக்கு இருக்கின்ற வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தார்.

அவரிடம் சென்று நாங்கள் தேடிய இடத்தைக் கேட்டோம். எந்தச் சலனமும் இல்லாமல், "நீங்கள் வரேக்க பார்த்திருப்பியள். அவங்கள் துப்பரவாக்கிக் கொண்டிருக்கிற அந்தக் காணிதான்" என்றார். அங்கே நிற்பது ஆபத்து என்று உள் மனம் சொல்லியது. மோட்டார் சைக்கிளைத் திருப்பிக்கொண்டு வேகமாகத் திரும்பி வரலாம் என்றால், அந்த ஒழுங்கையில் 20 கிலோ மீற்றர் வேகத்தைத் தாண்டி ஓடுவது என்பது கின்னஸ் சாதனைக்கு ஒப்பானதாக இருந்தது.

பெண்மணி குறிப்புக்காட்டிய இடத்தை அண்மித்தோம். அந்தக் காணியைச் சுற்றி முள்கம்பி வேலி அடைக்கப்பட்டிருக்கின்றது. உள்ளே இரண்டு மூன்று கொட்டில்கள் மட்டுமே இருக்கின்றன. சிலர் நின்று கொண்டிருந்தார்கள். பச்சைச் சீருடை கள் அவையென்பது பளிச்சென்று தெரிந்தது. வெட்ட வெளியாக இருக்கின்றது அந்த இடம்.

பத்து வருடங்களுக்கு முன்னர் தாக்கியழிப்பதற்கான தடயம் எதுவுமே இல்லாமல் எல்லாமே உருமாறிப் போய் இருக்கின்ற செஞ்சோலை சிறுவர் இல்லம்தான். இன்று சிவில் பாதுகாப்புப் பிரிவின் பண்ணையாக மாறியிருக்கின்றது. சிறிலங்கா விமானப் படையின் போர் விமானங்கள் 61 பிஞ்சுகளைப் பொசுக்கிய இடம், தடயமே இல்லாமல் போயிருக்கின்றது. இதேபோன்ற ஒரு நாளில் சரியாக பத்து வருடங்களுக்கு முன்னர் அந்தக் கொடுந் துயர் நடந்தேறியது.

அடர்ந்த மரங்களால் சூழப்பட்டிருந்த அந்த இடத்தில், இன்று எந்த மரங்களையும் காணமுடியவில்லை. குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த கட்டடம்கூட விட்டு வைக்கப்படவில்லை. அடையாளம் தெரியாதவாறு தடயங்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஒரு படுகொலையின் நீதிக்கான தேடலில் எந்தவொரு தடயமும் சிக்கக்கூடாது என்பதற்காகத் திட்டமிட்டு எல்லாம் முழுதாக மறைக்கப்பட்டு விட்டன.

சுதந்திரபுரம் கொலனி வீதி. கொங்கிறீட் வீதி என்பன போரின் பின்னர் போடப்பட்டிருக்கின்றன. அந்த வீதியும் பிச்சைக்காரனின் சட்டை போன்று இடையிடையே ஓட்டையாகி விட்டது. "முருகையா வீடு எங்க?" வீதியில் சென்ற ஒருவரிடம் கேட்டோம்.

இந்த ஒழுங்கை போய் முடியும் இடத்தில்தான் அவருடைய வீடு என்று வழிகாட்டினார். அவர் கூறிய குறிப்பை வைத்துக் கொண்டு நேரே அவர் வீட்டுக்குச் சென்றோம். முருகையாவும் செஞ்சோலைப் படுகொலையில் பிள்ளையைப் பறிகொடுத்தவர்களில் ஒருவர். நரைத்த தலைமுடியின் இடையிடையே கறுப்பு மயிர் எட்டிப் பார்க்கின்றது. தளர்ந்த உடல் தோற்றம். 67 வயதிலும் வயல் வேலையில் சுறுசுறுப்பாக இருந்தவர் எங்களது கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்காகத் தனது நேரத்தை ஒதுக்கி வீட்டு முற்றத்தில் அமர்ந்தார். "எல்லாம் முடிஞ்சு பத்து வருசமாய்ப் போச்சுது தம்பி" என்று. அருகில் அவரது மனைவி நவமணியும் அமர்ந்தார். அவரது தமிழ்ப் பேச்சு வழமைக்கு மாறாக இருந்ததை நாங்கள் உணர்ந்து கொண்டதைக் குறிப்பால் அறிந்து கொண்ட அவர், "நான் பிறந்தது கேகாலை. அங்கதான் படிச்சனான். சிங்களம் எனக்கு அத்துப்படி. கேகாலையில நாங்க அடிமை. இங்க வந்தா நாங்க தலை நிமிர்ந்து இருக்கலாம் என்றதால 1971ஆம் ஆண்டு வந்தேன்" என்றார்.

அவரது வேலை நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. விடயத்துக்குள் நுழைந்தோம். "எனக்கு நாலும் பொம்பிளைப் பிள்ளைகள். இவள்தான் கடைசி. நாலும் ஓ.எல். பாஸ் பண்ணினதுகள்" என்று சொல்லிக் கொண்டே, செஞ்சோலையில் சாவடைந்த பிள்ளையின் பரீட்சைப் பெறுபேற்றுக் கோவைகளை எடுத்து வருமாறு மனைவிக்கு கட்டளை பிறப்பிக்கின்றார். அவர் எழுந்து செல்கின்றார். "பிள்ளைகளைப் படிப்பிறதுக்காகத்தான் நாங்கள் கஸ்டப்பட்டனாங்கள். வயல் வேலை செய்யிறதோட மாம்பழமும் விக்கிறனான். மூன்று பிள்ளைகளும் திருமணம் முடித்து விட்டார்கள்" நான்காவது பிள்ளை பற்றிய கவலை உள்ளே இழையோடுகிறது.

இதன்போது செஞ்சோலையில் சாவடைந்த அருட்செல்வியின் சகோதரியும் அங்கே வந்தார். அவரையும் எங்களுக்கு அறிமுகப்படுத்தினார் முருகையா. மனைவி கொண்டு வந்து கொடுத்த பிள்ளையின் பரீட்சைப் பெறுபேற்றுக் கோவையைக் காண்பித்தார். "பிள்ளை ஓ.எல் றிசல்ட் வந்து ஏ.எல். அப்பதான் படிக்கப்போனது. பக்கதில உடையார்கட்டு மகா வித்தியாலயத்திலதான் படிச்சது. முதலுதவிப் பயிற்சிக்கு 15 நாள் போவேணும் என்று பள்ளிக்கூடத்தில சொன்னதா வீட்டை வந்து சொன்னது. ஏல்.எல். காரர் எல்லோரும் போவேணுமாம். அப்பதான் தொடர்ந்து படிக்கலாம் என்றதால நானும் சம்மதிச்சன்" என்றார் முருகையா.



"துரோகத்தனமான காட்டிக் கொடுப்பு. அவன் நேர வந்து அங்கதான் குண்டு போட்டவன்" என்று மூர்க்கமாகச் சொன்னார் முருகையா. ஏதாவது உதவிகள் கிடைத்ததா என்று கேட்டதற்கு. "இல்லை தம்பி. கூட்டமைப்புக் காரர் கிராம அபிவிருத்திச் சங்க மூடாக உதவி செய்யப் பதியச் சொன்னவை. பதிஞ்சனான். ஆனா ஒன்றும் இல்லை".

"ஒரு வியாழக்கிழமை பின்னேரம் 3 மணிக்கு ஸ்கூல் யூனிபோர்மோடதான் போனவை. இவை எல்லாரையும் பள்ளிக்கூடத்தில இருந்து பஸ்ஸில ஏத்தி செஞ்சோலைக்குக் கொண்டு சென்றவை. அங்க போன நான்காம் நாள் எல்லாம் முடிஞ்சு போச்சுது" என்று அருட்செல்வியின் சகோதரி தெரிவித்தார். சிறிய நிசப்தம். நிசப்தத்தைக் குலைப்பதற்கு அடுத்த கேள்வியை நாம் தொடங்கு முன்னரே, "பிள் ளையை நான் ஞாயிற்றுக்கிழமை (குண்டுத் தாக்குதலுக்கு முதல் நாள்) போய்ப் பார்த்தனான். பிரச்சினை இல்லை என்று பிள்ளை சொன்னது. பள்ளிக் கூடத்தில இருந்து இவையை ஏத்திக் கொண்டு பஸ் வெளிக்கிடேக்க பஸ் அக்சிடன் பட்டு முன்பக்க கண்ணாடி உடைஞ்சதாம் என்று பிள்ளை எனக்குச் சொன்னது. ஆரம்பமே சகுனம் சரியில்லை என்று எல்லோரும் கதைச்சவை என்றதையும் பிள்ளை சொன் னது. அப்ப எனக்கு ஒண்டும் புரியேல்ல. பிள்ளைக் குச் சோடா, மிக்சர் வாங்கிக் குடுத்துட்டு வந்தனான். பிள்ளையின்ர கடைசிச் சந்திப்பு அதுதான்" என்று வார்த்தை தொடராமல் மூச்செடுக் கின்றார் முருகையா.

"திங்கள் கிழமை சரியாய் 7மணிக்கு வந்து வட்டமடிச்சாங்கள். நாங்கள் அந்தப் பிள்ளையும் (அருட்செல்வி) சேந்து வெட்டின பங்கருக்குள் வந்திட்டம். வந்தவன் நேர கொண்டு வந்து குத்தேல்ல. ஒரு ரவுண்ட் அடிச்சுப் போட்டுத்தான் குண்டைப் போட்டவன். பங்கருக்க இருந்த எங்களுக்கு குத்து மதிப்பாய் தெரிஞ்சுது செஞ்சோலைக்கு அடிச்சுப் போட்டாங்கள் என்று. பங்கரால வெளிக்கிட்டுச் செஞ்சோலைக்குப் போக ஓடினன். ரோட்டில போன சனம் செஞ்சோலைக்கு அடிச்சிட்டதாகச் சொல்லிச்சுதுகள். அங்க இருந்தவையை புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ட்டினம் என்றவை. நான் ஆஸ்பத்திரிக்கு நேராய்ப் போனன்.

இரண்டு வரிசையாக அடுக்கி வைச்சி ருந்தவை. நேற்று என்னோட கதைச்ச என்ர பிள்ளை பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தது. பாயில என்ர பிள் ளையை மட்டும்தான் வைச்சிருந்தவை. காயத்தில மயங்கிக் கிடக்கு என்று கிட்டப் போய் அசைச்சுப் பர்த்தன்".

முருகை யாவால் மேலும் சொல்ல முடியவில்லை. மனதில் எழுந்த கவலையையும், கண் பனிப்பதையும் மூடி மறைத்துக் கொண்டு திடமாகப் பதில் சொல்பவர் போல் சொல்வதற்கு எத்தனித்தார்.

"தங்கச்சிக்கு பிடரியில மட்டும் காயம். வேற ஒரு காயமும் இல்லை. ஆனால் ஆள் முடிஞ்சிட்டு" என்று சகோதரி சொல்லி முடிகின்றார்.

"முதல்ல புகைக் குண்டுதான் அடிச்சவங்களாம். அதால ஒண்டும் தெரியேல்ல. ஓடித் தப்ப முடியேல்ல. இரண் டாம் தரம்தான் குண்டு போட்டவங்களாம். அதில தப்பிவந்த பிள்ளைகள் சொன்னது" என்றார் சகோதரி.


"துரோகத்தனமான காட்டிக் கொடுப்பு. அவன் நேர வந்து அங்கதான் குண்டு போட்டவன்" என்று மூர்க்கமாகச் சொன்னார் முருகையா.

ஏதாவது உதவிகள் கிடைத்ததா என்று கேட்டதற்கு, "இல்லை தம்பி. கூட்டமைப்புக்காரர் கிராம அபிவிருத்திச் சங்கமூடாக உதவி செய்யப் பதியச் சொன்னவை. பதிஞ்சனான். ஆனா ஒன்றும் இல்லை". ஆணைக்குழுக்கள் விசா ரணை என்று எங்கேயாவது இந்த விடயங்களைச் சொல்லியிருக்கிறீர்களா? என்ற கேள்வியை முடிக்கு முன்னரே, இல்லை என்று பலமாகத் தலையாட்டினார்.

"செஞ்சோலைப் பிள்ளைகள் பத்தாவது நினைவு தினத்தைக் கூட்டமைப்புக்காரர் யாழ்ப்பாணத்தில நடத்தினம் என்று பேப்பரில போட்டிருக்கு என்று சொன்னவை. சம்பவம் நடந்தது இங்கதானே. இஞ்ச நடத்தியிருக்கலாம்தானே? நான் இதைப் பிழையாச் சொல்லேல்லை. ஆனா இங்க நடத்தியிருக்கலாமே?" என்றார் சகோதரி.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியி னால் இன்றுமாலை 4 மணிக்கு, யாழ். கோட்டை முனி யப்பர் கோயிலுக்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நினைவேந்தலைப் பற்றியே அவர் பேசுகின்றார் என்பதைப் புரிந்து கொண்டோம்.

(39 ஆம் பக்கம் பார்க்க)





# செஞ்சோலைப் பிஞ்சுகளைக் கொன்ற இலங்கை விமானப்படை

## 10 ஆண்டுகள் நிறைவு

தவபாரதி

அழுது... அழுது... ஆற முடியாமல் அகதிகளாய் அலைந்து நிலை கொண்டுள்ள தமிழினம் சந்தித்த கொடூரங்களில் பரிதாபகரமாகக் கொல்லப்பட்ட 61 பிஞ்சுகளின் சாவு ஓலங்கள் நிறைந்த நாளும் ஒன்று. முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனத்தில் 'செஞ்சோலை' சிறுமிகள் இல்லத்தின் வளாகம் 2006ஆகஸ்ட் 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில் அரசவிமானப்படைகளால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டது. பேரினவாத அரச படைகளின் நான்கு அதிவேக போர் விமானங்கள் மிலேச்சத்தனமாக வீசிய 16 குண்டுகள் 61 பாடசாலை மாணவிகளின் உயிர்களைப் பறித்தது 155 இற்கும் அதிகமான மாணவிகள் படுகாயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் சிலரது உடல்கள் சிதறிக் காணப்பட்டன. 25 மாணவிகளது நிலமை கவலைக்கிடமாக இருந்தது. காயமடைந்தவர்களில் பலர் அவயவங்களை இழந்திருந்தனர்.

### மனிதநேயத்தொண்டுகள் நிறைந்த பகுதி

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வள்ளிபுனம் மக்கள் குடியிருப்புக்கள் நெருக்கமாகவுள்ள பகுதி. குடாநாட்டிலிருந்து 1995 இல் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றவர்களால் இதை நன்கு உணர்ந்து கொள்ளமுடியும். அங்குதான் 'செஞ்சோலை' வளாகமும் உள்ளது. இந்த வளாகத்தின் அருகில் நலன்புரி நிலையங்கள், சிறுவர் இல்லங்கள் எனப் பலவுள்ளன. இவ்வாறான மனித நேயத் தொண்டுகள் நிறைந்த ஒரு பகுதியே வள்ளிபுனம். இந்த வளாகம் ஏற்கனவே ஐ.நா. அமைப்பினாலும் இலங்கை அரசாலும் பயிற்சிப் பட்டறைக்கான இடமாகப் பதிவு செய்யப் பட்டிருந்தது. இங்கு பல பயிற்சிப் பட்டறைகள் நடை பெற்றுவந்தன. அதேபோன்ற தொரு பயிற்சிப் பட்டறை நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே இலங்கை அரசின் விமானப் படை கோரத் தாண்டவமாடி எதுவுமறியாத பிஞ்சுகளைக் கொன்று குவித்தது.

### பெற்றோரின் ஓலங்கள்

தமது பிள்ளைகள் தங்கியிருந்த பகுதி மீது விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதை அறிந்த பெற்றோர் அலறியடித்தவாறு செஞ்சோலை வளாகத்துக்கு ஓடிவந்தனர். கொல்லப்பட்டவர்களில் தமது பிள்ளையும் உள்ளாளா? என்ற ஏக்கத்துடன் இறந்து கிடந்த மாணவிகளைத் தேடிய குடும்பத்தினர் கொல்லப்பட்டது தமது பிள்ளைதான் எனத் தெரிந்ததும் கதறிய கதறல்கள் ஊகிக்கமுடியாதவை. "பத்து நாளும் என்னால விட்டிட்டு இருக்க ஏலாதெண்டு முதல்ல மாட்டன் என்டுதான் சொன்னன். ஆனா, நல்ல விசயம் எண்டு எல்லாரும் சொன்னதால தான் விட்டனான். கடைசியில இப்படியாப்போச்சு" எனத் தலையில் அடித்துக் கதறிய தாயொரொருவர் தன் மகளைத் தூக்கி "வா வீட்ட போவோம்" எனக் கேட்க அங்கு நின்றிருந்தவர்களும் கதறியழுதனர்.



### ஐ.நா. மற்றும் கண்காணிப்புக் குழுவின் கருத்து

சம்பவ இடத்துக்கும் வைத்திய சாலைகளுக்கும் நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் ஐ.நா.சிறுவர் நிதியமும் (யுனிசெப்) கொல்லப்பட்டவர்கள் அப்பாவி மாணவிகள் என்ற உண்மையை நடுநிலையோடு கூறின.

### அப்பாவிகளைக் கொன்று பொய்ச்சாடல்

செஞ்சோலை வளாகத்தில் அப்பாவி மாணவிகளை இலங்கை வான்படை கொன்றது மாத்திரமல்லாமல் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திலுள்ள சிறுவர் போராளிகளென வெளியுலகுக்கு உண்மையை மூடிமறைக்கும் கருத்தையும் பரப்பியது. செஞ்சோலை வளாகம் புலிகளின் பயிற்சி முகாமெனவும் அங்கு சிறுவயதுப் போராளிகள் இருந்ததாகவும் கூறி 2004 ஆம் ஆண்டு தமது விமானம் எடுத்த படம் என்று ஒன்றையும் காட்டின. இதைவிட ஒருபடி மேலே சென்ற அரச பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாகப் பேசிய கெஹலிய ரம்புக்வெல, "கொல்லப்பட்டது சிறுவயதுப் போராளிகள்" என்றார். "தாக்கப்பட்ட இடம் புலிகளின் தளம் என்றும், அதில் சிறுவர்கள் கொல்லப்பட்டிருந்தால் அவர்கள் புலிகளால் பலவந்தமாகச் சேர்க்கப்பட்ட குழந்தைப் போராளிகள் என்றும் கூறியுள்ளார். அங்கு நேரில் சென்று பார்வையிட்ட நடுநிலை அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் போர் அனுபவம் அற்றவர்கள் என்றும் சாடியுள்ளார்.

### உண்மையில் கொல்லப் பட்டவர்கள் யார்?

கிளிநொச்சி கல்வி வலயத்தால் இப்பயிற்சிநெறி ஆகஸ்ட் 11, 2006 இருந்து 20 ஆகஸ்ட், 2006 வரை நடைபெறுவதாக இருந்தது. இப்பயிற்சி நெறி மகளிர் மேம்பாட்டு மையத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு அதன் நிதி உதவி யுடன் செயற்படுத்தப்பட்டது. கிளிநொச்சி கல்வி வலயம் என்பது மாவட்டத்தின் கல்விசார் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அரச கல்வி அமைச்சின் ஒரு பிரிவாகும். 11 ஆம் திகதியிலிருந்து அங்கே க.பொ.த. உயர்தர மாணவிகளுக்கான 10 நாள் வதிவிடப் பயிற்சிநெறி நடைபெற்று வந்தது. இந்தப் பயிற்சி நெறியின் 3ஆம் நாளின்போது, சமூக தலைமைத்துவத் திறன்கள், முதலுதவி, பால் சமத்துவம் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், வினைத்திறனுடனான நேர முகாமை மற்றும் குழு வேலை போன்ற பயிற்சிகள் மாணவிகளுக்கு வழங்கப்பட்டன. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 500 க.பொ.த. உயர்தர மாணவிகள் கலந்துகொண்டிருந்தனர் . காலை 7 மணியளவில் மாணவிகள் ஒன்றுகூடலுக்காகத் தயாராகிக் கொண்டிருந்தனர். அவர்களில் பலர் அப்போதைய போர்ச் சூழ்நிலை குறித்து அறிய வானொலியில் செய்தி கேட்டுக் கொண்டிருந்தனர். இதன் போதே இலங்கை வான்படையால் இந்தக் கொலைகள் மேற்கொள்ளப்பட்டன. வட்டமிட்ட கிபிர் விமானங்கள் 16 வரையிலான குண்டுகளை அடுத்தடுத்து வீசின. செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களே நேரடியாகத் தாக்குதலுக்கு இலக்காகி அதிகளவில் கொல்லப்பட்டனர் பலர் மோசமான காயங்களுக்கு உள்ளாகினர். வேறு வேலைகளிலிருந்த மாணவிகள் பாதுகாப்பான பகுதிகளுக்குள் ஓடிவிட்டனர் .

### நீதி மறுத்த அரசும் பன்னாடும்

இலங்கை வான்படை திட்டமிட்டுத், துல்லியமாகச் சிறுவர் இல்லம் மீது தாக்கு தல் நடத்த அனுமதித்தது மட்டுமல்லாமல், அதற்குப் பின்னர் அந்தக் கொலைகளை நியாயப்படுத்த முற்படும் போக்கும் இலங்கை அரசு மனித உரிமைகளை மதிக்காத பொறுப்பற்ற நிலையை வெளிக்காட்டியுள்ளது.

இலங்கை வான்படைகள் மட்டுமல்ல அரசபடைகள் அனைத்தும் விடுதலைப் புலிகளைத் தாக்கியதை விட பொது மக்களையே அதிகம் கொலை செய்தன.

பாடசாலைகள், சிறுவர் அமைப்பு பிரதேசங்களின் மீதான குண்டு வீச்சு மற்றும் இராணுவத் தாக்குதல்களைக் கண்டித்த ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் இதனை நேரில்சென்று பார்த்துக்கூட இதுவரை தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டதாகவே தெரிகின்றது.

தமது பிள்ளைகள் தங்கியிருந்த பகுதி மீது குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றதை அறிந்த பெற்றோர் அலறியடித்தவாறு செஞ்சோலை வளாகத்துக்கு ஓடிவந்தனர். கொல்லப்பட்டவர்களில் தமது பிள்ளையும் உள்ளாளா என்ற ஏக்கத்துடன் இறந்து கிடந்த மாணவிகளைத் தேடிய குடும்பத்தினர் கொல்லப்பட்டது தமது பிள்ளைதான் எனத் தெரிந்ததும் கதறிய கதறல்கள் ஊகிக்கமுடியாதவை.





# 8000 ஆண்டுகள் பழைமையானதா?


## சிந்துநதி நாகரிகம்

சிந்து சமவெளி நாகரிகம் 5,500 ஆண்டுகளுக்குப் பழமையானது என்றிருந்துவந்த கருத்துத் தவறானது. அது 8,000 ஆண்டுகள் பழைமைவாய்ந்தது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். உலகின் பல நாகரிகங்கள் பெரும்பாலும் ஆற்றுப்பகுதிகளை அண்மித்ததாகவே தோன்றி வளர்ந்தன என வரலாறு கூறுகின்றது. சிந்து சமவெளி நாகரிகம் சுமார் 5,500 ஆண்டுகளுக்குப் பழைமையானது என இதுவரையிருந்த அகழ்வாரய்ச்சி முடிவுகளின்படி கணிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஹரப்பா நாகரிகத்தை விடப் பழைமையான சிந்து சமவெளி நாகரிகம் குறித்துப் பல புதிய தகவல்கள் கிடைத்துள்ளன. நில அமைப்பியல், புவி இயற்பியல் துறை ஆய்வாளர்களும் தொல்லியல் துறை அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் இத்தகைய புதிய கருத்தொன்று முன்வைக்கப்பட்டுள்ளது:

அகழ்வாராய்ச்சியின்போது, கிடைத்த மண்பாண்டங்களின் பாகங்கள் மற்றும் பொருள்களின் வயதைக் கண்டறியும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொண்ட ஆய்வில் அவை 8000 ஆண்டுகளுக்குப் பழைமையானவை என்பது தெரிய வந்துள்ளது. இதனால் சிந்து சமவெளி நாகரிகம் 8,000 ஆண்டுகள் பழமையானது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாகரிகம் கி.மு 7,000-3000 ஆண்டுகள் பழைமையான எகிப்திய நாகரிகம், 6,500-3,100 ஆண்டுகள் பழைமையான மெசப்பத்தேமியா நாகரிகம் போன்றவற்றைவிடப் பழைமையானது என்றும். அவற்றுக்கு முன்பே சிந்து சமவெளி நாகரிகம் வேரூன்றத் தொடங்கிவிட்டது. இந்த நாகரிகம் அரியானாவில் பிர்ரானா, ராஹிகார்ஹி போன்ற பகுதிகள்வரை பரவியிருந்தது. இந்த இடங்களில் மேற்கொண்ட அகழ்வாய்வில் அதிக எண்ணிக்கையிலான பசு, ஆடு, மான், கலைமான் போன்ற விலங்குகளின் எலும்புகள், பற்கள், கொம்புகள் கிடைத்தன.

இவற்றை, கார்பன் பகுப்பாய்வு முறையில் சோதனை செய்துபார்த்போது இவற்றின் வயது இதுவரை கூறப்பட்டுவந்ததைவிடப் பழைமையானது என்று தெரியவந்தது. சிந்து சமவெளி நாகரிகம் இந்தியா முழுவதும் பரவியிருந்தது. குறிப்பாக இப்போது மறைந்துவிட்ட சரஸ்வதி நதி அல்லது காஹர்-ஹக்ரா என்றழைக்கப்படும் நதியின் கரையோரப் பகுதிகளில் இது பரவியிருந்தது. ஆனால் இவை குறித்து இதுவரை அறியப்படாமலிருந்தது. இதுவரையிருந்த தொல்லியல் முடிவுகளிலும் இவை குறிப்பிடப்படவில்லை.

தற்போதைய அகழ்வாய்வின்போது, சிந்து சமவெளி நாகரிகத்துக்கு முந்தைய (அதாவது 9000-8000 ஆண்டுகளுக்கு முன்பு) முதல் ஹரப்பா நாகரிகம் தொடங்கிய காலம் தொடங்கி (8000-7000 ஆண்டுகள்) நன்கு வளர்ந்த ஹரப்பா நாகரிக காலம் வரை ஆராய்ந்ததில் சிந்துவெளி நாகரிகம் 8000 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பழைமையானது என்று தெரியவந்துள்ளது. இதுவரை திட்டமிடப்பட்ட நகரங்கள், கை விணைப் பொருள் கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. சிந்துசமவெளி பகுதி மக்கள் நிலையானவர்கள். உறுதியானவர்கள். பருவமாற்றங்களைப் பற்றி கவலை கொள்ளவில்லை. அதிக தண்ணீர் தேவைப்படும் கோதுமை, பார்லி முதல் வரட்சி தாங்கும் பயிர்களையும் மாற்றி மாற்றிப் பயிரிட்டுள்ளனர். அரேபியா, மெசப்பத்தோமியா நகரங்களுடன் வர்த்தகம் செய்து வந்துள்ளனர். அவற்றுக்கான கேள்வி குறையத் தொடங்கியவுடன் விளைந்தவற்றைச் சேமிக்கும் முறைகளைக் கண்டறிந்துள்ளனர். இதனால் நகரங்களை விட்டு இடம் பெயர்வது குறைந்தது. இவர்கள் காலத்தில் தனித்தனி வீடு களில் வசிக்கும் பழக்கம் தொடங்கியது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



■ மருத்துவர்.சி.யமுனாநந்தா



கபாலி திரைப்படம் பொது நோக்கில் அவ்வளவு வெற்றிப்படமாக அமையவில்லை. காலத்திற்கு ஏற்ப மக்களின் சமூக வாழ்வுக்கு ஏற்ப ஒரு திரைப்படம் அமையின் அது வெற்றிப்படமாக அமையும். மக்களின் துன் பங்களை எடுத்து அதனைக் காட்சிப்படுத்து வதனால் இன்றைய உலகில் திரைப்படங்கள் வெற்றிப் படமாகாது. கபாலி படத்தில் நடிகர் ரஜனிகாந்துக்குப் பதிலாக நடிகர் கமல்ஹாசன் நடித்திருந்தால் படம் மேலும் மெருகூட்டப்பட்டு இருக்கும். அடுத்து பாடல்களிலும் புரட்சிப் பாடல்கள் அமைந்திருப்பின் இது காலத்தால் அழியாத படமாக மாறியிருக்கும்.

'கபாலீஸ்வரர்' என்ற பெயர் தெரியாத தமிழ் உல குக்கு கபாலி ஆக மீளத்தோற்றமளித்தமையே கபாலி படத்தின் முதல் வெற்றியாகும். ஒடுக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களது உரிமைபற்றிக் கூறப்படுவது குறிப்பாக இலங்கையின் மலையக மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமையும். கபாலி படம் இலங்கையின் மலையகத்தில் எழுச்சியை ஏற்படுத்தும் தன்மையது.

இருபத்தைந்து ஆண்டுகள் சிறையிருந்தும் மீண்டும் போராடும் தன்மை ஈழத்தமிழர்களை நெருடுகின்றது. காயத்துடன் இறந்தவர் எனக் கருதப்பட்டவர் உயிருடன் இருப்பதும் அவருக்கு மகள் இருப்பதனையும் காட்சிப்படுத்துவது முள்ளிவாய்க்காலில் குற்றுயிராகக் கைவிடப்பட்ட உறவுகளின் உறவுகளில் ஓர் கணம் நம்பிக்கையை அவநம்பிக்கையிலிருந்து உருவாக்குகின்றது. புனர்வாழ்வு அளிக்கப்படும் இளைஞர் யுவதிகளிடையே டைகர் எனக் குறிப்பிடுவது கொஞ்சம் எமது வரலாற்றைக் கொச்சைப்படுத்துவது போல் உள்ளது.

திரைப்படத்தில் வரும் துப்பாக்கிச் சூட்டுக்காட்சிகளும் சமூக வன்முறைகளும் இப்படத்தை சிறுவர்கள் பார்ப்பதற்கு முற்றாகத் தடைவிதிக்கின்றது. இந்தக் கொலைக்காட்சிகள் சமூக ரீதியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவன. இதுவரை காலமும் இளைஞர்கள் குழுக்களே அதாவது (20 - 30) வயதுடையவர்களே ரவுடித்தனத்தில் ஈடுபட்டனர். ஆனால் இந்தப் படத்தினைப் பார்த்து நரைத்தவர்களும் ரவுடித்தனத்தில் ஈடுபட எத்தனிக்கலாம். எனவே இந்தப்படம் சமூகத்தில் மேலும் ஒரு தப்பான சமூகவிரோதக் குழுக்களை உருவாக்கி விடாதோ என்ற அச்சம் உள்ளது.

அடுத்து ஒடுக்கப்பட்ட இனம், தனிப்பட்ட ரீதியில் அவ்வொடுக்குமுறை நெருக்கீட்டில் இருந்து மீள மது, போதை, விபச்சாரத்தில் ஈடுபடுவதற்கு அப்பால் குழு ரீதியான சமூக வன்முறைப் பின்னல் உருவாகும் சூழல் உள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. மலேசியாவில் சிறுபான்மைத் தமிழன் தனது அடையாளத்தை நிலைநிறுத்த அங்குள்ள போதைப் பொருள் பாதக உலகக் குழுக்களை கபாலி வடிவில் கட்டு படுத்துவது போல் தமிழன் உலகில் எங்கெலல்லாம் தனது அடையாளத்தை நிலைநிறுத்த முனைகின்றானோ அங்கெங்கெல்லாம் கபாலியின் மறு வடிவில் குழுவாகச் செயற்படலாம் என்ற செய்தியைக் கூறுகின்றது. இது தவறான சமூக முன்னுதாரணமாக அமையலாம்

சமூக அமைதிக்குக் குந்தகமான செயற்பாடுகளை மிகவும் தத்துரூபமாக திரைப்படமாக்கிய கபாலி திரைப்படத்தை எவ்வாறு இந்தியத் தனிக்கைத்துறையினர் வெளியிட அனுமதித்தனர் என்பதே மிகவும் சந்தேகமான கேள்வி?

எது நடந்தாலும் வன்முறையால் தமிழன் அழியட்டும் என்ற மனோபாவமோ தெரியவில்லை. நன்மைக்கோ தீமைக்கோ ரஜனி சுடுகிறார் என்பதற்காக நாம் அவரை கிருஷ்ண பகவானாக வணங்கவில்லை. இப்படத்தின் தாக்கம் தமிழ்சமூகத்தின் முன்னேற்றத்துக்குப் பாதகமாக அமையலாம். போதைவஸ்துக் கடத்தல், மோதல் காட்சிகளைத் தவிர்த்து, உழைப்பு, படிப்பு, கடமை, சமூக உணர்வு போன்றவற்றைப் பிரதிபலிக்கும் திரைப்படங்களே எமக்கு மகிழ்ச்சியைத் தரும். அன்றேல் "நெருப்பட" என்ற சொல்லும் சுடும் எமக்கு.



# கபாலி

## தமிழ் சமூக உளப்பார்வை



# திருநாள்

டெல்டா மாவட்டத்தில் நீதிபதிகளையே கதிகலங்க வைக்கும் அதிரடித் தாதா நாகா (சரத் லோகிதஸ்வர்). அவரது விசுவாச அடியாள் பிளேடு (ஜீவா). தாதாவின் சாக்கு மண்டித் தொழிலில் மட்டும் நேர்மையான பங்குதாரராக ஜோ மல்லூரி, அவர் மகள் நயன்தாரா. இவருக்கும் ஜீவாவுக்குமிடையே காதல் மலர்கிறது. ஒரு கட்டத்தில் காதலில் ஏற்படும் பிரச்சினையால் தாதாவுக்கும் ஜீவாவுக்கும் முரண்பாடு தொடங்குகிறது. இன்னொரு பக்கம் நீயா, நானா? புகழ் கோபிநாத் தலைமையில் காவல் துறைக் குழு ரவுடிகளைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்கிறது. காதலர்கள் சேர்ந்தார்களா? தாதா – அடியாள் மோதல் என்ன ஆனது என்பதே மீதிக் கதை!

என்னதான் கதை பழைய பாணியில் இருந்தாலும் தேர்ந்தெடுத்துக் கொண்ட களத்தைச் சரியாகப் பயன்படுத்தியிருந்தால் 'திருநாள்' களைகட்டியிருக்கும். முடிச்சுகளைச் சரியாகப் போட்ட இயக்குநர் ராம் நாத், கதையை நகர்த்துவதில் குழம்பியிருக்கிறார். கதைப் போக்கில் மேலோங்கியிருக்க வேண்டியது அதிரடியா? யதார்த்தமா? என்பதிலும் குழப்பம் தெரிகிறது. ஆரம்பக் காட்சியில் கதாநாயகன் அதிரடி காட்டுகிறார். பிற்பகுதியில் அதிரடிக்கு வாய்ப்பிருக்கும் காட்சிகளில் அதிலிருந்து விலகியவராய் சித்திரிக்கப்படுகிறார். இதனால் திரைக்கதை வலுப் பெறு கிறதா என்றால் அதுவும் இல்லை. விசுவாசி எதிரியாக மாறிய பிறகு வேகமெடுக்க வேண்டிய கதை மந்த கதிக்குச் செல்கிறது. காவல் துறையின் காய் நகர்த்தல்கள் சுவாரஸ்யமாக இருந்தாலும் அழுத்தமாக இல்லை.

காட்சியமைப்புக்களில் ஏகப்பட்ட ஓட்டைகள். நெஞ்சம் நிறைய வன்மத்துடன் காவல் நிலையத்தில் ஜோ மல்லூரிக்கு பணத்தை திருப்பித் தருகிறார் தாதா சரத். வெளியே வந்தால் சும்மா விடமாட்டார்கள் என்று கூடவே இருந்த ஜீவாவுக்குத் தெரியாதா என்ன? ஜீவாவும் தன் பழைய கூட்டாளியும் ஒன்றாக இருப்பது தெரிந்தும் தாதா ஏன் சும்மா இருக்கிறார்? திருப்பங்களே இல்லாமல் காட்சிகளை இழுத்ததுடன் கிளைமாக்ஸுக்கு முன்னால் குத்துப்பாட்டு வைத்தது கூடுதல் கொட்டாவிக்கு வழிவகுக்கிறது. ஜீவா நயன்தாரா காதல் வளரும் காட்சிகள் எடுபடவில்லை. வ.ஐ.ச. ஜெயபாலனைக் காவல்துறை பிடிக்கும் திட்டம் நன்றாக இருக்கிறது.



முகத்தில் வெட்டுக்குறி, வாயில் பிளேடு, பழைய தோற்றம் என அடியாள் வேடம் ஜீவாவுக்கு நன்றாகவே பொருந்துகிறது. உடல்மொழியிலும் பேச்சிலும் அதனை நன்றாகவே வெளிப்படுத்துகிறார். ஆக்சன் காட்சிகளில் அசத்துகிறார். திருந்தி வாழும் நிலையில் பொலிஸ் தனது தலையில் துப்பாக்கி வைக்கும்போது நாளைக்கு எனக்குக் கல்யாணம் சார். என் குலசாமியா உங்களைப் பார்க் கிறேன் என்று கோபிநாத்திடம் கெஞ்சும் போது, மனதில் நிற்கிறார்.

கிராமத்துப் பெண்ணாக தாவணியில் நயன்தாரா அவ்வளவு அழகாக இருக்கிறார். ஆனால், அவருக்குக் காதல், டூயட்டைத் தவிரப் பெரிதாக வேலை இல்லை. கொடூரமான தாதா வேடத்தைச் சரியாகச் செய்திருக்கிறார் சரத் லோகிதஸ்வா. நகைச்சுவைக்காக முனிஸ்காந்த் இன்னும் முயற்சிக்க வேண்டும். கருணாஸ் கடைசி ஓரிரு காட்சிகளுக்கு மட்டுமே பயன்பட்டிருக்கிறார். "தன்னை யார்" என்றுகேட்ட காவலர்மீது கோபம்கொப்பளிப்பதையும், துப்பாக்கி முனையில் சிக்கிக்கொள்ளும்போது ஏற்படும் கையறு நிலையையும் சரியாக வெளிப்படுத்தியிருக்கிறார் வ.ஐ.ச.ஜெயபாலன்.

படத்தின் பலம் இசையும் ஒளிப்பதிவும். இசையமைப்பாளர் ஸ்ரீயின் மெல்லிசை ஆறுதலைத் தருகிறது. 'பழைய சோறு' பாடலும் அது படமாக்கப்பட்ட விதமும் ரம்மியம். பாடல் வரிகளும் முழுமையாகக் கேட்கும்படியாக இருக்கின்றன. ஒளிப்பதிவாளர் மகேஷ் முத்துசாமியின் அனுபவம் கைகொடுத்திருக்கிறது. டெல்டா பகுதியின் பச்சையை ஒளியை ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்.

வன்முறை இல்லாத நாள்தான் 'திருநாள்' என்று படம் முடியும்போது செய்தி சொல்கிறார் இயக்குநர். படம் முழுக்க குரூரமான வன்மத்தைக் காட்டி விட்டு இறுதியில் அன்பைப் போதிப்பது அபத்தம். வன்முறையைக் கைவிடும் ஜீவாவின் மாற்றம் அழுத்தமாகக் காட்டப்பட்டிருந்தால் இந்தச் செய்திக்கு மதிப்பு இருந்திருக்கும். காட்சிகளில் வலுவோ, புதுமையோ இல்லாததால் திருவிழா முடிந்த மறுநாள்போல சோர்ந்து காணப்படுகிறது இந்தத் திருநாள்.

## அழகு மயிலாட...

ஆண் மயில் தோகை விரித்து ஆடுவது, பெண் மயிலை கவர்வதற்குத்தான் என்பது தெரிந்த விடயம். ஆனால், பெண் மயில்கள் அருகே இல்லாத போதும் அவை தோகையை விரித்துச் சோம்பல் முறிப்பதுண்டு. ஆனாலும், இனக் கவர்ச்சி நோக்கத்தோடு ஆண் மயில் தோகையை விரிப்பதே அதிகமானது என்று சொல்கின்றனர். விலங்குகளின் அசைவு வெளிப்பாடுகளை ஆராயும் அமெரிக்க இயற்பிலாளர்கள்.

பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் மயில்களைப் பற்றி ஆராய்வதற்கு எடுத்த அதிவேக வீடியோ காட்சிகளும் இதற்கு வலுச் சேர்க்கின்றன. ஆண் மயில், பெண் மயிலை கவர்வதற்காக தோகையை விரிக்கும்போது, தோகையின் இறகுகளில் உள்ள கண்கள் போன்ற அழகிய வடிவமைப்பு அப்படியே நிலைத்திருக்க, தோகை மற்றும் பின் வால் பகுதிகள் சடசடவென்று அடித்து, படபடக்கும் ஓசையை ஏற்படுத்துகின்றன. தோகை பெரிதாக உள்ள ஆண் மயில், இன்னும் கூடுதல் வேகம் மற்றும் ஓசையுடன் தோகையை படபடவென அடிக்கிறது.

இதில், தோகையில் உள்ள கண்கள் போன்ற வடிவமைப்பின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது, படபடக்கும் வேகம் அதிகமாக இருப்பது, ஓசை அதிகமாக இருப்பது ஆகியவற்றைப் பொறுத்து பெண் மயில்கள் சொக்கிப் போய் இனப்பெருக்கத்துக்கு சம்மதிக்கின்றன என்று ஆய்வாளர்கள் முடிவுக்கு வந்திருக்கின்றனர். இவர்களது ஆய்வு, சமீபத்திய, 'ப்ளோஸ் ஒன்' இதழிலும் வெளியாகியுள்ளது.





# சூரியனும் சூரியகாந்தியும்

சூரியன் வரவுக்காகக் காத்திருந்து வரிசையாகக் கிழக்கைப் பார்த்தபடி நின்றுகொண்டிருக்கின்றன சூரியகாந்திப் பூக்கள். சூரியனின் முகம் தென்பட்டதும் அவர்களுக்கிடையிலான காதல் உரையாடல் ஆரம்பித்துவிடுகிறது. கிழக்கிலிருந்து சூரியன் மெல்ல மெல்ல மேற்கை நோக்கி நகர ஆரம்பித்ததும், அது நகரும் திசையை ப் பின்தொடர்ந்து மலர்கள் தங்கள் முகத்தைத் திருப்புகின்றன. சூரியன் மேற்கே மறைவதால் கவலையோடு தலைகுனிந்து, அந்த நாளைக் கழிக்கின்றன. சூரியன் மறைந்த பிறகு, இரவில் மறுபடியும் தங்கள் முகத்தைக் கிழக்கு நோக்கித் தூக்கிவைத்துக்கொள்கின்றன. அந்தப் பூக்கள், மறுநாள் காலையில் வரவிருக்கும் சூரியனை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன.

**புதிய பூக்களும் முதிர்ந்த பூக்களும்**

அந்தப் பூக்கள் முதிரும்வரை இப்படியேதான் செய்துகொண்டிருக்கும். அதற்குப் பிறகு அந்தப் பூக்கள் சூரியனைப் பின்தொடர்வதில்லை. எப்போதும் கிழக்குப் பக்கமாகவே தங்கள் பார்வையை நிலைநிறுத்திக்கொள்கின்றன. அந்த முதிர்ந்த பூக்கள், பூச்சிகளின் வரவை எதிர்நோக்கி, மகரந்தச் சேர்க்கைக்கு உதவிபுரிவதன் மூலம் புதிய பூக்கள் உற்பத்தியாக வழிவகுக்கின்றன அந்தப் பூச்சிகள். அந்தப் புதிய பூக்களும் சூரியனைப் பின்தொடர ஆரம்பிக்கின்றன.

இது ஒன்றும் காதல் அல்ல. இதற்குப் பெயர் கதிரொளித் தொடரியல்பு (Heliotropism). சூரியகாந்தியைப் போலவே வேறு சில தாவரங்களும் இந்தப் பண்பைப் பெற்றிருக்கின்றன. ஆனால், சூரியகாந்தி எப்படி இவ்விதம் நடந்துகொள்கிறது என்பது ஒரு புதிர்தான். இதுபற்றிச் சில ஆய்வாளர்கள் சிலர் ஒரு கண்டுபிடிப்பை முன்வைக்கிறார்கள். சூரியகாந்தியின் உயிர்நாடியும், ஒளியை உணரும் இயல்பும் ஒன்றுக்கொன்று ஊடாடிச் செயற்படுவதால் இப்படி இருக்கலாம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அவற்றின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கும் மரபணுக்களை மேற்கண்ட ஒருங்கிணைந்த செயல்பாடு தூண்டிவிடுவதால் சூரியன் வானில் செல்லும் திசைக்கேற்றவாறு சூரியகாந்தியின் வளர்ச்சி நிகழ்கிறது. சூரியனின் திசையில் சூரியகாந்தியின் தண்டும் அதனால் வளைகிறது. முதிர்ந்ததும் மகரந்தச் சேர்க்கைக்குக் தயாராகும் விதத்தில் கிழக்கையே நோக்கியவாறு அந்தப் பூக்கள் திரும்பி விடுகின்றன.

**சூரியனைப் பின்தொடர்வதால்**

சூரியனைப் பின்தொடரும் சூரியகாந்தியைப் பின்தொடர்ந்த ஆராய்ச்சியாளர்கள், வயல்களிலுள்ள சூரியகாந்திகளையும் அவற்றிலிருந்து பிரித்தெடுத்து சிலவற்றைத் தாவர வளர்ப்பு அறைகளிலும் வைத்து வளர்த்து ஆய்வு நடத்தினார்கள். இவற்றால் எவ்வாறு சூரியனைப் பின்தொடர முடிகின்றது.

சூரியனைப் பின்தொடர்வதால் இவற்றுக்கு என்ன பயன் கிடைக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முற்பட்ட இவர்கள், அறைகளில் வைத்த சூரியகாந்திகளுக்கு சூரிய ஒளி கிடைப்பதை முற்றிலும் தடுத்தார்கள். இதன் காரணமாக மற்ற சூரியகாந்திகளைவிட அறைகளிலுள்ள சூரியகாந்திகளின் வளர்ச்சி பின்தங்கியது.

சூரியனைப் பின்தொடர்வதால்தான் வளர்ச்சி அதிகரிக்கிறது என்ற உண்மை இதன்மூலம் தெரிந்தது. இரவு நேரத்தில் வெளிப்படையான எந்தத் தாக்கங்களும் இல்லாமல், மறுபடியும் கிழக்கு நோக்கித் திரும்பிக்கொள்வதுதான் சூரியகாந்திக்குள்ளே ஒரு உயிர்நாடி செயற்படுகிறது என்பதற்கான சான்று. மேலும் ஆராய்ச்சியாளர்கள் அறைக்குள் சூரியன் வானில் செல்வதுபோல் செயற்கை ஒளியமைப்பை ஏற்படுத்திப் பார்த்தார்கள். பகல், இரவு என்ற வழமையான 24மணிநேரக்கணிப்பில் ஒளியமைப்பை அறைக்குள்ளேயே நகர்த்திச் சென்றார்கள். 24 மணி நேரச் சுழற்சிக்கு ஏற்ப அந்தத் தாவரங்கள் செயல்பட்டன. இந்தச் செயற்கை பகலிரவு நேரச் சுழற்சிஜ்ய 30 மணித்தியாலயங்கள் ஆக்கிய போது தாவரங்கள் அப்போதும்கூட உண்மையான பகலிரவின் 24 மணி நேரச் சுழற்சிக்கு ஏற்பவே அவை கிழக்கு மேற்காகத் திரும்பின. இதனால் செயற்கை ஒளியால் அவற்றைத் திசை திருப்ப முடியவில்லை. அவ்வாறாயின் அவை எப்படி சூரிய ஒளியை உணருகின்றன? இது அவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

**கிழக்கும் மேற்கும் எவ்வாறு அவற்றால் அசைய முடிகின்றது?**

இதற்கான விடை அவற்றின் தண்டுகளில் இருக்கிறது. மற்றைய தாவரங்களைப் போலவே சூரியகாந்தியின் தண்டுகளும் இரவில்தான் அதிகம் வளர்கின்றன.

ஆனால், ஒரு சிறிய வேறுபாடு. இரவு நேரத்தில் சூரியகாந்தியின் தண்டுகளில், மேற்கு பார்த்திருக்கும் பகுதிகள் வளர்கின்றன. இதனால் அவற்றின் பூக்கள் கிழக்கு நோக்கி வளைவதற்கு ஏதுவாகிறது. பகல் நேரத்தில் தண்டுகளில் கிழக்குப் பகுதிகள் வளர்கின்றன, சூரியன் மேற்கே செல்லும்போது பூக்களும் மேற்கே திரும்புவதற்கு ஏதுவாக. இப்படி எதிரெதிர் திசைகளின் தண்டுகளை டாக்டர் அடாமியன் சேகரித்து ஆய்வு மேற்கொண்டபோது ஒரு உண்மை தெரிந்தது. ஒளியுணர்வுக்கும் வளர்ச்சிக்கும் தொடர்புடைய பல்வேறு மரபணுக்கள் அந்தத் தண்டுகளின் எதிரெதிர்ப் பக்கங்களில் சுறுசுறுப்பாக இருந்தன. அடுத்ததாக ஆய்வாளர்கள் கண்டறிய முயன்ற விடயம், முதிர்ந்த பூக்கள் ஏன் கிழக்குத் திசையிலே சரிந்து விடுகின்றன என்பதுதான். அறையில் வைத்த பூக்களிடம் இதை ஆராய்ந்தார்கள். மேற்குப் பார்த்திருக்கும் பூக்களைவிடக் கிழக்குப் பார்த்திருக்கும் பூக்கள் சற்று அதிக வெப்பத்துடன் இருப்பதும் அதிக அளவில் மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடும் பூச்சிகளை ஈர்ப்பது தெரியவந்தது. மேற்குப் பார்த்திருக்கும் பூக்களுக்குச் சூடேற்றிப் பார்த்தால் அப்போது நிறையப் பூச்சிகள் அந்தப் பூக்களை நோக்கிக் கவர்ந்திழுக்கப்பட்டன.

இப்படிச் சில கேள்விகளுக்கான விடைகள் தெரிந்தாலும் இன்னும் சில கேள்விகள் புதிர்களாகவே இருக்கின்றன. ஒளி சமிக்ஞைகளையும், உயிர்நாடியையும், வளர்ச்சியையும் ஒருங்கிணைத்துக்கொண்டு ஒவ்வொரு இரவும் சூரியகாந்திப் பூக்கள் சரியாகக் கிழக்கு நோக்கி எப்படித் திரும்பி நிற்கின்றன என்பது அப்படிப்பட்ட கேள்விகளுள் ஒன்று.



# நீதி கிடைக்காத இருண்ட யுகம்

தில்லாலங்கடி

பத்து வருடங்களுக்கு முன்னர் உங்கள் கலண்டரைப் பின்னோக்குங்கள். அன்று 2006.08.11 நல்லூரில் பத்தாம் திருவிழாகளை கட்டியிருந்தது. முருகனின் தேரோடும் வீதிகள் சனத்திரளில் சிக் குண்டிருந்தன. அன்றைய பகல் பொழுது முடிவுறுவதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. மாலை 5.30 மணியை அண்மித்த வேளையில் திடீரெனக் குண்டுச் சத்தம். ஓரிரண்டு துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ந்து கேட்டன.

என்ன மாயமோ மந்திரமோ தெரியவில்லை நல்லூரான் வீதியில் விரல் விட்டு எண்ணக்கூடியதான மட்டும் மனிதத் தலைகள் தெரிந்தன. திரண்டிருந்த சனத்திரள் கலைந்து விட்டது.

2002 ஆம் ஆண்டு ரணில் அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் ஏற்படுத்திய சமாதான ஒப்பந்தம் சேடம் இழுத்துக் கொண்டிருந்த காலம் இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன்னரான காலம். சமாதானத்தின் கதவுகள் இறுக இழுத்து மூடப்படுவதற்கு முன்னரான காலம்,

கைக்குண்டு வீச்சுக்கள், கிளைமோர் தாக்குதல், துப்பாக்கிச் சூடுகள் என்று அமைதி மெல்லக் குலைந்திருந்த நேரம். கைக்குண்டு வீச்சும். கிளைமோர் தாக்குதலும் நடந்து படையினர் சாவடைகின்றனரோ இல்லையோ அந்தப் பகுதியால் சென்று வருபவர்கள் தொடக்கம், கண்ணில் அகப்படுபவர்கள் எல்லாம் சீருடையினரால் உரித்து எடுக்கப்படுவார்கள். அதனால்தான் குண்டுச் சத்தம் கேட்டதுமே நல்லூரான் வீதி அடங்கிப் போனது.

உண்மையில் என்ன நடந்தது என்பது அந்தக் கணத்தில் யாருக்குமே தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

தொடர் குண்டுச் சத்தங்கள் யாழ். குடாநாட்டை அதிர வைத்துக் கொண்டிருந்தன. ஏதோ நடந்து விட்டது என்பது மாத்திரம் மக்களுக்குப் புரிந்தது.

ஆனால் என்ன, ஏன், திடீரெனச் செல் தாக்குதல் என்பது இரவு வரையில் தெரியவில்லை.

'நாகர்கோவில், முகமாலை முன்னரங்கப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னேறுவதற்காகத் தாக்குதல் முயற்சிகளை ஆரம்பித்துள்ளதாகவும் இதனால் குடாநாடு முழுவதிலும் காலவரையற்ற ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்துவதாகவும்' முதலாவது தகவல் இரவுச்செய்தியூடாக வருகின்றது.

சமாதான ஒப்பந்தத்தின் பின் னர் ஊரடங்குச் சட்டம் என்ற ஒன்றை மறந்திருந்த குடாநாட்டு மக்களுக்கு மீண்டும் நினைவூட் டிய நாள் பத்து வருடங்களுக்கு முன்னர் அன்றாகும். அது சமாதான காலத்தில் திறக்கப்பட்ட ஏ-9 வீதி மூடப்பட்ட நாள். யாழ்ப்பாணம் திறந்த வெளிச் சிறைச்சாலை யாக்கப்பட்ட நாள்.

தாக்குதலுடன் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் இரண்டு நாள்களின் பின்னர் இரண்டு மணிநேரம் நீக்கப்பட்டது. அந்த இரண்டு மணி நேரத்தில் கடைகளில் பொருள்கள் கொள்வனவு செய்வதற்காக மீண்டும் 'கியூக்கள்' (வரிசை) அறிமுகமானது. நீண்ட காலத்தின் பின்னர் வர்த்தக நிலையங்களில் பதுக்கல்களும் ஆரம்பமாகின.

சமாதான காலத்தில் தொலைக்காட்சி மோகத்துடன் மூழ்கியிருந்தது யாழ்ப்பாணம். தாக்குதல் தொடங்கிய இன்றைய நாளில் மின்சாரமும் நிறுத்தப்பட்டது. நீண்ட காலத்தின் பின்னர் குடாநாட்டு மக்கள் முழுமையான மின் தடையை எதிர்கொண்டனர்.

தென்னிந்திய தொலைக்காட்சி அலைவரிசைகள் அறுந்து போயின. சமாதானத்திற்கு முன்பு வரையில்,

> கைக்குண்டு வீச்சுக்கள், கிளைமோர் தாக்குதல், துப்பாக்கிச் சூடுகள் என்று அமைதி மெல்லக் குலைந்திருந்த நேரம். கைக்குண்டு வீச்சும், கிளைமோர் தாக்குதலும் நடந்து படையினர் சாவடைகின்றனரோ இல்லையோ அந்தப் பகுதியால் சென்று வருபவர்கள் தொடக்கம், கண்ணில் அகப்படுபவர்கள் எல்லாம் சீருடையினரால் உரித்து எடுக்கப்படுவார்கள்.

கேட்டு ரசித்த யாழ்.வானொலி (யாழ். எப். எம்) மீளவும் கேட்கத் தொடங்கிய காலம். ஏனெனில் பாதுகாப்புத் தரப்பின் ஊரடங்கு எப்போது நடை முறைக்கு வரும் எப்போது விலக்கப்படும் என்ற அறிவித்தல் சுடச்சுட யாழ். வானொலியில்தான் வரும்.

குடாநாடு கொஞ்சம் கொஞ்சமாக 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னரான - பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான காலப் பகுதியாக மாறத் தொடங்கியது. சமாதான காலத்தில் அறிமுகமான அலைபேசி, வீட்டில் காட்சிப் பொருளாகவும், பாடல் கேட்கும் பாட்டுப் பெட்டியாகவும் மாறியது. அலைபேசிக்கான 'சிக்னல்' முற்றாகத் துண்டிக்கப்பட்டது. நிலையான தொலைபேசி நிலையங்களில் நீண்ட வரிசையில் நின்று அழைப்புக்கள் எடுக்க வேண்டிய காலம் தொடங்கியது.

எரிபொருள் பற்றாக்குறை. வெளிநாட்டுக் காசில் வாங்கிய மோட்டார் சைக்கிள்கள் எல்லாம் வீட்டில் பத்திரமாக நிறுத்தப்பட்டன. பொதுப் போக்குவரத்தும் கட்டுப்பாட்டுடன் இயங்கியது. பல காலமாக மறந்து போயிருந்த கூப்பன் காட் (குடும்ப அட்டை) கையில் தூக்கித் திரிய வேண்டியதாயிற்று.

தனியார் கடைகள் பொருள்கள் இல்லாமல் மூடப்பட்டன. பொருள்கள் ரொக்கெட் விலையில் விற்பனையாகின. 5 ரூபா பக்கெட் சம்போ கூட 50 ரூபாவுக்கு 'மலிவு' விலையில் விற்கப்பட்டது. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் களைகட்டத் தொடங்கின. சமான் கப்பல் எப்போது வரும், சங்கக் கடையில் எப்போது பொருள் விநியோகம் என்பதற்காக நான்கு தாள்களில் வெளிவந்த பத்திரிகைகளைப் பத்துத் தரம் புரட்டிப் பார்த்த காலம். ஒரு இறாத்தல் பாண் வாங்க ஒரு மணிநேரம் வரையில் வரிசையில்.

ஒரு தடவை கியூவில் ஒருவருக்கு ஒரு இறாத்தல் பாண்தான் நின்றால் கிடைக்கும். பல அங்கத்தவர்கள் கொண்ட வீட்டுக்காரர்கள் சிலதடவைகள் இரண்டு மூன்று தடவைகள் கியூவில் நிற்கவேண்டியிருக்கும். சங்கக் கடைகளில் கிராம் கணக்கில்தான் பொருள் விநியோகம் நடந்தது. அதற்கும் கூப்பன் கார்டுடன் கியூவில் நிற்கவேண்டும். எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாத்திரம் இதற்கு விதிவிலக்கல்ல.


கொழும்புக்குச் செல்வது என்றால் வெளிநாடு செல்வதைப் போன்று அலைய வேண்டியிருக்கும். கிராம சேவையாளரிடம் பதிவு பெற்று, இராணுவ முகாமுக்கு 'கிளீயரன்சுக்கு' அலைய வேண்டியிருக்கும். இராணுவ முகாமில் 'கிளீயரன்ஸ்' கிடைத்தால், விமானப் பயணச் சீட்டுப் பெறுவதற்கும், கப்பல் பயண டோக்கன் பெறுவதற்கும் யாழ்ப்பாணச் சிவில் அலுவலகத்துக்கு அலைய வேண்டும். பலதரம் அலைக் கழிந்த பின்னர் கருணையிருந்தால் பயணத்துக்கான அனுமதி கிடைக்கும்.

யாழ். குடநாடு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டிருந்தது. தீவகத்திலிருந்து நகருக்கு வருவதற்கு பண்ணைப் பாலம் ஊடான போக்குவரத்து மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது. தென்மராட்சியிலிருந்து நகருக்குள் வருவதற்கு யாழ். வரவேற்பு வளைவின் ஊடான ஏ-9 பாதை மட்டுமே திறக்கப்பட்டிருந்தது. வடமராட்சியிலிருந்து நகருக்குள் வருவதற்கு வல்லை வெளி - பருத்தித்துறை வீதி மாத்திரமே அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த முக்கிய முனையங்களில் இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கும். அவர்களின் பார்வையில் படாமல் அணுவும் அசைய முடியாது. அந்தளவுக்கு இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

30

# திரையில் மலர்ந்த ஒலிம்பி


எங்கும் ஒலிம்பிக் பற்றிய பேச்சாகவே இருக்கிறது. வெ
பல மனிதர்களின் வாழ்வை ஒலிம்பிக்கின் பின்ன
மெங்குமிருக்கின்ற பலதரப்பட்ட மனிதர்கள் பங்கேற்கு
உயிரோட்டமான பல கதைகளின் களமாகவும் உ
அடிப்படையில் உருவான சில ரசனையான திரைப்பட




**ஒலிம்பியா (1938)**
ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் பெர்லின் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடர் (1936) Olympia: Festival of Nations Olympia: Festival of Beauty என 2 பாகங்களில் ஆவணத் திரைப்படமாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. நடிப்பு, ஒளிப்பதிவு, தயாரிப்பு, நடனம், எழுத்து எனப் பன்முகத்திறமை கொண்ட லெனி ரிபென்ஸ்ரால் என்ற பெண் இயக்குநரால் இவை எடுக்கப்பட்டன அதன் தொழில்நுட்ப உத்திகள் இன்றளவும் பேசப்படுகின்றன.

**டோக்கியோ ஒலிம்பியாட்**
(Tokyo Olympiad 1965)

நாசி ஆட்சிக்கால ஜேர்மனி தன்னை உலகப் பார்வையில் நல்லவிதமாகக் காட்டிக் கொள்ள ஆவணமாக்கிய ஒலிம்பியா போல. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜப்பான் மேற்கொண்ட முனைப்பே டோக்கியோ ஒலிம்பியாட் திரைப்படம். டோக்கியோவில் (1964) நடைபெற்ற ஒலிம்பிக் தொடரின் தொடக்கவிழா முதல், நிறைவு விழா வரையிலான நிகழ்வுகளைத் திரைப்படமாகப் பதிவு செய்தார்கள். ஒலிம்பியா போல டோக்கியோ ஒலிம்பியாட்டும் இன்னமும் பேசப்பட அதன் ஆவண உத்தியே காரணம்.







**சாரியட்ஸ் ஒப் (ஃ)பயர்**
(chariots of Fire 1981)

1924இல் பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்க பிரிட்டன் குழுவில் யூதரான ஹரால்ட் ஆப்ரஹம் மற்றும் கிறிஸ்தவரான எரிக் லிடல் என்ற 2 தடகள வீரர்கள் தயாராகிறார்கள். மதம் மற்றும் இன ரீதியான இடைஞ்சல்கள், (பயிற்சியின்போது) ஒலிம்பிக் களத்திலும் முளைத்த தடைகள், இவற்றைத் தாண்டி, இருவரும் தங்கம் வென்று நாட்டுக்குப் பெருமை சேர்த்தார்கள். இந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரான இத்திரைப்படம், சிறந்த படம், திரைக்கதை, உடையலங்காரம் மற்றும் இசை என 4 ஒஸ்கார் விருதுகள் உட்பட 18 சர்வதேசத் திரைப்பட விருதுகளையும் வாங்கிக் குவித்தது. 2012இல் லண்டன் ஒலிம்பிக்கை முன்னிட்டு, நவீன தொழில்நுட்பங்களுடன் இங்கிலாந்தில் இந்தத் திரைப்படம் மீண்டும் வெளியானது.

**ரன்னிங் பிரேவ்**
(Running Brave 1983)


அமெரிக்க நாட்டுக்காக ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற பில்லி மில்ஸின் கதையே ரன் னிவ் பிரேங் திரைப்படம். வறிய குடும் பம், தாய் தந்தையை இழந்த அநாதை ஆகியவை தன்னம்பிக்கையை ஏற்படுத்த அமெரிக்க அடையாளத்தோடு பில்லி மில்ஸ் ஓடினார். குத்துச்சண்டை, கால்பந்து எனத்தனக்கு பயிற்றுவிக்கப்பட்டதைத் தவிர்த்து மில்ஸ் ஓட ஆரம்பித்ததற்கு இதுவே காரணம். இனவெறிப் பாகுபாடுகளைக் கடந்து, அமெரிக்க ஒலிம்பிக் அணியில் இடம்பிடித்த மில்ஸ், ஒருவழியாய் டோக்கியோ ஒலிம்பிக்கில் 10 கி.மீ. ஓட்டத் தில் பங்கேற்கிறார். ஓட்டக் களத்தில் சக வீரர்களால் நெட்டித்தள்ளப் பட்டும், அசராது மில்ஸ் எல்லைக் கோட்டை தாண்டுவதை 'ரன்னிங் பிரேவ்' துல்லியமாகப் பதிவு செய்திருக்கிறது.



“ஒலிம்பிக் தொடரைக் களமாகக் கொண்டு எடுக்கப்பட்டவை ஒஸ்கார் விருதுகள் உள்ளிட்ட சர்வதேச விருதுகளையும் வென்று திரையுலகை வியந்து பார்க்க வைத்ததுடன் தனிமனிதர்களின் திறன்களையும் அவர்களின் துயரங்களையும் திரையிடுகின்றன. எப்போதும் மகிழ்ச்சியாக வெளியில் தென்படும் வீரர்களின் முகங்களின் பின்னால் நிறைந்த ஏராளம் துயரங்களையும் திரையாக எடுத்துள்ளனர்.”

**பிரிபொன்ரெய்ன்** (Prefontaine 1997)

நீண்ட தூர ஓட்டப் பந்தய வீரராக அமெரிக்க தேசத்தால் கொண்டாடப்பட்டவர் ஸ்ரீவ் பிரிபொன்ரெய்ன். தேசிய சாதனைகள் படைத்த இந்த இளைஞர் அமெரிக்கா சார்பில் ம்யூனிக் (1972) ஒலிம்பிக்கில் பங்கேற்றுக் கண நேரத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார். அடுத்த ஒலிம்பிக்குக்கு நம்பிக்கையோடு தயாரான ஸ்ரீவ், எதிர்பாரா விதமாய் கார் விபத்தொன்றில் சாவடைந்தார்.. அமெரிக்க இளைஞர்களை அதிகம் வசீகரித்த இவரது வாழ்க்கையை கதைக்களமாகக் கொண்டதாய் பிரிபொன்ரெய்ன் (1997) என்ற படம் உருவாக்கப்பட்டது. இதே பாணியில் தொடர்ந்து வித்தவுட் லிமிட்ஸ் (Without Limits 1998) என்ற படமும் வெளியானது.




**முனிச்**
ஜேர்மன
தொடரி
வீரர்கள்
கைதிக
பட்டதன்
கணிசம
ஸ்ரீவன்
திரைப்பட
யாட்டு வி
களை உ
ழிக்கும்
வின் ரச
வாதத்து
வற்றை
கிறது.




**மிராக்கிள்** (Miracle 2004)
அமெரிக்கா-ரஷ்யா இடையே பனிப்போர் தீவிரமான கால
ஒலிம்பிக்கில் பங்கேற்ற அமெரிக்க ஆடவர் ஐஸ் ஹொக்கி அ
பின்னணியில் உருவான படம். அமெரிக்க ஹொக்கி வீரராக
அணியின் பயிற்றுநராக இருந்த ஹெர்ப் ப்ரூக்ஸ் என்பவ
படத்தின் தழுவலே, ஷாருக்கான் நடிப்பில் உருவான 'சக்தே




க்கிறது. வெற்றி தோல்விக்கிடையே அல்லாடும் ின் பின்னணியில் பார்க்க முடியும். உலக ர் பங்கேற்கும் ஒலிம்பிக் விளையாட்டுக் களம் ாகவும் உள்ளது. அப்படியான கதைகளின் ா திரைப்படங்களைப் பார்ப்போம்.

**முனிச் (Munich 2005)**


ஜேர்மனியின் முனிச் நகரில் 1972 ஒலிம்பிக் தொடரில் பங்கேற்க வந்திருந்த இஸ்ரேலிய வீரர்கள், பாலஸ்தீன தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு படுகொலை செய்யப் பட்டதன் பின்னணியில் ஹொலிவூட் படங்கள் கணிசமாக எடுக்கப்பட்டன. இவற்றில் யூதரான ஸ்ரீவன் ஸ்பீல்பெர்க் தயாரித்து இயக்கிய முனிச் திரைப்படம் முதன்மையானது. 11 யூத விளை யாட்டு வீரர்கள் சாவுக்குக் காரணமான தீவிரவாதி களை உலகம் முழுக்கத் தேடித் தேடி அழித்தொ ழிக்கும் இஸ்ரேலின் மொஸாட் உள வுக்குழு வின் ரகசிய நடவடிக்கை பின்னணியில், தீவிர வாதத்துக்கு எதிரான அரசபயங்கரவாதம் போன்ற வற்றை அமைதியாக இந்தப்படம் திரையிடு கிறது.




ரமான காலத்தில், 1980ஆம் ஆண்டு குளிர்கால ஹொக்கி அணி, ரஷ்யாவை வீழ்த்தி தங்கம் வென்ற ாக்கி வீரராக இருந்து அந்நாட்டின் ஒலிம்பிக் ஹொக்கி ஸ் என்பவரை மையமாக்கி எடுக்கப்பட்டது. இந்தப் ான 'சக்தே இந்தியா' என்ற ஹிந்திப் படமும்.


**த அத்லெட் (2009)**

ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் கறுப்பின ஆப்பிரிக்கரான பீகிலாவின் போராட்ட வாழ்க்கையைச் செதுக்கிய படம். 1960 உரோம் மற்றும் 1964 டோக்கியோ என அடுத்தடுத்து 2 ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இந்த எதியோப்பிய வீரர், தொடர்ந்து நேரிட்ட வாகன விபத்துக்களால் சக்கர நாற்காலியில் முடங் கினார். அவ்வாறு முடங்கியும் நம்பிக்கையைத் தளரவிடாது வில் வித்தையில் பங்கேற்க ஆயத்தமானார். ஆனால் விபத்தில் உறைந்திருந்த மற்றொரு உடல்நல பாதிப்பு அவரது ஒலிம்பிக் ஆசையை நிராசையாக்கி 41 ஆவது வயதில் உயிரைப் பறித்தது.




**பாக் மில்கா பாக் (2013)**

உரோம் (1960) ஒலிம்பிக்கில் நூலிழையில் வெண்கலத்தைப் பறிகொடுத்த இந்திய தடகள வீரரான மில்கா சிங் குறித்து, இந்தி ய -பாகிஸ்தான் பிரிவினையில் தொடங்கி இந்தியாவின் நிறைவேறாத ஒலிம்பிக் தடகள வெற்றி வாய்ப்பு வரை பேசும் படம். சிரிப்பு களுக்கு அப்பாலும் பறக்கும் சீக்கியர் என பாகிஸ் தானால் புகழ் பெற்றவர் மில்கா சிங். இவரது வாழ்க்கையோட்டத்தை, மில் காவின் தந்தை உயிர் அச்சத்தில் 'ஓடு மில்கா ஓடு' என்று விரட்டி யதையும் ஒலிம்பிக் வரை மில்காவைச் செலுத் தியதையும் இந்த ஹிந்திப் படம் சொல்கின்றது.




**மேரி கோம் (2014)**

இந்திய குத்துச்சண்டை வீராங்கனையான மேரி கோம் உலக மகளிர் குத்துச்சண்டைப் போட்டிகளில் தொடர்ச்சியாக 5 தங்கம் வென்றதோடு, லண்டன் (2012) ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்றார். 2 குழந்தைகளின் தாயாக மணிப்பூரிலிருந்து ஒலிம் பிக் வரை சென்ற மேரி கோமின் கதை, அவரது பெயரிலேயே 2014இல் படமானது. மேரி கோமாக பிரியங்கா சோப்ரா நடித்த இந்த ஹிந் திப் படம் பலரின் கவனத்தையும் ஈர்த்தது. வணிக ரீதியிலும் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்த படம்.






# அவதானமாயிருங்கள்!

ஜெ.றியா

ஒழுங்கைகளுக்குள்ளும் ஒற்றையடிப் பாதைகளுக்குள்ளும் ஒழுங்காகப் பயணித்திருந்த இவர்களுக்குத் இப்போது என்னவாயிற்று? காப்பெற் வீதியைக் கண்டவுடன் "என் னைப்பார் என்ர பின்பக்கத்தைப் பார்" என்று பாய்ந்து சென்று மோதிக் கொள்கின்றனரே. வேகம் என்பது பாஷனாகிப் போய்விட்டதோ என்னவோ?

ஒரு கையில் அதிதிறன் பேசியில் பேசிக்கொண்டே மறுகையில் வாகனச்செலுத்தியை முறுக்கியபடி பய்ந்து சென்று "சிவனே.." என்று தன்பாட்டில் போய்க்கெண்டிருப்போரையும் மோதிக்கெள்வது இவர்களுக்கு எந்த வித்தில் மகிழ்ச்சி அளிக்கின்றதோ?

இளம்சாரதிகள், அனுபவச் சாரதிகள், அடிவாங்கிய சாரதிகள், அனுமதிபெறாத சாரதிகள் என்றுலாவும் காப்பெற் வீதிகளைக் கண்டாலே மனம் பதகளிக்கின்றதுவே. இவை ஒருபுறமிருக்க, படித்த பண்புள்ள ஆசிரிய, அரச அலுவலகச் சாரதிகளின் செயல் அதைவிடக் கொடுமையானதகவுள்ளதே.

இவர்களேல்லாம் எவ்வாறு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பார் கள் என்ற சந்தேகங்களும் எழாமலில்லை. வலப்பக்கம் திரும்பிச் செல்வதற்கு இடப் பக்கமாய்ப் போய்நின்று சமிக்ஞை காட்டுவதும் சுற்று வட்ப் பாதைகளைச் சுற்றத் தவறுவதும் பிரதான வீதிக்குச் சட்டே னப் பிரவேசிப்பதுவும் தவறேன்று அறியாமல் அலுவலகச் சீருடைகளில் உலாவும் எமன்கள் உள்ளதால் மக்களே அவதானமாயிருங்கள் !

# பென்சனியர்

கோழி மேய்த்தாலும்
கோர்ண மேந்து வேலை
மாதம் முடிந்தால்
சுளையாய்ச் சம்பளம்

பியோன் என்றாலும்
பென்சனியர் தானே
பேசிமுடிப் போமென்று
பெருமையாய் பேசிடுவர்
கிராமத்து வாசனைகள்

பட்டம் பதவிகள்
வீட்டோடு கார்
சீதனம் சீர்வரிசை
பணத்தோடு பணம் சேர்க்க
பட்டினத்தார் முனைவர்

மக்களின் படிப்பு
உத்தியோகம் திருமணமும்
பென்சனுக்கு முன்னென்றால்
பேர்புகள் சேர்த்திடவும்
பின்னென்றால் கடன்பட்டும்
மணிவிழாக்கள் மற்றும்
மாலை மரியாதைகள்
சேவை நலன் பாராட்டு
சில நாள் கொண்டாட்டங்கள்
முடிந்தால் முன்போலல்ல
முதன்மையே குறைந்து விடும்

பென்சன் என்றாலே
சிலர் வாழ்வில் கொண்டாட்டம்
பலர் வாழ்வில் திண்டாட்டம்
பணமுள்ளோர்
பிழைத்துக் கொள்வர்
இல்லார் இடர் படுவர்

அதிரடி பட்ஜெட் தான்
குறை நிரப்புப் பிரேரணைகள்
துண்டு விழும்
தொகையதிகம்
வேலையொன்று
செய்தால்தான்

வெட்டுப்புள்ளியை
அண்மிக்கலாம்
எல்லோர்க்கும்
முடியுமா இது?

ஓய்வென்று இருந்தாலோ
ஒன்றுமே நடக்காது
தேடிவரும் நோய்கள்
தெம்பு குறைந்து விடும்
பெரிசுக்குத் தெரியாதென்று
சிறுசுகளும் கூடச்
சீண்டி விடுவர்

பேச்சுக்கு வலிமை குன்றும்
பென்சனியர் என்றழைப்பர்
மூச்சிருக்கும் வரையில்
முயன்றுதான் தீர வேண்டும்
ஓய்விலும் முயல்வாரே
வாழ்விலும் மகிழ்வார்
மூத்தோர் நம் சொத்து
முதுசொமாய்க் காத்திடுங்கள்.

அபிராஜன் அன்ரனி பீற்றர்






# யாழதற்கு உலகெங்கும் நல்ல பெயர்!

இராணுவச் சிப்பாய்கள் எதை யும் செய்ய லாம் என்கின்ற அளவுக்கு அவர்களுக்கு அதிகாரத்தை அப்போதைய யாழ். மாவட்ட இராணு வத் தளபதி சந்திரசிறி (முன்னாள் ஆளுநர்) வழங்கியிருந்தார். வீதிகளில் மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்துவதே அரிதான அந்த நேரத்தில், இளைஞர்கள் யாராவது நல்ல ரகமான மோட்டார் சைக்கிளில் சென்றால் இராணுவத்தினால் கேட்டுக் கேள்வியின்றி பறிக்கப்படும். அது கோயில் உண்டியலில் போட்ட பணம்தான்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தவர், சேர்ந்து இயங்கியவர் என்று சந்தேகப்படுவர்களை எல்லாம் இராணுவ முகாமில் கையெழுத்திடுவதற்கு இராணுவ உத்தரவு வழங்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட காலம். இவ்வாறு கையெழுத்திடுபவர்களுக்கு "இனிக் கையெழுத்திடத் தேவையில்லை" என்று சொல்லப்பட்டால் சில வாரங்களில் சுட்டுக் கொல்லப்படுவார்கள்.

இதனை விடச் சந்துக்குச் சந்து இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த குடாநாட்டில் தினசரி.பத்துத் துப்பாக்கிச் சூட்டுக் கொலைகள் அரங்கேறிக் கொண்டிருந்தன. இளைஞர்களின் இரத்தம் தோய்ந்த சடலங்கள் வீதிகளில் கிடந்தன. உறவுகள் மட்டுமே ஒப்பாரி வைப்பார்கள். அருகில் இருப்பவர்கள் கூட இணைந்து கொள்ளமாட்டார்கள். நாளை தங்களுக்கும் துப்பாக்கிச் சூடு விழும் என்ற காரணத்தினால். பெரும்பாலும் இந்தக் காலப் பகுதியில் குடாநாட்டில் எவருமே சமகால அரசியலை வாய் திறந்து பேசமாட்டார்கள். துப்பாக்கியால் நாளை தாங்களும் சுடப்படலாம் என்பதால். கருத்துச் சுதந்திரம் என்பது கருவறுக்கப்பட்ட காலம்.

இரவு நேரத்தில் இராணுவ ஊடரங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கும். ஆனால், 'இனந்தெரியாத வெள்ளைவான்கள்' கடத்தல்களில் ஈடுபடும். தினசரி இந்தக் கடத்தல்கள் நடக்கும். கடத்திக் கொண்டு செல்லப்பட்டவர்கள் இன்று வரையில் வந்தாக பதிவுகள் இல்லை. கடத்தல் இடம்பெற்ற மறுநாள், கடத்தப்பட்டவரின் உறவினர்கள் யாழ். நகரில் இருந்த ஈ.பி.டி.பி. அலுவலகமான சிறிதர் தியேட்டரில் முறைப்பாடு செய்வார்கள். ஏன் அங்கே செல்கின்றார்கள் என்பது அந்தக் காலத்தில் ஊருக்கே தெரிந்திருந்தது.


இராணுவத்துடன் இரண்டறக் கலந்து ஒட்டுக் குழுவாக – இராணுவத் துணைக்குழுவாகத் தமிழர்களை வேரறுத்துச் செயற்பட்டவர்கள் யார்? என்று தமிழ் மக்களுக்கு பட்டவர்த்தனமாகவே தெரியும். இருந்தும் 'வாயை மூடிப் பேசவும்' என்ற எழுதாத சட்டத்தினால் அமைதியாகவே இருந்தனர். இதனால்தானோ என்னவோ தமிழர்களை வேரறுத்த இவர்கள் இப்போது தமிழ் மக்களால் அரசியலில் இருந்து தூக்கி எறியப்பட்டிருக்கின்றார்கள்.

கொலைகள் – கடத்தல்கள் நடந்து கொண்டிருந்த சம நேரத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைதல்களும் நடைபெற்றன. தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்து கொண்டவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்தனர். இந்த வாய்ப்பு யாழ். நகர் வலிகாமத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமே கிடைத்தது. தென்மராட்சி, வடமராட்சி, தீவகத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்க வில்லை. ஏனெனில் அவர்கள் இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக் குழுவுக்கு வருவதாக இருந்தால் இராணுவத்தின் சோதனைச் சாவடியைத் தாண்டாமல் வர முடியாது. இதனால் சரணடைந்து உயிர் தப்பும் வாய்ப்பு அவர்களுக்கு அரிதாகவே இருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஒருவரும் இதே காலப் பகுதியில் அரசியல்வாதிகளாக இருந்தனர். ஆனால் இந்தக் காலப் பகுதியில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் யாரும் யாழ்ப் பாணத்தில் இருக்கவே முடியாத நிலைமையாகவே இருந்தது. அந்தளவுக்கு அவர்களுக்கு கூட 'பாதுகாப்பு' இல்லாத நிலமை.

ஆனால் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த டக்ளஸ் தேவானந்தா, ஆட்சியாளர் மகிந்த ராஜபக்சவின் அமைச்சரவையில் ஒருவர். யாழ்ப்பாணத்திற்கு இவர் வருவதாக இருந்தால், சிறிதர் தியேட்டரில் (அவரது அலுவலகம்) தங்குவார். அப்படி அங்கு தங்கியிருக்கும் காலப் பகுதியில் சிறிதர் தியேட்டரில் இருந்து நூறு மீற்றர் சுற்றளவு உயர் பாதுகாப்பு வலயமாக மாறும். ஸ்ரான்லி வீதிக் கடைகளுக்குக் கட்டாய விடுமுறை வழங்கப்படும்.

பத்து வருடங்களுக்கு முன்னோக்கிய இன்றைய நாளிலேயே யாழ்ப் பாண மக்களுக்கு இருண்ட யுகம் ஆரம்பமாகியிருந்தது. இருண்ட யுகம் முடிவுக்கு வந்திருந்தாலும், இந்த இரவுக்குள்ளே நடந்தேறிய சம்பவங்களுக்குத்தான் இன்னமும் நீதி கிடைக்கவில்லை.



> இராணுவத்துடன் இரண்டறக் கலந்து ஒட்டுக் குழுவாக – இராணுவத் துணைக்குழுவாக தமிழர்களை வேரறுத்துச் செயற்பட்டவர்கள் யார் என்று தமிழ் மக்களுக்கு பட்டவர்த்தனமாகவே தெரியும். இருந்தும் 'வாயை மூடிப் பேசவும்' என்ற எழுதாத சட்டத்தினால் அமைதியாகவே இருந்தனர். இதனால்தான் என்னவோ தமிழர்களை வேரறுத்த இவர்கள் இப்போது தமிழ் மக்களால் அரசியலில் இருந்து தூக்கி எறியப்பட்டிருக்கின்றார்கள்.

நூறுநாளில் நல்லாட்சி கண்டிடலாம்
நனவோடு கனவுஞ்சேர நினைத்தவர்கள்;
நாறுகிறார்கள் நாள்களுமே ஐந்நூறோடி
நாதியொன்று மாகவில்லைக் கண்டீராமே!

சிறிசேனவை வீட்டுக்கு அனுப்பிவிட
சிரமம்மிக கொண்டிட்ட மகிந்தராசா
பொறிமுதல் வைத்ததே நாடெங்கும்
பொறிந்திட மின்சாரத்தை நிற்பாட்டியே!

சரிவரலை சாலவவில் ஆயுதமெலாம்
சல்லடையிடச் செய்திடினும் சிறிசேனவை
உரித்துதோல் காயவிடப் பாதயாத்திரை
உதித்தானும் உதவவிலை சோர்ந்தாராமே?

கூண்டோடு மறியலுக்கு அனுப்பிடினும்
கூட்டிருந்து அரசைக் கலைக்காமல்
மாண்டிடவே மாட்டானிந்த மகிந்தவென
மார்தட்டிப் பேசுகிறார் மாசித்தலைவர்!

இங்காலை சிறிசேன சொல்வதிது:
இம்மிதானும் இராணுவத்தை பாதிக்கவே
அங்காலிப் பிரதேசங்கள் விசாரணைக்கு
அரங்கேற விட்டிடப் போவதில்லை!

அப்படியாயின் சிறிசேனவின் நல்லாட்சி(?)
அதிலின்னம் எங்கடயள் தமிழ்த் தேசியம்
எப்படித்தான் ஒட்டிக்கினு இருக்கிறதென
எல்லோருமே மண்டையைப் போட்டுடைப்பர்!

தென்பகுதியில் ஒருவருக்கு ஏதுமுற்றால்
தெரிவுக்குழு அமைத்துடன் பணம்பொருளாய்
தொன்கணக்கில் உதவுகிறார் தமிழருக்கு
தொன்மமான காணிகளைத் தந்தாரில்லை!

ஆரம்பத்தில் குறித்தசில பொருள்களுக்கு
அங்கனேக்க கொஞ்சவிலை குறைத்ததுண்மை
வீரம்பேச வைத்திட்டு விலைகளேற
வீசியதும் மாயவலை விண்ணாணந்தான்!

ஏத்தியதை பிறகொருக்கா குறைத்துள்ளார்
எல்லாமிந்தச் சுத்துமாத்தில் மதுசாரத்தை
தீர்த்துக்கட்டுறேனென்று சொல்லிச்சொல்லி
தீர்வதனை இரட்டிப்பாகக் கூட்டியுள்ளார்!

உழைப்பவனே உணவுக்கும் மதுவுக்கும்
உழைக்க வேண்டியதை தெரியலையா;
திளைப்பது நல்லாட்சி இரு பக்கமும்
திணறவிலை அதிகரிப்பால் புரியுதில்லை?

யாழ்ப்பாணத்தில் குடிகாரர் கூடிவிட்டார்
யாதும்ஊரே யாவருமே கேளீரென்னும்
கூழ்ப்பானை குதத்துக்குள் மூழ்கடித்து
தூள்பறக்க வியாபாரம் நடத்துகிறார்!

கேரளாவால் கஞ்சாவாற இந்தப்பக்கம்
கேகாலைக்கு போய்ச் சேர்ந்த தெந்தமார்க்கம்?
தாராளமாய் பௌர்ணமித் தினங்களிலே
தான்வருவர் தென்பகுதிச் சிங்களவர்!

காங்கேசன் துறை வீதி சத்திரச் சந்தி
களைகட்டும் சின்னக்கடைச் சந்தையாக
பாங்காக மதுசாலைகள் ஏறியிறங்கி
பாரொண்டேனும் தவறவிட மாட்டாரவர்!

யாழ்ப்பாணம் சாராய விற்பனையில்
யாதுமூரே யாவருமே கேளீரென்கப்
பாழ்படுவார் கொடியதனை ஏற்றினரே
யாழதற்கோ உலகெங்கும் நல்லபெயர்?

த. பரமலிங்கம்



# இயற்கை முறையில் உதட்டழகு...

அடிக்கடி லிப்ஸ்டிக் போடுபவர்களுடைய உதடு நாளடைவில் கருமையாகக் காட்சியளிக்கும்.

- சிறிது தேனை எடுத்து, உதடுகளில் தடவி 5 நிமிடம் மசாஜ் செய்து, பின் 15 நிமிடம் ஊற வைத்து குளிர்ச்சியான நீரில் கழுவ வேண்டும். இதனால், நாளடைவில் வசீகரமான உதடுகள் கிடைக்கும். கருமையுடன் வரட்சியும் மறைந்து விடும். தினமும் இதைச் செய்து வந்தால் விரைவில் நல்ல பயனைக் காணலாம்.

- வெள்ளரிக்காய்த் துண்டுகளை உதடுகளின் மேல் 20 நிமிடம் ஊறவைத்து வந்தால், அவை உதடுகளுக்கு குளிர்மையைத் தருவதுடன், உதடுகளில் உள்ள கருமையைப் படிப்படியாக மறையச் செய்யும்.

- கற்றாழையின் சாற்றை உதடுகளில் தடவி சிறிது நேரம் மசாஜ்செய்தபின்னர் 15 நிமிடம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவினால், அவை உதடுகளை மென்மையாக்குவதுடன், உதடுகளை சிவப்பு நிறத்தில் மாற்றும்.

- தயிரில் எண்ணெய்ப் பசை நிறைந்திருப்பதால், இதனை உதடுகளுக்குத்தடவி வந்தால், அவை உதடுகளில் வரட்சி ஏற்படுவதைத் தடுப்பதோடு, உதடுகளை மென்மையாகவும்வைத்துக்கொள்ளஉதவும்.



# வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாத



# குடற்புண் ஊக்கிகள்



**சோடா :**
சோடாவில் கார்பனீரொட்சைட்டும், அமிலமும் அதிகம் இருப்பதால், இவற்றை வெறும் வயிற்றில் குடித்தால், அவை வயிற்றில் உள்ள அமிலங்களுடன் கலந்து, அதனால் குமட்டல் மற்றும் அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

**தக்காளி :**
தக்காளியை எப்போதுமே வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது. இதற்கு அதில் உள்ள அமிலம் தான் முக்கிய காரணம். இந்த அமிலமானது இரைப்பையில் சுரக்கும் அமிலத்துடன் இணைந்து, ஒவ்வாமையை ஏற்படுத்தும். இதனால் வயிற்றில் கற்கள் கூட உருவாகும்.

**மாத்திரைகள் :**
எப்போதுமே மாத்திரைகளை வெறும் வயிற்றில் எடுக்கக்கூடாது. ஏனெனில் வெறும் வயிற்றில் எடுத்தால், அவை குடற்சுவர்களை அரிப்பதோடு, வயிற்று அமிலத்துடன் கலந்து, உடலில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி விடும்.

**மதுசாரம் :**
பொதுவாக மதுசாரம் ஆரோக்கியமற்றது. அதிலும் அதனைக் காலையில் வெறும் வயிற்றில் குடித்தால், அதில் உள்ள சேர்மங்கள், வயிற்றுப் படலத்தில் எரிச்சலை ஏற்படுத்தும். இப்படியே நீடித்தால், வயிற்றுப்படலம் அரிக்கப்பட்டு, மிகுந்த அபாயத்திற்கு உள்ளாகக்கூடும்.

**காரமான உணவுகள் :**
காரமான உணவுகளை எப்போதுமே வெறும் வயிற்றில் உட்கொள்ளக் கூடாது. அப்படியே உட்கொண்டால், வயிற்றில் உள்ள அமிலத்துடன் காரம் சேர்ந்து, வயிற்றில் கடுமையான எரிச்சலை ஏற்படுத்துவதோடு, குடற்புண்ணையும் ஏற்படுத்தும்.

**கோப்பி, தேநீர் :**
கோப்பி மிகவும் ஆபத்தான ஒரு பானம். இதனைக் காலையில் வெறும் வயிற்றில் குடித்தால், அதில் உள்ள காப்பைன் தீவிரமான பிரச்சினையைத் தரும். எனவே ஒரு டம்ளர் தண்ணீர் குடித்த பின் கோப்பி குடிக்கும் பழக்கத்தைக் கொள்ளுங்கள். கோப்பியைப் போலவே தேயிலையிலும், காப்பைன் உள்ளதால், இதனை வெறும் வயிற்றில் குடிக்காதீர்கள். சொல்லப்போனால் தேயிலையில் அமிலம் அதிகமாக உள்ளதால், இதனைக் குடித்த பின் குடற்பகுதிகளைப் பாதிக்கும்.

**தயிர் :**
தயிரில் என்ன தான் நல்ல பக்ரீரியா இருந்தாலும், இதனைக் காலையில் வெறும் வயிற்றில் எடுப்பது சிறந்தது அல்ல. இதற்கு அதில் உள்ள நல்ல பக்ரீரியாவானது வயிற்றிலுள்ள அமிலங்களுடன் சேர்த்து வினை புரிந்து, உப்புச்சத்தை ஏற்படுத்திவிடும்.

**வாழைப்பழம் :**
வாழைப்பழத்தில் மக்னீசியம் அதிகம் இருப்பதால், இத்னைக் காலையில் வெறும் வயிற்றில் உட்கொண்டால், மக்னீசியம் உடலில் அதிகரித்து, கல்சியம் மற்றும் மக்னீசியத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படக்கூடும். எனவே எக்காரணம் கொண்டும் வாழைப்பழத்தை வெறும் வயிற்றில் சாப்பிடாதீர்கள்.


# குறட்டை



குறட்டை விடுவதற்கு ஒவ்வாமை, குளிர்ந்த நிலை போன்ற காரணங்களும் உள்ளன. மஞ்சளை பயன்படுத்தி குறட்டையைத் தடுக்கும் மருந்து தயாரிக்கலாம்.
கால் தேக்கரண்டி மஞ்சள் பொடி எடுத்து, அதில் ஏலக்காய் தட்டிப்போட்டு, ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைத்து, அதனை வடிகட்டி எடுத்துத் தேன் சேர்க்கவும். இரவு உறங்குவதற்கு முன்பு தினமும் 50 மில்லி அளவுக்குக் குடித்துவரக் குறட்டை ஒலி குறைந்து விடும்.
சளிக்கு மருந்தாகவும் அமைகிறது. நெஞ்சுச் சளியைக் கரைக்கும். திப்பிலி பொடியைப் பயன்படுத்தியும் குறட்டைக் கான மருந்து தயாரிக்கலாம். அரை கரண்டி ஒலிவ் எண்ணெய் எடுத்துக் கொண்டு, இதனுடன் சிறிது திப்பிலிப் பொடி, தேன் சேர்த்து அவை அனைத்தும் ஒரு கரண்டி வரும் அளவுக்கு எடுத்து இரவு தூங்கப் போகும் முன்பு சாப்பிட்டு வர குறட்டை குறையும்.
நெய்யை நன்றாக உருக்கி இளம் சூடாக இரவு நேரத்தில் மூக்கில் ஓரிரு துளி விட்டு உறிஞ்சுவதால் குறட்டை ஒலி குறையும். காலை வேளையிலும் இதே போல் செய்து வந்தால் நாளடைவில் குறட்டைப் பிரச்சினை தீரும். அறுகம்புல்லைப் பயன்படுத்தித் தோல் நோயை தடுக்கும் மருத்துவத்தைக் காணலாம். எளிதாகக் கிடைக்கக் கூடிய அருகம்புலுடன், மஞ்சள் சேர்த்து அரைத்து உடலில் பூசிக் குளிப்பதால் தோல் நோய் வராமல் தடுக்கலாம்.



# வல்லாரைத் தோசை



**செய்முறை:**
பொடியாக நறுக்கிய
வல்லாரைக் கீரை - 1 பிடி
பச்சைமிளகாய் - 5

**செய்முறை:**
அலசி வைத்துள்ள வல்லாரைக் கீரையைப் பொடியாக நறுக்கி, பச்சைமிளகாய், சீரகம், உப்பு சேர்த்து அரைக்கவும். தோசை மாவுடன் அரைத்த வல்லாரைக் கீரையைக் கலந்து கொள்ளவும். இனி வழமையாகத் தோசை சுடுவதைப் போன்று இந்த மாவை தோசையாக ஊற்றி எடுத்தால் ஆரோக்கியமான வல்லாரைக் கீரைத் தோசை தயார். சிறிய தோசை வடிவத்தில் மாவை ஊற்றி நெய் சேர்த்த இந்தத் தோசையைக் குழந்தைகளுக்கும், பள்ளி செல்லும் மாணவ-மாணவிகளுக்கும் சிற்றுண்டிகளாகக் கொடுக்கலாம். இவ்வாறு செய்தால் ஆரோக்கிய முறையில் குழந்தைகளுக்கு ஞாபக சக்தியை மேம்படுத்த உதவும்.



## குறளைப் படியுங்கள்

குழந்தைகளே குழந்தைகளே
குறளைப் படியுங்கள்
குறுகு தமிழ் வார்த்தைகளை
கூர்ந்து படியுங்கள்
கூனல் கிழவி கூடச் சொன்ன
வார்த்தை கேளுங்கள்
வாழை மரம் போன்ற தமிழ்
வளரும் பாருங்கள்
ஏழு சொல்லில் ஏழுலகம்
எடுத்துச் சொன்னவர்
எங்கள் தமிழ் அறிஞர் என்று
எடுத்துச் சொல்லுங்கள்
ஈரடியில் பல தத்துவம்
எழுதித் தந்தவர்
எங்கள் திருவள்ளுவர்
என்று சொல்லுங்கள்
சாதி மத பேதங்களால்
சரியாத தமிழ்க் குறளது
சாகாத வரம் பெற்ற
தாய்மொழிக் குறளது

## பொது அறிவு

1. அன்னை இந்திரா சுட்டுக் கொல்லப்பட்ட ஆண்டு எது?
   1985 ஒக்ரோபர் 31
2. தபால் தலைகள் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டன?
   1840ஆம் ஆண்டு
3. நோபல் பரிசு நிறுவனம் ஆரம்பித்த ஆண்டு எது?
   1901ஆம் ஆண்டு
4. தாஜ்மஹால் எந்த ஆற்றங் கரையில் உள்ளது?
   யமுனை
5. பாகிஸ்தான் எப்போது இந்தியாவிலிருந்து பிரிந்து தனி நாடாயிற்று?
   1947 ஆகஸ்ட் 15



## வரலாற்றில் இன்றைய தினம்

1885 – துருப்பிடித்தலைத் தடுக்கும் மைப்பூச்சைக் கண்டு பிடித்தவருக்கு முதன்முதலாக காப்புரிமம் ஜப்பானில் வழங்கப்பட்டது.

1888 – முதன் முதலா லண்டனில் தோமஸ் அல்வா எடிசனால் ஒலிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்வு ஒலிக்க விடப்பட்டுக் காட்டப்பட்டது.

1893 – மோட்டார் வாகனப் பதிவை அறிமுகப்படுத்திய முதல் நாடாகியது பிரான்ஸ்.

1900 – சீனாவில் வெளிநாட்டு எதிர்ப்பு மற்றும் கிறிஸ்தவ எதிர்ப்பு நடவடிக்கை எனப்படும் பொக்ஸர் நடவடிக்கையை கட்டுப்படுத்த எட்டு நாடுகள்; கூட்டமைப்பு சீனாவின் பிஜிங்கை ஆக்கிரமித்தன.

1912 – ஜோஸ் சன்ரோஸ் ஷெலாயா மூன்று ஆண்டுகள் முன்னதாகவே தனது பதவியிலிருந்து விலகியதை அடுத்து அமெரிக்கா சார்பான அரசை நிறுவுவதற்காக நிக்காரகுவாவினுள் அமெரிக்கக் கடற்படை பிரவேசித்தது.

1916 – முதலாம் உலகப் போர் ஒஸ்ரியா – ஹங்கேரி மீது போர்ப் பிரகடனம்; றோமானியாவில் மேற்கொள்ளப் பட்டு றோமேனியா முதலாம் உலகப் போரில் களமிறங்கியது.

1935 – ஓய்வு பெற்றவர்களுக்கு அரச ஓய்வூதியம் வழங்கும் சமூக பாதுகாப்பு சட்டத்தில் பிராங்ளின் டி றூஸ் வெல்ற் ஒப்பமிட்டார்.

1936 – அமெரிக்காவில் பொது மக்கள் முன்னிலையிலான சாவுத் தண்டனையில் கடைசியாக றெயினி பீதியா தூக்கிலிடப்பட்டார்.

1941 – போருக்குப் பின்னரான இலக்கு எனும் அத்திலாந்திக் பட்டயத்தில் வின்சன்ற் சேர்ச்சிலும் பிராங்ளின்டி ரூஸ் வெல்டும் ஒப்பமிட்டனர்.

1945 – இரண்டாம் உலகப் போரில் கூட்டுப் படைகளின் சரணையும் நிபந்தனையை ஜப்பான் ஏற்றுக்கொண்டது.

1947 – பிரித்தானிய சாம்ராச்சியத்திலிருந்து பாகிஸ்தான் சுதந்திரம் பெற்று பொதுநலவாயத்தில் இணைந்து கொண்டது.

1995 – 8ஆயிரம் தமிழர்கள் சுவிஸில் பேரணி. தமிழர் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரி.
– மக்கள் விரும்பினால் மாத்திரமே தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வருமென ரத்வத்தை சபையில் தெரிவிப்பு.

2005 – அமைதி முயற்சியின் முக்கிய கட்டத்தில் கதிர்காமரின் கொலை நிகழ்ந்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுதாபம்.

2010 – முதலாவது இளைஞர் ஒலிம்பிக் சிங்கப்பூரில் நடைபெற்றது.

# நேர்மையே வென்றது



முருகையனும் கந்தப்பனும் பெரிய வணிகர்கள். இருவரிடமும் பெரிய மரக் கலங்கள் பல இருந்தன. அவற்றில் தமது நாட்டுக்குத் தேவையான பொருள்களை ஏற்றி வருவார்கள். தமது நாட்டில் விளையும் பொருள்களையும் பிறநாடுகளுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வார்கள். இதனால் அந்த நாட்டு அரசர்கள் இவர்கள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர்.

முருகையன் கடவுள் மீது அதிக நம்பிக்கை உள்ளவன். நீதிக்குப் புறம்பான எந்தக் காரியங்களும் செய்யாதவன். மக்கள் மீது அன்பும் அரசன் மீது மதிப்பும் வைத்திருப்பவன். அத்துடன் நியாயமான விலைக்கு மக்களிடம் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்பவன்.

ஆனால் கந்தப்பன் கடவுள் மீது நம்பிக்கை இல்லாதவன். நீதிக்குப் புறம்பான காரியங்களைச் செய்பவன். மக்கள் மீது அன்பு வைத்திருப்பவனாகவும், மன்னன் மீது மதிப்பு வைத்திருப்பவனாகவும் நடிப்பவன். மக்களிடம் இருந்து கூடிய விலைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்பவன். இதனால் மக்களாலும் மன்னனாலும் மதிக்கப்படுபவன்.

முருகையனிலும் பார்க்க கந்தப்பன் பொருள்களுக்கு அதிக விலை கொடுப்பதானால், மக்கள் எல்லோரும் கந்தப்பனுக்கே தமது பொருள்களைக் கொடுத்தனர். முருகையனிடம் கடன் வாங்கியோர் மட்டும் வேண்டாவெறுப்பாக அவனைத் திட்டியபடி பொருள்களைக் கொடுத்தனர். இதனால் மனம் வருந்திய முருகையன் "நீங்கள் எல்லோரும் கந்தப்பனிடம் பொருள்களை விற்றுவிட்டு என்னிடம் வாங்கிய கடனைத் திருப்பி தந்தால் போதும்" என்று சொல்வான்.

கந்தப்பன் மக்களிடம்பொருள்கள் வாங்கும்போது தராசை நிறை குறைத்துவைத்து வாங்குவான். கழிவுகளுக்காகவும் பணத்தைக் குறைப்பான். இது மக்களுக்குத் தெரிவதில்லை. விலை கூட்டித் தருகிறான் எனக் கருதி அவனிடமே மக்கள் பொருள்களை விற்றனர். பிறநாடுகளில் இருந்து தான் கொண்டு வரும் பொருள்களில் கலப்படம் செய்து நிறையையும் விலையையும் குறைத்தே விற்பனை செய்வான். இதை அறியாத மக்கள் அவனிடம் பொருள்களை வாங்கப் போட்டிபோட்டனர்.

இதனால் முருகையனுக்கு நாட்டில் பொருள் கொடுக்க எவரும் இருக்கவில்லை. அத்துடன் பிறநாடுகளில் இருந்து கொண்டு வரும் பொருள்களை விற்கவும் முடியவில்லை. அரசரும் மானியமாகத் தான் மக்களுக்குக் கொடுக்கும் பொருள்களை கந்தப்பனிடமே கொள்வனவு செய்தார். இதனால் மனம் உடைந்த முருகையன் தனது வாணிபத்தைக் கைவிட்டான். அவனது மரக் கலங்கள் கடலில் நங்கூரம் இடப்பட்டிருந்தன. அதில் வேலை செய்த சிப்பந்திகளுக்கு சொற்ப பணத்தை முருகையன் கொடுத்து வந்தான். மாதங்கள் சில சென்றன. மக்கள் தமது பொருள்களை கந்தப்பன் நிறை குறைத்த கொள்வனவு செய்வதாகவும், தாம் வாங்கும் பொருள்களை கந்தப்பன் நிறை குறைத்துத் தருவதாகவும் அரசனிடம் புகார் இட்டனர். அரசன் பண்டகசாலைப் பொறுப்பாளர்களை அழைத்து விசாரித்தபோது அவர்கள் கந்தப்பன் நல்லவன் என்றும், பொறாமையால் முருகையன் கட்டிவிட்ட கட்டுக்கதை அது வென்றும்கூறினர். அரசர் அதை நம்பினாலும் உண்மைகளை அறிய ஒற்றர்களை அனுப்பினான். ஒற்றர்கள் கந்தப்பனின் பண்டகசாலைக்கு மாறு வேடத்தில் சென்றனர். உள்ளே பொருள்கள் கலப்படம் செய்யப்படுவதைக் கண்டனர்.

அத்துடன் மக்களிடம் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது நிறைகுறைத்துக் கொள்வனவு செய்யப்படுவதையும் கண்டு பிடித்தனர்.

அரசனுக்கு உண்மை நிலை விளங்கியது. கந்தப்பனைப் பிடித்து சிறையில் அடைத்தான். தரம் குறைந்த பொருள்களை ஏற்றிக்கொண்டு அயல் நாடொன்றுக்குச் சென்ற கந்தப்பனின் மரக்கலங்கள் யாவும் அந்த நாட்டு அரசானால் பறிமுதல் செய்யப்பட்டதோடு, கந்தப்பனின் மரக்கலங்கள் தனது நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்படாது என் றும் கட்டளையும் பிறப்பித்தான். கந்தப்பனும் மாலுமி களும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அயல்நாட்டு மன்னர்கள் பலரும் வாணிபத்தில் ஈடுபடுமாறு முருகையனை வேண்டினர். மக்களும் தமது பொருள்களைக் கொள்வனவு செய்யுமாறு கோரியதற்கிணங்க, முருகையன் வாணிபத்தில் ஈடுபட்டான்.



ச.விதுர்சனா,
தரம் – 3
கிளி/உருத்திரபுரம் சிவநகர் அ.த.க. பாடசாலை.






தயானந்தன் சாறுகா
தரம் – 6
வ/நெளுக்குளம் கலை மகள் மகா வித்தி.

சிறுகதை

# சொந்தமாய் ஓர் உறவு

பா.பாலாஜினி



அன்று ஏனோ நீலாவின் உள்ளம் படபடத்துக் கொண்டிருந்தது. காலையில் இருந்து சாப்பாடு தண்ணி கூட அவள் உட்கொள்ளவில்லை. முற்றத்து மாமரத்தின் கீழ் இருந்து கவலையுடன் யோசித்த வண்ணமாகவே இருந்தாள். அவளது இந்தப் படபடப்பு உணவு தவிர்ப்புதம், கவலை இவை எல்லாவற்றுக்கும் காரணமாக அந்த வெள்ளை நிற மறியாடு எந்தவித அசைவுமின்றி அவளுக்குச் சற்றுத் தள்ளிப்படுத்திருந்தது. உப்பிப் பருத்திருந்த அதன் வயிற்றுப்பகுதி உயர்ந்து தாழ்வதை மட்டும்வைத்துத்தான் அது இன்னமும் உயிருடன் இருக்கின்றது என்பதை உறுதிசெய்யக் கூடியதாயிருந்தது.
நீலா, மாமரத்தின் கீழ் இருந்தபடியே அந்த அசைவற்றுக் கிடந்த ஜீவனை உற்று நோக்கிவிட்டு, கண்களில் துளிர்ந்திருந்த கண்ணீர்த் துளிகளையும் சுண்டி விட்டு விட்டு, ஏதோ தீர்மானம் எடுத்தவளாகச் சற்றுத் தூரத்தில் இருந்த மிருக வைத்தியசாலையை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.
நீலா, கிளிநொச்சி மாவட்டத்தின் பின் தங்கிய ஒரு கிராமத்து வாசி ஆவாள். அன்றாடம் ஊருக்குள்ளே சிறு சிறு வேலைகளைச் செய்து கொடுத்து வயிறு கழுவுகின்ற அப்பாவி ஜீவன் அவள். போரின் காரணமாகத் தாய், தந்தையரையும், தாலியைக் கையிலே கொடுத்து, "காத்திரு, போர் முடிந்ததும் உன் கழுத்தில் மூன்று முடிச்சுப் போடுகிறேன்" என்று கூறிவிட்டு போர்க்களத்துக்குச் சென்ற காதலனான மூர்த்தியையும் ஒரே நாளில் பறிகொடுத்த அநாதை. அவளுக்கு இப்போது இருக்கும் சொந்தம் அந்த ஆடு மட்டுமே. ஆட்டுக்கு அவள் துணை அவளுக்கு ஆடு துணை. இது தான் அவளது இன்றைய நிலை.
அநாதையாகிவிட்ட அவ ளுக்கு அந்த ஆடுதான் ஒரே ஒரு உலகம். "ம்மே" என்று - அது கத்துகின்ற தொனியில் "அம்மா" என்று அது தன்னை அழைப்பதாகப் பூரிப்படைவாள். நாளுக்கு மூன்று வேளை அதற்கு உணவிடுவதிலேயே தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளுகிற குணமுடையவள் நீலா. அந்த இரு ஜீவன்களின் உறவிலே மனிதன், விலங்கு என்ற வித்தியா சத்தை ஏனோ காணமுடிவதில்லை.
ஆனால் அந்த ஐந்தறிவு ஜீவனிடம் இப்போது அசைவேதும் காண வில்லை. கடந்த இரு நாள்களாகக் கை வைத்தியங்கள் எல்லாம் செய்து பார்த்து அலுத்து விட்ட நீலா மிருக வைத்தியரையும் அழைத்து வந்து காட்டிவிட்டாள்.
"தங்கச்சி, ஆடு ஏதோ தின்னக் கூடாததைத் திண்டிட்டுது போல. இந்தக் குளுசையைக் கரைச்சுக் குடும், எல்லாம் சரியாயிடும். வயிற்றுப் பொருமலும் குறைஞ்சிடும்" என்று கூறி வந்து பார்த்த கூலியாக நூறு ரூபாயையும் வாங்கிச் சென்றுவிட்டார் வைத்தியர். நீலா குளுசையையும் கரைச்சுக் கொடுத்துப் பார்த்துவிட்டாள் பயனேதுமில்லை, வயிற்றுப் பொருமல் இன்னும் அதிகரித்தது போலத் தெரிந்தது அவளுக்கு.
ஊசி ஏதும் வாங்கிப் போடுவிக்கலாமே என்ற தீர் மானத்துடன் சென்று கொண்டிருக் கிறாள் மிருக வைத்தியசாலையை நோக்கி. கொளுத்தி எரிக்கின்ற சூரியன் தலையை பதம் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த மதிய நேரத்தில் மிருக வைத்தியசாலையில் அவ்வளவாகக் கூட்டம் இல்லாதது நீலாவுக்கு வாய்த்து விட்டது. கொஞ்சம் தைரியமாக உள்ளே சென்று "ஐயா, அண்டைக்கு தந்த குளுசைக்கு ஆடு இன்னும் சரிவரேல, வேற ஏதாவது..." என்று இழுத்தாள்.
இடையிட்டு மறித்தார் வைத்தியர். "தங்கச்சி அந்தக்

தங்கச்சி, ஆடு ஏதோ தின்னக் கூடாததைத் திண்டிட்டுது போல. இந்தக் குளுசையைக் கரைச்சுக் குடும், எல்லாம் சரியாயிடும். வயிற்றுப் பொருமலும் குறைஞ்சிடும் என்று கூறிவிட்டு நூறு ரூபாயை யும் வந்து பார்த்த கூலியாக வாங்கிச் சென்று விட்டார். நீலா குளுசையையும் கரைச்சுக் கொடுத்துப் பார்த்துவிட்டாள் பயனேது மில்லை. வயிற்றுப் பொருமல் இன்னும் அதிகரித்தது போலத் தெரிந்தது அவளுக்கு.

குளுசையைத் தவிர வேற இல்லை. உன்ர ஆட்டுக்கு ஏதோ தீராத நோய்போல, இனி ஒண்டும் செய்யேலாது" என்றார். "ஐயா, ஒரு தடவை வந்து பாருங்கோவன் எதுக்கும்" என்று கண்ணீர் மல்க இரு கைகளையும் கூப்பி வேண்டினாள். நீலாவின் கண்ணீர் அவரை இளகச் செய்து விட்டது போலும். "உன்ர தொல்ல தாங்கேலாம இருக்கு, முதலும் வந்து பார்த்தனான் தானே" என்று புறுபுறுத்தபடியே எழுந்தார். வீட்டுக்கு வந்து ஆட்டைப் பார்த்த வைத்தியரின் வாய் அஷ்டகோணலாக வளைந்திருந்தது. நீலாவோ கேள்விக் குறியுடன் அவர் முகத்தைப் பார்த்தபடி நின்றிருந்தாள். அவளின் ஏக்கம் அவருக்குப் புரிந்தது போலும். "தங்கச்சி இது தப்புமோ தெரியேல, உயிர் பிழைக்க வேண்டுமெண்டால் ஊசி தான் போடணும் அந்த ஊசியும் இங்க இல்லை, கொழும்பிலை இருந்து தான் வாறது. எப்படியும் ஒரு 1500/= எண்டாலும் முடியும். உன்னால செலவு செய்ய முடியுமோ" என்றார்.
"ஐயா எவ்வளவு என்டாலும் நான் தாறன். அது பிழைக்க வேணும். நாளைக்குக் காலையில காசோட நான் காத்திருப்பன். ஐயா நீங்கள் வந்து ஊசி போட்டால் போதும்" என்று தீர்மானமாய்க் கூறியபடியே அவரை வழியனுப்பி வைத்தாள். அவர் போனபின் தான் நீலா வுக்கு காசுக்கு என்ன செய்வதென்று புத்தியில் உறைத்தது. ஆயிரத்து 500/= ரூபாவுக்கு அவள் எங்கே போவாள். அன்றாடம் உழைக்கும் பணத்திலே வயித்தை கழுவும் அவளுக்கு. யார் தான் கடன் கொடுக்கச் சம்மதிப்பார்கள். இப்படிப் பல வாறாக யோசித்துக் கொண்டி ருந்த நீலாவின் முகத்தில் திடீர் பரவ சம் ஏற்பட்டது.
ஏதோ ஞாபகம் வந்தவ ளைப் போல வீட்டினுள்ளே ஓடினாள். மூடி வைத்திருந்த டிரங்குப் பெட்ளைத் திறந்த நீலா அதற்குள் கையை விட்டு எதையோ எடுத்துவிட்டுப் பெட் டியை மீண்டும் மூடினாள். அவள் கையில் தாலிக்கொடி ஒன்று மின்னிக் கொண்டிருந்தது. அது, அவளுக்கு கணவனாக வர வேண்டியவன் போர்களத் துக்குச் செல்லும் போது "தான் வரும் வரை பத்திரமாக வைத்திரு" என்று கூறிக் கொடுத்துச் சென்றது. அவனுடைய ஞாபகமாக அவளிடம் இது மட் டும் தான் உள்ளது. சாகும்வரை தன்னுடனேயே இருக்கட்டும் என்று இதுவரை வைத்திருந்தாள்.



(43 ஆம் பக்கம் பார்க்க)

# வேண்டாமே மண(ண)ன முறிவு 07

இன்பம்– துன்பம் இரண்டிலும் சமபங்கு ஏற்கத்தான் கணவன்– மனைவி உறவு. சில இடங்களில் விட்டுக் கொடுத்தும், தட்டிக்கொடுத்தும் வாழத் தான் இந்த உறவு. வலிகளுக்கு அப்பாலும் வாழ்க்கை உள்ளது என்பதைப் புரிந்து வாழும் உறவு.

■ எஸ்.மல்லிகா

விவாகரத்துப் பெற்ற பெண் ஒருத்தி தனிக் குடித்தனம் போகிறாள் அவளுடைய மூன்று பிள்ளைகளும் அவளுடனேயே செல்கின்றனர். வாழ்க்கை நிலைப்பதற்கு அவள் மீண்டும் அதேவேகத்தில் இயங்குகிறாள். பிள்ளைகளும் பதின்ம வயதை எட்டி, கட்டிளமைப் பருவத்தை அடைகின்றனர். நாளாக, நாளாக, மகனின் நடவடிக்கையில் மாற்றம் ஏற்படுகின்றது. ஆம்! தந்தையின் கண்டுபிடிப்பும் வழிநடத்தலும் இல்லாததால் அவன் போதையின் பிடியில் அகப்பட்டுத் தன் பாதை மாறுகிறான். எவ்வளவோ அவனைத் திருத்த முயன்றும் தாயால் முடியவில்லை. இந்தக் கவலையால், மற்றப் பிள்ளைகளும் ஒழுங்காகக் கற்கவில்லை. எல்லாப் பழியையும் அந்தப் பெண் ஏற்பதோடு சீரழிவான குடும்பமும் சமுதாயமும் உருவாகின்றது. தீராவலிகளைச் சுமக்கும் அவள், அதிக உடற்சோர்வுக்கும் மனப் பாதிப்புக்கும் உள்ளாகி நோயின் கரங்களில் தஞ்சமடைகிறாள். மருத்துவ மனையே அவளது வீடானது. பிள்ளைகள் வாழ்வோ, கேள்விக் குறியானது இந்தவேளைதவறை உணர்ந்த கணவன், அவளைப் பார்க்கச் செல்கிறான். எல்லாவற்றையும் மறந்து, ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக, உதவியாக வாழலாம் என்ற கனவுடன் அவன் விரைகிறான். அவளது நெஞ்செங்கும் அவன் நினைவுகள். அவனிடம் மன்னிப்புக் கேட்க அவள் ஆன்மா அந்தரிக்கின்றது.



அவனைக் கண்டதும் தன் பார்வையால் அவனுக்குத் தன் துயரத்தையும் பிள்ளைகளின் வாழ்வையும் ஆயிரம் அர்த்தங்கள் மூலம் உணர்த்தி நிற்கிறாள் அவள். இதனை உணர்ந்த கணவன் அவளோடு இணைய, எல்லா உழைப்பின் களைப்பும் நீங்கி நிரந்தர ஓய்வு தேடுகிறாள் அவள். அவளின் பரிதாபநிலையிலிருந்து அவள் மாறிவிட்டாள். மகனும் மனந்திருந்திய மைந்தன் ஆகிவிட்டான். தன் குடும்பத்தைத் தாங்கிக் கணவன் செயற்பட ஆரம்பிக்க பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாகவும் வழிகாட்டியாகவும் அவளுக்குச் சிறந்ததொரு தலைவனாகி அவன் அத்தனை கடமைகளும் செய்கிறான். அவனது மனமாற்றத்தால் நந்தவனம் ஆனது அக்குடும்பம். இப்போதுஅவன் பெண்ணின்உணர்வுகளைப் புரிந்திடும் ஆடவன் ஆகிவிட்டான். தங்கள் குடும்பத்தின் அவலம் வேறெங்கிலும் தொடரக் கூடாது என்ற எண்ணத்துடன், அவன் உள வளத் துணைக் கற்கை முடித்து மண(ண)ன முறிவுக்கு ஆளாவோருக்குச் சிறந்த ஆலோசனை கொடுக்கிறான், வாழ்வியல் உபதேசம் செய்கிறான். இன்பம்– துன்பம் இரண்டிலும் சமபங்கு ஏற்கத்தான் கணவன்– மனைவி உறவு. சில இடங்களில் விட்டுக் கொடுத்தும், தட்டிக்கொடுத்தும் வாழத்தான் இந்த உறவு. வலிகளுக்கு அப்பாலும் வாழ்க்கை உள் ளது என்பதைப் புரிந்து வாழும் உறவு. ஆயினும், சிலவேளைகளில் மனைவியர் உடல்நிலை நன்றாக இல்லாது களைத்துச் சோர்ந்திருக் கும் போதுகூட, அவர்கள் மீது இரக்கம் காட்டாத கணவர்மார் உள்ளமை பெண்களின் சாபக்கேடு. இயல்பிலேயே மென்மைக் குணம் படைத்தவர்கள் பெண்கள். வலிகளை– பாரங்களை அதிகம் சுமப்பவர்களும் இவர்கள் தான். அதற்காக, குருவியின் தலையில் பனம் பழம் போன்ற சுமையைச் சுமக்க இவர்களை விடலாமா?

(தொடரும்...)

# நுளம்புகளை அழிக்க புதிய உத்தி



பெண் நுளம்புகள் மட்டும் தான் மனிதர்களைக் கடிக்கின்றன. இதனால் இந்தப் பெண்நுளம்புகளை அழிப்பதற்கு மரபணு மாற்றப்பட்ட நுளம்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவை பெண் நுளம்புகளை மட்டும் அழிக்கக் கூடியவை. பெண் நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யும் பருவத்துக்கு வரும்போது அவற்றை அழித்துவிடு கின்றன இந்தப் புதிதாக உருவாக்கப்பட்ட நுளம்புகள்.

ராணுவச் செலவைவிட உலக நாடுகள் அதிகம் நுளம்புகளை அழிப்பதற்கே செலவு செய்கின்றன. சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் மூலமான சோதனைகள் கழிவுநீர் அகற்றல், நுளம்பு மருந்து அடித்தல் என்று அரசும், நுளம்புச் சுருள், நுளம்புவலை என்று மக்களும் செலவு செய்கிறார்கள். ஆனாலும், நுளம்புத் தொல்லையை ஒழிக்க முடியவில்லை. இந்த நிலையில் அமெரிக்க நுளம்பு ஒழிப்புச் சங்கமும், உணவு மற்றும் மருந்துக் கழகமும் ஒரு புதிய உத்தியைக் கண்டுபிடித்துள்ளன. நுளம்புகளின் மரபணுக்களை மாற்றியமைத்து, ஒரு நுளம்புக் கொலைப் படையையே உரு வாக்கி, டெங்கு, சிகா போன்ற கொடிய நோய்களைப் பரப்பும் குறிப்பிட்ட நுளம்புகளை குறிபார்த்து அழிக்கப்போகிறார்கள். இந்தப் பொறுப்பு ஒக்ஸிடெக் எனும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பெண் நுளம்புகள் மட்டும்தான் மனிதர்களைக் கடிக்கின்றன. இதனால் மரபணு மாற்றப்பட்ட நுளம்பு, பெண் நுளம்புகளைக் கண்டறிந்து அவற்றை மட்டும் அழிக்கப் போகின்றன. நோய்த்தடுப்புச் செலவு மற்றும் நுளம்பு இனப்பெருக்கத் தடை என ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது தான் இந்தத் திட்டத்தின் நோக்கம். இதற்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத் துறை அனுமதி அளித்துவிட்டது. இந்தத் திட்டம் சோதனை அடிப்படையில் புளோரிடா மாகாணத்தில் நிறைவேற்றப்பட உள்ளது. அந்த மாகாண் அரசு நிர்வாகம், இந்தப் புதிய முறையால் பின்விளைவுகள் ஏதுமில்லை என்று சான்றிதழ் அளிக்க வேண்டும். அது மட்டும் கிடைத்துவிட்டால் இந்த நுளம்புக்கொலைப் படை களமிறங்கிவிடும்.

எமது நாட்டிலும் நுளம்புகள், ஜப்பானிய மூளைக் காய்ச்சல், டெங்கு, மலேரியா, யானைக்கால்நோய் , சிக்கன்குனியா ஆகிய மோசமான நோய்களைப் பரப்புகின்றன. இவற்றை அழிக்க வேண்டுமா அமெரிக்க நுளம்புக் கொலைப்படை எமது நாட்டுப் பக்கம் வரும்வரை நாம் காத்திருக்க வேண்டும்.



# புதினப் பூஞ்சைகள்

ஜோதா

**பூஞ்சைகள் ஆரம்பத்தில் கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கும். எனினும் காளான் களாக இவை விருத்தி யடையும் போது கண்ணுக் குத் தென்படுகின்றன. ஏனைய நுண்ணியிர்கள் போலவே இவையும் மனி தர்களுக்குப் பயனுடை யவை, பயனற்றவை, தீமை யானவை எனப் பல வகைகளில் உள்ளன.**

மிகப் பெரிய மெய்க்கருவுயிரி உயிரின வகைகளில் பூஞ்சைகளும் ஒன்று. இவை பூஞ்சணம், பூசணம், பங்கசு என்அழைக்கப்படுகின்றன. வளமற்ற மண்ணும், தாவர, விலங்குக் கழிவுகளும் இவற்றின் தாக்கத்தால் மாற்றமடைந்து, நிலத்துடன் சேர்வதால் நிலவளம் அதிகரிக்கிறது. பூஞ்சைகளைப் பற்றிய அறிவியல் பிரிவு பூஞ்சையியல்எனப்படுகிறது. தொடக்கத்தில் தாவர இனத்தைச் சேர்ந்ததாகக் கருதப்பட்ட பூஞ்சைகள், பின்னர் தாவரங்கள், விலங்குகளிலிருந்து பிரிந்த தனிப்பெரும் உயிரியாக வகைப்படுத்தப்பட்டன. பூமியில் எல்லா வகை சுற்றுச்சூழல்களிலும் பூஞ்சைகள் காணப்படுகின்றன. இவை இருண்ட, ஈரப்பசை நிரம்பிய இடங்களிலும் கனிம ஊட்டப்பொருட்கள் நிறைந்த பகுதிகளிலும் வளர்கின்றன. பல முக்கியமான ஒட்டுண்ணி வாழ்வை மேற்கொள்ளும் உயிரினங்கள், மற்றும் சிதை மாற்றம் செய்யும் உயிரினங்கள் பூஞ்சை இணங்களில் உள்ளன. பூஞ்சைகள் பச்சையம் அற்ற மெய்க்கருவுயிரி உயிரினமாகும். இவை தாவரங்களைப்போல இழையங்களையுடைய உயிரணுக்களை உடையனவாகக் காணப்பட்டாலும், இவற்றில் பச்சையம் இல்லை.

இந்தப் பூஞ்சைகளினால் ஏற்படும் வேதிவினை மாற்றங்கள், சுற்றுப் புறத்தில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவை. பூஞ்சைகள் ஆரம்பத்தில் கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கும்.

எனினும் காளான்களாக இவை விருத்தியடையும் போது கண்ணுக்குத் தென்படுகின்றன. ஏனைய் நுண்ணுயிர்கள் போலவே இவையும் மனிதர்களுக்குப் பயனுடையவை, பயனற்றவை, தீமையானவை எனப் பல வகைகளில் உள்ளன. மனிதர்களிடத்தே ஏற்படும் சில நோய்களுக்கும் இவை காரணமாகின்றன. உணவைப் பழுதடையச் செய்யக் கூடியவை,சில முக்கியமான நுண்ணியிர்க் கொல்லிகளை உற்பத்தி செய்யவும் பயன்படுகின்றன. பூஞ்சைகள் தாவரங்களுடனும், வேறு உற்பத்தியாக்கிகளுடனும் ஒன்றிய வாழிகளாக வாழ்கின்றன. இலைக்கன் (அல்கா-பூஞ்சை அல்லது சயனோபக்ரீரியா-பூஞ்சை கூட்டணி) இதற்கு மிக முக்கியமான உதாரணமாகும். மரங்களின் வேர்களில் கனியுப்பு அகத்துறிஞ்சலுக்கு இவை ஒன்றிய வாழிகளாகச் செயற்படுகின்றன. ஆரம்பத்தில் கண்ணுக்குத் தெரியாமலிருந்து பின்னர் க்காளானுருப் பெறுவதால் இவையும் இயற்கையின் மறைவில் நடக்கும் அற்புதங்களில் ஒன்று. அது ஒரு திரைமறைவு இரகசியம். நாம் பார்க்கும் காளான்கள், பூஞ்சைகளின் பழம் என்று கருதக்கூடிய விருத்தி நிலையாகும். பூஞ்சைகள், பூமி முழுவதும் வியாபித்திருக்கின்றன. பூமியின் எல்லாச் சூழலிலும் வாழும் திறன் கொண்டவை. குளிர், பனி, வெயில் என எதுவும் இதற்குப் பொருட்டில்லை. தாவரங்கள், மிருகங்கள் என்று அனைத்து உயிரிணங்களின் மீதும் வளரும் இயல்புடையது பூஞ்சை. பல ஆண்டுகளாகப் பூஞ்சைகள், தாவரங்களுடன் இணைந்து வளர்ந்து வந்தன. பின்னர் அவை, தாவ ரத்தைவிட மிருகங்களுடன் அதிகளவு இணைந்திருப்பது தெரிய வந்தது.இதிலிருந்து பூஞ்சைகள் தாவரங்கள் மற்றும் விலங்குகளுடன் ஒட்டுண்ணிபோன்று தானாக வளரக்கூடியவை என்பது அறியப்பட்டது. பூஞ்சைகளிடம் குளோரோபில் எனப்படும் பச்சையம் கிடையாது. எனவே, தாவரங்களைப் போல் உணவைத் தானே தயாரித்துக்கொள்ள இவற்றால் முடியாது.


தாவர உயிரணுக்களின் சுவர் செல்லுலோ ஸால் உருவானது. ஆனால், பூஞ்சைகளின் உயி ரணுச் சுவர் கைட்டின் எனப்படும் மூலப்பொருளால் உருவானது. இந்த கைட்டின் மிருகங்களின் கொம்பு, முடி, ஓடு போன்றவற்றில் வளரும் தன்மையுடையது. பூஞ்சைகளுடைய உயிரணுக்களும் மரபணுக்களும் வளர்வதற்குத் தாவரங்களைவிட மிருகங்களே அதிகம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பூஞ்சைகளின் உயிருள்ள உடலின் பெயர் மைசீலியம் எனப்படும் பூசண வலை ஆகும். இந்த வலையானது மரம், உணவுப் பொருள் என்று எதற்குள் வேண்டுமானாலும் புதைந்திருக்கும். ஒரு மைசீலியம் ஓர் எலும்பின் அளவில் இருந்து பல ஏக்கர் பரப்பளவு வரை இருக்குமாம். மைசீலியம் என்பது ஹைறபே இழைகள். ஒரு நாளில் இவை ஒரு கிலோமீற்றர் அளவுக்குக் கூட வளரும் தன்மையுடையவை.

பூமியில் 15 லட்சம் முதல் 50 லட்சம் வரையான பூஞ்சை வகைகள் வாழ்கின்றன. கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய அளவிலிருந்து பல மைல் அளவு வரை பூஞ்சைகள் படர்ந் துள்ளன. பூஞ்சைகள், கண்ணுக்குப்புலப்படாமல்நூற்றாண்டுகளாகச் செயலற்று இருந்துவிட்டு, பின் வளரும் திறனுடையவை. பூசணம் காளான்களாக விருத்தியடையும் போதுதான்நம்கண்ணுக்குப்புலப்படும். பூஞ்சைகள் உணவுக்காக மற்றவற்றைச் சார்ந்தே இருக்கும். சில பூஞ்சைகள், மண்ணிலிருந்து உணவைஎடுத்துக்கொள்ளும். சில வகை பூஞ்சைகள் பிற உயிரிணங்களையோ, உயிரற்ற பொருளையோ உணவுக் காகச் சார்ந் திருக்கும். ஒட்டுண்ணிகளும் சிதை மாற்றம் செய்யும் உயிரிணங்களும் ஒன்றிய வாழிகளும் பூஞ்சைகள் உணவு பெறுவதற்கு வழி செய்கின்றன.

பூஞ்சை இனம் இல்லையென்றால் பூமியில் பல அடி உயரத்திற்கு கழிவுகள் நிரம்பியிருக் கும். ஏனெனில் குப்பைகள், வாடிய தாவரப் பாகங்கள், இறந்த மிருகங்கள் போன்றவை பூஞ்சைகளின் தாக்கத்தால் மறுசுழற்சி பெற்று வளமான மண்ணாக மாறி விடுகின்றன. நீர் நிலைகளில் வாழும் பூஞ்சைகள், அங்கு சேரும் குப்பைகள், கழிவு, எண்ணெய் போன்ற வற்றை நொதிக்கச் செய்து, நீர் நிலையை மற்ற உயிரிணங்கள் வாழத் தகுதியுடையதாய் மாற்றும். இந்த வகையில் அனைத்து உயிரிணங்களும் பூஞ்சை களுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஸ்போறேஸ் எனப்படும் வித்துகள் மூலம் பூஞ்சைகள் இனப்பெருக்கம் செய்யும். காளான், பூசணம், ஈஸ்ட் ஆகியவை பூஞ்சைகளின் சில வகைகள். உலகின் மிகப்பெரிய உயிரினமான தேன் பூஞ்சை, அமெரிக்காவின் ஓரிகான் பகுதியில் காணப்படுகிறது. 2200 ஏக்கர் பரப்பளவில் படர்ந்துள்ள இந்தக் காளானை, 2400 ஆண்டுகள் பழைமையானதாகும். இந்தக் காளானை ஒற்றை உயிரினமாகக் கணக்கிட்டால் இதுவே உலகின் மிகப்பெரிய உயிரினமாகும். இதன் மொத்த எடை 605 தொன்களாகும்.

காளான்கள் மனிதர்களுக்கு ஆரோக்கியமான சுவையான உணவாகும். பாண், கேக் ஆகிய உணவுத் தயாரிப்பில் ஈஸ்ட் பயன்படுகிறது. மதுபானங்கள், அமிலங்கள், சோஸ் வகைகள், சீஸ் ஆகிய தயாரிப்புகளிலும் பூஞ்சைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. சில பூஞ்சைகள், உயிர்காக்கும் மருந்துத் தயாரிப்புக்கு உதவு கின்றன. பூஞ்சைகளில் தீமையும் உண்டு. தீய பூஞ்சைகள் உணவைப் பாழாக்குகின்றன். மனிதர்களிலும் தாவரங்களிலும் நோய்களை உண்டாக்குகின்றன. சில காளான்கள் மனிதனையே கொல்லக்கூடிய விஷம் கொண்டும் காணப்படுகின்றன.






# இடையூறாகும் இணைய விளம்பரங்கள்

சுர்ஜீவா

இணையம் என்பதை வெறும் பொழுதுபோக்கிற்குப் பயன்படுத்தாமல், கல்விக்காகவும் பரீட்சை வழிகாட்டல்களுக்காகவும் பயன்படுத்தும் மாணவர்களும் இளைஞர்களும் அதிகமாகவே உள்ளனர். தினசரிச் செய்திகளையும் உலக விடயங்களையும் அவர்களுக்கு வழங்கி இணையமும் உதவுகிறது. இணையத் தளத்தில் செய்திகளைப் படிக்கும்போதும், தகவல்களைத் தேடும்போதும் அவற்றில் விளம்பரங்கள் இடம்பெறுவது வழக்கம். செய்திச் சேவையை அளித்து வரும் இணையத்தளங்களைப் பொறுத்தவரை அவை தம்மைப் பயன்படுத்துவோருக்குக் கட்டணம் எதையுமே அறவிடுவதில்லை. ஏனேனில் அவற்றுக்கான வருமானம் அவை தமது இணையத்தளத்தில் பதிவேற்றும் விளம்பரங்களாலயே கிடைக்கின்றன. கூடுதலான பயனாளிகள் இதை அறிந்தவர்களே. அவர்களில் அதிகமானோர் தாங்கள் பார்க்கும் இணையத் தளத்தளத்தில்விளம்பரங்கள் இடையூறுசெய்வதை விரும்பாதவர்களே. மிகக் குறைந்தவர்கயே விளம் பரங்களையும் சகித்து இணையத்தைப் பார்வையிடுகின்றனர்.

**விளம்பரங்களைத் தடுக்கும் மென்பொருள்கள்**

ஆனால், வேண்டியவற்றைப் பார்க்க விடாமல் செய்துவிடும் அளவுக்குவிளம்பரங்கள் இணையத்தின் பக்கத்தை ஆக்கிரமிக்கும்போது பயனாளிகள் அந்த விளம்பரங்களைத்தடுப்பதுபற்றி எண்ணத் தொடங்குகிறார்கள். இத்தகைய விளம்பரங்களைத் தடுப்பதற்கான மென்பொருள்கள் மிகவும் சுலபமாக, இணையத்திலேயே கிடைக்கின்றன.

ஆகவே, பயனாளிகள் அவற்றைப் பயன்படுத்தி விளம்பரங்களை எளிதாகத் தடுக்கமுடியும். இவ்வாறு விளம்பரங்களைத் தடுத்துவிடும் பயனாளிகளுக்குச் சில இணையத்தளங்கள் சேவை அளிப்பதை மறுக்கும் போக்கும் நிலவுகின்றது. இத்தகைய இணையத் தளங்கள் விளம்பரங்களை மறுக்கும் பயனாளிகளிடம் விளம்பரத் தடையை நீக்கும்படியும், நீக்கினால் மட்டுமே தாங்கள் சேவை நீடிக்கும் என்று மறைமுகமாகக் கூறிநிற்கின்றமையும் தெரிகிறது.

தற்காலத்தைப் பெறுத்தவரை இணையத்தளத்தைப் பயன்படுத்துவதில் அதிகமானோர் அதில் தோன்றும் விளம்பரங்களை அதற்குரிய இலவச மென்பொருளைப் பயன்படுத்தி அவற்றைத் தடுத்துவிடுகின்றனர்.இவ்வாறான தடுக்கும் வகை மென்பொருள்களைப் பயன்படுத்துவோர் தொகை வர வர அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.


இதனை அதிகமானோர் பயன்படுத்துகிறார்கள் என்றால் விளம்பரங்கள் எந்த அளவுக்கு அவர்களுக்கு இடையூறாக அமைகின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். விளம்பரங்களைத் தடுக்கும் மென்பொருள்களை உருவாக்கும் நிறுவனங்களுக்குச் சமீப காலமாக விற்பனைச் சந்தை யும் கேள்வியும் வெகுவாக அதிகரித்து வருகிறது என்று ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இதற்கெல்லாம் பொருள் இணையத்தில் கட்டுக்கடங்காமல் விளம்பரங்கள் அதிகரித்திருக்கின்றன என்பது தானே?



**விரும்பினால் பாருங்கள்!**

ஓர் இணையத்தளத்தில் விளம்பரங்கள் இடம் பெறுவது சரிதான். ஆனால் அவை பிரதான சேவையை அனுபவிக்கவிடாமல் தடுக்கும் அளவுக்குச் சென்றுவிடக் கூடாது என்பதில் இணையத்தளங்கள் கவனமாக இருக்கவேண்டும். பயனாளிகளுக்குத் தொந்தரவு தராத வகையில் விளம்பரங்களை அமைக்கும்போது பயனாளிகளும் விளம்பரங்களைத் தடுப்பது பற்றி எண்ணப்போவதில்லை.ஆனால் வருமானத்தை மட்டுமே முக்கியமாகக் கருதி முழுக்க முழுக்க இணையத்தளப் பக்கத்தை விளம்பரங்களால் நிறைப்பது நல்லதன்று. மேலும் தான்னிச்சையாக ஓடும் வீடியோக்கள் சில பயனாளிகளுக்கு பிடித்துக்கொள்வதில்லை.தனது கல்வித் தேவைக்காக மாணவர் ஒருவர் முக்கியமான தகவல் ஒன்றுக்காக இணையத்தை நாடும்போது அவரை அலைக் கழிக்கும் வகையில் விளம்பரங்கள்அமைந்துவிட்டால்அவர் என்ன செய்வார்? விளம்பரங் களைத் தடுக்கத்தான் பார்ப்பார்.ஆனால் அவருக்குத் தேவையான தகவலையும் தந்து, வாய்ப்புக் கிடைக்கும் போது இந்த விளம்பரங்களையும் பாருங்கள் என்று ஒரு தெரிவு இருந்தால் அவர் தனது தேவையை யும் பூர்த்தி செய்து பக்கமாகவுள்ள விளம்பரங்களிலும் கவனம் செலுத்துவார். இந்த விடயத்தை இணையத் தளச் சேவை நிறுவனங்கள் கவனத்திற் கொள்வது நல்லது.

ஓர் இணையத் தளத்தில் விளம்பரங்கள் இடம் பெறுவது சரிதான். ஆனால். அவை பிரதான சேவைய்யை அனுபவிக்கவிடாமல் தடுக்கும் அளவுக்குச் சென்றுவிடக் கூடாது என்பதில் இணையத் தளங்கள் கவனமாக இருக்க வேண்டும். பயனாளிகளுக்குத் தொந்தரவு தராத வகையில் விளம்பரங்களை அமைக்கும் போது. பயனாளிகளும் விளம்பரங்களைத் தடுப்பது பற்றி யோசிக்கப்போவதில்லை.







WWWஎன்ற மூன்றெழுத்தின் மூலம் உலக மக்களை இணைக்கும் இணையம் உருவாகி 25 ஆண்டுகளாகி விட்டன.1991இல் பிரிட்டனின் கணினி விஞ்ஞானியான டிம் பெர்னெர்ஸ் லீ என்பவரால் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் இராணுவத் தகவல்களை இரகசியமாக பரிமாறப் பயன்படுத்தியதால், மக்கள் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. பின்னர் 1993இல் 500 வரையான பரிமாற்றிகள் உருவாக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்கு விடப்பட்டது. ஆனால் இன்று ஆறரைக் கோடி இணையத்தளங்கள் இயங்கிவருகின்றன.

# வடக்கு கிழக்கு இணைப்பு

## ஏட்டில் இல்லாத சுரைக்காய்!

ஸூடோ ஸ்வாமி



வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரம் மீண்டும் ஒரு முறை சந்திக்கு வந்திருக்கிறது. தேர்தல் காலங்களில் கலகலப்புப் பெறும் இந்த மீளிணைப்பு எண்ணக்கரு. கடந்த ஞாயிற்றுக்கிழமையும் தலைகாட்டியிருக்கிறது. கூடவே, எதிர்வினைகளையும் சம்பாதித்திருக்கிறது.

தமிழ் மக்கள் பேரவையின் ஐந்தாவது கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பொது நூலகக் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றபோது. அதில் உரையாற்றிய பேரவையின் இணைத்தலைவரும் வடமாகாண சபை முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் தனது உரையின் கடைசியில் வடக்கு-கிழக்கு இணைப்பைப் பற்றி-பிரஸ்தாபித்திருக்கிறார்-வலியுறுத்தியிருக்கிறார். வடக்கு-கிழக்கு பாரம்பரியமாக தமிழ் பேசும் மாகாணங்கள். எனவே தமிழ்மொழி நிலைக்க, தமிழ்மொழியை பேசும் மக்களின் கலாசாரம் நிலைபெற, பிற கலாசாரங்களை உட்புகுத்தி இன அழிப்பு ஏற்படாது தடுக்க, வடக்கும் கிழக்கும் இணைந்தே தீரவேண்டும். வடக்கு-கிழக்கில் வேண்டுமென்றால் இது பற்றிய ஒரு கருத்துக் கணிப்பை வைக்கலாம் என்று ஜனாதிபதி செயலணியின் செயலாளருக்கு கூறிய கருத்தினை மீட்டிய அவர், வடக்கு-கிழக்கு இணைந்த தமிழ் பேசும் அலகு என்பது எமது வருங்கால ஒற்றுமைக்கும், தமிழ்ப்பாரம்பரிய நிரந்தரத்திற்கும் மிக்க அவசியமான ஒன்று என்பதையும் தெரிவித்திருக்கிறார்.

1987ஆம் ஆண்டு ஜுலை 29இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டன. ஆனால் அந்த இணைப்பு தற்காலிகமானதுடன் வருடாவருடம் நீடிக்கப்பட்டும் வந்தது. உண்மையில் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பில் கிழக்கு மக்களிடம் வாக்கெடுப்பு ஒன்றினை நடத்தியே அதனை நிலையான இணைப்பாக மாற்றுவதற்கு இருந்தது. ஆனால் கடைசி வரை பிள்ளையார் கல்யாணமாகவே தள்ளிப்போனது அது.

### வரலாற்றுத் தீர்ப்பு

பத்து வருடங்களுக்கு முன்னர் சரியாக 2006இல் இலங்கை மேல் நீதிமன்றத்தின் சரத். என். சில்வா உட்பட்ட 5 நீதிபதிகளை கொண்ட ஆயத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு வடக்கையும் கிழக்கையும் வெவ்வேறாக துண்டு போட்டிருந்தது. அப்போது ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கந்தளாயைச் சேர்ந்த ஜயந்த விஜயசேகர, சம்மாந்துறையைச் சேர்ந்த முஹமட் புஹாரி, உக ணயைச் சேர்ந்த வசந்த பியதிஸ்ஸ ஆகியோரால் தாக்கல் செய்யப் பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே நீதிமன்றம் மேற்படி தீர்ப்பினை அறிவித்திருந்தது. இதனையடுத்து 1988ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8ஆம் திகதியிட்ட வர்த்தமானி அறிவித்தலி னால் அப்போதைய ஜனாதிபதி பிரகடனப்படுத்தியிருந்த இணைந்த வடக்கு-கிழக்கை தனி ஆட்சி அலகாகக் கொள்ளும் தீர்மானமும் அதே ஆண்டு செப்ரெம்பர் 2ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட அவசரகால விதிகளும் செல்லுபடியற்றதாகின.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் நிலத்தால் இணைந்தும், குடிப்பரம்பலில், புவியமைப்பில், மொழியில், கலாசார பண்பாட்டியல்களில் ஏறக்குறைய ஒருமித்ததன்மையைக்காண்பித்தும் அது சட்டரீதியாக ஏட்டளவில் இல்லாததால் சில பல அரசியல் தீர்மானங்களுக்குக்காண்பிக்கத் தேவையான ஒற்றுமை- குடிப்பலம்- சாட்சிப்படுத்தப்படாத ஒன்றாகவே இன்னமும் இருக்கிறது.

> வடக்கு—கிழக்கு பாரம்பரியமாக தமிழ் பேசும் மாகாணங்கள். எனவே தமிழ்மொழி நிலைக்க. தமிழ்மொழியை பேசும் மக்களின் கலாசாரம் நிலைபெற. பிற கலாசாரங்களை உட்புகுத்தி இன அழிப்பு ஏற்படாது தடுக்க. வடக்கும் கிழக்கும் இணைந்தே தீரவேண்டும்.

### எதிர்ப்பும் கண்டனங்களும்

முதல்வர் விக்னேஸ்வரனின் கருத்துக்கு -யாரிடமிருந்து ஆதரவு கிடைக்க வேண்டும் என்று எதிர் பார்க்கப்பட்டதோ -அந்தத் தரப்பிலிருந்து எதிர்ப்புடன் கூடிய சில குரல்கள் வெளிவந்துள்ளன. கிழக்கு முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் இஸட். எம். நதீர், வடக்கு -கிழக்கு மீள்-இணைப்பிற்கு முஸ்லீம் மக்கள் ஆதரவு நல்கவேண்டும். என்றுதான் கருதவில்லை என்றிருக்கிறார். அத்தகைய இணைப்பு பெரியளவு சிறுபான்மையினராக தம்மை மாற்றும் என தெரிவித்திருக்கிறார். தற்போதைய நிலையில் கிழக்கில் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் விகிதாசாரம் கிட்டத்தட்ட சமனான நிலையில் உள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் வடக்கு- கிழக்கு மீளிணைப்பு பற்றிய கூற்றினை வன்மையாகக் கண்டிப்பதாகக் கூறியிருக்கிறது உலமாக்கட்சி. இது தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவர் முபாரக் அப்துல் மஜீட் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், இணைந்த வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களுக்கு நிர்வாக அலகு ஒன்றினை வழங்குவதென்பது மிட்டாய் வழங்கி கண்களை பறிக்கும் முயற்சி என்று ஒப்பிட்டிருக்கிறார்.

### சிறுபான்மை-பெரும்பான்மை

வடக்குடன்-கிழக்கு இணைக்கப்படும்போது காண்பிக்கப்படக்கூடிய தமிழர்களுக்குரிய பெரும்பான்மை, மறுபுறத்தில் முஸ்லிம் மக்களை இரண்டாம் நிலை பெரும்பான்மையினராக மாற்றும் தன்மையையும் கொண்டிருக்கிறது. அது முஸ்லிம்கள் அனுபவிக்கக்கூடிய சில அனுகூலங்களைத் தட்டிப்பறிக்க அல்லது விட்டுக் கொடுக்க வேண்டிய ஏது நிலையைத் தோற்றுவிக்கும். அந்த நிலைக்கு பரிகாரமாக முஸ்லிம்களுக்குத் தனி நிர்வாக அலகு ஒன்றை வழங்குவது தொடர்பில் முன்மொழியப்பட்டிருக்கிறது.

இலங்கையின் பெரும்பாலும் எல்லா மாகாணங்களிலும் முஸ்லிம்கள் வாழ்ந்தாலும் பெரும்பான்மை ஒன்றை காண்பிக்கக்கூடிய சனத்தொகை கிழக்கிலேதான் இருக்கிறது.

பேரம் பேசும் சக்தி என்கிற கௌரவ பதத்தில் அழைக்கப்படும் முஸ்லிம்களின் அரசியல் வகிபாகம், மத்திய அரசில் அமைச்சுப் பதவிகளை வளைத்துப் போடவும் அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தீர்மானங்களை மாற்றிக் கொள்ளவும் இயலுமை அளிக்கிறது. இது கிழக்கின் முஸ்லிம்களுக்கு மாத்திரமின்றி வடக்கில் உள்ள முஸ்லிம் மக்களிடமும் நிரூபணமாகியிருக்கிறது.

இந்த இடத்தில் அரசியல் அபிலாசைகள் சார்ந்து ஒரு தெளிவான வேறுபாடு வடக்கின் பெரும்பான்மையினருக்கும் கிழக்கின் இரண்டாம் தரப்பினருக்கும் இடையில் தென்படவே செய்கிறது. அந்த வேறுபாட்டின் தாக்கம், அறியப்பட்டிருக்கிறது, உணரப்பட்டிருக்கிறது. எனினும் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்தகைய ஆவணப்படுத்தல் தேவை, ஒரு கருத்துக்கணிப்பிற்கோ வாக்குப்பதிவிற்கோ வழியை தோற்றுவிக்கும்.

ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது. கறிக்குரிய சுரைக்காய் அசல் ஆகவும் இருந்து அது ஏட்டிலும் இருக்க வேண்டிய தேவ்வ இங்கே எழுந்திருக்கிறது. அதற்கு முதலில் நிஜத்தில் சுரைக்காய் இருப்பதை உறுதி செய்ய் வேண்டும்.

# வடமாகாண சபையை மேம்படுத்த விரும்புகிறேன்

## வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் கூரே

வடக்கு ஆளுநர் மாளிகையில் உள்ள தனது சிறிய அலுவலக அறையில் உதயன் பத்திரிகைக்கு அவர் செவ்வியளித்தார் ஆளுநர் றெஜினோல்ட் கூரே. "நான் ஜனாதிபதியின் பிரதிநிதி. எல்லா விடயங்களும் அரசமைப் பின்படி நடக்கின்றனவா? என்பதை கண்காணித்துக் கொள்வது எனது பணி" என்றார் அவர். நிதானமான ஆங்கிலத்தில் அவர் வழங்கிய இந்தச் செவ்வியில் வடக்கு மாகாண நில வரம் உள்ளிட்ட அரசியல் நிலைமைகள் குறித்த பல்வேறு விடயங்கள் பற்றியும் பேசினார். அவருடனான சந்திப்பிலிருந்து ஒரு பகுதி சென்றவாரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதன் நிறைவு இங்கே தரப்படுகின்றது.

"சரி, நாங்கள் 13ஆவது திருத்தத்துக்கே திரும்பி வரலாம். இலங்கையில் தமிழர்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது என்பதை கொழும்பு அரசுகள் ஏற்றுக்கொண்டதன் அறிகுறிதான் 13ஆவது திருத்தம் என்று சொன்னீர்கள். ஆனால் அந்தத் திருத்தம்கூட முழுமையாக நிறைவேற்றப்படவில்லையே...?"

*"முழுமையாக இல்லைத்தான். ஆனால் அந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டுவிட்டது."*

"13ஆவது திருத்தச் சட்டம் உறுதிப்படுத்தும் பொலிஸ், காணி அதிகாரங்களைக்கூட வழங்கவில்லை. அவற்றை வழங்குவதில் - பொலிஸ் அதிகாரத்தை விடுங்கள் - காணி அதிகாரத்தையாவது வழங்குவதில் என்ன பிரச்சினை இருக்கிறது. அந்த அதிகாரத்தையாவது கொடுத்திருக்கலாம் அல்லவா? அப்படி நடந்திருந்தால் குறைந்தபட்ச நம்பிக்கையையாவது கட்டியெழுப்பியிருக்க முடியும்."

*"மகாவலி நதி நீர்ப் பிரச்சினை இதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளமுடியும். அந்த நதி நாட்டின் மத்திய பகுதியில் உள்ள மலைகளில் ஆரம்பிக்கிறது. பல மாகாணங்களுக்கு ஊடாகப் பயணிக்கின்றது. அது ஓடும் பகுதிகளில் கரையோரமாக உள்ள காணிகள் அந்தந்த மாகாணங்களுக்கு உரியவை. ஒருவேளை இதில் ஒரு மாகாணம் தனது நிலம் தனக்குரிய அதிகாரம் என்று கூறிக்கொண்டு அடுத்த மாகாணத்திற்கு நிதி நீரை விடமாட்டேன் என்று பிரச்சினைப்படுத்தினால் என்ன செய்வது? எனவே இதுபோன்ற அதிகாரங்களைப் பங்கிடும்போது நாம் மிக அவதானமாக விடயங்களைக் கையாள வேண்டும். இது போன்ற பிரச்சினைகளை இந்தியாவில் கூடப் பார்க்கிறோம்.*

*நதி எல்லா மாகாணங்களுக்கும் உரியது. ஆனால், காணி அதிகாரங்களை முழுமையாக மாகாணங்களுக்கு வழங்கி தண்ணீர்ப் பங்கீட்டில் பிரச்சினைகள் ஏற்பட்டால் எங்களால் அங்கிருந்து தண்ணீரைக்கூட எடுக்க முடியாமல் போய்விடும். எனவே இவை தொடர்பில் கவனமாகத்தான் பிரச்சினைகளைக் கையாளவேண்டும். இரணைமடுவைப் பாருங்கள். அங்கே எதிர்ப்புக் குரல்கள் எழுகின்றன. உலக வங்கி பில்லியன் கணக்கில் நிதி உதவியை வழங்கத் தயாராக இருந்தாலும் யாழ்ப்பாணத்திற்கு அங்கிருந்து தண்ணீரைப் பெற முடியவில்லை. அங்குள்ள விவசாயிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். மேலதிகத் தண்ணீரோ வீணே கடலில் சென்று விழுகிறது. இப்படி அக்கறைப்படவேண்டிய பல விடயங்கள் காணி விவகாரத்தில் இருக்கின்றன. அவற்றைப் புறந்தள்ளிவிடமுடியாது.*

"ஆனால், இதுபோன்ற பிரச்சினைகளை எல்லாம் தீர்த்திருக்கமுடியும்."

*"தீர்த்திருக்கலாம்தான். ஆனால் அதற்குக் கொஞ்சம் கால அவகாசம் வேண்டும். ஏனெனில் இது சிக்கலான விவகாரம்."*

"30 வருட காலம் இருந்ததே!"

*"30 வருட காலம் போர்தான் நடந்தது."*

"வடக்கு-கிழக்கு வெளியே உள்ள மாகாணங்களில் அந்தப் பிரச்சினை இருக்கவில்லை..."

*"இல்லை அங்கும்தான் இருந்தது"*

"வடக்கு கிழக்கு வெளியே வைத்தே இதுபோன்ற பிரச்சினைகளுக்கு நீங்கள் தீர்வு கண்டிருக்க முடியும்"

*"இந்தப் பிரச்சினையை நாங்கள் அர்ப்பணிப்போடு, பொறுமையோடு, தொடர்ச்சியோடுதான் நாம் தீர்க்க வேண்டும். உங்களுக்குத் தெரியும், மக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிடுவது நிமிடங்களில் நிகழ்ந்துவிடும். ஆனால், நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள் அப்படியல்ல. அதற்கு நீண்ட காலம் தேவைப்படும். உதாரணத்திற்குப் பாருங்கள், பொருளாதார வலயங்களை தெற்கில் அமைத்தபோது என்ன பிரச்சினைகள் எழுந்தன? ஒன்றுமில்லை. ஆனால், வவுனியாவில் நிலமை அப்படியா இருக்கிறது? அப்படியிருக்கையில் நீங்கள் என்னிடம் கேள்வி கேட்கிறீர்கள். எனவே பல விடயங்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. பாருங்கள், திக்கம் வடிசாராய சாலை, ஆனையிறவு உப்பளம், 3 பால் உற்பத்தித் தொழில் சாலைகள் - பெரியமடு மற்றும் வேறு இடங்களில் இருந்தனவை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்பன மூடப்பட்டுவிட்டன. ஏன் அவை திறக்கப்படவில்லை. தற்போது மாகாண சபை இங்கு இருக்கிறதுதானே! ஏன் அவர்களால் இவற்றை மீளத் தொடங்க முடியவில்லை?"*

"அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

*"நான் எந்தக் கருத்தையும் சொல்ல விரும்பவில்லை. பிறகு, எனக்கும் மாகாண சபைக்கும் இடையில் பிளவை ஏற்படுத்துவதற்கான ஆயுதமாக நீங்கள் அதையே பயன்படுத்திக்கொள்வீர்கள். ஆனால், நாங்கள் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் புரிந்து கொள்ள வேண்டும்."*

"என்னுடைய அடுத்த கேள்வியே அதுதான். உங்களுக்கும் முதலமைச்சர் மற்றும் மாகாண சபையினருக்கும் இடையிலான உறவு நிலை எப்படியிருக்கிறது? நீங்களும் முதலமைச்சரும் குடும்ப நண்பர்கள் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும், ஓர் ஆளுநராகவும் முதலமைச்சராகவும் உங்களுக்கு இடையிலான உறவுகள் எப்படியிருக்கின்றன?"

*"எந்தப் பிரச்சினையும் இல்லை இந்த நிமிடம் வரைக்கும். எல்லாமும் நல்லபடியாவே சென்றுகொண்டிருக்கின்றன. அவர்களுடைய பணி குறித்து நான் என்ன மறுப்பு அல்லது ஆட்சேபனை இதுவரையில் தெரிவித்திருக்கிறேன் சொல்லுங்கள்! எதுவும் இல்லை. எதுவுமேயில்லை. நான் ஜனாதிபதியின் பிரதிநிதி. எல்லா விடயங்களும் அரசமைப்பின்படி நடக்கின்றனவா என்பதைக் கண்காணித்துக்கொள்வதே என்னுடைய பணி. அதற்கும் மேலாக, அவர்களுக்கு உதவுவதற்கு என்னை அர்ப்பணித்திருக்கிறேன். பெயரளவிலான ஒரு தலைவராக - விழாக்களில் மட்டும் தலைகாட்டுப்வனாக - நான் இருந்தால் போதும் என்று சிலர் நினைக்கிறார்கள். என்னால் அது முடியும். இந்த வசதிகளை எல்லாம் அனுபவித்துவிட்டு வீட்டுக்குச் சென்றுவிடலாம். பதிலாக நான் மக்களுடன் பேசுகிறேன். அவர்களுடன் பழகுகின்றேன். மற்றைய ஆளுநர்கள் என்னைப்போல இப்படி மக்களுடன் பேசுவதில்லை. தமிழிலும் சரி ஆங்கிலத்திலும் சரி நான் அவர்களுடன் உரையாடுகின்றேன். அதெல்லாம் அவர்களுக்கு உதவுவதற்காகத்தான். இன்றுகூட (செவ்வி எடுக்கப்பட்ட அன்று) முதலமைச்சருடன் நான் நீண் நேரம் பேசினேன். ஆனால், சிலர் அதை வைத்தே எங்களுக்கிடையில் பிரச்சினைகளை உருவாக்கப் பார்க்கிறார்கள் (சிரிக்கிறார்).*

*கடந்த 40 வருடங்களாக நான் அரசியலில் இருக்கிறேன். 10 தேர்தல்களில் தொடர்ச்சியாக வென்றவன். தோற்கடிக்கப்படாதவன். பல அமைச்சுப் பதவிகளை வகித்தவன். முதலமைச்சர் பதவி உள்ளிட்ட பலவற்றை யும் வகித்தவன். என்னுடைய அனுபவத்தை இந்த மாகாணம் நன்கு பயன்படுத்திக்கொள்ள முடியும்; அவர்கள் விருப்பப்பட்டால். நான் எப்போதுமே அதற்குத் தயார்.*

"அப்படியானால் வருங்காலத்தில் மேலும் செயல் திறனுடனான பணிகளை மாகாண சபையிடம் இருந்து எதிர்பார்கலாமா?"

*"கடந்த 40 வருடங்களாக நான் அரசியலில் இருக்கிறேன். 10 தேர்தல்களில் தொடர்ச்சியாக வென்றவன். தோற்கடிக்கப்படாதவன். பல அமைச்சுப் பதவிகளை வகித்தவன். முதலமைச்சர் பதவி உள்ளிட்ட பலவற்றையும் வகித்தவன். என்னுடைய அனுபவத்தை இந்த மாகாணம் நன்கு பயன்படுத்திக்கொள்ள முடியும்; அவர்கள் விருப்பப்பட்டால். நான் எப்போதுமே அதற்குத் தயார்."*

"இப்படி, என்னுடைய அனுபவத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அதற்கு நான் தயார் என்றும் நீங்கள் சொல்கிறீர்கள் என்றால், இது வரைக்கும் அவர்கள் உங்களைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்றுதனே பொருள்?"

*"இல்லை. நான் அப்படிச் சொல்லத் தயாரில்லை. நான் சொல்வதெல்லாம் நான் தயாராக இருக்கின்றேன் என்பதுதான். என்னுடைய விருப்பத்தையும் தயார் நிலையையும்தான் சொல்கிறேன். அதை நீங்கள் தவறாக அர்த்தப்படுத்த முயற்சிக்காதீர்கள்.*

*நியதிச் சட்டங்களை உருவாக்குவதற்கு உதவுவதன் ஊடாக வடக்கு மாகாண சபையை மேம்படுத்துவதற்கே இந்தத் தருணத்தில் நான் விரும்புகிறேன். பேசிக்கொண்டே இருப்பது மட்டும் போதாது. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படாமல் அதைப் பற்றி நீங்கள் பேசிக்கொண்டே இருப்பது வீண். உதாரணத்திற்கு மிக அண்மையில் வடக்கு மாகாண சபை போக்குவரத்து நியதிச் சட்டத்தை நிறைவேற்றியது. மிகப் பெரியளவிலான வருமானத்தை அதற்கூடாப் பெற்றுக்கொள்ள முடியும்."*

"நல்லது! என்னுடைய அடுத்த கேள்வியும் மாகாண சபையைப் பற்றியதுதான். முதலமைச்சர் நிதியம் பற்றிய தீர்மானம் ஒன்றை அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள்?"

*"இதுவரையில் அது எனக்கு அனுப்பப்படவில்லை. அதை நான் பார்வையிடவேண்டும்."*

"அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

*"அரசமைப்பின்படியேதான் நான் எல்லாவற்றையும் அணுக முடியும்."*

"ஆனால், வேறு மாகாணங்களில் இத்தகைய முதலமைச்சர் நிதியம் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே! அப்படி இருக்கிறதா?"

*நான் தேடிப் பார்க்வேண்டும்! நான் முதலமைச்சராக இருந்தபோது அப்படிப்பட்ட நிதியங்கள் எதுவும் இருக்கவில்லை. எனவே நான் அதனை ஆராய்ந்துபார்க்க வேண்டும். அது சாத்தியமானதுதான் என்றால், பார்க்கலாம்!"*





"ஆளுநர் நிதியம் இருக்கலாம் என்றால் ஏன் முதலமைச்சர் நிதியம் இருக்கக்கூடாது?"
"இல்லை. அப்படி எந்த ஆளுநர் நிதியம் எம்மிடம் கிடையாது."

"முன்னர் இருந்ததே!"
"ஆளுநராக மேஜர் ஜெனரல் சந்திரசிறி இருந்த காலத்தில் நடந்ததையா சொல்கிறீர்கள். அது இப்போது இல்லை."

"வடக்கில் முதலீடு தொடர்பான மாநாடு ஒன்றை நடத்தத் நீங்கள் திட்டமிட்டுள்ளீர்கள் இல்லையா?"
"நீங்கள் பாருங்கள்; அதிகமான வெப்பம் மற்றும் மோசமான வாழ்வாதார நிலைகளால் யாழ்ப்பாணத்தில் வாழ்வது மிகவும் கடினமானது என்று பலரும் எண்ணுகிறார்கள். இது தொடர்பாக எல்லோரும் முறையிடுகிறார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தினதும் வடக்கினதும் சாதகமான விடயங்களை யாரும் பார்ப்பதில்லை. அதில் ஒன்று சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கப்படும் மின்சாரம். வருடத்தில் 9 மாதங்களுக்கு முழுமையான சூரிய ஒளி கிடைக்கும். அதனை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். இலங்கை முழுவதும் 109 களப்பு ஏரிகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை வடக்கிலேயே உள்ளன. களப்பு ஏரிகள் மீன்களின் பெருக்கத்துக்கு மிகவும் வாய்ப்பானவை. அவை சுற்றுலாத்துறையை வளர்க்கவும் பெரிதும் உதவும். இப்படிப் பல வாய்ப்புகள் உள்ளன.
இங்குள்ள மக்கள் கடுமையான உழைப்பாளிகள். இங்குள்ள விவசாயிகள் கடுமையான உழைப்புக்காக பாடுபடுகிறார்கள். எனவே அவர்களுக்கெல்லாம் நாம் உதவவேண்டும். ஆனால், நடப்பதோ வேறு. அவர்கள் நல்ல விளைச்சலைப் பெறும்போதுதான் அழிவைச் சந்திக் கிறார்கள். ஏன்? அப்போதுதான் இறக்குமதியாகிய பொருள்களும் வந்து சேர்கின்றன. அதனால் விலை வீழ்கின்றன. அதனால் விவசாயிகள் நட்டமடைகிறார்கள். அதற்குத் தீர்வு என்ன? குளிர் களஞ்சியங்களில் அவற்றைப் பதப்படுத்தி சில காலம் வைத்து விலை உயரும்போது விற்பது. இப்படிப் பல விடயங்கள் இருக்கின்றன.
மறுபுறத்தில், முதலீட்டாளர்கள் வந்து எனக்குக் கரைச்சல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் முதலிடத் தயாராக இருக்கிறோம், எங்களுக்கு வாய்ப்புத் தாருங்கள். உதவி செய்யுங்கள். எப்படிப்பட்ட முதலீடுகளை நாங்கள் செய்ய வேண்டும் என்று யோசனை செய்யுங்கள் என்று கேட்கிறார்கள். இதற்கு நான் என்ன செய்ய முடியும்?
சாத்தியக்கூற்று அறிக்கைகள் இல்லாமல் எப்படித் தொழிற்சாலைகளைத் தொடங்க முடியும்? எனவேதான் சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தயாரிக்கும்படி நான் சொன்னேன். தரவுகள், விவரங்கள். ஆவணங்கள் எல்லாமும் முதலீட்டாளர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். எனவே நாம் நல்லூர்த் திருவிழாக் காலத்தில் நடத்த இருக்கும் மாநாட்டின் ஊடாக முதலீட்டாளர்களை வரவேற்க முயல்கிறோம். புலம்பெயர் தமிழர்கள் பலரும் வருவார்கள். கல்வி அறிவும், பண வசதியும் கொண்டவர்கள் வருவார்கள். எனவே அந்த நேரத்தில் நாங்கள் இந்த மாநாட்டை நடத்துகின்றோம். அதற் கூடாக நாம் வடக்கில் தொழிற்துறைச் சாத்தியப்பாடுகளை அவர் களுக்கு வழங்குவோம்.
இதற்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலும் ஒரு தனி அலுவலகம் ஆரம்பிக்கப்படும். முதலீட்டாளர்கள் அங்கு வந்து தமக்குத் தேவையான எல்லா விவரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். மக்கள் தொகை, புவியியல் நிலை, மண்ணின் தன்மை, கால நிலை போன்ற விவரங்கள் எல்லாவற்றையும் அவர்கள் அந்த அலுவலகத்தில் இருந்தே பெற்றுக் கொள்ளலாம்.
நாம் முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால், அவர்களை வரவேற்க வேண்டும், ஊக்கப்படுத்த வேண்டும். "வாருங்கள்" என்று அழைக்கவேண்டும். முதலீட்டாளர்களுக்கு முதலிடுவதற்கு உலகில் இலங்கை மட்டும் இல்லையே! வேறு பல இடங்களும் இருக்கின்றன. எனவே நாம் முதலீட்டாளர்களைக் கவர வேண்டும். அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்."

"எந்தத் தினங்களில் இந்த மாநாட்டை நடத்தப் போகிறீர்கள்?"
"ஓகஸ்ட் 22ஆம் திகதி."

"இது ஆளுநர் அலுவலகத்தால்தான் ஏற்பாடு செய்யப்படுகிறது இல்லையா?"
"ஆம். இது பற்றி நான் முதலமைச்சருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறேன். அவரும்கூட அந்த மாநாட்டுக்கு வரவேற்கப்படுவார். இது ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிதான். யார் முதலிட்டார்கள், எங்கு முதலிடுவது போன்ற விடயங்களை இந்த மாநாடு தீர்மானிக்காது. நாம் தரவுகள் விவரங்களை மட்டுமே வழங்கி முதலீட்டாளர்களை முதலிடுவதற்கு ஊக்குவிப்போம்."

> நான் அந்தப் புத்தர் சிலையுடன் எந்தவகையிலும் தொடர்புபடவில்லை. ஆனால், தெற்கில் ஒரு பத்திரிகை புத்தர் சிலை வைப்பது தடைசெய்யப்பட்டது என்று செய்தி வெளியிட்டது. இங்குள்ள ஒரு பத்திரிகை அந்தச் சிலை கோவில் கோபுரத்தை மறைக்கப் போகிறது என்று எழுதியது.

"இந்த மாநாடு நடத்தப்படுவதை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டாரா?"
"ஆம்!"

"இதுபோன்று யாழ்ப்பாண அபிவிருத்தி தொடர்பாக நீங்கள் கூட்டிய கூட்டம் ஒன்று சர்ச்சையாக முடிந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தனவே!"
"பாருங்கள்! அவை ஊடகங்களின் தேவையற்ற செயற்பாடு."

"அப்படியான பிரச்சினை ஏதும் இல்லையா?"
"இல்லை. அப்படியெதுவும் இல்லை."

"ஆனால், அந்தக் கூட்டத்தில் முதலமைச்சர் பங்கேற்கவில்லையே?"
"அதற்கான காரணம் எனக்குத் தெரியாது. ஆனால், நான் அவரை அழைத்தேன்."

"உங்கள் ஓகஸ்ட் மாநாட்டில் யார் தலைமை அதிதியாக இருக்கப் போகிறார்கள்.
"மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி வருகிறார். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரையும் அழைக்க இருக்கிறேன். சந்திரிகா குமாரணதுங்கவையும் அழைக்க இருக்கிறேன்.


"நயினா தீவில் புத்தர் சிலை ஒன்றை உருவாக்குவதற்கு நீங்கள் முயற்சிக்கிறீர்கள்; அல்லது அதற்கு உதவுகிறீர்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"
"இது பத்திரிகைகளாலும் தொலைக்காட்சிகளாலும் உருவாக்கப்படும் ஒருவித குழப்பம். வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்டது. முழுப் பொய். நான் அந்தப் புத்தர் சிலையுடன் எந்தவகையிலும் தொடர்புபடவில்லை. ஆனால், தெற்கில் ஒரு பத்திரிகை புத்தர் சிலை வைப்பது தடைசெய்யப்பட்டது என்று செய்தி வெளியிட்டது. இங்குள்ள ஒரு பத்திரிகை அந்தச் சிலை கோவில் கோபுரத்தை மறைக்கப் போகிறது என்று எழுதியது. நான் நேரில் அங்கு சென்று பார்த்தேன். இரண்டுமே பொய். முழுப் பொய். உண்மை என்னவென்றால், அந்தப் புத்தர் சிலையை அமைப்பதற்கு முன்பதாகச் சுற்றுச் சூழல் திணைக்களத்திடம் இருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளும்படி தெரிவித்து மாவட்டச் செயலர் கடிதம் ஒன்றை விகாரைக்கு அனுப்பி இருந்தார். அவ்வளவுதான்.
நான் நேரில் போய்ப் பார்த்தபோது, புத்தர் சிலையை அவர்கள் கடலுக்குள் நிறுவவே முயற்சிக்கிறார்கள் என்று தெரிந்தது. அது எப்படி கோபுரத்தை மறைக்கும்? நான் 10 வருடங்களுக்கு முன்னர் நயினாதீவு இந்து ஆலயத்திற்குச் சென்றிருக்கிறேன். இன்று ஆலயம் பல மடங்கு அபிவிருத்தி அடைந்துள்ளது. கரைக்கு நெருக்கமாகப் பெரிய கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது. இப்போது, சிலர் சொல்கிறார்கள் சிலை கோபுரத்தை மறைக்கப்போகிறது என்று. அதேபோல நாளை சிலர் சொல்லக்கூடும்.

(40 ஆம் பக்கம் பார்க்க)

# செஞ்சோலைக்கு...

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"யாழ்ப்பாணத்தில யாரைத் தெரியும் ? பஸ்ஸில போய் வாறது எண்டா காசு வேணும். இரவு எங்க தங்கிறது. பிள்ளையைப் பறிகொடுத்த நாங்கள் இங்கதான் இருக்கிறம். இஞ்ச செய்திருந்தால் நல்லாயிருந்திருக்கும். செய்யிறதை பிழை சொல்லேலை" என்றார் முருகையா. "நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றீர்களா" என்ற கேள்விக்கு, சட்டென்று "நீதி கிடைக்கும். எனக்கு அந்த நம்பிக்கை முழுசா இருக்கு" என்றார் முருகையா. பதில் சொல்லும் போது அவரது முகம் பிரகாசமாகவே இருந்தது. ஆனால் அடுத்து அவர் ஒரு விடயத்தைச் சொல்லும் போது பிரகாசமான முகம் சுருங்கிப் போய் விட்டது. "செஞ்சோலைப் படுகொலையை ஒருத்தரும் முக்கியத்துவப்படுத்தேல்ல" என்றார்.
பிள்ளையின் படத்தைப் பார்க்கக் கேட்க வீட்டுக்குள் இருக்கு என்று சொன்னார். வீடு என்று பெயரளவில் கொட்டில்தான் இருக்கின்றது. அதுதான் அரசால் வழங்கப்பட்ட தற்காலிக வீடு. இருவர் கால் நீட்டி முழுதாகப் படுக்க முடியுமோ தெரியவில்லை. அதற்குள் ஒரு மேசையில் படம் இருக்கின்றது. அதில் இருவர் படங்கள் ஒன்றாகப் 'பிரேம்' செய்யப்பட்டிருக்கின்றன. மற்றையது யார் என்று கேட்க, "என்ர தங்கச்சியின்ர மகள். அவவும் செஞ்சோலையில செத்தவ. இரண்டு பேரும் எப்பவும் ஒன்றாய்த்தான் திரியிறவை. ஒன்றாய்த்தான் இருக்கிறவை" என்றார் முருகையா. இதனால்தான் என்னவோ காலன் இருவரையும் ஒரேயடியாக அழைத்து விட்டானோ என்று எண்ணிக் கொண்டு அங்கிருந்து விடைபெற்றோம்.
செங்சோலைத் தாக்குதலில் 16 – 17 வயதாக இருக்கும் போது காயப்பட்ட பலர் இப்போது பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு முடித்து வெளியேறியவர்களாக உள்ளனர். இவர்களையும் தேடிச் சென்று சந்தித்தோம். அவர்கள் தங்களை வெளிக்காட்ட மறுத்து விட்டனர்.
'இதை இப்ப சொல்லுறதால என்ன கிடைக்கப் போகிறது" என்பதே அவர்களின் கேள்வியாக இருக்கின்றது. நீதி கிடைக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பவில்லையா என்று மீள் எழுப்பிய கேள்விக்கு, "போனது போனதுதான். என்னுடைய காயம் குணமாகி நான் பிறக்கும்போது இருந்ததைப் போன்று திரும்பி வருவேனா ?" என்ற கேள்வியைத் தூக்கிப் போட்டார் ஒருவர். பதில் எங்களிடம் இல்லை. அவரது ஆதங்கம் – கோபம், தன்னால் பழைய நிலைக்கு மீள முடியாது என்ற ஏக்கம் எல்லாம் ஒருங்கே சேர்ந்து கொந்தளித்தது.
"தம்பி அந்தச் சம்பவத்தை இப்ப நினைச்சாலும் தலையிடிக்கும்" என்று அந்தப் பெண்ணின் தயார் எங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவர் கண்களிலிருந்து கண்ணீர் வரத் தொடங்கியது. அவர் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல்,"இதை நீங்கள் பேட்டி எடுத்துப் போட்டு என்ன நடக்கப் போகுது?" என்று அவரும் கேள்வியைத் தொடுத்தார். விடயங்களைச் சொல்லத் தயாரில்லாத போதும் எங்கள் கேள்விகளுக்குப் பதில் தந்தார்;.
"300 பேர் வரையில செஞ்சோலையில இருந்தனாங்கள். எல்லாம் பொம்பிளைப் பிள்ளைகள்தான். பள்ளிக்கூடத்தில தருற மாதிரி ஓடுறது போல கொஞ்சப் பயிற்சி முதல் இரண் டும் நாளும் தந்தவை. ஞாயிற்றுக் கிழமை வீட்டுக்காரரை பார்க்க விட்டவை. திங்கட் கிழமை காலை எல்லாரும் பயிற்சிக்கு தயாராகிக் கொண்டிருந் தவை. அந்த நேரம் திடீரென வந்து குண்டு போட்டவங்கள். நாலு கிபிர் வந்தது. 12 குண்டு போட்டது என்று சொன்னவை. அதில இரண்டு வெடிக்கேலையாம்" என்றார்.
புகைக் குண்டு முதல்ல போட்டதாகச் சொன்னார்கள் என்று கேட்டதற்கு, "எனக்கு என்ன குண்டு என்று தெரியேல்ல. குண்டு விழுந்த சத்தம் கேட்டதும் எல்லோரும் ஓடத் தொடங்கிட்டம். ஆனா ஒரே புகையாத்தான் இருந்தது. நான் ஓடேக்க எனக்கும் குண்டு சிதறல் பட்டது. குண்டு ஒரு பக்கத்தால போய் மற்றப் பக்கத்தால வந்தது. காயமடைஞ்சு விழுந் துட்டன். புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் பேந்து, பொன்னம்பலம் வைத்தியசாலைக்கு கொண்டு வந்து, கடைசியாய் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில வைச்சி ருந்தது" என்றார்.
குண்டுத் தாக்குதல் அவரது உடலில் ஏற்பட்ட காயம் மாறாத நிரந்த வடுவாகி விட்டது. தாக்குதலுக்கு முன்னர் இருந்த நிலைக்கு அவரால் மீளவும் திரும்ப முடியாத நிலையை நிரந்தரமாக ஏற்படுத்தி விட்டது.
பலர் இன்னமும் காயங்களுடன்தான் தங்கள் எஞ்சிய காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள். விசாரணை நடந்து, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதைப் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம். அதுவும் இன்னமும் நடக்கவில்லை. மறுபக்கம் "பிறக்கேக்க இருந்த மாதிரி திரும்பி வருவமா" என்ற அவரது, அவரைப் போன்றவர்களினதும் கேள்விக்கு இன்னமும்தான் பதில் தெரியவில்லை.



விகாரையை மறைக்கிறது கோபுரம் என்று. இவை எல்லாம் என்ன? எல்லாமே அடிப்படை யற்ற வாதங்கள். இவற்றைமுன்வைப்பவர்கள் குழப்பத்தை ஏற்படுத்தவே முயல்கின்றனர். நான் யாரையும் எந்தப் பக்கத்தையும் ஆதரிக்கவில்லை. நடுவில் இருக்கிறேன். இதனைச் சொல்பவர்கள் மக் களின் மனங்களைத் திரிக்க முயல்கிறார்கள். இங்கு ஒரு பத்திரிகை இது தொடர்பில் பல ஆக்கங்களை எழுதி யது. நான் எல்லாவற்றையும் கோவைப்படுத்தி வைத்துள்ளேன். அவர்கள் வேண்டுமென்றே செய்கிறார்கள். இது மோசமான ஒரு செயல்."

"ஆனால், நீங்கள் கொக்கிளாய் விகாரை விடயத்தி லும்கூட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையே! தனியார் காணியில் அந்த விகாரை அமைக்கப்பட்டு வரும் நிலையில், அதை நீங்கள் நேரில் சென்று பார்ப்பதாகக் கூறியும். அதைச் செய்யவில்லையே!"

"அதுவும் ஒரு மிகச் சிக்கலான விடயம். ஆரம்பத்தில் அந்த விகாரையை அமைப்பதற்கான அனு மதியைப் பிரதேச செயலர் வழங்கியிருக்கிறார். அத னால்தான் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த விகாரையின் முழு விவரங்களையும் நான் பார்வையிட்டபோது இதனைக் கண்டறிந்தேன். அப்படி யிருக்கும்போது அந்த விடயத்தில் நான் எப்படி ஒரு முடிவெடுக்க முடியும்? அந்த விகாரையின் அருகில் சுமார் 200 குடும்பங்கள் வாழ்கின்றன. அவை கிறிஸ் தவக் குடும்பங்கள் என்று சொல் லப்படுகின்றது. உங்களுக்கே தெரியும், இந்த நாட்டில் அதிகமானோர் கிருஷ்ணனையும் கணபதியையும் வணங்கு கிறார்கள். அவர்கள் எல்லோருமே இந்துக் களா? பௌத்தர்களும் கூட வணங்குகிறார்கள். அதேபோன்று அவர்கள் புத்தரை வணங்க விரும்பினால் அது ஒரு பிரச்சினையே இல்லை."

"வேறு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?"

"எனக்கு இப்போது 69 வயது. என்னுடைய இறுதிக் காலம் எனக்குத் தெரிகிறது. என்னுடைய வாழ்க் கையை நான் ஒன்றிணைந்த இலங்கைக்கு அர்ப்பணித் துள்ளேன். தமிழர்கள் என்னுடைய சகோதரர்கள்சகோதரிகள் என்றே நான் நினைக்கிறேன். அதனால்தான் நான் இங்கு வந்தேன். என்னை இங்கு போகவேண்டாம் என்று என் மனைவி தடுத்தார். அவர் பயந்தார். இங்குள்ள தண்ணீரால் என்னுடைய சிறுநீரகம் பாதிக்கப் படும் என்று அவர் கூறினார். அது ஒரு பிரச்சினையே இல்லை என்று கூறிவிட்டுத்தான் வந்தேன். என்னுடைய நோக்கம் இந்த நாட்டுக்கு மிகப் பிரகாசமான எதிர்காலம் ஒன்றை ஏற்படுத்துவதுதான். இந்த இரு இனங்களும் மீண்டும் இணைந்தால், இந்த நாடு மீண்டும் ஒரு சொர்க்கமாக மாறும். இதுபோன்றதொரு அழகான நாட்டை நான் எப்போதும் பார்த்ததில்லை."

"அப்படியொரு நிலமை ஏற்படவேண்டுமாக இருந் தால், அதற்கு மிகப் பொருத்தமான தீர்வு என்று எதைக் கருதுகிறீர்கள்?'

''உங்களுக்குத் தெரியுமா! ரொனி டிமெல் பொருளாதார அமைச்சராக இருந்தபோது ஒரு நபர் அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். ''கற்றுக் கொள்வதற்கு மிகக் கடினமான பாடம் எது" என்று ''கணிதம், பௌதீகவியல் மற்றும் விஞ்ஞான பாடங்கள் படிப்பதற்குக் கடினமானவை என்று அவர் பதிலளித்தார். சமூகவியல், வரலாறு, மொழி, சமயம் போன்றவை படிப்பதற்கு மிக இலகுவானவை என்றும் அவர் தெரிவித்தார். ஆனால், நடைமுறையில் கணிதம், பௌதீக வியல், விஞ்ஞான பாடங்கள் மிக இலகுவானவை. ஏனென்றால் ஐதரசனையும் ஒட்சிசனையும் இணைத்தால் முடிவு? உலகம் முழுவதும் முடிவு ஒரே மாதிரியானதுதான். ஆனால் சமூக விஞ்ஞானம் என்பது அப்படிப்பட்டதல்ல.

> இரு இனங்களுக்கும் இடையே உள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதுதான் நாம் செய்ய வேண்டிய முதல் பணி. மற்றைய விடயங்கள் எல்லாம் சரியாகும்போது இந்தச் சந்தேகமும் தீர்ந்துவிடும். நட்புரிமை, நம்பிக்கை, இணக்கப்பாடு என்பவற்றை வளர்த்தெடுத்தால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். அது இல்லாமல் நீங்கள் எதை அடைய முயற்சித்தாலும் அங்கே கேள்விகள் இருக்கத்தான் செய்யும்.

அதனால் ஒரு மிகப் பொருத்தமான தீர்வு என்பதைச் சொல்ல முடியாது. நாம் கச்சிதமாக இருக்க முயல லாம். அதற்கு உண்மையிலேயே முயற்சிக்கலாம். அதுதான் எமது நோக்கம்."

"சரி! பொருத்தமானது என்பதை விடுங்கள், என்ன தான் தீர்வு இந்தப் பிரச்சினைக்கு?"

"இரு இனங்களுக்கும் இடையே உள்ள சந்தேகங் களைத் தீர்ப்பதுதான் நாம் செய்ய வேண்டிய முதல் பணி. மற்றைய விடயங்கள் எல்லாம் சரியாகும்போது இந்தச் சந்தேகமும் தீர்ந்துவிடும். நட்புரிமை, நம்பிக்கை, இணக்கப்பாடு என்பவற்றை வளர்த்தெடுத் தால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். அது இல்லாமல் நீங்கள் எதை அடைய முயற்சித்தாலும் அங்கே கேள்விகள் இருக்கத்தான் செய்யும். எனவே அதுதான் மிக முக்கியமானது. பாருங்கள், நீங்கள் இங்கே சாதிப் பிரச்சினையை வைத்திருக்கிறீர்கள். ஆனால் அது பற்றி நீங்கள் பேசுவதில்லை. இந்தக் குறுகிய காலத்தில் நான் அதை அறிந்துகொண்டி ருக்கிறேன். ஒரு பகுதி மக்கள் கோவில்களுக்குள் அனுமதிக்கப்படவில்லை, சில குடிதண்ணீர் கிணறு களில் இருந்து தண்ணீர் அள்ள அனுமதிக்கப்பட வில்லை இவையெல்லாம் பிரச்சினைகள் இல் லையா? இவற்றுக்கும்தான் நாங்கள் விடைகள் தேடவேண்டும். எனவே நாங்கள் மனிதர்களை நேசிக்கவேண்டும். சமய, மொழி, கலாசார பிளவுகளைவிட்டு எல்லோரும் சமம் என்ற நிலை வரவேண்டும்."

"இவையெல்லாவற்றுக்கும் நல்ல அரசமைப்பு மூலம் தீர்வு வழங்க முடியும். அதைச் செய்ய மாறி மாறி வரும் அரசுகள் ஏன் மறுக்கின்றன?"

"இந்து மதம் மற்றும் பௌத்தம் ஆகியன அரசிய லுக்கு மேலானவை. நீங்கள் ஏற்றுக்கொள் கிறீர்களா? கடவுள் அரசியலுக்கும் மேலானவர் இல்லையா? கடவுள் எல்லோருக்கும் மேலானவர்."

"அப்படி ஒரு கடவுள் இருந்தால்"

"ஆம்! அப்படிப்பட்ட மதம் எல்லா எல்லா நல்ல வழி களையும் கூறினாலும் மக்கள் அதன்படி நடப்பதில் லைத்தானே! பௌத்தத்தை எடுத்துக்கொள்ளுங் கள், மனிதர்களை மட்டுமல்ல மிருகங்களையும் கொல்லக்கூடாது என்று சொல்கிறது அது. ஆனால், அதைப் பின்பற்றுபவர்கள் அப்படியா நடக்கிறார்கள்? எனவே, -சிறந்தது என்பதைத் அடைவதற்கான போராட்டம் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்"

(முற்றும்)

## விடிந்ததும் தெளிந்தது...!

என்ன இது மிருகமா?
முழுதாக அப்படிச் சொல்லிவிட முடியாது
தோற்றம் அப்படித்தான்
பார்வையும்...

காரிருள் கிழிக்கும் செவ்வொளி
அதன் கண்களில் இருந்துதான்
அபாய சமிக்ஞையோ?
ம்ம்... நெருங்குவது ஆபத்தானது.
கண்ணாலும் தூங்கிவிட்டானா?

இந்த சக்கரவியூகம் உடைக்கும்
வித்தையும் அறியேனே

தனியாகச் சிக்கிக்கொண்டேன்.
யாரை அழைக்க?
யார் வருவார்?
திரும்பிப் பார்க்காமல் ஓடிவிடலாம்
விலகி ஓடுவதற்குள் விடிந்துவிட்டது
விழித்துக்கொண்டேன்.

- வேலணையூர் அபிராமி




## இது புதுசு

தமிழில் வாக்கியங்கள் எழுதப்பட்ட ஆண்களுக்கான ரீ- சேட்கள் தற்போது விற்பனைக்காக வந்துள்ளன. இவை 850 ரூபாவில் இருந்து 900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



## நாளை

**ஆடி-31**

திங்கட்கிழமை -15.08.2016
திதி: துவாதசி பி.ப.04.58
நட்சத்திரம்: பூராடம் பி.இ.12.45
ராகுகாலம்: 07.35-09.05 வரை
சுபநேரம்: 12.05-01.35 வரை
பிரதோஷ விரதம்

## அவல் தோசை

**தேவையான பொருள்கள்:**

அவல் – ஒரு கப்
புளித்த மோர் – சிறிதளவு
பச்சை மிளகாய் – 2
எண்ணெய் – தேவையான் அளவு.

**செய்முறை:**

அவலை நன்றாகச் சுத்தம் செய்து மோரில் 15 நிமிடங்கள் ஊறவைக்கவும். பின்னர் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து மிக்ஸியில் பொடியாக ஒரு சுற்றுச் சுற்றி, உப்பு, பெருங்காயத்தூள் சேர்க்கவும். பச்சைமிளகாயைப் பொடியாக அரிந்து மாவில் சேர்த்து, தோசைமாப் பதத் துக்குக் கரைத்து நிதானமான தீயில் தோசைகளாக வார்க்கவும்.

விருந்தினர்கள் வந்தால் இந்த தோசையை உடனடியாகச் செய்து அசத்தலாம். புளிப்பு மோர் இல்லையெனில் எலுமிச் சம்பழம் பிழிந்து கொள்ளலாம். அபார ருசியுடன் இருக்கும்.

## வீட்டுக் குறிப்பு

- துவைத்த துணிகளுக்கு நீலம் போடும் போது, நீலம் கரைத்த நீரில் சிறிது சலவைத் தூள் கலந்து கொண்டால், துணியில் நீலம் திட்டு திட்டாக இல் லாமல் சமமாக இருக்கும்
- கோதுமை மாவில் உப்புச் சேர்த்து லேசாக சுட வைத்த நீர் விட்டுப் பிசைந்து துருவிய கரட், பீட்ரூட் கோவா, பச்சை மிளகாய், வெங்காயம் சேர்த்து வதக்கி துவையல் செய்தால் சத்தான, சுவையான துவையல் ரெடி.
- இட்லி மாவில் உளுந்து போதாமல், மாக்கெட்டியாய் இருந்தால் பச்சை அப்பளங்களைத் தண்ணீரில் நனைத்து, மிக்சியில் போட்டு ஒரு நிமிடம் விட்டு எடுத்து மாவில் கலந்து, அதற்கு பின் இட்லிகள் வார்த்தால், இட்லி பூ மாதிரி இருக்கும்.
- கிழங்குகள் சீக்கிரம் வேக வேண்டுமா? பத்து நிமிடம் உப்புக் கலந்த நீரில் ஊற வைத்து வேக வைத்தால் எளிதில் வெந்து விடும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 700 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | – | – |
| சீலா | 300 | 400 | 400 | 600 | 500 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 600 | 450 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 400 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 200 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 370 |
| சூடை | 150 | 250 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 150 | – | 200 | 400 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 300 | 180 |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 70 | 120 | 200 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | 300 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 50 | 120 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 70 | 80 | 100 | 80 | 40 | 60 | 90 | 40 |
| கரட் | 100 | 120 | 200 | 140 | 100 | 120 | 110 | 120 |
| மரவள்ளி | 100 | 90 | 80 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 50 | 30 | 40 | 40 | 40 | 40 | 100 | 40 |
| பாகல் | 120 | 120 | 180 | 120 | 100 | 80 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 150 | 160 | 140 | – | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 90 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 70 | 80 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 | 60 | 80 | 70 | 80 |
| தக்காளி | 40 | 70 | 60 | 80 | 40 | 60 | 120 | 50 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 120 | 80 | 40 | 70 | 40 |
| கீரை | 10 | 20 | 30 | 10 | 20 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 150 | 250 | 300 | 180 | 240 | 200 | 400 | 160 |
| புடோல் | 40 | 50 | 50 | 60 | 60 | 40 | 70 | 50 |
| கோவா | 120 | 100 | 160 | 140 | 120 | 160 | 90 | 80 |
| வெண்டி | 50 | 40 | 50 | 80 | 40 | 80 | 70 | 50 |
| போஞ்சி | 150 | 150 | 180 | 180 | 180–200 | 200 | 130 | 180 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 140 | 100–120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 22 | 40 | 30 | 30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 122 | 120 | 140 | 120 | 120 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 | 200 | 180 | 240 | 200 | 130 |
| இராசவள்ளி | 160 | 200 | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 120 | 80 | 100 | 120 | 200 | 80 |



**மேடம்:** பொது இடங்களில் வாக்குவாதம் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த சுப செய்தி கிடைப்பதில் தாமதமாகலாம். ஆரோக்கியம் பலம் பெறும்.

**இடபம்:** சொந்த நலன்களைத் தியாகம் செய்வீர்கள். நல்லவர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உருவான போட்டி குறையும். வருமானம் உயரும். குடும்பத் தேவையைத் தாராள செலவில் பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்:** செயலில் திறமை வெளிப்படும். தொழில், வியாபார வளர்ச்சியால், அதிக ஆதாயம் கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டினரின் ஆதரவைக் கண்டு மகிழ்வர். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** இன்று பணிச்சுமை அதிகரிக்கலாம். குடும்பத்தினரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உணவு விடயத்தில் கட்டுப்பாடு பின்பற்றவும்.

**சிங்கம்:** நண்பரின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் மிதமான இலாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்குடன் இருப்பர்.

**கன்னி:** புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழிலில் நிலுவைப் பணம் வசூலிக்க, இதமான அணுகுமுறை பின்பற்றுவது நல்லது. மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**துலாம்:** எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் ஆடரம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** முயற்சியில் வெற்றி கிடைக்கும். குடும்ப உறுப்பினர் மனதார வாழ்த்துவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெற்று மகிழ்வர்.

**தனுசு:** மனதில் புத்துணர்வு உண்டாகும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். வெளியூர்ப் பயணத் திட்டத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**மகரம்:** லட்சிய மனதுடன் செயற்படுவீர்கள். துவங்கிய பணிகள் இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.


**கும்பம்:** சுப விடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பும், வெகுமதியும் கிடைக்கும்.

**மீனம்:** கொடுத்த வாக்குறுதி காப்பாற்ற முடியாமல் போகலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பது நல்லது. உடல்நலனில் கவனம் தேவை.













Mr. வெயில்
உங்களுக்காகக் கண்ணீர் சிந்த ஒரு உறவையாவது சம்பாதித்து விட்டுச் சாவுங்கள்...!




## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| 2 | | | 1 | | 6 | | 5 | |
| | | | 9 | | | 8 | | 6 |
| | 3 | | | 8 | | | 4 | 7 |
| 8 | 6 | | | | | | 9 | 5 |
| 5 | 4 | | | 9 | | | 2 | |
| 6 | | 1 | | | 4 | | | |
| | 7 | | 5 | | 2 | | | 4 |
| | | | | 6 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 2 | 6 | 7 | 3 | 1 | 8 | 4 |
| 3 | 8 | 4 | 9 | 5 | 1 | 2 | 6 | 7 |
| 1 | 6 | 7 | 4 | 8 | 2 | 3 | 5 | 9 |
| 7 | 4 | 6 | 5 | 2 | 9 | 8 | 1 | 3 |
| 5 | 2 | 9 | 3 | 1 | 8 | 4 | 7 | 6 |
| 8 | 1 | 3 | 7 | 6 | 4 | 5 | 9 | 2 |
| 4 | 9 | 1 | 8 | 3 | 7 | 6 | 2 | 5 |
| 6 | 7 | 8 | 2 | 4 | 5 | 9 | 3 | 1 |
| 2 | 3 | 5 | 1 | 9 | 6 | 7 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## ஒஸ்காருக்கு பரிந்துரைக்கப்பட்ட




'அருந்ததி' படத்துக்குப் பின்னர் அனுஷ்கா, வாள் வீசி ராணியாக நடித்த திரைப்படம் 'ருத்ரமாதேவி'.

சிறந்த வெளிநாட்டு படம் என்ற பிரிவின் கீழ் 'ருத்ரமாதேவி' ஒஸ்கார் விருதுக்கான போட்டியில் கலந்து கொள்ளவுள்ளது, இதனை 'ருத்ரமாதேவி' படத்தின் இயக்குநர் குணசேகர் தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளார்.

இயக்குநர் குணசேகர் இயக்கத்தில் பெரும் பொருள்செலவில் பிரம்மாண்டமாக உருவான இந்தத்திரைப்படம், 'ருத்ரமாதேவி' எனும் தெலுங்கு தேச ராணியின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் விதமாக உருவாக்கப்பட்டது. அனுஷ்காவுடன் அல்லு அர்ஜுன், ராணா, பிரகாஷ் ராஜ், நித்யா மேனன், கேத்ரின் தெரஸா மற்றும் பலர் நடிப்பில் வெளிவந்த 'ருத்ரமாதேவி' திரைப்படம் வசூல் ரீதியாக எதிர்பார்த்த இலாபம் ஈட்டவில்லை எனினும் விமர்சக ரீதியாக வெற்றி பெற்றது. தமிழ், தெலுங்கு, மலையாளம் என பல மொழிகளில் வெளியான இந்தத் திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# சொந்தமாய் ஓர் உறவு...

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆனால் இன்று ஐந்தறிவு ஜீவனுக்காக அந்தத் தாலியை அடகுவைத்து பணம் புரட்டவும் தயாராகிவிட்டாள். அந்தத் தாலியைக் கையில் வைத்திருந்தபடியே அன்று இரவு முழுவதும் நீலாவின் மனது ஒரு பக்கம் காதலனின் முகமும் மறுபக்கம் ஆட்டின் நினைவுமாக இரு தலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தது.
மூர்த்தியையே மனதில் நினைத்தபடி வாழுகின்ற நீலாவுக்குத் தாலியை அடகு வைப்பது அவனையே அடகு வைப்பது போல இருந்தது.
தான் அதனை அடகு வைக்கலாமா? அது முறையாகுமா? இறந்தவன் என்டாலும் நினைத்தது நினைத்தது தானே. இவ்வாறாக அலை அலையாக புரண்டெழுந்த நினைவுகளின் நிர்ப்பந் தத்தால் தூங்கி விட்ட நீலாவுக்கு விடியல் நேரம் தான் முடிவு கிடைத்ததுபோலும்.
அதிகாலையிலேயே எழுந்து நகைக்கடைக்குச் சென்று தாலியை அடகுவைத்து, பணத்தையும் எடுத்துக் கொண்டு வைத்தியசாலையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்! நடக்கத் தொடங்கினாள் என்பதை விடப் பறக்கத் தொடங்கினாள் என்பதே சரியானது.
அந்த அளவுக்கு வேக நடை போட்டவள் கணப்பொழுதில் அந்த மிருக வைத்தியசாலையை அடைந்துவிட்டாள். "ஐயா, இந்தாங்கோ நீங்க கேட்ட பணம் இதில இருக்கு. எப்படியாவது அந்தச் ஜீவனைக் காப்பாத்திப் போடுங்கோ" என்று மேசையில் இருந்த பேப்பரை அவதானித்துக் கொண்டிருந்த வைத்தி யரிடம் சொன்னாள்.
"ம்.ஓகே! நான் இதோ வாறன் நீ போம் பிள்ளை" என்றவாறு அவளை அனுப்பி வைத்த சில நேரப்பகுதிகளில் நீலாவின் வீட்டுக்கு வந்து விட்டார். உடனடியாக ஆட்டுக்கு ஊசியையும் போட்டு விட்டு மேலதிகமாக ரூபா 300 ஐயும் வாங்கிச் சென்றுவிட்டார்.
அப்போதுதான் அவளுக்கு ஒரு விடயம் புரிந்தது.
ஊசி கொழும்பில இருந்து தானே வருவிக்கவேணும் எண்டவர், ஆனால் எப்பிடி உடனடியாக வந்தது.
நேற்று மாலைக்குள் வந்து சேர்ந்திருக்க வாய்ப்பில்லையே, ஒவ்வொரு புதனும் தானே கொழும்பில இருந்து மருந்து வண்டி வாறது.
அதுவும் இப்ப ஒரு மாதகாலமாக வரவேயில்லையே.
அப்படியானால் இது உள்ளூரில எடுக்கக் கூடிய விலைகுறைந்த ஊசி மருந்தாக இருக்க வேண்டும்.
நீலாவுக்கு தான் ஏமாற்றப்பட்டு விட்டது தெளிவாகப் புரிந்துவிட அப்படியே மயங்கிச் சரிந்து விட்டாள். எவ்வளவு நேரம் அப்படி இருந்தாளோ தெரிய வில்லை.
'ம்மே' என்ற குரல் அவளை சுயநினைவுக்கு இழுத்து வந்தது.
திடுக்கிட்டு எழுந்து பார்த்த நீலா சந்தோஷத்தால் "ஐயோ" என்று கத்தி விட்டாள்.
அசைவற்றுக் கிடந்த அந்த ஐந்தறிவு ஜீவன் இப்பொழுது அவள் காலடியில் வந்து நின்று கொண்டது. வாஞ்சையுடன் அதனை அணைத்துக் கொண்ட நீலாவுக்குத் தன் பணம் ஏமாற் றப்பட்டு, வாங்கப்பட்ட விடயம் ஒரு பொருட்டாகவே படவில்லை. பணம் போயிருந்தாலும் அந்த ஜீவன்



உயிர்பெற்று எழுந்ததே அவளுக்கு போதுமாக இருந்தது.
இனி மீண்டும் அந்த வீட்டில் இரு ஜீவன்களினதும் அன்புப் பரிமாற்றம் நடந்து கொண்டிருக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 433

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | | 5 |
| 6 | | ■ | 7 | | | ■ | |
| 8 | | 9 | | ■ | 10 | 11 | ■ |
| | ■ | | ■ | 12 | | | 13 |
| ■ | 14 | | 15 | | | ■ | |
| 16 | | | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

பூரணமான தபால் விலாசம்: ..................................

..........................................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1. அமர்க்களம்
4. தெருக்கள் கூடும் பகுதி
6. ஓர் அளவிடும் அலகு
7. பெரும் கயிறு
8. அஞ்சல்
10. பிரி
12. விலங்குகளின் அடிக்கால்ப் பகுதி
14. பிழையான நடவடிக்கை
16. எதிர் உணர்வு
17. தீய எண்ணம்
18. ஓர் உட்காய வகை
19. எழுத்துக்களுக்கு முதல்
20. உறுதி
21. மனைவியின் சகோதரியின் கணவன்

### மேலிருந்து கீழ்

1. ஒரு நட்சத்திரம்
2. (சேமிப்பு) கிடங்கு
3. இந்து சமயத்தின் உட்பிரிவுகளுள் ஒன்று
4. வேதனம்
5. படுதா
9. தற்பெருமை அடித்தல்
11. குத்து விழுவது இப்படி
12. பேச்சு ஓசை
13. மகன்
14. விரிந்து
15. குற்றம் சுமத்தல்
16. தினசரி மாறுவது
17. அனைத்து
19. உள்[illegible]

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 431இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**
(1) நிம்மதி (4) வாதம் (6) தரிசனம் (8) யாகம் (10) வர (12) மைல் (13) கரம் குவி (15) விகடம் (17) மடு (18)சமானம் (19) தரி (20) மான் (21) பதவி (24) பன்னிரண்டு

**மேலிருந்து கீழ்**
(1) நிலையாமை (2) மதம் (3) திரி (4) வானரம் (5) தம் (7) சுவரம் (9) கல்விமான் (11) தவிடு (13) கடம்பன் (14) குமரி (16) கன (18) சமாதி (19) தவிர (22) தனி (23) நாடு
சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**
**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**
**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**
**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**
**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி
இல.433
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (24.08.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 431 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
ஜிவாணி பஞ்சலிங்கம்,
சின்னாலடி,
காரைநகர்.

**2 ஆம் பரிசு**
பிரபா செல்வராஜா,
இல.375,கொரவப்பத்தான வீதி,
இறம்பைக்குளம், வவுனியா.

**3 ஆம் பரிசு**
ப.ஸ்ரீ ஜீவரஞ்சினி,
இல.06, பிளர்ச்சர்ஸ் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
வ.தி.ராஜாராம்,
மிதிலை, ஆத்தியடி,
பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு**
வ.இரத்தினசிங்கம்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

அ.கயசிந்தா,
இல.969/4 வளன்புரம்,
கொழும்புத்துறை.

ப.தனலட்சுமி,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

அ.அமிர்தநாயகம்,
சாந்தசோலை,
அல்வாய்.

சொற்சிலம்பம் போட்டி இல.433இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 28.08.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 431இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

# இந்த வாரம்

**14.08.2016 முதல் 20.08.2016 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

கேது, சுக்கிரன் நற்பலன் வழங்குவர். எவரிடமும் நிதானித்துப் பேசுவது நல்லது. தம்பி, தங்கை கேட்ட உதவியை வழங்குவீர்கள். வாகனப் பராமரிப்பு செலவு குறையும். அவற்றின் மூலம் திருப்திகரமான இலாபம் கிடைக்கும். புத்திரர்களின் வளர்ச்சிக்காகத் திட்டம் திட்டுவீர்கள். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி கடுமையாக இருக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்துடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். பெண்களுக்கு வீட்டுச்செலவுக்குபோதுமான பணம் இருக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர்கள் உதவுவர்.

## இடபம்

பெரும்பாலான கிரகங்கள் நற்பலன் தருவர். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். வாழ்வில் முன்னேற உதவியவர்களுக்கு நன்றி சொல்வீர்கள். குடும்பத்திற்கு தாராள செலவு செய்வீர்கள். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் பிடிவாத குணத்துடன் செயற்படுவர். பூர்வ சொத்தில் பணவரவு கூடும். கணவன், மனைவி ஒற்றுமையால், குடும்பத்தில் முன்னேற்றம் ஏற்படும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தி வரும். பணியாளர்கள் வாய்ப்புக்களை பயன்படுத்தி முன்னேறுவர். பெண்கள் குடும்ப நலனுக்கான திட்டங்களை சரிவர செயற்படுத்துவர். மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற்றம் ஏற்படும்.

## மிதுனம்

செவ்வாய், சனி, ராகு சுக்கிரனால் நன்மை ஏற்படும். பழகுபவர்களின் மனமறிந்து பேசுவீர்கள். வாகன பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்குவீர்கள். முக்கிய திட்டம் நிறைவேறும். எதிர்ப்பு விலகி வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரித்து, மனநிம்மதி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து இலாபம் கூடும். பணியாளர்கள் தொழில் நுட்பங்களை ஆர்வமாக கற்று சலுகை பெறுவர். பெண்கள் நகை, புத்தாடை வாங்குவர். பணம் சேரும். மாணவர்கள் முயற்சியுடன் படித்து முன்னேற்றம் காண்பர்.

## கடகம்

சுக்கிரன், சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். தகுதி, திறமை உணர்ந்து பணிகளில் ஈடுபடுவீர்கள். நண்பர்களின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். அரசு சார்ந்த உதவி புதிய முயற்சியால் கிடைக்கும். புத்திரர்கள் படிப்பு, செயல்திறனில் முன்னேற்றம் அடைவர். சொத்து பராமரிப்பில் அதிக கவனம் வேண்டும். உறவினர்களின் உதவி மனதிற்கு உற்சாகம் தரும். உடல்நலத்தில் சிறு பாதிப்பு வரலாம் கவனம். கணவன், மனைவி அன்புடன் நடந்து கொள்வர். பயணங்களால் அதிக லாபம் இராது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கத் தாமதமாகலாம். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற உரிய பயிற்சி பெறுவர்.

## சிங்கம்

சூரியன், குரு, சுக்கிரனால் நன்மை நடக்கும். குடும்ப நிகழ்வுகள் இனிதாக அமையும். பேச்சால் காரியம் சாதிப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் கருத்து வேறுபாடு கொள்வர். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். முக்கிய திட்டங்கள் நிறைவேறும். கணவன், மனைவியின் பாசத்தினால், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து பணவரவு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு வெகுவாக குறையும். பெண்கள் வீட்டு அலங்காரப் பொருள் வாங்குவர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து முன்னேற்றம் காண்பர்.

## கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் நற்பலன் தருவர். மனதில் நல்ல எண்ணங்கள் உருவாகும். பொது இடங்களில் நடக்கும் விவகாரங்களில் தலையிட வேண்டாம். உடன்பிறந்தவர்களுக்கு மங்கள நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. வீடு, வாகன வகையில் பாதுகாப்பு ஏற்பாடு செய்வது நல்லது.

புத்திரர்கள் பெற்றோர் சொல் கேட்டு நடந்து கொள்வர். கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தந்து முன்னேற்றம் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். பணியாளர்கள் நிர்வாகத்தை அனுசரித்து, அதிக சலுகை பெறுவர். பெண்கள் குடும்ப நலனுக் காக வீட்டுச் செலவை சுருக்கிக்கொள்வர். மாணவர்கள் படிப்பில்சிறந்ததேர்ச்சி பெறுவர்.

## துலாம்

குரு, சனி, கேது தவிர மற்ற கிரகங்கள், நற்பலன் தருவர். நற்பண்பு நிறைந்தவர்களின் துணையால் முன்னேறுவீர்கள். மனதில் உற்சாகம் ஏற்படும். உடன்பிறந்தவர்கள் பணம் கேட்டு தொந்தரவு செய்வர். வாகனப் பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்கள் நல்வழியில் செயற்படுவர். குடும்ப விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். கணவன், மனைவி இடையே ஒற்றுமை வளரும். தொழில், வியாபாரம் செழித்து இலாபம் கூடும். பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்புடன் விளையாட்டிலும் சாதனை புரிவர்.

## விருச்சிகம்

புதன், குரு நற்பலன் தருவர். வாழ்வில் முன்னேற, புதிய திட்டங்களை வகுப்பீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். பயணங்களால் அதிக நன்மை இருக்காது. புத்திரர்கள் திறமையான செயல்களால், பெருமை தேடித் தருவர். கடனை அடைக்கும் அளவு வருமானம் இருக்கும். கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு வரலாம்.

தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு மேலதிக வேலை, நேர சலுகைகளால் பண வரவு உயரும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் அதிக கவனம் வேண்டும்.

## தனுசு

சுக்கிரன்,கேதுஅதிகநன்மை தருவர். செயல்களை நிதானமாக செய்வீர்கள். உறவினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்ய வேண்டும். புத்திரர்கள்விரும்பியபொருள்களைவாங்கிக்கொடுப்பார்கள். உடல்நிலை நன்றாக இருக்கும். கணவன், மனைவி ஒற்றுமையுடன் திட்டங்களை வகுப்பீர்கள்.

தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் ஆதரவு வளர்ச்சி தரும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்கள் தாராள பணவசதி கிடைத்து மகிழ்வர். மாணவர்கள் படிப்புடன் பொது அறிவிலும் மேம்படுவர். பெண்கள் சேமிக்கும் நோக்கில் செயற்படுவர். மாணவர்கள், ஆசிரியரின் அறிவுரையை ஏற்று முன்னேறுவர்.

## மகரம்

புதன், சுக்கிரன், செவ்வாய், சனீஸ்வரர் நற்பலன் வழங்குவர். பணிகளை கவனமாகச் செய்து பாராட்டுபெறுவீர்கள். தாய்வழிஉறவினர்களின் உதவி கிடைக்கும். வெளியூர் பயணம் வெற்றி தரும். புத்திரர்கள் சிறப்பாக செயல்பட்டு பெருமை தேடித் தருவர். உடல்நிலை நன்றாக இருக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பார்கள். பயணங்கள் இனிய அனுபவம் தரும். தொழில், வியாபாரத்தில் சமயோசித செயலால் பணவரவு கூடும். பணியாளர்களுக்கு நற்பெயர் மற்றும் சலுகை கிடைக்கும். பெண்கள் விரும்பிய பொருள் வாங்கி மகிழ்வர். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர்.

## கும்பம்

சூரியன், சந்திரனால் நன்மை ஏற்படும். தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். ஒதுக்கி வைத்த பணிகளை நிறைவேற்றுவீர்கள். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். புத்திரர்கள் விரும்பிக்கேட்ட பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். உடல்நிலை நன்றாக இருக்கும். வழக்கில் வெற்றி கிடைக்கும். பயணத்தின் போது பாதுகாப்பு அவசியம். கணவன், மனைவி பொறுமையுடன் நடப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பணியில் கவனம் தேவை. பெண்கள் சேமிப்பில் ஆர்வம் கொள்வர். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தினால் தான் உயர் மதிப்பெண் பெற முடியும்.

## மீனம்

குரு, புதன், ராகு, சந்திரன் நற்பலன் வழங்குவர். உழைப்பிற்கான பலன் திருப்திகரமாகக் கிடைக்கும். நிம்மதி நிறைந்த வாழ்வு உருவாகும். .பயணங்களால் பலன் உண்டு. குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். புத்திரர்கள் விரும்பிய பொருள் கேட்டு பிடிவாதம் செய்வர். கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி உற்பத்தி, விற்பனை கூடும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணிகளை முடித்து நிர்வாகத் திடம் நற்பெயர் பெறுவர். பெண்களுக்கு வீட்டுச்செலவுக்குபோதுமான பணம் இருக்கும். மாணவர்கள் நண்பர்களுடன் இணைந்து படித்து முன்னேறுவர்.

மருத்துவர் பொ.ஜெசிதரன்

# ஒவ்வொரு நாள்களுமே, மே 31 தான்

மே 31 சர்வதேச புகைத்தலுக்கு எதிரான நாள். இது புகைத்தலால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து சிந்திக்கும் நாள். மக்களைக் குறிப்பாக இளைஞர்களை சிந்திக்க வைக்கும் நாள். மக்களை விழிப்புறச் செய்யும் நாள். இளைஞர்கள் புதிதாக இப்பழக்கத்தை பழகிக் கொள்வதைத் தடுக்கும் நாள். புகைப்போரை அப்பழக்கத்தினின்றும் மீட்கும் செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யும் நாள். புகைத்தலுக்கு எதிராக மக்களை சுயாதீனமாக எழுச்சியுறச் செய்து அவர்களையும் இதில் பங்களிக்கச் செய்யும் நாள். எனவே இந்நாளின் முக்கியத்துவம் உணர்ந்து அதனுள் பொதிந்துள்ள உள்ளார்ந்த உண்மைத்தன்மையை உணர்ந்து நாம் அனைவரும் இந்நாளை அனுஷ்டிக்க வேண்டும். இது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகவும் உள்ளது.

கற்றோர், மருத்துவர்கள், ஆசிரியர்கள், மதத்தலைவர்கள், சமயப்போதகர்கள், பிரசங்கம் செய்வோர், அரசியல்வாதிகள், ஊடகங்கள் என எம் சமூகத்தின் இருப்பில் அக்கறையுள்ள அனைவரும் இதில் பங்கெடுத்து தமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் புகைத்தலால் ஏற்படும் பாதிப்புக்களை மக்களிடத்தில் எடுத்துச் செல்லுதல் வேண்டும். இவர்கள் குறிப்பாக இளைஞர்களை தெளிவுபடுத்தி விழிப்புறச் செய்தல் வேண்டும். ஊடகங்களில் புகை எதிர்ப்பு பிரசுரங்களை வெளியிடும் போது மிகவும் கவனம் செலுத்துதல் வேண்டும். இதன் போது புகைந்து கொண்டிருக்கும் சிகரெட்டின் படத்தையோ புகை பிடித்தல் போன்ற படங்களையோ இருவிரல்களுக்கிடையில் சிகரெட் உள்ளது போன்ற படங்களையோ பிரசுரித்தல் கூடாது. அவற்றை தவிர்த்தல் வேண்டும். அதற்குப் பதிலாக மகிழ்ச்சியாக இருக்கும் சிறுவர்களின் படங்களையோ புகையின் பாதிப்பை விளக்கும் படங்களையோ கார்ட்டூன்களையோ பிரசுரிப்பதே பொருத்தமானது.

இன்றைய இளைஞர்கள் எதிர் கொள்ளும் வாழ்க்கைச் சவால்களில் புகைத்தல் முன்னுரிமை பெறுவதனால் தம் மகிழ்வான தருணங்களில் தம் மகிழ்ச்சிகளை ஆரோக்கியமாகக் கொண்டாடத் தெரியாதோர் புகைத்தலின் துணையை நாடுகின்றனர். இதனால் அதன் மாய வலைக்குள் சிக்குண்டு வெளிவரத் தெரியாது தமது உண்மையான மகிழ்ச்சியை மட்டுமல்ல தமது இளமை, குடும்ப மகிழ்ச்சி அனைத்தையும் இழந்துவிடுகின்றனர்.

புகை, மது, போதை, எயிட்ஸ் நோய் என்பன நச்சுவட்டத்தின் கூறுகளாகும். ஆரம்பத்தில் புகையில் தொடங்குபவர் படிப்படியாக இந்த நச்சுவட்டத்தின் அடுத்த படிகளுக்கு இலகுவாக உந்தித் தள்ளப்படும் நிலையே தற்போது உள்ளது. இதன் விளைவாக தனிமை, மன வெறுமை, கல்வியில் நாட்டமின்மை, பாடசாலை இடைவிலகல், துஷ்பிரயோகம், சமூகத்தால் ஒதுக்கப்படல், சகபாடிகளால் கைவிடப்படல் என்று பல நெருக்கீடுகளுக்கு உட்பட்டு ஈற்றில் தற்கொலை முயற்சி, தற்கொலை என நிறைவுறுவதைக் காண்கிறோம். சமூகத்தின் அத்திபாரங்கள் இன்று ஆட்டங்காணும்போது சமூகத்தின் நாளைய இருப்பு கேள்விக்குறியாகின்றது.

திரைப்படங்களில் அசௌகரியமான புகை, மது போன்றவற்றை மகிழ்ச்சியான ஒன்றாக காண்பிக்க முற்படு கிறார்கள். எதிர்பால் கவர்ச்சிக்காக அசட்டுத் தன்மையான வீரர்களாக காண்பிப்பதற்காக இவற்றை பயன் படுத்துகின்றார்கள். இதனைப் பார்த்த இளைஞர்கள் இவற்றை நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்கப் பார்க்கிறார்கள். பாவம்! கல்வி அறிவு கூடிய சமூகத்தில் இருந்து கொண்டும் தாம் கற்ற கல்வி பகுத்தறியும் அறிவு கொண்டு உண்மைத் தன்மையை அறிய முடியாதவர்களாகவே இவர்கள் உள்ளனர். நிஜ வாழ்க்கை வேறு திரை விம்பம் வேறு, என்பதைக்கூட உணர முடியாதவர்களாகவே உள்ளனர். காலை முதல் இரவு வரை எமது வீடுகள் அனைத்தும் திரையரங்குகளாக மாறியதன் விளைவே இது. சுய சிந்தையை இழந்து சிந்தனைத்திணிப்புக்குள் சிக்குண்டு சரி எது பிழை எது நன்மை தீமை எவை எனப் புரியாது திக்குமுக்காடுகின்றார்கள். இத்திரைப்படங்கள் எம் இளைஞர்களை திசை திருப்பி அவர்தம் வாழ்க்கைப் போக்கை மாற்றி அப்பாவிப் பெற்றோர்களின் உழைப்பை திருட வைக்கின்றன. அசௌகரியமான செயல்களுக்கு வீணே செலவு செய்து இளைஞர்கள் தம்மை



அசிங்கப்படுத்திக் கொண்டும் மற்றையோரின் அருவருப்புக்கு ஆளாகிக் கொள்ளும் நிலையை இவை ஏற்படுத்துகின்றன.

புகையானது பிள்ளைகளுக்கு பாசமான அப்பாவை இல்லாது செய்கின்றது. மனைவிக்கு அன்பான வாழ்க்கைத் துணையை இல்லாது செய்கின்றது. உறவினர்களுக்கு உதவிடும் சகோதரனை இல்லாது செய்கிறது. நாட்டுக்கு நற்பிரஜையை இழக்க வைக்கின்றது என்பதை நாம் ஒவ்வொருவரும் நம் புத்தியில் இருத்துதல் வேண்டும்.

புகைத்தலால் எமக்குக் கிடைப்பது துர்நாற்றம் வீசும் வாய், அவலட்சணமான முகம், முதிய தோற்றம், காவி படிந்த பற்கள், ஆண்மைக் குறைபாடு, புற்று நோய்கள் மற்றும் சந்தோசமற்ற குழப்பமான குடும்பவாழ்வு என்பவையே. ஆண்மைக்குறைபாடு என்பது மிக மிக முக்கியமான பாதிப்பாகும். புகைத்தலினால் இளைஞர்கள் தம் ஆண்மையை இழக்கிறார்கள். திரைப் படங்களில் காண்பிப்பது போல் தம்மை செயற்திறன்மிக்க ஆண்களாக காண்பிக்க முற்பட்டு நாளடைவில் தம் ஆண்மைத் தன்மையை இழந்து விடுவது கவலையளிப்பதாகும்.

> புகை, மது, போதை, எயிட்ஸ் நோய் என் பன நச்சுவட்டத்தின் கூறுகளாகும். ஆரம்பத்தில் புகையில் தொடங்குபவர் படிப்படியாக இந்த நச்சுவட்டத்தின் அடுத்த படிகளுக்கு இலகுவாக உந்தித் தள்ளப்படும் நிலையே தற்போது உள்ளது. இதன் விளைவாக தனிமை, மன வெறுமை, கல்வியில் நாட்டமின்மை, பாடசாலை இடைவிலகல், துஷ்பிரயோகம், சமூகத்தால் ஒதுக்கப்படல், சகபாடிகளால் கைவிடப்படல் என்று பல நெருக்கீடுகளுக்கு உட்பட்டு ஈற்றில் தற்கொலை முயற்சி, தற்கொலை என நிறைவுறுவதை காண்கிறோம்.

இன்பமான திருப்திகரமான இல்வாழ்க்கையை நடத்த முடியாது. துன்பமுறுவதுடன் பாலுறவில் நாட்டமின்றி குழந்தைப்பாக்கியம் இன்றி அன்புக்குரியவளின் வெறுப்புக்கு ஆளாகும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகிறது. புகைப்பவர்கள் உண்மையில் பாவமானவர்கள். அவர்கள் ஏமாற்றப்படுவதை உணராதவர்கள். தம் பகுத்தறிவை பயன்படுத்தும் திறனை இழந்தவர்கள். இவர்கள் பிரச்சினைகளை மறக்கின்றோம் எனக்கூறி மேலும் பிரச்சினைகளுக்கு ஆளாவதோடு சந்தோசமாக இருப்பதாக காண்பிக்க முற்பட்டு தம்மிடம் இருந்த சந்தோசத்தையும் தொலைக்கிறார்கள்.

தொலைக்காட்சி, நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் ஏம் வீட்டில் நுழையும் பெரியதிரை, சின்னத்திரை நடிகர்கள் எமது பிள்ளைகளுக்கு புகை, மது பாவனையைக் கற்பிக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சிறுவர்கள் மனதில் இத்தீய பழக்கங்கள் ஆழப்பதிந்து இவையே பதின்ம வயதில் வெளிக்காட்டப்படுகின்றன. மனத்தில் ஆழப்பதிந்த பழக்கங்களை அகற்ற பின்னைய காலங்களில் அதிக விலை கொடுக்க வேண்டி வருவதையே இப்போது நாம் எம் சமூகத்தில் பார்க்கின்றோம். இவ்வாறான தவறான காட்சிகள் வருகின்ற போதெல்லாம் சிறுவர்களுக்கு அத்தருணத்திலேயே அவற்றின் பாதிப்புக்களை எடுத்துக்கூறுதல் நன்று. முடியுமாயின் தவறான காட்சிப்படுத்தல்கள் உள்ள நெடுந் தொடர் களையோ, படங்களையோ தவிர்த்து விடுதல் நன்று.

இந்தியாவில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்று இளம் பெண்கள் சிகரெட் புகைக்கும் ஆண்களை விரும்புவ தில்லை என்று தெளிவாக காண்பிக்கின்றது. ஆனால் அதே இந்தியாவில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் உண்மைக்கு மாறாக தகவல்களைத் தானே எமக்கு காண்பிக்கின்றன. இப்போது புரிகின்றதா? நிஜம் என்பது சினிமாவில் காண்பிக்கும் பளபளப்பு அல்ல என்பது. ஒரு சிகரெட் புகைப்பதனால் ஒருவர் தன்வாழ்நாளில் 12 நிமிடங்களை இழந்து விடுகிறார். ஒருவர் தினமும் ஐந்து சிகரெட்டுக்கள் புகைப்பாரானால் அவரின் வாழ்நாளில் ஒரு மணித் தியாலத்தை ஒரு நாளில் குறைத்துக் கொள்கின்றார். ஒன்றே கால் நாள்களை இழந்துவிடுவார். ஒரு வருடமாக புகைப்பாரானால் பதினைந்து நாள்களை இழந்துவிடுவார்.

உலகில் சிகரெட் புகைத்து இறப்போரின் மொத்தத் தொகையில் 1/10 பங்கினர் மற்றையோர் புகைக்கும் புகையை சுவாசிப்பதால் புகையிலுள்ள நிக்கோட்டின் தாக்கத்தால் இறக்கின்றனர். இதனை மறைமுகப் புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்கள் (Passive smoking) என சொல்கின்றனர்.

இவ்வாறு மறைமுகப் புகைத்தலினால் பாதிக்கப்படுவோர் புகைப்பவரின் அன்பான மனைவி, பாசமான பிள்ளைகள் மற்றும் உற்ற நண்பர்களே ஆவர்.

கர்ப்பிணிப் பெண் ஒருவர் இப்புகையை சுவாசிப்பரானால் அது அவரின் கருவில் பாதிப்புக்களை ஏற்படுத்தி பிறப்புக் குறைபாடுகளுள்ள சிசுவை உருவாக்கலாம்.

உணவு கையாளும் நிலையங்களில் தொழில் புரிகின்ற புகைப்பிடிக்காத அப்பாவி இளைஞர்களும் மறைமுகப் புகைத்தலால் மிக மோசமாக பாதிக்கப்படுகின்றனர்.

ஓர் உணவகத்தில் ஒருநாளில் 30 பேர் வரை புகைத்துவிட்டு செல்கின்றார்கள். என்றால் அங்கு பணிபுரியும் இளைஞர்கள் இப்புகையை சுவாசித்து தம் வாழ்நாளில் 06 மணித்தியாலங்களை ஒரு நாளில் இழந்துவிடுகின்றனர். வருடத்துக்கு தம் வாழ்நாளில் 90 நாள்களை அதாவது மூன்று மாதங்களை இழந்து விடுகின்றனர்.

எனவே இது விடயத்தில் உணவு விடுதியாளர்கள் கூடுதலான கவனம் செலுத்தி தமக்கு விசுவாசமாக தொழில் புரிகின்ற இளைஞர்களின் வாழ்வை கருத்தில் எடுத்து அவர்களினதும் தனதும் எதிர்கால நன்மைகளை கருத்திற்கொண்டு புகைப்பொருள்களை விற்பனை செய்வதை நிறுத்திக் கொள்ளுதல் வரவேற்கத்தக்கது.

நன்றே செய்க அதனை இன்றே செய்க

சுகாதார வைத்தியஅதிகாரி



# சிங்கள, தமிழ் மக்களை – இனவேறுபாடு இன்றி

## இலங்கைத் தாயின் மக்களாக – ஒன்றுகூட்டும் ஒரே தலம் மடுப்பதியாகும்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

நாளைய தினம் இலங்கைவாழ் தமிழ், சிங்கள கத்தோலிக்க மக்கள் அனைவரும் இணைந்து மடுப்பதியில் கொண்டாடும் அதிமுக்கிய பெருவிழாவையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.




**2016ஆம் ஆண்டு மடுத்திருவிழா பற்றி மடுப்பதியின் பரிபாலகர் எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் எடுத்துரைத்தார்**

ஆறாவது மருதமடு அன்னையின் பெருவிழாவைக் கொண்டாடுபவரும் உலகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வேத சாட்சிகளின் இரத்தத்தால் புனிதப்படுத்தப்பட்ட மன்னார் தமிழ் மண்ணில் கால்பதித்து இலங்கையின் பிரசித்தி பெற்ற மடுப்பதியை உலகில் உள்ள தேவஅன்னையின் பதிகளுக்கு ஈடாக முழு உலகுக்கும் தெளிவாகக் காட்டும் போது மடுப்பதியின் பரிபாலகராக பணியாற்ற இறைவரம் பெற்றவருமான எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரிடம் இவ்வாண்டுத்திருழா பற்றிக் கேட்டோம். 2016ஆம் ஆண்டுத் திருவிழாவின் போது 6 இலட்சம் தமிழ் மற்றும் சிங்களப் பக்தர்களை வரவேற்றுத் தங்க வைத்துள்ளோம். திருநாள் திருப்பலிக்கு இன்னும் பக்தர்கள் கூடுவார்கள். நாளைய பெருவிழாவுக்கு இலங்கை கருதினாலும் கொழும்பு தலைமறைமாவட்டத்தின் பேராயருமான மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகை தலைமை தாங்குவார். இவரோடுகூட கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு வியன்னி பர்னான்டோ ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை, அனுராதபுர மறைமாவட்ட ஆயர் மேதகு அன்றாடி அ.ம.தி. ஆண்டகை, குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு கரலட் அன்ரனி பெரேரா ஆண்டகை, யாழ். மறை மாவட்ட பணிஓய்வு பெற்ற ஆயர் மேதகு தோமஸ் சவுந் தரநாயகம் ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக பரிபாலகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோர் கலந்து கொள்வர் என்று அவர் தகவல் தந்தார்.

**400ஆண்டு கால பழைமைமிக்க மருதமடு அன்னையின் யாத்திரைத்தலம்**

இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து கிட்டத் தட்ட 300 கிலோ மீற்றர் தொலைவில், மன்னார் மறை மாவட்டத்தின் வடக்கு கிழக்கு பகுதியில், அடர்ந்த காட்டின் நடுவில் கானகத்து செல்வியாக அருள்மழை பொழியும் மருதமடு அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டு, கம்பீரமாகக் தலை நிமிர்ந்து காட்சி தரும் யாத்தரைத் தலமே மடு அன்னையின் யாத்திரைத்தலமாகும். 400 ஆண்டு கால பழைமை மிக்க, இலங்கையின் மிகப் பிரச்சித்தி பெற்ற மருதமடு அன்னையின் யாத்திரைத் தலமானது, சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஆரம்ப காலம் முதல் இன்று வரை இன வேறுபாடுகளை மறந்து ஒன்று கூடும் ஒரேயொரு யாத்திரைத் தலமாக விளங்கி வந்துள்ளது.



கடந்த மூன்று தசாப்த காலக் கொடிய போரின் பின்னர் மேலும் களைகட்டி விட்டது.

**மருதமடுமாதாவே மனுக்குலத்தின் தாயாரே நெஞ்சைவிட்டுஅகலாத மருதமடு அன்னையின் கீதம்**

மருதமடுமாதாவே மனுக்குலத்தின் தாயாரே கருணை அருட் செபமாலை கனிந்திட நாம் செய்தாயே என்ற நெஞ்சைவிட்டு அகலாத மருதமடு அன்னையின் கீதத்தை இன்று இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கிலும் பரந்து வாழும் அன்னையின் பக்தர்கள் அனைவரும் பாடித் திருவிழா கொண்டாடி வருகிறார்கள். மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே என்ற பாடல் சிங்களத்திலும் தமிழ் மொழியிலும் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக நெஞ்சைவிட்டு அகலாத கீதமாக பாடப்பட்டுவருகின்றது. மேற்படி இந்தப் பாடலை 1948 ஆம் ஆண்டு மருதமடு அன்னையின் முதல் யாத்திரையின் போது யாழ் அடைக்கல அன்னை ஆலய வாத்தியக்கருவி மீட்டுனராகவும் பாடகர் குழாம் பொறுப்பாளராகவும் இருந்த காலஞ்சென்ற யோசவ் அன்று என்பவர் இயற்றி இசையமைத்துள்ளார். மடுப்பதியின் வரலாறு இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தோடு ஆரம்பமாகிறது. மன்னாரில் இருந்து பத்துக் கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் மாந்தை என்கின்ற கிராமத்து ஆலயமே மருதமடு அன்னையின் திருச்சொரூபத்தின் ஆதி இருப்பிடம் ஆகும். செபமாலை மாதா என இவர்கள் கொண்டு வந்த அன்னையின் சொரூபமே இன்று மருதமடு மாதாவாக மாறியுள்ளது.

இலங்கைத் தீவை ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) கைப்பற்றியதும் 1670 ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஒரு கொடூரமான வேதகலாபனை தொடங்க மாந்தையில் இருந்து இருபது கத்தோலிக்க குடும்பங்கள் திருச் செபமாலை அன்னையின் திருச்சொரூபத்துடன் பாது காப்புத்தேடி கண்டி இராச்சியத்தினுள் பிரவேசித்தனர். அடர்ந்த வன்னிக்காட்டில் அங்குமிங்கும் அலைந்து கண்டியில் இருந்து இராமேஸ்வரத்துக்குச் செல்லும் இராச பாதையில் கண்டி அரசனின் சுங்கவாடி – புராதன குளத்தருகே அமைந்திருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தக் கிராமம் மருதமடு என அழைக்கப்பட்டது. அங்கு மாந்தை கத்தோலிக்க மக்கள் முதல் முதலாக வேத வித்தை விதைத்தனர். மாந்தையில் இருந்துவந்தஇருபது கத்தோலிக்க குடும்பங்களும் யாழ்ப்பாணத்தில் இருந்த வந்த 700 கத்தோலிக்க குடும்பங்களும் மடுப்பதியில் சந்தித்து ஒரு சிறிய ஆலயத்தை அன்னையின் பெயரில் கட்டியெழுப்பியதாகவும் அதுவே மருத மடு அன்னையின் ஆரம்ப வரலாறாக அமைந்தாகவும் கூறப் படுகின்றது.

**பொன்ஜின் அ.ம.தி. ஆண்டகை - எ.புறோ அ.ம.தி ஆண்டகை காலத்தின் மடு**

1872 இல் பொன்ஜின் அ.ம.தி ஆண்டகை முதல் முறையாக மடுப்பதியை தரிசித்த பின்னர் 1872 ஓகஸ்ட் எட்டாம் நாள் நாம் இப்போது காணுகின்ற மடு ஆலயத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. இவரைத் தொடர்ந்து நான்காவது அப்போஸ்தலிக்க விக்காராகவும் (1883 - 1887) பின்னர் யாழ். மாவட்டத்தின் முதல் ஆயராகவும் (1887 - 1893) விளங்கிய ஆயர் மேதகு அன்ரூ மெலிசன்அமதிஆண்டகைகாலத்தில் கட்டடப்பணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு யாழ். மறை மாவட்ட இரண்டாவது ஆயராக கென்றி யூலன் அ.ம.தி. ஆண்டகை (1893 - 1919) காலத்தில் முற்றுப்பெற்றது. யாழ். மறை மாவட்டத்தின் மூன்றாவது ஆயரான எ.புறோ அ.ம.தி (1920 - 1923) ஆண்டகை 1920 ஆம் ஆண்டு அன்னைக்கு முடிசூட்டு விழா ஒன்றை நிகழ்த்த விரும்பி பாப்பரசரின் அனுமதியை வேண்டினார். இருப்பினும் ஆயர் மேதகு புறோ அ.ம.தி. ஆண்டகை மரணமடைந் தமையால் யாழ். மறை மாவட்டத்தின் நான்காவது ஆயரான மேதகு ஜே.ஏ.கியோமர் அ.ம.தி ஆண்டகை (1924 - 1950) அன்னையின் முடிசூட்டு வைபவத்துடன் தம் பணியை ஆரம்பித்தார். 1924 ஆம் ஆண்டு பாப்பரசர் பதினொராம் பத்திநாதரின் பிரதிநிதி ஒருவர் அதிகாரபூர்வமாக அன்னைக்கு முடிசூட்டு விழாவை மடுப்பதியில் நடத்தி வைத்தார். 1949 ஆம் ஆண்டு மருதமடு அன்னைக்கு முடிசூட்டிய 25 ஆவது வருட நிறைவும் ஆயர் மேதகு கியோமர் ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளி விழாவும் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

**ஆயர் மேதகு ஜே.எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி. ஆண்டகை காலத்தில்**

ஆயர் மேதகு ஜே.ஏ.கியோமர் அ.ம.தி. ஆண்டகையின் காலத்தில் மடுப்பதி சிறப்பு முக்கியத்துவம் பெற்று வளர்ந்தது. கியோமர் அ.ம.தி ஆண்டகை யாழ். மறைமாவட்ட பணிப்பொறுப்புக்களை ஆயர் மேதகு ஜே.எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகையிடம் 1950 இல் ஒப்படைத்தார். யாழ். மறைமாவட்டத்தின் ஐந்தாவது ஆயராகவும் – முதலாவது சுதேச ஆயராகவும் நியமிக்கப்பட்ட ஆயர் மேதகு ஜே.எமிலியானுஸ் பிள்ளை அ.ம.தி. ஆண்டகை காலத்தில் (1950 - 1972) மடுப்பதி விசேட முன்னுரிமை பெற்றுவளர்த்தெடுக்கப்பட்டது. இதன் பின்னர் யாழ்.மறைமாவட்டத்தின் ஆறாவது ஆயராகவும் இரண்டாவது சுதேச ஆயராகவும் மறை மாவட்டக் குருக்களில் இருந்து முதலாவது ஆயராகவும் நியமிக்கப்பட்ட ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் காலத்தில் (1972 - 1992) மடுப்பதி இன்னும் சிறப்புப் பெற்று வளர்ந்தது.

**மடு அன்னையின் திருச்சொரூபமானது இலங்கையின் மறைமாவட்டங்களுக்கு யாத்திரை**

மடு அன்னையின் திருச்சொரூபமானது 1948 - 1974 - 2001 ஆகிய ஆண்டுகளில் மூன்று தடவைகள் மடுப்பதியை விட்டு யாத்திரையாக இலங்கையின் மறை மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அமல மரித் தியாகிகள் சபையினர் இலங்கை மண்ணுக்கு வந்த நூற்றாண்டு நிறைவு விழாவை கொண்டாடும் விதமாக 1948 ஆம் ஆண்டு மடுமாதாவின் திருச்சொரூபம் திருயாத்திரையாக முதல் தடவையாக யாழ் மறைமாவட்டத்தின் பங்குகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. மருதமடு அன்னையின் மகுடாபிசேக பொன்விழாவில் அனைவரும் பங்குகொள்ளும் பொருட்டு 1974 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக மருதமடு அன்னையின் திருச்சொரூபம் யாத்திரையாக மறைமாவட்டப் பங்குகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த மகுடாபிசேக பொன்விழாத் திருப்பலி 1974 ஆம் ஆண்டு ஜூலை இரண்டாம் நாள் கொழும்புப் பேராயரும் ஆயர் குழுவின் தலைவருமாகிய கர்தினால் தோமஸ் கூறே ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது யாத்திரையின்போது மடு அன்னையின் திருச்சொருபமானது தென் இலங்கைக்கு யாத்திரையாக எடுத்துச் செல்லப்பட்டது. 3 தசாப்தங்களாக நடைபெற்று வந்த போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் நாட்டின் அமைதிக்குச் செபிக்கும் படியான விசேட வேண்டுதலுடன் இது மேற்கொள்ளப்பட்டது. இந்த யாத்திரையின் பின்னர்தான் இலங்கையின் நீண்ட காலப் போருக்கு ஓர் இடைவெளி கொடுக்கும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

> இலங்கைவாழ் தமிழ்மக்களையும் சிங்கள மக்களையும் இன மத பேதங்களைக் கடந்து தன் பாதத்தில் ஒன்று சேர்க்கின்ற மருத மடு அன்னை இலங்கை மண்ணில் எல்லா மக்களும் சமத்துவத்துடனும் சகோரத்துவத்துடனும் வாழ வழிசமைப்பாராக.

**மன்னார் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை காலத்தில்**

1981ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர் மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயரான தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் காலத்தில் (1981 - 1992) மடுப்பதி விசேட முன்னுரிமை பெற்று வளர்ந்து வந்தது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை (1992 முதல் இன்றுவரை) காலத்தில் போரின் காரணமாக பல தடைகள் ஏற்பட்டாலும் போரின் பின்னர் மடுப்பதி புதுப்பொலிவு பெற்றது. 1999ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி அன்று இரவு 10 மணியளவில் நடத்தப்பட்ட செல் தாக்குதலினால் 18 பேர் பலியாகினர். 65 பேர் காயமடைந்தனர். திரு இருதநாதர் ஆலயம் பலத்த சேதத்திற்கு உள்ளாகியது. மடுப்பதியின் தற்போதைய பரிபாலகராக எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் பணியாற்றி வருகிறார். மடுப்பதியில் யாத்திரிகர்களாக சென்று தங்க விரும்புவோர் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்னதாக பரிபாலகர், மடுத்திருப்பதி, மடு என்னும் விலாசத்துக்கு கடிதம் மூலம் தொடர்புகொள்ளலாம். மடு பரிபாலகரின் தொலைபேசி இலக்கம் 023 - 22 80 00 1 ஆகும்.

இலங்கைவாழ் தமிழ்மக்களையும் சிங்களமக்களையும் இன, மத பேதங்களைக் கடந்து தன் பாதத்தில் ஒன்று சேர்க்கின்ற மருதமடு அன்னை இலங்கை மண்ணில் எல்லா மக்களும் சமத்துவத்துடனும் சகோரத்துவத்துடனும் வாழ வழிசமைப்பாராக.



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் துருப்பின் நூற்றாண்டை முன்னிட்டு குருதிக்கொடை வழங்கப்பட்டது. (ற)





யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் தமிழ்த்தின விழா அண்மையில் நடை பெற்றது. வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்கள் வழங்கினார். (ற)



வரணி சுட்டிபுரம் அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. அம்மன் தேரில் வீதி உலா வருவதையும் படைத்தரப்பினரின் உலங்கு வானூர்தி மலர் மாரி பொழிவதையும் காணலாம். (ரி,122)







கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய பரிசில் நாள் விழா அண்மையில் வித்தியாலய ஆசிரியர் சின்னத்தம்பி அரங்கில் நடைபெற்றது. அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வித்தியாலய பழைய மாணவனும், வடமாகாண சுகாதார அமைச்சின் அபிவிருத்தி அலுவலருமான கோ.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.கதிர்காமநாதனும், கௌரவ விருந்தினராக பழைய மாணவன் த.பேரின்பலிங்கமும் கலந்துகொண்டனர். பரிசில்களை தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் முகாமைத்துவ உதவியாளர் திருமதி செ.கிருஷ்ணகுமார் வழங்கினார். (ற-9)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தணமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா கடந்த முதலாம் திகதி சிறப்பாக நடைபெற்றது. (ற-9)



தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வறுமையில் திறமை நிதிய ஆரம்ப நிகழ்வின் போது மாணவி ஒருவருக்கு உயர்தரப் பரீட்சை தொடர்பில் சங்கத் தலைவர் செ.அமரசேகரம் மற்றும் நெறியாளர் குழு உறுப்பினர் கா.ராஜ்மோகன் இருவரும் இணைந்து ஊக்குவிப்பு பணப்பரிசில் வழங்குவதைக் காணலாம். (ரி, 122)

# அனர்த்தங்களின் போது உங்களை பாதுகாப்பது எமது கடமையாகும்!



கடந்த வெள்ள அனர்த்தத்தின் போது எனது இரு வாகனங்களும் சேதமடைந்திருந்தன.

அச்சந்தர்ப்பத்தில் எனக்கு கைகொடுக்க ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் மோட்டர் ப்ளஸ் இருந்தது.

திருமதி.எஸ்.டி.பிரியதர்ஷினி (வர்த்தகர்) – புத்கமுவ



எனது வாகனமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அப்போது எனக்கு ஏற்பட்ட நஷ்டத்தை நிவர்த்தி செய்ய

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் மோட்டர் ப்ளஸ் உடனடியாக உதவியிருந்தது.


திரு.சமன்சிறி (வியாபாரி) – வெலிகம்பிட்டிய

## பல தலைமுறைகளின் நம்பிக்கை

## தசாப்தகால மேன்மை

தேசத்தின் மோட்டார் காப்புறுதி வழங்குநர்

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
MOTORPLUS



கடந்த வெள்ள அனர்த்தத்தினால் நாம் பரிதவித்த போது

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் மோட்டர் ப்ளஸ். நம்பிக்கைக்குரிய வகையில் எங்களுக்காக செயலாற்றியது.

அந்த மாற்றத்தை நாம் நன்கு அவதானித்திருந்தோம்

திரு.எம்.எம்.ஆர்.எஸ்.சேனாரத் – பிடகோட்டே



எனது வாழ்வில் நான் மேற்கொண்ட சிறந்த தெரிவு

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் மோட்டர் ப்ளஸ் காப்புறுதியை பெற்றுக் கொண்டமை

என்பது, வெள்ளத்தில் எனது வாகனம் சிக்கிய பின்னர் எனக்கு புரிந்தது.

திரு.வசந்த பெர்னாண்டோ – களனிமுல்ல

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
MOTORPLUS
யதார்த்தத்திற்கோர் காப்புறுதி

357357

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று






வெற்று அஸ்ட்ரா கொள்கலனை நன்கு கழுவி காய விடவும்



பின் அந்த கொள்கலனைச்சுற்றி ஒட்டப்பட்டுள்ள விளம்பர பட்டியை கழற்றி அதன் மறுபக்கத்தில் உங்கள் மகள் / மகனை க் கொண்டு அவரது கனவு பற்றிய சித்திரம் ஒன்றை வரைந்துகொள்ளவும்.

சித்திரம் வரையப்பட்ட விளம்பர பட்டியை மறுபடியும் அஸ்ட்ரா கொள்கலனில் வெளியே தெரியுமாறு ஒட்டவும்.



உங்களது பிள்ளையின் கனவுகளை நனவாக்கும் பயணத்தில் உங்களுக்கு ஏற்பட்ட ஓர் சிறந்த அனுபவத்தை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.






50 வெற்றியாளர்களுக்கு
2 இலட்சம் ரூபா வீதம்

**ரூ.10 மில்லியனை வென்றிடுங்கள்**

உங்கள் கடிதம் மற்றும்
சித்திரம் வரையப்பட்ட கொள்கலனை
**அஸ்ட்ரா 50ம் வருட கொண்டாட்டம்,**
**த.பெ.இல. 821, கொழும்பு**
என்ற முகவரிக்கு செப்டெம்பர் 15ம்
திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு

இப்பொழுது சந்தையில்
ரூ. 200/-

**போட்டிக்கான விதிகள்**

1. 2016 ஜுலை மாதம் முதல் 2016 செப்டெம்பர் 15ம் திகதி வரையுள்ள காலப்பகுதிக்குள் கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் மாத்திரமே போட்டியில் பங்குபெறும் தகுதியைப்பெறும்.
2. ஒருவர் எத்தனை ஆக்கங்களை வேண்டுமானாலும் அனுப்பலாம் ஆனால் அவர் ஒரு தடவை மாத்திரமே வெற்றியாளராக தெரிவு செய்யப்பெறுவர்.
3. இப்போட்டியானது மாகாண வருமானத்வரித்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகின்றது. இது சம்பந்தமாக பிந்திக்கிடைக்கும் எப்புகார்களும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. இப்போட்டி சம்பந்தப்பட்ட எந்தவொரு இறுதித்தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரம் யுனிலிவர் நிறுவனத்திற்கு மட்டுமே உண்டு.
5. 7 - 14 வயதுக்குற்பட்ட சிறுவர்கள் மாத்திரமே இப்பரிசுப் போட்டியில் பங்கு பெறும் தகுதியைப்பெறுவர்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

WP/GT/4637

**சிறுவர்களின் கனவுகள் மிகவும் வித்தியாசமானவை அவை சுயநலமற்றவை நற்குணங்கள் நிறைந்தவை**

இவ்வகையான 'கனவுகளை தேடிச்செல்வதற்காகவே நாம் வண்ணங்களோ வர்ணங்களோ அற்ற அஸ்ட்ரா டப்களை உருவாக்கியுள்ளோம். உங்கள் பிள்ளைகளின் இவ்வாறான கனவுகளை இந்த டப்பில் வரைய சொல்லுங்கள், அவற்றை த.பெ.இல.821, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சுயநலமற்ற அக்கனவுகளை நன்வாக்கி நற்குணங்களால் நிறைந்த ஓர் அழகிய இலங்கையை நாம் உருவாக்குவோம்.

மேவதிக விபராப்களுக்கு பத்திரிகையை பார்க்கவும்

1323

Follow us on :
https://www.facebook.com/AstraSriLanka

# சர்வதேச நாணய நிதிய பிரதிநிதியுடன் ஜனாதிபதி, பிரதமர் அவசர சந்திப்பு

கொழும்பு, ஓக. 14
சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மாக்ரட் ஹிரித்திரயாவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் அவசரமாகச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
பொது மக்களால் ஏற்றுக் கொள்ள கூடிய வகையிலான நிதிக் கொள்கையை முன்னெடுப்பது தொடர்பில் இந்தச் சந்திப்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னரான நிதி ஒழுக்கம் மற்றும் கொள்கைகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மாக்ரட் ஹிரித் திரயாவுக்குத் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.
நாட்டில் ஏற்பட்டுள்ள பெறுமதிசேர் வரி சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று எதிர் அரசியல் தரப்புகளில் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகின்ற நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மாக்ரட் ஹிரித்திரயாவை சந்தித்துள்ளனர்.
தேசிய வருமானம் இலக்குகள் மற்றும் சர்வதேச முதலீடுகளை மேலும் வலுவுடன் உள்வாங்கக் கூடிய நிதிச் சந்தையை ஸ்தாபித்தல் மற்றும் நம்பகத் தன்மையை வெளிப்படுத்தல் போன்ற சவால்களுக்கு மத்தியில் நல்லாட்சி அரசு பொருளாதார திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.
எவ்வாறாயினும் மக்கள் சார்ந்த நிதி கொள்கையினை எதிர்வரும் காலங்களில் பின்பற்ற உள்ளமை தொடர்பாக அரசு சர்வதேச நாணய நிதியத்தின், இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதியிடம் விளக்கமளித்தது. இந்தச் சந்திப்பு மிகவும் முக்கியமானது ஒன்று என்று சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பு அலுவலகம் தெரிவித்தது.
விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோரும் அதில் கலந்துகொண்டனர். (ற-4)






# மகிந்த அணியின் செயலுக்கு சபாநாயகர் கடும் அதிருப்தி

கொழும்பு, ஓக. 14
காணாமற்போனோர் அலுவலகம் நிறுவுவது தொடர்பான சட்டவரைவு மீது விவாதம் நடைபெறுகையில் சபைக்கு நடுவில் இறங்கி மகிந்த அணியினர் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டதற்கு சபாநாயகர் கரு ஜயசூரிய நாடாளுமன்றத்தில் கடும் அதிருப்தி வெளியிட்டார்.

காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டவரைவு மீது கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்தது. மகிந்த அணியினர் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர். கடும் சர்ச்சைக்கு மத்தியில் வாக்கெடுப்பின்றியே சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது.

இது பற்றி நேற்றைய தினமும் நாடாளுமன்றத்தில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதன்போது, கருத்து வெளியிடுகையிலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது, சட்டவரைவு மே மாதம் கொண்டு வரப்பட்டது. தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிரணிக்குக் கால அவகாசம் இருந்தது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்பதால் எதிரணிக்கு உரிய நேரம் வழங்குமாறு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வலியுறுத்தினேன்.

இருதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கும் செவிமடுத்து வருகின்றேன்.



எனவே, நேரம் குறித்து இங்கு குற்றச்சாட்டுச் சுமத்த முடியாது. வியாழக்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பெரும் கவலையடைகின்றேன். இது தொடர்பில் ஊடகங்களில் பெரும் பரப்புரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் பாடல் பாடியதாகவும் நடனமாடியதாகவும் தகாத வார்த்தைகள் பேசியதாகவும் ஊடகமொன்றில் செய்தி வெளியாகியது. இதைப் பார்த்ததும் எனக்கு மிகவும் வேதனையும் வெட்கமும் ஏற்பட்டது.

இந்த உயர்மதிப்பு மிக்க இடத்தில் இப்படி நடப்பதென்றால் நாம் அனைவரும் வெட்கப்பட வேண்டும். கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற சம்பவம் தொடர்பில் நானும் வெட்கப்பட வேண்டும். இரு தரப்புக்களையும் சேர்ந்த நீங்களும் வெட்கப்பட வேண்டும். ஏனெனில், மில்லியன் கணக்கான மக்கள் இதைப் பார்த்திருக்கின்றனர்.

நாடாளுமன்றநடவடிக்கைகளை முறையாக நடத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கௌரவமாகக் கேட்டுக் கொள்கிறேன். அரசியலில் யாதேனுமொரு வகையில் புரட்சிகரமாகச் செயற்பட வேண்டும் என்றால், லிப்டன் சுற்றுவட்டம், கோட்டை ரயில் நிலையம், மருதானை நிலையம், ஹைட் பார்க் போன்ற இடங்கள் அதற்கு இருக்கின்றன. ஆனால், இது அதற்கான இடமில்லை.

சிங்கள மொழியில் சொல்வதென்றால் கழிவறையில் செய்வதை சாப்பாட்டு அறையில் செய்தால் அது தவறு. ஆகவே, மதிப்புக்குரிய உறுப்பினர்கள் என்று அழைக்கும் வகையில் இந்தச் சபையில் நடந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன் - என்றார் சபாநாயகர். (வ-5)

## தமிழரசு

கடந்த காலங்களில் சிலருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அது தொடர்பில் இறுதி முடிவு எடுப்பது உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கட்சியின் மூத்தநிலை உறுப்பினர் ஒருவர், இந்தக் கட்சியில் இனி தன்னால் தொடர்ந்து அங்கம் வகிக்க முடியாது என்றும், இதுவே தான் கலந்து கொள்ளும் கடைசி நடுவண் செயற்குழுக் கூட்டம் என்றும் தனக்கு மிக நெருக்கமானவர்களிடம் கடந்த சில நாள்களாகத் தெரிவித்து வருகின்றார். இதனால் இன்றைய கூட்டம் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ-5)

## குடும்பத்

னத்தின் சாரதியை பொலிஸார் கைது செய்யவேண்டுமெனக் கோரி உயிரிழந்தவரின் உறவினர்கள் நேற்று வவுனியா வைத்தியசாலையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பூவரசங்குளம் 8ஆம் கட்டையைச் சேர்ந்த குமாரசிங்கம் ரமணகுமார் (வயது - 39) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தவராவார்.

வவுனியா - மன்னார் வீதியூடாக நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவரை எதிரே வந்த ஹைஏஸ் வாகனம் மோதித்தள்ளியது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் உடனடியாக வவுனியா பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் வவுனியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்று நண்பகல் வரை விபத்துடன் தொடர்புடைய வாகனத்தின் சாரதியைக் கைது செய்யவில்லை. உயிரிழந்தவரின் சடலத்தைப் பொறுப்பேற்பதற்கு வவுனியா வைத்தியசாலைக்கு வருகை தந்த உறவினர்கள், வாகனத்தின் சாரதியைக் கைது செய்தால் மாத்திரமே சடலத்தைப் பொறுப்பேற்பதாகத் தெரிவித்து வைத்தியசாலை முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக அங்கிருந்தவர்களால் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து அவரின் அறிவுறுத்தலில் விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் ஹைஏஸ் வாகனத்தின் சாரதியை வவுனியா பொலிஸார் கைது செய்தனர். இதன் பின்னரே உயிரிழந்த குடும்பத்தலைவரின் சடலத்தை அவரது உறவினர்கள் பொறுப்பேற்றனர். (வ-21)

## செஞ்சோலை

தாக்குதலில் 61 மாணவிகள் உயிரிழந்தனர். 130 பேர் வரையில் படுகாயமடைந்தனர்.

கொடூரச் சம்வம் நடந்தேறி இன்றுடன் பத்து ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதனை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நினைவேந்தல் நிகழ்வு, யாழ். கோட்டை முனியப்பர் கோயில் அருகில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதேபோன்று ஜேர்மனியிலும், ஜேர்மனி தமிழ் இளையோர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளது. (வ-5)

## 8,500

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம் அமைந்திருந்த 6 ஆயிரம் ஏக்கர் பிரதேசம் உள்ளிட்ட மேலும் சில இடங்கள் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து மாவட்டச் செயலகத்திடம் கையளிப்பது தொடர்பில் இணக்கம் ஏற்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சிப் பகுதியில் அமைந்துள்ள விவசாயப் பண்ணையின் ஒரு பகுதியுடன், பரவிப்பாஞ்சானில் கணிசமான பகுதி உள்ளிட்ட சில இடங்கள் விடுவிப்பது தொடர்பில் இணக்கம் ஏற்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், முள்ளியவளைப் பகுதிகளில் சுமார் ஆயிரத்து 100 ஏக்கர் முதல் கட்டமாக விடுவிப்பதற்கான இணக்கம் காணப்பட்டது.

இணக்கம் காணப்பட்ட பிரதேசங்களை தமது நடவடிக்கைகள் பூர்த்தியானதும் மாவட்ட செயலர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கையை இராணுவத்தினர் முன்னெடுப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் செட்டிகுளம் பிரதேசமானது தமக்குச் சொந்தமென வனப் பகுதியினர் கோருவதாகப் படையினரால் சுட்டிக்காட்டப்பட்டது. அது மாவட்ட நிர்வாகத்திற்கு உட்பட்டமையினால், அதனை மாவட்டச் செயலரிடமே கையளியுங்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் படை அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார். (வ-5-101)

## யாழ்.

வருகை தரவுள்ளார். இந்தப் பயணத்தின் போது, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை, கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் பி.ப. 2.30 மணிக்குச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து பி.ப. 4.30 மணிக்கு, ஜெற்விங் விடுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை, கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்தச் சந்திப்புக்களைத் தொடர்ந்து இரவு உணவுடன், சிவில் சமூகப் பிரதிநிதிகளை தற்போதைய அரசியல் நிலமைகள், அமெரிக்காவின் வகிபாகம் தொர்டர்பில் சிறப்புக் கலந்துரையாடல் நடத்த அமெரிக்கத் தூதுவர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (வ-5)

## பரவிப்பாஞ்சான்

தெரியப்படுத்தியிருந்தனர்.

திட்டமிட்டவாறு நேற்றைய தினம் தமது தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர். இரணைமடு இராணுவ முகாமில் இருந்து தளபதிகள் வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினர். இன்று (நேற்று) செல்லுமாறும் திங்கள் முடிவு தெரிவிப்பதாகவும் மக்களிடம் இராணுவத்தினர் கோரிக்கை விடுத்தனர். தாம் எத்தனை திங்களைத் தாண்டி வந்துவிட்டோம், காணி விடும் வரையில் தாம் செல்லப்போவதில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

மக்களுடன் சமரசம் பேசுவதற்கு வந்த இராணுவ அதிகாரிகள் மதியம் 1.30 மணியளவில் அங்கிருந்து சென்றனர். இதன் பின்னரும் மக்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இரவு 7 மணியளவில் மக்கள் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்தைத் தவிர ஏனைய இடங்களில் மின் விளக்குகள் ஒளிரவிடப்பட்டிருந்தன. இருளிலும் மக்களின் போராட்டம் தொடர்ந்தது. (வ-5-ரி3)

## காணி

எந்தவொரு நாடும் தனிமைப்பட்டிருப்பது சாத்தியமில்லை. ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டுடன் ஏதோவொரு வகையில் தொடர்பில் இருக்கின்றன. நாம் எல்லோரும் இந்தியாவில் இருந்து வந்தவர்கள்தான். தமிழ் மக்களும், சிங்கள மக்களும், இந்து மதமும், பௌத்த மதமும் இந்தியாவில் இருந்து வந்ததுதான்.

தமிழ் மக்களுக்கு ஆங்கிலம் கற்பதைவிட சிங்களம் கற்பது இலகு. சிங்கள மக்களுக்கும் ஆங்கிலம் கற்பதை விட தமிழ் கற்பது இலகுவானது. இரு மொழிகளும் சம காலத்தில் உருவானவை. இந்த நாட் டில் வாழுபவர்கள் எல்லோரும் சகோதர சகோதரிகளே. ஒரே தேசத்தை உருவாக்குவதே எனது நோக்கு.

தமிழ் மக்களின் காணிகளை இந்திய இராணுவத்தினர் முன்னர் கைப்பற்றினர். பின்பு தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றினார்கள். அதனைத் தொடர்ந்து ஏனைய ஆயுதக் குழுக்கள் கைப்பற்றின. இறுதியில்தான் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் அவர்களிடமே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் எனது எதிர்பார்ப்பு" - என்றார். (வ-5)

## கடல்

னர்.

இதனையடுத்து படகு நெடுந்தீவுக்குத் திருப்பப்பட்டது. அங்கு அதிகாரிகள் தரையிறங்கினர். கடற்கொந்தளிப்பு ஓரளவு குறைந்த பின்னர் அங்கிருந்து, குறிகாட்டுவான் நோக்கி கடற்படையினரின் படகில் அரச அதிகாரிகள் திரும்பி வந்தனர். (வ-5-101)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
மனோன்மணி கதிர்காமநாதன்



தோற்றம்
15.02.1939

மறைவு
16.07.2016

திருமதி மனோன்மணி கதிர்காமநாதன் கடந்த 16.07.2016 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீரஞ்சலி, துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (13.08.2016) சனிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (15.08.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெரியநாவலடி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

தேவை

ஹாட்வெயார் நிலையம் ஒன்றிற்கு கொக்குவில்-மருதனார்மடத்திற்கு உட்பட்டோர் தேவை.

தொடர்பு: 076 7528957

வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் புடைவை நிலையம் ஒன்றிற்கு இருபாலாரும் தேவை. அனுபவமுள்ளவர்கள் மற்றும் பழக விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 076 7528957

IPS

இலவச கணினி வகுப்புக்கள்
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 20/08/2016
சனிக்கிழமை

IPS கல்வி நிறுவனம் திருநெல்வேலி (சாயி சமித்திக்கு அண்மையில்) TP: 076 6852529

# சாள்ஸ் எம்.பி. மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சபாநாயகரிடம் கோரினார் அமைச்சர் ரிசாத்

கொழும்பு, ஓக. 14

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தை மீறி எனது சிறப்புரிமையைக் கேள்விக்குட்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சபாநாயகரிடம் நேற்று கோரிக்கை விடுத்தார் அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

"மகிந்தவின் மகன் என்று தன்னைக் கூறித் திரிந்தவர், நீதிமன்றத்துக்கு கல்லெறிந்த குற்றச்சாட்டு மற்றும் ஊழல், மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள அமைச்சர் ரிசாத் பதியுதீன் வடக்கு மாகாண மீள்குடியேற்ற செயலணியில் இணைத்துக் கொள்ளப்பட்டமையானது செயலணி மீது தமிழ் மக்களுக்கு சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கடந்த புதன் கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்ததார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தனது சிறப்புரிமை மீறப்பட்டமை தொடர்பில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் சிறப்பு உரை நிகழ்த்தினார். இதன்போது அவர் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் கடந்த புதன் கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி நேரத்தின் போது, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், நான் சபையில் பிரசன்னமாகி இல்லாத நிலையில், நாடாளுமன்ற நிலையியல் கட்டளை தொடர்பாக என்னுடைய சிறப்புரிமைகளை மீறி பல்வேறு அவதூறான விடயங்களைத் தெரிவித்ததோடு, இந்த உயரிய சபையை பிழையாக வழி நடத்தினார்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள் சட்டத்தின் 84 ஆம் பிரிவில் பல உப பிரிவுகளை இவர் பகிரங்கமாகவே மீறி, எனது சிறப்புரிமையை இந்தச் சபையில் அவமதித்தமையானது, என்னை மாத்திரமின்றி பல லட்சக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள எனது கட்சியின் ஆதரவாளர்களினதும் மனதைப் புண்படுத்தியுள்ளமை மிகவும் மோசமான ஒரு செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது.

என்னை மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அவரது மகனென்று நான் கூறித் திரிந்ததாக என் மீது அபாண்டங்களைக் கூறியுள்ளார். எனது தந்தையின் பெயர் அப்துல் ரஹ்மான் பதியுதீன் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸுக்கும் இந்த சபைக்கும் தெளிவாகச் சொல்லிவைக்க விரும்புகின்றேன். அவரது இந்தக் கூற்றின் தாற்பரியம் எவ்வளவு பார்தூரமானது என்பதை இந்தச் சபை புரிந்து கொள்ள வேண்டும்.

நீதிமன்றத்துக்குக் கல்லெறிந்தவர் என என்னை இந்த உயர் சபையில் கூறி, ஒரு அப்பட்டமான அவதூறின் மூலம் இந்தச் சபையையும் நாட்டு மக்களையும் பிழையாக வழிநடத்த இவர் முயற்சித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக நாட்டின் எந்தவொரு நீதிமன்றத்திலும் எனக்கெதிராக வழக்குத் தொடரப்படவில்லை என்பதையும், எந்தக் குற்றச்சாட்டும் இல்லை என்பதையும், இது ஓர் அப்பட்டமான பொய் என்பதையும் இந்த உயர் சபையின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக எனது பெயரைக் கூறி நிதி மோசடிக் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக என்னைப் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் கூறியுள்ளார். ஏறத்தாழ இரண்டு கோடியே பத்து இலட்சம் மக்கள் வாழும் இந்த நாட்டில் எனது தனிப்பட்ட அரசியல் வளர்ச்சி மற்றும் எனது கட்சி மூலின மக்கள் மத்தியிலும் பெற்றுவருகின்ற அமோக வரவேற்பு மற்றும் அதன் வளர்ச்சி என்பவற்றை சகித்துக்கொள்ள முடியாது காழ்ப்புணர்ச்சியுடன் கூடிய ஒரு சிறுபான்மை கட்சியில் தோல்வியுற்ற வேட்பாளர் ஒருவரால் என்னைப்பற்றி முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எதுவும் எந்தவொரு விசாரணைகளும் மேற்கொள்ளப்படாமல்- நிரூபிக்கப்படாத நிலையிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் சம்பிரதாயங்களை மீறி இவ்வாறு உரையாற்றி இருப்பதானது என்னையும் எனது மக்களையும் அவமதிக்கின்ற செயலாகவே கருதுகின்றேன் - என்றார்.

(வ-5)

**வீடு வாடகைக்கு தேவை**

சிறிய குடும்பத்திற்கு மாநகரசபை எல்லைக்குள் வசதியான வீடு தேவை. கே.கே.எஸ் வீதி, பலாலி வீதிகளுக்கருகில் விரும்பத்தக்கது.

தொடர்பு: 076 8280412

**பணிப்பெண்தேவை**

வீட்டில் தங்கி இருந்து வேலைசெய் வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

T.P : 077 2987506

**SINHALA LANGUAGE COURSE**

மிகக் குறுகிய காலத்தில் சரளமாக எழுதப். பேசக் கூடிய சிங்களப் பாடநெறி

ஆரம்பம் : 14.08.2016 காலை 8.30

E - CITY COLLEGE OF ENGLISH

இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 7106/ 077 340 0418 / 077 061 0271

**காணி விற்பனைக்கு**

நவாலி மேதர் CHURCH இற்கு சமீபமாக 9 பரப்புக் காணி விற்பனைக்கு. (ஒரு பரப்பு 290,000/-) மற்றும் ஆனைக்கோட்டை பொன்னையா வீதிக்குள் 3 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 6567447

**தையல்பெண்கள் தேவை**

வீட்டில் இயங்கும் தையலகம் ஒன்றிற்கு தைக்கக் கூடிய பெண்கள் தேவை. (கட்டிங் தெரியவேண்டிய அவசியம் இல்லை)

இடம்:-கொக்குவில் 0766399277

**வீடுகள் காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாண நகரில் வேம்படி பாடசாலைக்கு அண்மையிலும் Station Road இலும் திருநெல்வேலியிலும் 3வீடுகள்-கோண்டாவில் பகுதியில் 1 1/2, 5, 3 பரப்புக் காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 7037058

**வீடு வாடகைக்கு தேவை**

5பேர் கொண்ட உத்தியோகம் பார்க்கும் குடும்பத்திற்கு நல்லூர், திருநெல்வேலி, தட்டாதெரு,நாவலர் றோட், கந்தர்மடம் ஆகிய பகுதிகளில் இணைந்த குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 7590496

**வேலை வாய்ப்பு**

நாள் சம்பளம் 1300-1600-1800 (With OT) பொதியிடல், களஞ்சியப்படுத்தல் போன்ற பிரிவுகளுக்கு (Busicut, Ice-cream, Noodless, Suasages)

076 6942385, 077 5015666, 076 9305146

விமான நிலையம் ,Catering,Kitchen,Loaundary, Cleaning, Security, Cargo 35,000-75,000 சம்பளம், இலவச உணவு, தங்குமிடம்.

076 6235152

ஐஸ்கிறீம், ஜாம், டொபி, சொக்லட் அனைத்துப் பிரிவுகளிலும் 38,000 மேல் சம்பளம், உணவு, தங்குமிடம் இலவசம்.

077 8181513, 072 2467945, 076 5587807

இலவசசாப்பாடு, தங்குமிடம், போக்குவரத்து, நாள் சம்பளம், கிழமை, மாதச் சம்பளம், நாள் சம்பளம் 1600 (With OT)

075 2869947, 076 9804237, 076 8567150

**ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பதவி (MLT)**

யாழ்ப்பாணம் பரமேஸ்வராசந்தியில் இயங்கும் நொதன் சென்றல் வைத்தியசாலைக்கு இலங்கை வைத்திய கவுன்சிலில் (SLMC) பதிவுசெய்த ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் முழுநேர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தெரிவு செய்யப்படுபவருக்கு ரூபா 40000/= குறையாத மாதாந்த அடிப்படை வேதனம் வழங்கப்படும். இப்பதவி நிரந்தரமானதாகும்.

விண்ணப்பங்கள் நேரிலோ அல்லது
முகாமைத்துவப் பணிப்பாளர்.
நொதன் சென்றல் வைத்தியசாலை
342, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு
அனுப்பிவைக்கவும்.

முகாமைத்துவப்பணிப்பாளர்.

**புங்குடுதீவு-நயினாதீவு பல நோ.கூ. சங்கம்**
**புதிய நிர்வாகத் தெரிவு**

மேற்படி நிர்வாகத்தெரிவு 13/8/2016 சனிக்கிழமை அன்று இடம் பெற்றது. மொத்தமாக 7 பேரை மட்டும் கொண்ட இயக்குனர் சபைக்கு 15 பேர் போட்டியிட்டனர். இதில் பின்வருவோர் வாக்கெடுப்பு மூலம் புதிய இயக்குனர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு வே.சு.கருணாகரன்- தலைவர்
செல்வி பூ. அன்பரசி- உபதலைவர்
திரு நா. நாகராசா- இயக்குனர் சபை உறுப்பினர்
திரு தி.கோபாலசாமி- இயக்குனர் சபை உறுப்பினர்
திரு வை.சுதாகர்-இயக்குனர் சபை உறுப்பினர்-நயினாதீவு
திரு சி. திவாகரன்-இயக்குனர் சபை உறுப்பினர்
திருமதி ச. கவிதா-இயக்குனர் சபை உறுப்பினர்

நிர்வாக சபை

**STUDY IN CANADA**

உங்கள் கனவு நாடு கனடாவா ?
நேர்மையான முறையில் கனவு நாட்டினை சென்றடைய இன்றே நாடுங்கள்

**WINSTAR VISA CONSULTANT**
கனடாவில் உயர்கல்வியை தொடர அரிய வாய்ப்பு

* HOTEL MANAGEMENT
* ARTS & SCIENCE (BAS)
* BIO MEDICAL SCIENCE (B.sc)
* LAW & ARTS
* NURSING
* COMPUTER SCIENCE

அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் மூலமான ஆங்கில வகுப்புக்கள்.
இம்முறை A/L எழுதியவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
சிறந்த ஆலோசனைகளை பெற விரும்புவோர்
O/L தகைமைச்சான்றிதழ்கள், அடையாளஅட்டை பிரதியுடன் நேரில் வரவு.
(ஆலோசனைக்கட்டணம் உண்டு)

**WINSTAR VISA CONSULTANT**
106, தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
070 2363676

## பசில் ராஜபக்சவின் காணிகளை பறிமுதல் செய்ய அரசு திட்டம்

கொழும்பு, ஓக. 14

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச சட்டவிரோதமான முறையில் சம்பாதித்ததாகக் கூறப்படும் பணத்தின் மூலம் வாங்கிய காணிகள் அனைத்தையும் கைப்பற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதுகுறித்து தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அமைச்சரவைப் பத்திரமொன்றை முன்வைத்து உரையாற்றிய சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, கட்டானவிலுள்ள முன்னாள் அமைச்சருக்குச் சொந்தமான நிலத்தைக் கையகப்படுத்தி பொலிஸ் பயிற்சிக்கல்லூரியை அமைப்பதற்கான யோசனையை முன்வைத்தார். மல்வானையில் களனி ஆற்றின் அருகில் பசில் ராஜபக்சவுக்குச் சொந்தமான 16 ஏக்கர் நிலம் காணப்படுகின்றது. இந்த நிலமே பொலிஸ் பயிற்சிக்கல்லூரியை அமைப்பதற்குச் சிறந்தது. கட்டானவிலுள்ள நிலத்தைவிட இதனை இலகுவாக அரசு கையகப்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த யோசனையை ஆதரித்துள்ளதுடன், இந்த நிலங்கள் மக்களைத் துன்புறுத்தி வாங்கப்பட்டவை. அவற்றை உடனடியாகக் கையகப்படுத்தி பொலிஸ் பயிற்சிக் கல்லூரியை அமையுங்கள் எனவும் ஜனாதிபதி பணித்தார்.

இதேவேளை, மாத்தறையில் பிரவுண் ஹில் நிலத்தையும் அரசு கையகப்படுத்தவுள்ளது: இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பசில் ராஜபக்சவின் நெருங்கிய உறவினருக்குச் சொந்தமான பிரவுண் ஹில் நிலத்தை ஹோட்டல் பயிற்சிக் கல்லூரியை அமைப்பதற்குப் பயன்படுத்தவேண்டும் எனக் குறிப்பிட்டார். இதன் பின்னர் ஜனாதிபதி இதற்கும் அனுமதி வழங்கினார். இதனடிப்படையில் அரசு முன்னாள் அமைச்சருக்குச் சொந்தமான இரு நிலங்களையும் கையகப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

(வ-4)

# நல்லாட்சி அரசின் நல்லிணக்க முயற்சிக்கு நோர்வே பாராட்டு

## *மைத்திரியிடம் நேரில் தெரிவித்தார் அந்த நாட்டு பிரதமர்*

கொழும்பு, ஓக. 14

நல்லாட்சி அரசு முன்னெடுத்து வரும் நல்லிணக்கச் செயற்பாடுகளை நோர்வேப் பிரதமர் எர்னா சோல்பேர்க் பாராட்டியுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்த போதே அவர் இந்தப் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

சுற்றுலா விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கை வந்த நோர்வேப் பிரதமர், ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோரை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். நேற்றுமுன்தினம் காலை ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நீர் மின்சார உற்பத்தி, மீன்பிடித் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையை முன்னேற்றுவதற்கு தொழிநுட்ப உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி சிறிசேன முன்வைத்த கோரிக்கைக்கு நோர்வேப் பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.

இலங்கைக்கும் நோர்வே அரசுக்கும் இடையே இருந்துவரும் வரலாற்று ரீதியான நட்புறவு தொடர்பாக நினைவு கூர்ந்த தலைவர்கள் இருநாடுகளுக்கிடையேயான தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதற்கு விரிவாக கலந்துரையாடினர். இரு நாடுகளுக்கிடையேயும் புதிய உறவுகளை கட்டியெழுப்புவதற்கு இந்தச் சந்திப்பு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்றும் தெரிவித்தனர்.

இலங்கையின் இயற்கை எழில் மற்றும் உபசரிப்பு தொடர்பில் நோர்வேப் பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டார். நோர்வே நாட்டின் பிரதான சுற்றுலா மத்திய நிலையமாக இலங்கையை மாற்றுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை தற்போது நடுத்தர வருமானம் பெறும் நாடாக இருக்கின்றது. நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதை பார்க்கிலும் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக ரீதியான ஒத்துழைப்புகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் நோர்வேப் பிரதமர் தெரிவித்தார்.

புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் நோர்வே பல்வேறு புதிய முதலீடுகளை இலங்கையில் ஆரம்பித்தது. எதிர்காலத்தில் இன் னும் பல நேரடி வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையின் எழுத்தறிவு வீதமும் கல்வியறிவும் உயர்ந்த மட்டத்தில் இருக்கின்றது. இது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும் என்றும் நோர்வேப் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் ஏற்றுமதித்துறையின் அபிவிருத்திக்காக வெளிநாட்டு உதவிகளை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். இதன் மூலம் பொருளாதார பலத்தை அதிகரித்து, நாட்டை அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்ல எதிர்பார்ப்பதாகவும் மைத்திரிபால தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன் ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்டுள்ளதன் காரணமாக இலங்கைக்கு உதவி கிடைக்கப் பெற்றுள்ளது. எதிர்காலத்தில் நன்னீர், உவர்நீர் மீன் தொழிற்துறையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கையின் ஆடைத் தொழிற்துறை, இரத்தினக்கல், ஆபரணங்கள், வெட்டு மரம் ஆகிய உற்பத்திகள் உயர்ந்த தரத்துடன் உள்ளது. இதற்கு அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத்தருமாறும் ஜனாதிபதி நோர்வேப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை அமைதியும் சுதந்திரமும் மிகுந்த ஒரு நாடு என்ற வகையில் அபிவிருத்தியை நோக்கி பயணித்து வருவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, மீண்டும் நாட்டுக்கு பயணம் மேற்கொண்டு அந்தப் பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு நோர்வேயில் வதியும் இலங்கையர்களிடம் கேட்டுக் கொள்வதாகவும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார் – என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# சித்த மருத்துவத்துறை அபிவிருத்திக்கு திட்டங்களை முன்வைக்குமாறு கோரல்

வடக்கு மாகாணத்தில் சித்த மருத்துவத் துறைசார் அபிவிருத்தியை செய்வதற்கான திட்டங்களை முன்வைக்குமாறு உள்ளூராட்சி சபைகளிடம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் மருத்துவர் திருமதி சியாமா துரைரட்ணம் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு ஊடாக சித்த மருத்துவ துறைசார் அபிவிருத்தி திட்டங்கள் முன்மொழியப்பட்டு வருகின்றன. திட்டங்களை முன்வைத்து, அதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய நிதியை நடுவண் அரசின் சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

உள்ளூராட்சி சபைகள் தமக்கான திட்டங்களை திட்டத் தலைப்பு, திட்டத்திற்கான இடம், திட்டத்தின் பெறுபேறு மற்றும் அவதானம், பயனாளிகள், தேவையான நிதி விவரங்களை உள்ளடக்கிய முன்மொழிவுகளை நியாயப்படுத்தி முன்வைக்கவேண்டும் என அவர் கேட்டுள்ளார். (வ-50)

# உலக ஏற்றுமதி மாநாடு இம்முறை கொழும்பில்

உலக ஏற்றுமதி அபிவிருத்தி மாநாடு இந்த முறை இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு எதிர்வரும் ஒக்டோ பர் மாதம் 12ஆம் 13ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற வுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்தது.

வர்த்தக தொடர்புகள், போட்டித் தன்மை, மாற்றங்கள் என்ற தொனிப் பொருளில் இந்த இரண்டு நாள் மாநாடு நடை பெறுகிறது. மாநாட்டில் உள் நாட்டு, வெளிநாட்டு பிரதிநிதிகள் 600 பேர் வரை யில் பங்கேற்கவுள்ளனர்.

பன்னாட்டு வர்த் தக நிலையம் மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வணிக அமைச்சு டன்இணைந்து ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஊடாக மாநாட்டுக் கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப் படுகிறது.

# அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஓக. 14

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான போராட்டங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆயினும் அவர்களின் விடுதலையானது கேள்விக் குறியாகவே உள்ளது.

இவ்வாறு தெரிவித்தது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் அமைப்பு.

ஆட்சிமாற்றத்தின் பிரகாரம் 36 அரசியல் கைதிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆயினும் விடுதலை செய்த அரசியல் கைதிகளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தி 15 அரசியல் கைதிகள் புனர்வாழ்வு பெறவேண்டும் என்று நீதித் துறையினால் தெரிவிக்கப் பட்டது.


வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீண்டும் ஒரு பெண் உள்ளடலங்கலாக 23 பேர் கைது செய்யப் பட்டுள்ளார்கள். இதில் 8 பேர் தற்போதும் பூசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

நல்லிணக்கம் பேசும் அரசிடமும், அரசியல்வாதிகளிடமும் தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் பேசி அரசியல் கைதிகளின் விடுதலையை உறுதி செய்ய வேண்டும் என அந்த அமைப்புக் கேட்டுக்கொண்டுள்ளது. (வ-ரி)

# மரண அறிவித்தல்

திருமதி
**மகேஸ்வரி(மனோன்மணி)கந்ததாஸ்**

மலர்வு 18 . 08 . 1942



உதிர்வு 13 . 08 . 2016

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கந்ததாஸ் நேற்று (13.08.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-செல்லம் தம்பதியரின் பாசமிகு இளைய மகளும் கந்ததாஸின் பாசமிகு மனைவியும் காலஞ் சென்றவர்களான ஸ்தபதி மார்க்கண்டு (பிரபல சிற்பாசாரியார்), நடராசா, இராசம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற இரஞ்சிதமலர் மற்றும் ஸ்தபதி இரவீந்திரராசா (கஸ்தூரி மருந்துக் களஞ்சியம், திருகோணமலை), புனிதமலர், புஸ்பமலர் (இந்தியா), வசந்தமலர்(லண்டன்)ஆகியோரின் பாசமிகு தாயாரும் துஷ்யந்தன்(வியாபாரம்), மனோரஞ்சன்(கௌரி அகம் திருகோணமலை), சுபாசினி, துளசிதரன்(லண்டன்) ஆகியோரின் மாமியும் துளசிதரன்-புவனா(ஆஸ்திரேலியா), ஸ்ரீ சாஸ்வதனன், சர்வதனன்,கலாநிதி, பவதாரணி, செந்தூரன்(லண்டன்), கோகிலதர்சன்(இந்தியா), சுவீஹரன், சுபர்ணிகா, சாயிநாத்(லண்டன்), சாய்வரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2016) ஞாயிற்றுக்கிழமை அராலி மத்தியில் உள்ள அவரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூணாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி மத்தி,வட்டுக்கோட்டை.**

தகவல்: குடும்பத்தினர்.
072 5493236

# மரண அறிவித்தல்கள்

## R.இராமசுவாமி (இதயன்ஸ் - பெருமாள்)



R.இராமசுவாமி (இதயன்ஸ் பெருமாள்) காலமானார்.

அன்னார் இதயன்ஸ் முன்னாள் உரிமையாளரும் திரு. திருமதி யோக்கீம் பிள்ளையின் மருமகனும் சவுந்தரியின் அன்புக்கணவரும் சங்கீதா (ஜேர்மனி), உமாசங்கர், இதயசங்கர் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்ருட்பால (ஜேர்மனி), காயத்திரி ஆகியோரின் மாமனும் சௌமியாவின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்கம் இன்று (14.08.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் மந்திகை மடத்தடி சேமக்காலையில் இடம்பெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
குடும்பத்தினர்.
077 7602232

## ஐயாத்துரை செல்வரட்ணம்

(ஓய்வு பெற்ற இலங்கைப் போக்குவரத்துச்சபை சாரதி)

தோற்றம் 19 . 06 . 1953



மறைவு 13 . 08 . 2016

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை செல்வரட்ணம் நேற்று (13.08.2016) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்புமருமகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் சரண்ராஜ் (யாழ். பல்கலைக் கழக 4ஆம் வருட அரசியல்துறைமாணவன்) இன் அன்புத் தந்தையும் நவரத்தினம், இராசரத்தினம், விக்கினேஸ்வரன் (CTB, DRIVER), இராஜேஸ்வரி, விக்னேஸ்வரி, ஜெகதீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தேவரஞ்சன் (பொறியலாளர் - சிங்கப்பூர்), தேவகஜன் (லண்டன்), மகிந்தா (லீண்டன்), வசந்தரூபன் (பிரான்ஸ்), யசோதரன், சுகந்தி (சுவிஸ்), வனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சித்தப்பாவும் எழில்மதியின் அன்புப்பெரியப்பாவும் மயூரா (சமுர்த்தி உத்தியோகத்தர்), கவிதா (இலங்கை நீதிபதிகள் நிறுவனம் கொழும்பு) ஆகியோரின் அன்புமாமனும் சிவபாக்கியம், தேவி, சகுந்தலாதேவி, புஸ்பராணி, கதிர்காமநாதன், சிவராஜா, திருக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.08.2016) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. 077 078 1517


தகவல்
குடும்பத்தினர்.

## சில்வா அபார சதம் மீண்டது இலங்கை

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை நாள் முடிவில் 214-5 என்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. வேகப் பந்து வீச்சாளரான ஸ்ராக் ஆரம்ப இலக்குகளை தகர்த்தெறிந்தார். சில்வா ஓட்டமெதனையும் பெறவில்லை. கருணாரத்ன 7 ஓட்டங்களைப் பெற்றார். குசல் ஜெனித் பெரேரா 16 ஓட்டங் களுடன் லையனின் பந்துவீச்சில் சிக்கினார். மென்டிஸ், மத்தியூஸ் இருவராலும் முடிந்தது வெறும் ஒரு ஓட்டமே. தற்போது இலங்கை 26-5. டி சில்வாவுடன் இணைந்தார் சந்திமல்.

ஆரம்பத்தில் மிகவும் நிதானித்து பந்துகள் பழக்கப்பட படிப்படியாக சராசரி ஏற்றம்பெற ஆரம்பித்தது. மேலதிக இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை. இருவரும் அரைச்சதம் கடந்தனர். ஸ்ராக், ஹசில்வூட், லையன், ஹோலண்ட், மார்ஸ் என்று அத்தனை பந்துவீச்சாளர்களையும் பயன்படுத்திவிட்டார் சிமித். இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டபாடில்லை. சதம் கடந்தார் டி சில்வா. நடப்பு வருடத்தில் நெருக்கடி நிலமைகளில் பெறப்பட்ட முக்கியமான சதங்களில் இதுவும் ஒன்று. சந்திமல் அரைச்சதம் கடந்தார். நாள் முடிவுவரை இணைப்பாட்டம் பிரிக்கப்படாத நிலையில் இலங்கை 214-5 என்றுள்ளது. சில்வா 116 ஓட்டங்களுடனும், சந்திமல் 64 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். (ம)



## மாகாண மட்ட கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 14

கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட மாகாணமட்ட கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அணிக்கு 11 வீரர்கள் கொண்டதாக நடைபெறவுள்ள இந்தத் தொடரின் ஆட்டங்கள் அனைத்தும் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக மைதானத்திலேயே நடைபெறும். இந்தத் தொடருக்கான கலந்துரையாடல் நாளை காலை 10.00 மணிக்கு சக்திவேல் விளையாட்டுக் கழகத்துக்கு அருகாமையிலுள்ள மகாத்மா முன்பள்ளியில் நடைபெறவுள்ளது. தொடரில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் இந்தக் கலந்துரையாடலின் போது தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். (ம)



## ரியோ ஒலிம்பிக்கில் ஐ.எஸ். அமைப்பின் சதி வெற்றிகரமாக முறியடிப்பு

ரியோ ஒலிம்பிக் தொடரில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பினரின் சதிச் செயல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாக பிரேஸில் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ரியோ ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் தாக்குதல் நடத்துவோம் என்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பகிரங்க எச்சரிகை விடுத்தனர். இதனால் கிட்டத்தட்ட 90 பொலிஸாரும் படை வீரர்களும் ஒலிம்பிக் கிராமத்துக்கும், வீரர்களுக்கும், ரசிகர்களுக்கும் பாதுகாப்பு வழங்குகின்றனர். ஒலிம்பிக் கிராமத்துக்குள் உட்செல்லும், வெளிவரும் ஒவ்வொருவரினதும் அசைவுகள் நுணுக்கமாகக் கண்காணிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. ரியோ டி ஜெனிரோ நகர், ஒலிம்பிக் கிராமம், விளையாட்டு அரங்கு என ஒட்டுமொத்தமாக ஒரு லட்சம் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. தொலைபேசி உரையாடல்களும் கவனிக்கப்படுகிறது. இவற்றையும்,தாண்டி ஒலிம்பிக் தொடரில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட 12 பேர் நேற்று அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுக்கும் ஐ.எஸ். அமைப்பினருக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஒலிம்பிக் கிராமத்துக்கு அருகில் தாக்குதலொன்றை நடத்துவதற்கு இவர்கள் திட்டமிட்டிருந்தனர். இவர்களின் தொலைபேசி உரையாடல்களை வைத்து மிகவும் இரகசியாமாகப் பின்தொடர்ந்தே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது என்று பிரேஸில் பொலிஸார் தெரிவித்தனர். ஒலிம்பிக் தொடர் ஆரம் பிப்பதற்கு முதல் நாள், தொடரைக் குழப்ப சதிச் செயல்செய்ததாகக்கூறி 9 பேர்கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

## பெல்ப்ஸை வீழ்த்தினார் சிங்கப்பூர் வீரர்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் பட்டர்பிளை பிரிவு நீச்சலில் சிங்கப்பூரின் இளம் வீரர் ஜோசெப் ஸ்கூலிங் அமெரிக்க நீச்சல் ஜாம்பவான் பெல்ப்ஸை வீழ்த்தி தங்கம் வென்றார்.



இதுவரை தான் களமிறங்கிய நான்கு போட்டிகளிலும் தங்கம் வென்றவரான பெல்ப்ஸ் ஐந்தாவது தங்கத்துக்காக குறித்த போட்டியில் களமிறங்கினார். ஆனால் அவரால் இரண்டாவது இடத்துக்கே வர முடிந்தது.

நடப்பு வருட ஒலிம்பிக் தொடரில் சிங்கப்பூர் வென்ற முதல் தங்கம் இதுவாகும். (ம)

## பாகிஸ்தான் முன்னிலை

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத்தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மொயின் அலி 108 ஓட்டங்களையும், பரிஸ் ரௌவ் 55 ஓட்டங்களையும், வோக்ஸ் 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தானின் சார்பாக சொகைல் கான் 5 இலக்குகளையும், ரியாஸ் 3 இலக்குகளையும், ஆமிர் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் முதல் நாள் முடிவில் 3-1 என்றிருந்தது. அசார் அலி, ஜசீர் ஷா இருவரும் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். இணைப்பாட்டமாக 49 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில் யாசீர் ஷாவை வெளியேற்றினார் ஸ்ரீவ் பின். ஓர் ஓட்டத்தால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் அசார் அலி. சபிக், யுனிஸ்கான் இணை நீண்டு நிலைபெற்றது. சதம் கடந்தார் சபிக். இணைப்பாட்டமாக 150 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 109 ஓட்டங்களுடன் சபிக்கின் ஆட்டம் நிறைவு கண்டது. முடித்து வைத்தவர் ஸ்ரீவ் பின். மிஸ்பா, அஹமட் பெரிதாகச் செயற்படவில்லை. ஆனால் மறுமுனையில் யுனிஸ்கான் சதம் கடந்தார். நாள் முடிவில் பாகிஸ்தான் 340-6 என்றுள்ளது. (ம)



## வீழ்ந்தது ஆஸி.

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற கலப்பு இரட்டையர்பூப்பந்தாட்டத்தில் ஆஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சி வழங்கியது மலேசியா.

மலேசியாவின் சார்பாக களமிறங்கிய சான், ஜோக் இணை 2:0 என்ற நேர் செற் கணக்கில் ஆஸ்திரேலியாவின் பலம் வாய்ந்த மிடில்ரன் - சூசூ இணையை வீழ்த்தியது. இந்தவெற்றியின் மூலம் மலேசிய இணையின் காலிறுதி வாய்ப்பு அதிகமாகிறது. (ம)

## இஸ்ரேலைப் புறக்கணித்த எகிப்து

எகிப்திய ஜுடோ வீரர் இஸ்லாம் எல் சகாபை என்பவர் நேற்று நடைபெற்ற போட்டியின் முடிவில், தன்னுடன் போட்டியிட்ட இஸ்ரேல் வீரருக்கு கைகுலுக்க மறுத்தமை சிறு சஞ்சலங்களைத் தோற்றுவித்துள்ளது.

எகிப்திய, இஸ்ரேலிய அரசியல் உறவானது திடீரென தீயாக மாறவல்ல செந்தணலைப் போல உள்ளது. இந்தியா, பாகிஸ்தான் அரசியல் குழப்பங்கள் இரு நாட்டின் நேரடிக் கிரிக்கெட்டைப் பாதித்ததைப் போல எகிப்திய, இஸ்ரேலிய அரசியல் நிலவரங்கள் விளையாட்டின் மீதும் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன.

நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் இஸ்ரேல் வீரர் வெற்றி பெற்றார். போட்டியின் இறுதியில் வீரர்கள் கைகுலுக்கிக் கொள்வது, ஜப்பானிய தற்காப்பு கலைகளுக்கு மரியாதை செலுத்துவதாகக் கருதப்படுகிறது. இஸ்ரேல் வீரர் கைகுலுக்க முன்வந்த போதிலும் எகிப்திய வீரர் அதை உதாசீனம் செய்து சென்றுவிட்டார்.




இந்த விடயம் பன்னாட்டு ஜுடோ சம்மேளனம் வரை கொண்டு செல்லப்பட்டது. இஸ்ரேலுடன் போட்டியிட சம்மதித்த முதல் அரபு நாடு நாடு எகிப்து. ஒலிம்பிக் அட்டவணைக்கும், சட்டதிட்டங்களுக்கும் மதிப்புக் கொடுத்து இரு நாட்டு வீரர்களும் கலந்துகொண்டமை திருப்தி. கைகொடுப்பதும் கொடுக்காமல் விடுவதும் வீரர்களின் தனிப்பட்ட விருப்பில் தங்கியுள்ளது. பெரிய விடயமாக்க வேண்டி அவசியமில்லை என பன்னாட்டு ஜுடோ சம்மேளனம் தெரிவித்தது. (ம-ரி4)

## ஒரு போட்டியில் இரு தங்கங்கள்

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு 100 மீற்றர் பிரீஸ்டைல் நீச்சல் போட்டியில் இரண்டு வீராங்கனைகள் தங்கப் பதக்கம் வென்றனர்.

நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் அமெரிக்காவின் சிமோன் மானுவே, கனடா வீராங்கனை பென்னி ஜாலகஸ்கே இருவரும் பந்தய தூரத்தை சரியாக 52.70 வினாடியில் கடந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினர். இருவர் தங்கம் வென்றதால் வெள்ளிப் பதக்கம் வழங்கப்படவில்லை. வெண்கலப் பதக்கத்தை சுவீடனைச் சேர்ந்த சாரா ஜோஸ்ரோம் வென்றார். (ம-ரி4)






## பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றரில் எத்தியோப்பியா சாதனையுடன் தங்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் எத்தியோப்பியா சாதனையுடன் தங்கம் வென்றது.

எத்தியோப்பிய வீராங்கனை அல்மஸ் அயன்ன என்பவரே அந்த நாட்டுக்குத் தங்கம் வென்றுகொடுத்தார். 29 நிமிடங்கள், 17 செக்கன்கள், 45 மில்லி செக்கன்களில் அவர் இலக்கை அடைந்து சாதனையுடன் தங்கம் வென்றார். கென்யாவின் விவியன் செக்விட் 32 நிமிடங்கள், 17 செக்கன்கள், 53 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், எத்தியோப்பியாவின் பிறிதொரு வீராங்கனையும் கடந்த ஒலிம்பிக் தொடரில் (லண்டன்) தங்கம் வென்றவருமான திருனேஸ் திபாபா 29 நிமிடங்கள், 42 செக்கன்கள், 56 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து. வெண்கலத்தையும் வென்றனர். (ம-ரி4)

## மேசைப் பந்தாட்டத்தில் சீனாவுக்கு இரு பதக்கம்



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு மேசைப்பந்தாட்டத்தில் சீனா தங்கம், வெள்ளி என இரு பதக்கங்களை வென்றது.

சீனாவின் சார்பாகக் களமிறங்கிய லோங் தங்கப்பதக்கத்தையும், சாங் வெள்ளிப் பதக்கத்தையும், ஜப்பானின் யுன் மிதுதானி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம)

## ஓய்வு முடிவை மீளப்பெற்றார் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி

நடப்பு வருட கோப்பா அமெரிக்காத் தொடரின் இறுதியாட்டத்தில், ஆர்ஜென்ரீனா அணி சிலியிடம் தோல்வியடைந்ததையடுத்து பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துச் சென்ற ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான மெஸ்ஸி தனது ஓய்வு முடிவைத் திரும்பப் பெற்றார்.

ஆர்ஜென்ரீனா அணி இறுதியாட்டம் வரை முன்னேறி கிண்ணத்தைத் தவறவிடுவது நடப்பு வருடத் தொடருடன் மூன்றாவது முறையாகும். இதனால் விரக்தியடைந்த மெஸ்ஸி, "நான் அனைத்தையும் செய்து பார்த்துவிட்டேன். என் தேசத்தை சம்பியனாக்கிப் பார்ப்பதில் எனக்குத் தோல்வியே எஞ்சியது. விடைபெறும் தருணம் என எண்ணுகிறேன்" என்று தெரிவித்து விட்டுச் சென்றார்.

இதனையடுத்து மெஸ்ஸி மீண்டும்' வரவேண்டும் என்று ஆர்ஜென்ரீனாவெங்கும் மக்கள் வீதியில் இறங்கிப் போராடினார்கள். அந்த நாட்டின் ஜனாதிபதி உட்படப் பலரும் மெஸ்ஸியின் இரண்டாம் வருகையை வலியுறுத்தினார்கள். இதனையடுத்து நீண்ட பரிசீலனையின் பின்னர் மெஸ்ஸி தனது இரண்டாவது வருகையை உறுதிசெய்தார்.

மெஸ்ஸி மீண்டும் வருகிறேன் என்று தெரிவித்ததையடுத்து பன்னாட்டு ஊடகங்கள் சில கேட்ட கேள்விக்கு, "ஆர்ஜென்ரீனாவுக்கு நான் செய்ய வேண்டிய கடமையொன்று உள்ளது" என்று ஒரு வரியில் பதில் வழங்கியுள்ளார். அனேகமாக அவர் அடுத்த உலகக்கிண்ணத்தைக் கருத்திற் கொண்டே தெரிவித்துள்ளார் என்று கருதப்படுகின்றது. (ம)





## மங்கள சமரக்கோன் கடைசி

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 50 மீற்றர் துப்பாக்கி சுடுதல் தகுதிச் சுற்றில் இலங்கையின் சார்பாக களமிறங்கிய மங்கள சமரக்கோன் கடைசி இடத்துக்குப் பின்தள்ளப்பட்டார்.

47 வீரர்கள் பங்குபற்றிய இந்தப் போட்டியில் சமரக்கோன் 601.8 புள்ளிகளுடன் கடைசி இடத்தைப் பிடித்தார். ரஷ்ய வீரர்களான செர்ஸி கெமின்ஸ்கி 629 புள்ளிகளுடன் முதலிடத்தையும், ஜோர்ஜியான் 628.9 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், தென்கொரியாவின் கிம் ஜோங் 628.1 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும் பெற்றனர். (ம)

## 50 மீ. துப்பாக்கி சுடுதலில் ஜேர்மன் தங்கம் வென்றது

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு 50 மீ. துப்பாக்கி சுடுதலில் ஜேர்மன் வீராங்கனை தங்கம் வென்றார்..

ஜேர்மன் வீராங்கனை பார்படா எக்லாக்கெர் ஒட்டுமொத்தமாக 458.6 புள்ளிகளைப் பெற்றே தங்கம் வென்றார். சீன வீராங்கனை பின் சாங் 458.4 புள்ளிகளைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கினார். சீனாவின் பிறிதொரு வீராங்கனை டு லீ 447.4 புள்ளிகளைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சொந்தமாக்கினார். பார்வடாவுக்கு இது நான்காவது ஒலிம்பிக் தொடராகும். இதற்கு முன்னர் அவர் மூன்று தடவைகள் ஒலிம்பிக் தொடரில் களமிறங்கிய போதிலும், எந்தவொரு பதக்கத்தையும் வெல்லவில்லை. இந்த நிலையில் நான்காவது ஒலிம்பிக் தொடரான ரியோவுடன் தான் ஓய்வு பெறப்போவதாக அவர் ஏற்கனவே அறிவித்த நிலையில் இந்தத் தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது. இதுவே அவரின் முதலாவது ஒலிம்பிக் பதக்கமுமாகும். (ம)

# ரியோ ஒலிம்பிக்குடன் விடைபெற மைக்கெல் பெல்ப்ஸ் பரிசீலனை

தங்க நாயகன் என்று அழைக்கப்படும் அமெரிக்க நீச்சல் ஜாம்பவான் மைக்கெல் பெல்ப்ஸ், ரியோ ஒலிம்பிக் தொடருடன் ஓய்வு பெறுவது தொடர்பில் பரிசீலனை செய்துவருவதாகத் தெரிவித்தார்.

ரியோ ஒலிம்பிக் தொடரில் இதுவரை பெல்ப்ஸ் 4 தங்கம், 2 வெள்ளி என ஆறு பதக்கங்களை வென்றுள்ளார். ஒட்டுமொத்த ஒலிம்பிக் தொடரிலுமாகச் சேர்த்து 22 தங்கப் பதக்கங்கள் உட்பட 26 பதக்கங்களை வென்றுள்ளார். ஒலிம்பிக் வரலாற்றில் ஓர் தனிநபரின் ஆகச் சிறந்த பெறுபேறாக இதுவே உள்ளது. இந்த நிலையில் ரியோ ஒலிம்பிக் தொடருடன் ஓய்வுபெற பரிசீலனை செய்து வருவதாக பெல்ப்ஸ் நேற்று வெளிப்படுத்தினார்.

என்னுடைய வாழ்க்கையில் போதுமான அளவு சாதனைகளைப் படைத்துள்ளேன். எனது தாயகமான அமெரிக்காவுக்கு என்னால் முடிந்தவற்றைச் செய்துள்ளேன். ரியோ ஒலிம்பிக் தொடருடன் ஓய்வு பெறுவது சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன் என பெல்ப்ஸ் மேலும் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் தொடரின் பின்பும் பெல்ப்ஸ் இவ்வாறான கருத்தை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)






# உசைன் போல்ட்டை வென்றார் கேத்லின்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு 100 மீற்றர் தகுதிச் சுற்றில் உசைன் போல்ட், ஜஸ்டின் கேத்லின் இருவரும் தத்தமது குழுக்களில் முதலிடம் பிடித்தனர். ஒட்டுமொத்த பெறுபேற்றின் அடிப்படையில் கேத்லின் போல்ட்டை வீழ்த்தினார்.

குழு இரண்டில் அமெரிக்காவின் ஜஸ்டின் கேத்லின் இடம்பெற்றிருந்தார். அவர் பந்தயத் தூரத்தை 10 செக்கன்கள் 01 மில்லி செக்கனில் அடைந்தார். குழு இரண்டில் உசைன் போல்ட் இடம்பிடித்திருந்தார். அவர் பந்தயத் தூரத்தை 10 செக்கன்கள் 07 மில்லி செக்கன்களில் அடைந்தார். இருவரும் தத்தமது குழுக்களில் முதலிடத்தைப் பிடித்தாலும் கேத்லின் 06 மில்லி செக்கன்கள் போல்ட்டை விட குறைவாகவே எடுத்துள்ளார். இதனால் இம்முறை தங்கப் பதக்கத்தை வெல்வது யார் என்ற போட்டியில் மேலும் சுவாரஸ்யம் அதிகரித்துள்ளது. (ம)

# அரையிறுதியில் கிவித்தோவா

ரியோ ஒலிம்பிக் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் செக்குடியரசின் பெட்ரா கிவித்தோவா அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் கிவித் தோவாவை எதிர்த்து உக்ரைனின் எலினா ஸ்விட்டோலினா மோதினார்.

முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும், இரண்டாவது செற்றை 6:4 என்ற அடிப்படையிலும் கைப்பற்றிய கிவித்தோவா, முடிவில் 2:0 என்ற நேர்செற்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

## கூலித் தொழிலாளர் தேவை

அச்சுவேலி தொழிற்பேட்டையில் இயங்கும் உற்பத்தி நிறுவனத்துக்குப் பொருள்கள் ஏற்றி இறக்குவதற்கான கூலித் தொழிலாளர்கள்தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். விரும்பியவர்கள் 18.08.2016 வியாழக்கிழமை நேரில் சமூகம் தரவும்.

தகவல்களுக்கு 072 484 2320 தொடர்பு கொள்ளவும்.

## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு
### வின்ரிச் இன் விசேட விலைக்கழிவு




தமிழில் தொடர்பு கொள்ள : 0773918870

WINRICH INTERNATIONAL(PVT)LTD No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha, Kollupitiya,Colombo - 03

## INFORMATION TECHNOLOGY PARK
*Jaffna, Srilanka*
*Under the purview of the Ministry of Telecommunication & Digital Infrastructure*

MPCS Building.
127,K.K.S.Road, Jaffna,Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

SEPTEMBER BATCHES
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop publishing
- Dip,in Information Technology
- Dip,in Computer Programming

Online Course
- Dip.in PC Application & Office Management

Languages
- VB.net
- PHP
- C Sharp
- Java

Workshops
- Internet & e-mail
- Webpage Designing & Development

Special Workshop Class
- Internet Technology - (40 hours)

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 09.09.2016
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 10.09.2016

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
Executive Officer

## வீடும், காணியும் விற்பனைக்கு

பருத்தித்துறை கிராமக் கோட்டடியிலுள்ள 2 ½ பரப்பு காணியில் வீட்டுடன் கூடிய நிலப்பரப்பு உடன் விற்பனைக்குண்டு.

076 569 2483

## பிற்போடப்பட்டுள்ளது



அமரர்
கதிர்காமராஜா பராசக்தியின் (பேபி)
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 16.08.2016 செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

மூத்தட்டுமட லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
குடும்பத்தினர்.

தொ.இல: 077 0306738, 021 2241506

## Thanujan Sand and Material Suppliers

- * திறமை வாய்ந்த அனுபவம் மிக்க JCB சாரதிகள்
- * வாகன சுத்திகரிப்பாளர்
- * வாகன திருத்துதல் மேற்பார்வையாளர்
- * வாகன திருத்துநர் (அனைத்து வகையான வாகனங்களும்)
- * கோழிப்பண்ணை - மேற்பார்வையாளர், ஊழியர் (முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை (இருபாலாரும்)
- * கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

சுயவிவரக்கோவை அனுப்ப வேண்டிய முகவரி-
103,பொன்னம்பலம் வீதி, அரியாலை.
முடிவு திகதி - 19.08.2016
தொடர்புகளுக்கு:- 077 788 5491
077 369 7393

## உடனடி வேலைவாய்ப்பு

- காசாளர்(பெண்)
- பொதி செய்பவர் (ஆண்/ பெண்)
- மோட்டார் சைக்கிள் விநியோகஸ்தர் (ஆண்)
- சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)

குறிப்பு:
மருதனார்மடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் வாழ்பவர்கள் விரும்பத்தக்கது. மாலை 4.00 மணி தொடக்கம் 6.00 வரை சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

இடியப்பக்கடை, கடை இல-05, மானிப்பாய் வீதி,மருதனார்மடம்.

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல மின்சாதனப் பொருள்கள் விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
- * விற்பனையாளர்
- * எழுதுனர் (அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

மேற்படி தகைமையுடைய ஆண்கள் எதிர்வரும் (15.08.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுயவிவரக்கோவையுடன் நேரில் வருகை தரவும்.

Jaffna electricals
No - 94(06) Stanley Road, Jaffna
021 222 2353/ 021 222 4302

## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

வவுனியாவில் தற்பொழுது புதிதாக ஜேர்மன் மொழியை யாழ் மண்ணில் உள்ள ஜேர்மன் கல்லூரியின் ஆசிரியர் S. கோணேஸ்வரன் கற்பிக்கவுள்ளார்.
- வவுனியாவில் உள்ள சில மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட உள்ளது.

புதிய பிரிவுகள் ஆரம்பம்- 19.08.2016 - வெள்ளிக்கிழமை
பிற்பகல் 4.00 மணிக்கு பதிவுகளுக்கு முந்துங்கள்

N- Soft Academy
வைரவர் கோவில் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.
077 970 7322

யாழ் மண்ணில் கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, புத்தர் விகாரைக்கு எதிரில், 2 ஆம் மாடி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.